# 14-1-50 பொங்கல் அன்று திரையிடப்படும்

# ஈஸ்ட் & வெஸ்ட்

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1913)

தலைமை காரியாலயம்:

**ஈஸ்ட் & வெஸ்ட் பில்டிங்,**

அபோலோ தெரு, கோட்டை, பம்பாய்.

**முரளீதர் ஜி. குப்தா,** Esq. M. A., B. Com., LL. B.

சேர்மன்.

**கே. என். ஸாமந்த்,** Esq. M. Com.

மானேஜர்.

இந்திய தேசிய நலன்களைப் போற்றி, நாட்டிற்கு 36 வருட காலமாகத் திறமையாகச் சேவை செய்துவரும் ஓர் புகழ்பெற்ற

— இன்ஷூரன்ஸ் ஸ்தாபனம் —

ஆயுள், தீ, கடல், மோட்டார் மற்றும் சகலவித இன்ஷூரன்ஸ்களும் செய்யப்படுகின்றன.

விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

**கே. பி. ஜம்புலிங்கம்,**

பிராஞ்ச் ஸெகரிடரி,

329, தம்புசெட்டித்தெரு, சென்னை—1



198042



**தேவையற்ற ரோமத்தை விலக்குங்கள்!**

கடந்த 50 ஆண்டுகளாக உலகப் பிரசித்திபெற்ற

# பாத்ஷாஹி

வாசனைப் பவுடர்—ஸோப்—லோஷன்

நேர்த்தியான சரும சுகத்திற்கு இணையற்றது.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஷாப்களிலும் கிடைக்கும்.

ரிஜிஸ்டர்டு நெ. 529

உற்பத்தியாளர்கள்:

**C. C. மஹாராஜன் அண் கோ., பம்பாய்-2.**

# 'பாலுட்ரின்' மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு

Trade Mark

## இப்பொழுது... மூன்று மாத்திரைகளுக்குப் பதிலாக, ஒரு மாத்திரை




'பாலுட்ரின்' புதிய வாராந்திர மாத்திரை மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு




உங்களுக்கு ஒரு முக்கியமான அறிவிப்பு! இந்த புதிய, பெரிய ஸைஸ் 0·3 கிராம் 'பாலுட்ரின்' மாத்திரை . . . வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டு வந்தால்—உங்களை மலேரியாவிலிருந்து பாதுகாக்கிறது. இவைகள் ஒரு ஸ்டிரிப்பில் 8 மாத்திரைகள் வீதம், சீதோஷ்ணத்தால் பாதிக்கப் படாதபடி, ஒரு விசேஷ முறையில் பாக் செய்யப்பட்டிருக்கிறது.

அளவு மலேரியாவிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுவதற்கு வாரத்திற்கு ஒரு மாத்திரை

மலேரியா வந்த ... தினம் ஒரு மாத்திரை ஜுரம் இறங்கும் வரை.

குழந்தைகளுக்கு குறைந்த அளவு, டாக்டரின் சொற்படி

ஒரு ஸ்டிரிப்பின் விலை 8 அணா

அல்லது ஒரு மாத்திரையின் விலை

# ஒரு அணா

ICI

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்டிரீஸ் (இந்தியா) லிட்

PH.19

# தி யுனைடெட்
# கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

**கல்கத்தா**

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | .... | ரூ. 8,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | .... | ரூ. 4,00,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... | ரூ. 2,00,00,000 |
| ரிஸர்வ் நிதி | .... | ரூ. 45,00,000 |

●

**டைரக்டர்கள்**

**G. D. பிர்லா—சேர்மன்**

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா (வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா (வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிம்த்சிங்கா
R. L. நோபனி

**ஜெனரல் மானேஜர்**

**B. T. தாகூர்**

●

**இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.**

## மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.
(தபால் செலவு ரூ. 0-14-0)

## விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

## வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.
(தபால் செலவு ரூ. 0-13-0)

## கூஞ்சா தைலம்

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.
ஒரு பாட்டில் ரூ. 2-0-0
தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

**KAVIRAJ R. N. CHAKRAVARTHI**
Ayurvedha Sasthri ( K. M. )
24, Debendra Ghose Road, Bhowanipore
CALCUTTA, 25
*Stockists:*
Messrs. APPAH & CO., 286, Netaji Subhas ChandraBose Road, Madras.


# பொருளடக்கம்

விரோதி மலர் 9 — மார்கழி இதழ் 5


அழகின் அருள் — 3
வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

யந்திர யுகம் — 4
என். எஸ். சந்திரசேகர்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — 11
ராமய்யா

கட்டழகி ரங்கநாயகி — 17
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

தாமரை பேசினுள்! — 21
அ. நவநீதக்கண்ணன்

பெண்களுக்குப் பிரத்தியேகமானது — 25
ஷிபாலி சௌத்ரி—சாரி

தாயும் சேயும் — 29
லீலா கோபாலன்

வட்டைத் தொட்டி — 33
வாரன்

அரசியின் ஆடை — 38
கா. கி. நாகராசன்

பட்டண் பெருமை (தொடர் கதை) — 41
கே. எம். முன்ஷி

சுவர்க்கம் — 57
சௌரி

நாடகக் கலை மறுமலர்ச்சி — 62
ஆண்டி

மனோதத்துவம் — 67
ஜி. எஸ். மணி

டில்லிமாநகரில் சரணார்த்திகள் — 73
சாரி

அக்காட்சி — 80
ரா. ஸ்ரீ. தேசிகன்

பத்துக் கோடி மோட்டார் கார் — 84
எஸ். என். ராமசாமி

இந்தியாவும் சீனமும் — 89
டாக்டர். வே. ராகவன்

லக்ஷியக் கனவு (தொடர் கதை) — 93
கே. சுந்தரம்மாள்



குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# மேன்மையின்

## பெருமை அநேக வருஷ
## உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



சைக்கிள்கள்

சைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு



**நம்பி வாங்க**

# இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :; மதராஸ்-1.

தந்தி :—''சைக்கிள்ஸ்'' போன்: 3168

# காவேரி

| விரோதி<br>மலர் 9 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—"பாரதியார் | மார்கழி<br>இதழ் 5 |
|---|---|---|


# அழகின் அருள்


வி. ஜி. ஸ்ரீநிவாஸன்


அழகுடைத் தெய்வம் வந்து
அருகினில் நின்ற போது

குழறிய சொற்கள் தாமே
குமுறிய வண்ணத் தாலே;

பழகிய பண்ணும் ஆங்கே
பஞ்செனப் பறந்த தாமே;

எழவிலை எண்ணம் தானே,
ஏழையேன் என்செய் வேனே? (1)

திருமுகக் காந்தி யாங்கே
தெருளினைத் தந்த தம்மா!

அருளுகு விழியு மாங்கே
அறிவினை ஈர்த்த தம்மா!

உருவுகொள் உடல மாங்கே
உருக்கிய துள்ளம் தன்னை!

மருவிடும் காதல் மேவ,
மயங்கியே வீழ்ந்திட் டேனே! (2)

எழுந்ததும் விழித்தேன், கண்டேன்
எழிலுருக் காட்டும் தேவை!

எழுந்தன எண்ணம் தாமே
பொங்கிய வண்ணத் தாலே;

விழுமிய பண்ணும் ஆங்கே
விரைவொடு வந்த தாலே

தொழுதுடன் துதித்திட் டேனே
தொன்மொழி தமிழி னாலே! (3)

### வேறு

அருள்சுரக்கும் திருவிழியால் அக்கணமே பார்த்தாள்,
மருள்கெடுத்தாள், உயிர்கொடுத்தாள், மறுபிறப்பே தந்தாள்!
இருள்ஒழிந்த இன்பமய மானதொரு தன்மை
மருவிடவே மனிதருளே மாண்புடையோன் ஆனேன்!



# "யந்திர யுகம்"

என். எஸ். சந்திரசேகர்



சின்னான் ஒரு ஏழைச் சக்கிலியன். நாற்றத்திற்குப் பெயர் பெற்ற கார்ப்பரேஷன் சாலை ஓரத்தில் அவனது செருப்புக்கடை, அவனது குடும்பம், வாழ்வு சாவு எல்லாம் அங்கேதான். வெயில் நேரங்களில் ஒரு கிழிந்த குடையின்கீழ் அவனது குடும்பம் ஒண்டிக் கிடக்கும். ஏக சக்ராதிபதிகள் ஒரு குடையின்கீழ் சாம்ராஜ்யங்களை ஆளுவதைப்போல் சின்னான், பழஞ் செருப்புகளைச் சீர்படுத்துவதில் எதிர்ப்பில்லாத, ஒப்புயர்வற்ற மன்னன்! தனது குடும்பத்தை ஒரே கிழிந்த குடையின் கீழ் நடத்தி வருகிறான்! வெளிப்படையில், இதைத் தவிர மன்னனுக்கும் அவனுக்கும் ஒருவித வேற்றுமையுமில்லை! வறுமைத் தேவதை என்பது உண்மையில் உருவெடுத்து வந்தால் எவ்வாறு இருக்குமென்பதற்கு ஒரு சிறந்த அத்தாட்சியாக அவனது குடும்பம் தோற்றமளித்தது! தள்ளாத வயதில் சின்னானுக்கு ஒத்தாசையாக அவனது ஒம்ரமகள் செல்வி தான். 'மானம் காற்றில் பறக்கிறது' என்ற பழமொழி இவர்கள் வாழ்க்கைக்குத்தான் நன்றாகப் பொருந்தும். யௌவனத்தின் வனப்பு மிகுந்த அவயவங்களைக் கந்தல் துணிகளால் மறைத்துக்கொள்ள, செல்வி படும் பாடு ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். தெருவில் செல்லும் குறும்புக்காரக் காலிகள் சிலர் "குட்டி நல்ல வாட்ட சாட்டமாயிருக்கு, இன்னும் நல்ல சாப்பாடு யிருந்தா, ரம்பை தான். 'சேற்றில் பிறந்த செந்தாமரை' என்பாங்களே, அது இவளுக்குத்தாண்டா சரி. வாங்கடா போவோம் கிட்டே "என்று வம்பு பேசிக்கொண்டேபோவார்கள். இந்த இழி சொற்கள் எல்லாம் அவள் காதில் விழாமலில்லை. ஆனால், அவளது துயர வாழ்க்கைச் செடியே, அந்தச் சாலை ஓரத்தில் தானே ஊன்றப் பட்டிருக்கிறது! அவர்

களது பிழைப்பும், பிறப்பும் இறப்பும், அவர்களுக்கு இந்திர லோகங்களாக விளங்கும் அந்தச் சாலை ஓரங்களிலேதானே வேரூன்றியிருக்கின்றன! அவைகளைவிட்டு அவள் செல்ல முடியுமா? கடவுள் மனிதனைப் படைத்துக் கூட வயிற்றையும் படைத்துவிட்டாரே! அரைச்சாண் வயிற்றைக் கழுவுவதற்காக, அவள் சாலை ஓரங்களில் பல துஷ்டர்களின் இழிந்த செயல்களுக்கு உள்ளாக வேண்டியிருந்தது.

கண்களின் ஒளி மங்கிய கிழச் சின்னான், வயிற்றுப் பாட்டுக்காக, ஜாதித் தொழிலில் ஆழ்ந்து போவான். செல்வி கிராமத்திற்குள் போய், பழஞ் செருப்புக்களை விலைக்கு வாங்கி வருவாள். வாழ்வில் கரடு முரடான பாதைகளில் செல்வோருக்கு நல்ல உயர்தர செருப்புக்கள் செய்துகொடுத்து, அவர்களது வாழ்வுப் பாதையைச் செப்பனிடுபவர்கள் அவர்கள்! ஆனால் அவர்களின் வாழ்வு கரடுமுரடான முட்கள் நிறைந்த வறுமைப் பாதையில் துரிதமாகச் சென்றுகொண்டிருந்தது! அவர்களது வாழ்வைச் செப்பனிட்டுச் சீர்படுத்த. இப் பரந்த உலகில் எவருமேயில்லை போலும்!

விலைக்கு வாங்கிவந்த பழஞ் செருப்புக்களில் கெட்டியாயுள்ள தோல் பாகங்களைத் தவிர, மற்றவைகளை நீக்கிவிட்டு, தண்ணீரில் ஊறவைத்துப் பதஞ்செய்த தோல்களை, அளவிட்டுக் கத்தரித்து, சேர்த்துத் தைப்பான் சின்னான். செல்வி பழந்தோல்களை ஊற வைத்து எடுத்து வைப்பாள். சில சமயங்களில் தைக்கும்போது, பெரிய ஊசி கையில் குத்திவிடும். ரத்தம் கிழட்டு உடலிலிருந்து வெளியேவர யோசிப்பதுபோல் மெதுவாக வரும்! அந்த வறுமைக் கூட்டங்களுக்கு முதலுதவி, எங்கும் சர்வ சாதாரணமாய்க் கிடைக்கும் மண்ணும் தண்ணீரும்தான்! நீரால் கழுவிவிட்டு மண்ணை அப்பிவிடுவாள் செல்வி. காயங்கள் வறுமைக் கூட்டத்தை அணுகப் பயந்து எங்கோ பறந்தோடிவிடும்!

அன்று வழக்கம்போலச் சின்னான், புதுச் செருப்புச் செய்வதில் ஈடுபட்டிருந்தான். அட்டையில் அளவு எல்லாம் எடுத்துவைத்துவிட்டான். அளவு வைத்து, தோலையும் கத்தரித்துவிட்டான். எந்தப் புண்ணியவான் காலைத் தொட்டுக்கும்பிட்டு, செருப்புச்செய்துகொண்டிருந்தானோ தெரியாது! ஆனால் அன்று அவன் சிறிது சந்தோஷமாகவே காணப்பட்டான். அவனது நிர்மாணத் திட்டங்கள் மனதிலே நிமிடத்திற்கு நிமிடம் நீண்டுகொண்டே சென்றன போலும்! செல்வியின் கைக்குழந்தையும் அருகே விளையாடிக்கொண்டிருந்தது. குழந்தைக்கு ஒரு பழத்தை உரித்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள் செல்வி. என் வாழ்நாளையே ஏழை, எளியவர்களின் மத்தியிலேயே வாழ்ந்து, கழித்து அதனால் மனச் சந்துஷ்டி அடைந்துவரும் நான் அந்தக் குடும்பத்தினிடம் எனது அன்பைச் செலுத்தி வந்ததில் வியப்பில்லை அல்லவா? எனது கால் செருப்புச் சிறிது பழுது அடைந்து இருந்தது. அதை அவனிடம் கொடுத்துச் செப்பனிடச் சொன்னேன். கிழவன் செருப்பைத்திருப்பித் திருப்பிப்பார்த்துவிட்டு, 'சாமி எல்லாம் சீரணமாயிடுத்துங்களே. புதுசுதான் அவ்வளவும் போடணும். சாமி ஒரு ரூபா வாகும். நியாயமான கூலி. பிறவு உங்க பிரியம்'' என்று இரக்கம் தோய்ந்த குரலில் சொன்னான். சின்னான் நாணயஸ்தன். மற்றவர்கள் எல்லாம் 2 ரூபாய்க்குக் குறைந்தால் அந்தச் செருப்பைக் கையாலே கூடத் தொடமாட்டார்கள். சின்னானின் பெருந்தன்மையை நினைத்து நான் பெரிதும் வியந்தேன். மறுகணமே அவன் மீது அளவு கடந்த இரக்கம் ஏற்பட்டது. 'ஏழை பங்காளி' என்று ஊர் முழுவதும் பிரசித்தமாயிருந்த நான் 2 ரூ நோட்டை மனத்திருப்தியுடன் சின்னானிடம் எடுத்துக் கொடுத்தேன். "சில்லறை இல்லீங்களா? என் கிட்டே ஏதுங்க சில்லறை மூணுநாளா ஒருவேலையுமில்லே. கையிலே காலணா இல்லே. நான் முந்தா நாள் ராவுதான் நல்லாச் சாப்பிட்டேனுங்க. இன்னைக்கு காலையிலே என் மவள் ஒரு அணா குடுத்து டீ குடிக்கச்சொன்னா, அதைக்குடிச்சுட்டு இந்நேரம்வரைவெயிலிலே வேலை செஞ்சா களைப்பாயிருக்குதுங்க'' என்றான் பெருமூச்சு விட்டவண்ணம். நான் அவனிடம் கொடுத்த நோட்டு என்னிடமே திரும்பி வந்து விட்டது. செல்வியின் குழந்தை அப்பொழுது மெதுவாக என்னருகே வந்து நின்றது, பல்லைக் காட்டியது. நான் அந்த 2 ரூபாயை அந்தச் சூதுவாது அறியாத பச்சிளங் குழந்தையின் கையில் திணித்தேன். இதைக் கவனித்துக் கொண்டிருந்த செல்வி, "சுவாமி. நீங்க கலியுக கர்ணா! நீங்க மவராசனாய் இருக்கணும்'' என்று மனமார வாழ்த்தினாள். அப்பொழுது அவள் முகம் வசீகரமாகக் காட்சியளித்தது. நாணயஸ்தனான சின்னான் அவனது "கூலிக்கு மேல் ஒரு பைசாக்கூட வாங்க முடியாது'' என்று எவ்வளவோ வாதாடினான். இருப்பினும் நான் அவனிடம் கட்டாயப் படுத்திக் கொடுத்துவிட்டு வந்தேன். அப்பொழுது கிழவனும் "சாமி உங்களைப்போல ஒரு தர்மப் பிரபுவை நான் இதுவரை பார்த்ததில்லை!'' என்று ஒரு விசுவாசக் கும்பிடு போட்டான். அவர்களது குடும்பமே என்னை வாழ்த்தியது. வழியில் ஒரு பிச்சைக்காரன் "இரங்குவார்க் கிவதே ஈசனருள்'' என்று பாடிக் கொண்டே போனது, என் காதுகளில் இப்பொழுதும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது!

* * *

மறு நாள். அதே சாலை ஓரம். மேல் நாட்டு மோஸ்தரில் உடைகள் அணிந்து ஒருவன் தன் காலைக் கிழவன் முகத்திற்கு நேராக நீட்டுகிறான். சின்னானின் அருகே செல்வி, தன் குழந்தைக்கு மார்புச் சேலையை அகற்றிப் பால் ஊட்டிக் கொண்டிருக்கிறாள். வந்தவன் தன் செருப்பைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் செல்வியின் அங்க அழகை ரஸிக்கத் தொடங்கி விட்டான்! நயன பாஷையில் செல்வியிடம் அவன் ஏதோ சொல்கிறான்! செல்வியின் மனதிலே ஒரு போராட்டம். அவள் அவனது இச்சைக்கு உடன்பட்டால் தன் குடும்பமே சந்தோஷமாக வாழ்வதற்குப் போதிய பணம் கிடைக்கும்! ஆனால் மானம் என்ற வஸ்து என்னாவது? சின்னான் பரமயோக்கியன். அவன் வயிற்றிலே பிறந்த அவளா அம்மாதிரி இழிசெயலுக்கு இணங்குவாள்? பிடிவாதமாக மறுத்து விட்டாள் நயன பாஷையிலேயே! பிடித்தது சனியன்! செல்வியின் மேல் உள்ள கோபத்தை அந்தத் திருட்டு ராஸ்கல் கிழவனிடம் காட்டுகிறான். "ஏண்டா, இந்தச் செருப்பை எங்கே திருடினே? ராஸ்கல்! உன் முகமே திருட்டுமுழி முழிக்குதே. நிஜத்தைச் சொல். இதை எங்கே எடுத்தே?" என்றான்.

இதைக் கேட்ட சின்னான் பாம்பை மிதித்தவன் போலானான்!

"அய்யா தர்மப் பிரபுங்களே. உங்க சத்யமாச் சொல்றேன். என் மவள் இன்னைக்குத்தான் இதை வீதியிலே விலைக்கு வாங்கி வந்தா. திருடற பழக்கம் என் ஆயுசிலே இது வரை கிடையாதுங்க. ஏழையை நீங்க என்னவேணாலும் சொல்லுங்க. ஆனா 'திருடன்'னு மாத்திரம் சொல்லாதேங்க" என்று அவன் காலைப் பிடித்துக் கொண்டான். காலை எட்டி உதறிவிட்டு, "சரி. சரி. போ. இனிமே ஜாக்கிரதையா நடமாடு" என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். எதிர்த்த வெற்றிலை பாக்குக் கடையில் நின்று இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு அந்த ராஸ்கலை உதைக்க வேண்டுமென்று உணர்ச்சி சொல்கிறது. ஆனால் உள்ளத்திலே போராட்டம்! என்னையே இவ்வுலகம் தவறாக நினைத்து விட்டால்......? ஏனெனில் இவற்றிற்கெல்லாம் தாயகமாக விளங்குவது செல்வியின் இளமை! அவள் பிறந்தது இழிந்த குலம். குணம் மேலானது. அதைவிட மேலானது அவளது அழகு! அவளது அழகே அவர்களது பிழைப்பிற்கு இடைஞ்சலாகவுமிருந்தது!

எதிர்த்த கடையிலே நின்று கொண்டு மேற்கொண்டு என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தேன். இன்னொருவன், ஒரு கலாசாலை மாணவன் போலக்


## மாதவிடாய் :

சகோதரிகளே! எமது "சும்பகி—ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100 க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0

## கர்ப்பத்தடை :

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு :: ரூ. 4-4-0

6 மாத காலத் தடைக்கு :: ரூ. 2-0-0

(தபாற் செலவு ரூ. 0-14-0)

## வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2—8—0

## விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், கீல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்!

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C. M.)
70, Cornwallis Street, CALCUTTA-6.

காட்சியளித்தான். காரிகை ஒருத்தியை, பின் தொடர்ந்து வந்தவன், காரிகை ஜவுளிக் கடையொன்றில் புகுந்து விடவும், அந்தக் கடை எதிரேயிருந்த சின்னானின் அருகேயிருந்த செல்வியிடம் திரும்பினான். காலைக் காட்டி, ஒரு ஜோடிக்கு ஆர்டர் கொடுத்தான். "எப்பொழுது கிடைக்கும்?" என்றான். "நாளை இதே நேரத்திற்குக் கொடுக்கிறேனுங்க" என்றான் கிழவன். அதற்கு அந்தத் தறிதலை, "அடேய் கிழட்டுப் பயலே! ஒரு நாளுக்கு ஒரு ஜோடி செருப்பு செய்தேன்னா, உனக்கு வயத்துக்கு மண்ணுதான் கிடைக்கும். ஒரு நாளைக்கு 1000 ஜோடிகள் செய்து வெளியிலே தள்ளும் இந்த "யந்திர யுக"த்திலே உனக்கு இனிமே பிழைப்பில்லை. வேறு வேலை பார்க்கலாமே. இவள் யாரு உன் பெண்ணா?" என்று செல்வியைப் பார்த்தவாறே சின்னானிடம் தனது அறிவு சார்ந்த சொற்பொழிவைச் செய்து முடித்தான்! இன்னும் 3 மாதங்களில் "பட்டதாரி"யாகி விடுவோம் என்ற பகற் கனவிலே பகட்டு வாழ்க்கை வாழும் பள்ளி மாணவன்!

"சாமி! நீங்க சொல்வது வாஸ்தவம். அவ என் பெண் தான். யந்திரம் வந்தது. எங்கள் பிழைப்பிலே மண் விழுந்தது. அதுக்கு முன்னாலே நிறைய 'ஆர்டரும்' வரும். எனக்கும் வயசாய்ப் போயிடுச்சு. என் மவன்......அவன் காலராவுக்கு இரையாகி விட்டான்!" என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். அவன் கண்களிலே நீர் நிறைந்து விட்டது. அவன் மறுபடியும் தொடங்கினான். "ஒரு நாள் ஒண்ணுக்கு 10 ஜோடி செருப்பு செய்து தள்ளுவோம். எல்லாத்துக்கும் யந்திரம் வந்தது. எங்களுக்கெல்லாம் யமனுப் போச்சுதுங்க. மேலும் மிஷின் செருப்பு மூணு நாளுக்கு நிற்குங்களா? உண்மையான தொழிலின் ஜீவநாடி, அதன் நீண்ட உழைப்பும், நாணயமும். யந்திரம் போடும் பேரிரைச்சலில் எங்களது வறுமைக் குரல் ஆழ அமிழ்ந்துவிட்டது! இனி அது யாரைத் தட்டி எழுப்பமுடியும்? பாலைவனத்தில் உதவிக்கு அழைக்கும் குரல் போல்தான் சாமி! எங்க வறுமைக் குரல்! மவனும் போனான். குடிசையும் வெள்ளத்திலே போச்சுது. மனக் கவலையும் சேர்ந்தது. மகளும் வீட்டோட வந்துவிட்டாள்! எனக்கும் வயசாயிடுத்து. இந் நிலையிலே எங்க சமூகத்தை உய்ய வைக்கப் பாடுபடுபவர்கள் இந்தப் பரந்த உலகில் எவருமேயில்லை! 'குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்' என்று ஒரு பக்கத்திலே கூப்பாடு. மறு பக்கத்திலே அவர்களே ஆயிரம் ஆயிரமாகப் பணத்தைப் போட்டு, பெரிய யந்திரங்களை வைச்சு, தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தறுங்க. இந்த நிலைமையில் குடிசைத் தொழில் எப்படிங்க வளரமுடியும். புதிதாக ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு தொழிற்சாலையும் எண்ணற்ற ஏழை மக்களை வாட்டி, வதைத்து மாய்க்கிறது. எங்களுக்கு அரை வயிற்றுக்குக்கூட கஞ்சி குடிக்கக் காசு கிடைக்கிறதில்லை." என்று தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் கண்ணீர் வடித்தவாறே கதறியழுதான் சின்னான்.

வறுமைவேலி வாய்ந்த சின்னானின் வாழ்க்கைத் தோட்டம் வாலிபனின் உள்ளத்தில் ஒருவிதமான மாறுதலையும் தோற்றுவித்ததாகத் தெரியவில்லை! வனிதையின் பேரிலே கண்ணும் கருத்துமாய் நின்ற 'காலேஜ்' மாணவன் அல்லவா? ஏழையின் குரல் எட்டவில்லை போலும்! "நாளை இதே நேரத்திற்கு இங்கு வருவேன். செருப்புத் தயாராக இருக்கட்டும்" என்று ஜவுளிக் கடைக்குள் சென்றிருக்கும் பெண்களின் காதில் விழுமாறு உரக்கச் சொல்லிவிட்டு உல்லாச நடை போட்டுச் சென்றான்! இந்தக் காட்சி என் உள்ளத்தை மிகவும் பாதித்துவிட்டது. வெற்றிலைச் சாற்றின் ருசியில் ஆழ்ந்திருந்த எனக்குச் சின்னானிடம் சில வார்த்தைகளாவது பேசாமல் போக மனமானது இடந்தரவில்லை. என்னைக் கண்டதும் சின்னான் ஒரு பெரிய கும்பிடு போட்டான். அப்பொழுது செல்வியும் குழந்தையும் அங்கில்லை. "வயிற்றுப் பிழைப்பிற்காக வீதி, வீதியாக இந்த வெய்யிலில் எங்கு அலைகிறாளோ" என்று நினைத்தபடியே வீட்டை நோக்கி நடையைக் கட்டினேன்.

நான் வீட்டை அடைந்ததும். எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் செல்வியின் குழந்தை மாத்திரம் தனியாக நிற்பதைக் கண்டேன். "அப்பொழுது செல்வியும் இங்கேதான் இருக்கவேண்டும்" என்று நினைத்து வாசலில் சிறிது நேரம் நின்றேன். அப்பொழுது செல்வி அந்தத் தெருக் கோடியில் "பழைய செருப்பிருக்கா சாமி! பழைய செருப்பு" என்று கூவிக்கொண்டே வருவது தெரிந்தது.

மறு நாள். காலை மணி 10 இருக்கும். சின்னான் தனது கடையை எடுத்து வைத்துக் கண்ணும் கருத்துமாக நேற்றைய 'ஆர்டரை'க் கவனித்துக் கொண்டிருந்தான். வழக்கம்போல அவன் கடைக்கு எதிர்த்த வெற்றிலை பாக்குக் கடைக்குப் போய் ஒரு 'சர்பத்' குடித்து விட்டு வெற்றிலை போடத் தொடங்கினேன். நேற்று வந்த அந்த மாணவன் வந்தான். செருப்புத் தயாராக இருந்தது! சின்னான் ஒரு சிறந்த தொழிலாளி. நீடித்த நாள் உழைக்கக் கூடியதும், சிறந்த முறையிலும் செருப்புக்களைச் செய்வதில் சின்னானுக்கு நிகர் அவனே தான். ஆனால் 'யந்திரயுக'த்தில் அவனது தொழில் பிரகாசிக்க வில்லை. யந்திரசாலைகள் கம்பீரமாகக் "கீச் கீச்" என்ற வெற்றிப் பேரிகை எழுப்பி, சின்னான் சமூகத்திற்கே சாவு மணியையும் அடித்தது! செருப்பு நன்றாகத் தான் செய்

யப்பட்டிருந்தது. நியாயமாக 2ரூ கூலி கேட்டான் சின்னான். இரக்கமற்ற அந்த மாணவனுக்கு இரண்டு ரூபாய் பெரிதாகப் பட்டது போலும்! "இரண்டு ரூபாயா" நீ செய்திருக்கும் வேலைக்கு? நியாயமாகக் கேளு, இல்லாட்டா செருப்படி தான்" என்று வாயில் வந்தவாறு பேசினான். சுடுகாட்டில் ஒரு காலை ஊன்றியிருக்கும் சின்னானால், மடச் சமூகத்தின் திரண்ட சக்தியென உரு வெடுத்து அவன் முன் நிற்கும் அந்த மாணவனை எதிர்க்க முடியவில்லை! அவன் கையில் $1\frac{1}{4}$ ரூ தான் விழுந்தது. சின்னான் ஒன்றுமே சொல்லவில்லை. கொடுத்ததைப் பெற்றுக் கொண்டு செருப்பைக் கொடுத்து விட்டான். செல்வியின் மேல் தன் கள்ளப் பார்வையைச் செலுத்திக் கொண்டே சென்ற அந்த மாணவனுக்கும் சின்னான் தன்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தத் தவறவில்லை!

மறு நாள் கடைவீதிப் பக்கம் சென்ற போது சின்னான் என் எதிர்ப்பட்டான். அன்று வரும்படியே இல்லை என்றும், செல்வியின் குழந்தைக்கு காய்ச்சல் என்றும் கையில் காலணா இல்லை, ஏதாவது தருமமாக் கொடுத்தா புண்யம் உண்டென்றும் என்னிடம் சொன்னான். அப்பொழுது என் கையிலும் பணம் இல்லை. ஏனெனில் அன்று தேதி 24. ஓர் ஏழைப் பாங்கி குமாஸ்தாவான என்னிடம் அன்று "பொடி வாங்கக் கூட காலணா இல்லை" என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! என்னுடைய மனம் இளகியது. அவனுக்கு உதவிசெய்ய முடியவில்லையே என்று வருந்தினேன். பணக் குவியலைப் பார்த்து மனம் குதூகலிக்கும் ஒரு பணக்காரனுக்கு என்னிடமுள்ள தர்ம சிந்தனையை மட்டும் இறைவன் அளிக்க மறந்து விட்டார்போலும்! ஆனால் எனக்கோ அவர் பணம் தரவில்லை. தாராள மனம் தந்திருக்கிறார்! கடவுள் என் மட்டில் வஞ்சனையுள்ளவர்.! உலகம் என்னளவில் வஞ்சனையுள்ள உலகம்! என்று என்னுள்ளே சொல்லிக் கொண்டே சென்றேன்.

* * *

என்னைத் திடீரென்று வேலூருக்கு மாற்றி விட்டார்கள். சின்னானின் சமூகத்தை உய்விக்கவேண்டுமென்ற சிந்தனையிலேயே என்னுடைய வாழ்நாளில் அதற்கான அங்க வேலைகளில் ஈடுபடத் தொடங்கினேன். வெளியூர் சென்று மாதங்கள் ஏழாகி விட்டபடியால், சின்னானைப்பற்றி நினைக்க முடியாமல் போய் விட்டாலும், அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது. என்னுடைய வேலைத் தொந்தரையிலும், குடும்பக் கவலைகளிலும் ஆழ்ந்து போன எனக்குச் சின்னானைப்பற்றிய சிந்தனையே இல்லை. இப்படியாக ஒரு வருஷமும் ஓடி விட்டது.

ஒரு தடவை சொந்த ஊருக்குத் திரும்பி வந்திருந்தேன் வேறு அலுவலாக. என்னுடைய தமக்கையின் பெண் ராஜி என் காலைச் சுற்றிக் கொண்டு "மிட்டாய் வேண்டும் மாமா, வாங்கித்தரயா ?" என்று மழலையில் கொஞ்சினாள். அவளுக்கு வேண்டிய மிட்டாய்களை வாங்கித் தர கடைத்தெருவிற்கு நீண்ட காலத்திற்குப் பின் மீண்டும் சென்றேன். என்னுடைய மனது சின்னானின் கடை எப்படி நடக்கிறதோ என்றறியவும் செல்வியின் குழந்தை இப்பொழுது எப்படி வளர்ந்திருக்கிறதோ என்பதிலும் லயித்திருந்தது அப்பொழுது அந்தக் குழந்தை தகப்பனில்லாத குழந்தை; யாரிடம் மிட்டாய் வேண்டுமென்று கேட்கும் என்ற எண்ணம் தோன்றவும், அவள் குழந்தைக்கும் மிட்டாய் வாங்கிக் கொண்டு சின்னானைப் பார்க்க விரைந்து சென்றேன். ஆனால்? அங்கே எனக்குப் பெருத்த ஏமாற்றம் காத்திருந்தது. சின்னான் கடையிருந்த இடம் வெறிச் சென்றிருந்தது! ஆனால், அதே இடத்தில் ஒரு பெரிய நீலக் கட்டிடம் கம்பீரமாக என்னை உற்றுப்பார்த்தது! இரண்டு பெரிய கடைகளுக்கு மத்தியில் கிழிந்த குடையின்கீழ் தன் குடும்பத்தையே நடத்திவந்த சின்னானின் உருவம் என் கண்களுக்கு அப்பொழுது மானசீகமாகத் தெரிந்தது! கண்களில் நீர் நிறைந்து விட்டது. உலகம் சின்னானின் குடும்பத்தைச் சிதற அடித்து விட்டது போலும்! "யந்திரயுகம்" அவனது வாழ்வைமட்டுமன்றி அவனது குடும்பத்தையே பலி கொண்டுவிட்டது! சின்னானின் நாணயமாகிய துரும்பு "யந்திரயுக"ப் புயல்காற்றில் எங்கோ அடித்துச் செல்லப் பட்டுவிட்டது! சின்னான் குடும்பம் சிலநாள் முன்னம் பசிக்கிரையாகி விட்டது என்றும், அந்த நீலக்கட்டிடம் ஒரு பெரிய தோல் பதனிடும் தொழிற்சாலை (Tanning factory) என்றும் விசாரித்ததில் தெரியவந்தது. நான் பித்துப்பிடித்தவன் போலானேன். கையிலிருந்த மிட்டாய்கள் தாமாகவே கைநழுவிச் சென்று விட்டன. மண்ணில் அவை மிதிபட்டுச் சின்னானின்சிதைவைக் காட்டியது போலும்! செல்வியின் குழந்தையின் சிரிப்பு அந்த எக்காள யந்திர ஒலியில் அமிழ்ந்து விட்டது போலும்! "அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த சின்னானின் குடும்பம் அழிந்தேவிட்டது. ஆனால் எனக்கு அழிவேயில்லை" என்ற இறுமாப்புடன் அந்த நீலக் கட்டிடம் நிமிர்ந்து நிற்பதுபோலத் தென்பட்டது. இதை ஆமோதிப்பதுபோல், அங்கிருந்த மாமரங்கள் "யந்திரயுக" ப்புயல் காற்றில் அசைந்தன!

டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்

# WOODWARD'S
## GRIPE WATER

*keeps baby well*

1-WW112-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

**ராமய்யா**

கேள்விகளிலும் பதில்களிலும் அநேக ரகம் உண்டு. அர்த்தமில்லாத கேள்வி, அர்த்தமில்லாத பதில்; அசந்தர்ப்பக் கேள்வி, அசட்டுத்தனமான பதில்; அதிகப்பிரசங்கக் கேள்வி, அயோக்கியத்தனமான பதில்; இப்படிப் பல விதமுண்டு. வசனங்களாகச் சில, வார்த்தைகளாகச் சில, வெறும் சப்தங்களாகச் சில, கேள்விக்குக் கேள்வியாகவும், பதிலுக்குப் பதிலாகவும் பிரசாரத்தில் வந்திருக்கின்றன. சகஜமாக அவைகளைக் கேட்கும் போது நமக்கு ஒன்றும் வித்தியாசமாகத் தோன்றாது; ஆனால் சிறிது நேரம் கவனித்து யோசனை செய்தால் அடக்க முடியாமல் சிரிப்பு வரும்.

திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் ரோட்டிலேயிருந்து சாயந்திரம் 5½ மணிக்கு ஒரு சுகி வந்து கொண்டிருப்பார்; திருப்தியாகக் காபி ஹோட்டலிலே சிற்றுண்டிகள் சாப்பிட்டு விட்டு, கையில் ஒரு சிம்டா பொடியை யேந்திக்கொண்டு, வாயில் வெற்றிலைப் பாக்குடன் 'மெரீனா' பேவ்மெண்டு மேலே காலை வைத்திருப்பார். பண்டைக்காலத்து நண்பர் ஒருவரை எதிரில் பார்த்து விடுவார். பார்த்த சந்தோஷத்தில், பக்குவமான வார்த்தைகள், வாக்கியங்கள், பிரச்னைகள் எல்லாம் பறந்து விடும்— "அடே, யடே, டே, டே, டே—ஹெ ஹெ ஹெ— இது என்ன இது, எங்கே, எப்போ, ஆ", என்று சுகி சொல்லுவார். அதற்குப் பதில் "ஹெ, ஹெ, ஹெ, பேஷ், என்ன ஓய்" என்று பதில் வரும். என்ன கேள்வி, என்ன பதில்? இதனிடையிலே, ஒருவரை மற்றொருவர் குதிரையைத் தட்டிக் கொடுப்பது போல் தட்டிக் கொடுப்பார், மற்றொருவர் முன்னவர் வயிற்றில் இலேசாகக் குத்துவார், கழுத்தைச் சுற்றியிருக்கும் மேல் வேஷ்டியை இழுத்துச் சுருக்கிடுவார், இரு கைகளாலும் இறுகக் கட்டிக் கொண்டு, ஒரு குலுக்குக் குலுக்கிக் கீழேயும் வீழ்த்துவார். சமீபத்தில் இருப்பவர்களுக்கு, இவர்களிருவரும் சல்லாபிக்கிறார்களா, சண்டை போடுகிறார்களாவென்று சந்தேகம் ஏற்படும். இப்படியெல்லாம் வழக்கம்!

ரயில்வே ஸ்டேஷன்களில் வண்டிகளிலிருந்து இறங்குகிறவர்களைப் பார்த்துக் கேட்கும் கேள்விகள் வெகு தமாஷாயிருக்கும். ரயில் வந்து நிற்கும்; கம்பார்ட்மெண்டிலிருந்து மூட்டையும் முடிச்சுமாக ஒருவர் இறங்குவார். அவரைப் பார்த்து, "ஓஹோ, முத்தண்ணாவா, எப்ப வந்தாப்பிலே, என்ன சௌக்கியமா" என்று கேள்வி! அதற்குப் பதில் "என்ன தம்பீ, நல்லாயிருக்கையா, இப்ப தான் வந்திண்டிருக்கேன்" என்று வரும்! கண்ணுக்குக் கணிசமாக ஒரு மனிதன் வண்டியிலேயிருந்து இறங்கிக் கொண்டிருப்பவரைப் பார்த்து "எப்போ வந்தாப்பிலே" என்று கேட்பதும், அதையும் காதில் வாங்கிக் கொண்டு, சகஜமாக "இப்போ தான் வந்து கொண்டிருக்கேன்" என்று பதில் சொல்லுவதும் நம்ம மாகாணத்தில் கேட்கலாம்! இந்தச் சம்பிரதாயம் வேறு எங்கும் கிடையாது.

வெள்ளைக்காரன் புத்திசாலித்தனமாக, "ஹல்லோ" என்கிற வார்த்தையொன்றில் பலவிதமான அபிப்பிராயங்களைத் தெரிவித்துவிடுகிறான். முதலாக ஒருவன் "ஹல்லோ" என்றால், பதிலுக்கு மற்றொருவன், கேவலம் உச்சரணையை மாத்திரம் மாற்றிக்கொண்டு "ஹல்—லோ" என்று சொல்லி நிறுத்திக்கொள்ளுவான். கேள்விக்குப் பதில் மிதமாயிருக்கும். வெள்ளையர்களிடத்தில் இன்னுமொரு வழக்கமுண்டு. க்ஷேம லாபம் விசாரிக்கும்போது, கேள்விக்குப் பதில் அதே கேள்வியாக இருக்கும். "நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்" என்று ஒருவன் கேட்டால், மற்றவன் "நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்" என்று கேட்டுவிடுவான். அத்துடன் தீர்ந்தது பரஸ்பர உபசரிப்பு விசாரணை. நன்றாயிருந்தாலும்சரி, இல்லாமல் போனாலும்சரி, சொல்லவேண்டிய பத்ததியும் இல்லை, கேட்கவேண்டிய பத்ததியும் இல்லை. நம்மவர்களிடையே, பழக்கம் வேறு.

"என்ன, ஸௌக்கியமா?'' என்றால், "இருக்கேன்", அல்லது "இப்படி இருந்துண்டிருக்கேன்'' "என்னமோ, இருதூண்டிருக்கேன்'' என்றே பதில் வரும். பரிபூர்ணமாகவும், சந்தோஷமாயுமிருக்கவே இராது. அதேது அமெரிக்கா தேசத்து ஆள் ஒருவனைக் கேட்கணுமாம்! "ஜோராக இருக்கேன், பேஷாயிருக்கேன், கொட்டாப்புளியாயிருக்கேன், குந்தாணியாயிருக்கேன்'' என்று சாங்கோபாங்கமாச் சொல்லி விடுவான். அப்படியெல்லாம் பதில் சொல்லுவது நம்முடைய ஆட்களுக்கு வழக்கத்துக்கு விரோதம்! உடம்பு எவ்வளவு நன்றாயிருந்தாலும், அசந்துஷ்டியாகப் பதில் சொல்லுவதுதான் சிரேஷ்டம் என்கிற கொள்கை! சில வேளைகளில் கேட்கிறவர்களும் அதற்கு அனுசரணையாகக் கேட்டுவிடுவார்கள். மொழுமொழுன்னு மணலிலேயிருந்து பிடுங்கியெடுத்த வள்ளிக்கிழங்கு மாதிரியிருக்கும் ஒருவனைப் பார்த்து, "என்ன, இளைத்துப் போய்விட்டமாதிரியிருக்கிறதே'' யென்பது சகஜம். அதற்குப் பதில் "ஆமாம்—பா—உடம்பே சரியாயில்லை'' என்றும் பொய் சொல்லுவது வழக்கம். இதிலேயிருந்து அடுக்கடுக்காகப் போய்க் கொண்டேயிருக்கும். "வைத்தியம் பண்ணிக்கொள்ளக் கூடாதா?'' "வைத்தியமெங்கே, மருந்தெங்கே, எல்லாம் ஒரே மருந்துதான், கடைசி மருந்து'' "என்னப்பா, அப்படி பேசுகிறாய்? நீயோ சிறு பயல், இதற்குள்ளேயா'' "சிறுபயலாவது, பேரன்பேத்தி யெடுத்தாய்விட்டது. வயது 40-க்கு மேலே ஆய்விட்டது; இனிமேலென்ன, சூர்யாஸ்தமனந்தான்,'' என்றவரையில் அசட்டுப் பேச்சு எல்லையில்லாமல் வந்து நிற்கும். இவையெல்லாந்தான் நம்முடைய வழக்கம்!

வாசற் கதவைத் தட்டிக் கூப்பிடுகிறபோது சிலபேர் "ஐயா, அம்மா'' வென்று கூப்பிடுவார்கள். உள்ளேயிருந்து யாரென்று கேட்டாலோ, "நான்தான்'' என்று பதில் சொல்லுவார்கள்! "நான்தானா, யாரு?"-"நான்தானம்மா, கதவு!'' கதவாவது, வாசற் படியாவது? பெயரைச் சொல்லக்கூடாதா? சொல்ல மாட்டார்கள். வழக்கமில்லை. இந்த ஒழுக்கம் தமிழ் நாட்டில் மாத்திரமல்ல. தெலுங்கு தேசத்திலுமுண்டு." எவரண்டோய், ஏமண்டோய்'' என்று கதவைத் தட்டும்போது, "எவரதி'' என்றால், "தலுபம்மா, தலுபு'' என்பார்கள்! தலுபு என்றால் கதவு என்று அர்த்தம்.

சென்னைப்பட்டணத்திலே சிற்சில வேடிக்கையான பதில்கள் வழங்கி வருகின்றன. சலவை செய்யும் கடை ஒன்றுக்குச் சென்று, "என்ன மேஸ்திரி, என்னுடைய துணிகளை இரண்டு நாட்களில் அவசரமாக வெளுத்துக் கொடுக்க முடியுமா'' என்று கேட்டால் "செய்யுங்கோ, ஸார்'' என்று பதில் சொல்லுவார்! முடியலங்காரம் செய்யும் இடத்துக்குப் போய் "ரொம்பவும் அவசரமாகப் போக வேண்டும், முடியை வெட்ட முடியுமா'' வென்று கேட்டால், "செய்யுங்கோ மிஸ்டர்'' என்பார்கள்! எப்படியிருக்கிறது? யார் செய்வது, யார் செய்து கொள்ளுவது? யோசித்துப் பார்த்தால் சிரிப்பு வரும். கேட்கிறபோது சகஜமாகத்தானிருக்கும்.

துக்கடா சாமான்களை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்பவர்கள் வாயில் "இல்லை'' என்கிற பதமே வராது. சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னேயிருந்த மூர்மார்க்கட் கடைகளில் இந்த வேடிக்கையைப் பார்த்திருக்கலாம். மனதில் நாம் எண்ணிக்கொண்டு போவது ஒன்றானபோதிலும் திரும்பி வரும்போது நமக்கு வேண்டாத சாமான்களில் பத்து வஸ்துக்களை வாங்கிக்கொண்டு வருவது சகஜம். இல்லையென்று சொன்னாலல்லவோ வெறுங்கையுடன் திரும்பப் போகிறோம். பச்சைப் பென்ஸில் ஒன்று கிடைத்தால் வாங்கி வரலாம் என்று உத்தேசித்துப் போவோம்! பச்சைப் பென்ஸில் இராது! "நீல பென்ஸில் இருக்குதுங்கோ, இதோ பாருங்க, காபியிங் பென்ஸில்! இங்க வாங்க ஸார், நில்லுங்க. சேப்டி பின் இருக்குது, பிரஸ் பட்டன், அங்குஸ்தான் வேணுங்களா! ஜெம் கிளிப், பேஷான ஜர்மன் கிளிப் ஸார்; இந்த விஸில் வாங்கிக்குங்கோ-ஜர்மன் பேப்பர் வெயிட் பாருங்க, ஜர்மன்பென்ஸில் சிவறது ஸார், $3\frac{1}{2}$ அணா தான்'' இப்படியே இழுத்துச் சென்று சட்டைப்பை முழுதும் சாமான்களை நிரப்பி விடுவார்கள். இது தான் சாதுர்யப் பதில் என்பது; இல்லையென்று சொல்லாமல், உண்டு என்கிற சப்தத்தாலேயே மூளையைக் கலக்கி விடுவது!

ஒரு சங்கீதக் கச்சேரியில் கூட்டத்தைப் பார்க்க வந்தவர் ஒருவர், சங்கிதம் கேட்க வந்தவர் ஒருவரைப் பேச்சுக்கு இழுத்தார்.

"என்ன ஸார்?"

"என்ன?"

"என்ன விசேஷம்?"

"நல்ல விசேஷம்"

"சொல்லுங்கோ"

"நீங்கள் தான் சொல்லுங்கோ".

"வீட்டிலே எல்லாரும் சௌக்கியந் தானே?"

"ஆஹா!"

"உங்களுடைய தகப்பனுர்?"

"நேற்றிக்குப் போய்ட்டார்."

(ஆத்திரத்துடன்) "போய்ட்டாரா?"

"ஊருக்குப் போய் விட்டாருங்காணும்! அதனுல் தான் கச்சேரிக்கு வரவில்லை."

"அப்படிச் சொல்லுங்கோ! என்ன டாப்பா, என்னமோ விபரீதமாகச் சொல்லுகிறீரேன்னு தூக்கி வாரிப் போட்டது."

"சித்த சும்மா இருங்களேன்-சங்கீதம் கேட்போம்."

(சற்று நேரம் நிசப்தம்), திரும்பவும்—

"ஆமாம், உம்மோடே வண்டியிலே வந்து இறங்கினது உம்முடைய பெண் தானே."

"இல்லைங்காணும், என்னுடைய சம்சாரம்."

"ரொம்ப பால்யமா யிருக்காப்பலே யிருக்கே. இரண்டாந்தாரமோ?"

"சிவ சிவ! முதல், இரண்டு, மூன்று, கடைசியெல்லாம் அவள் ஒருத்தி தான். கண் போட்டுத் துலையாதையும்."

இப்படியே சம்பாஷணை அடுக்கிக் கொண்டு போகவும், சங்கீத அபிமானி இடம் மாற வேண்டியதாய்ப் போயிற்று. ஆரம்பத்திலேயே "நான் சங்கீதம் கேட்க வந்திருக்கிறேன். நீர் வம்பு அளக்க வந்திருக்கிறீர். உமக்கும் எனக்கும் ஒத்துக் கொள்ளாது. நீர் கேள்வி கேட்டால் நான் பதில் சொல்லமாட்டேன்" என்று சொல்லியிருந்தால் இவ்வளவு சங்கடம் ஏற்பட்டிராது அல்லவா? ஆனுல் அப்படிச் செய்ய முடிந்ததா? வழக்கத்துக்கு விரோதமாயிற்றே!

பதில் சொல்லும் போது, கேள்வியும் காதில் விழுந்தால், ஒன்றுக்கொன்று எவ்வளவு இடக்கு மடக்காயிருந்தாலும், தமாஷாயிருக்குமே தவிர விபரீதமாயிருக்காது. ஒருவர் டெலிபோனில் பேசும் போது நாம் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால், கேள்வியோ காதில் விழாது, பதிலை மாத்திரம் கவனித்துக் கொண்டிருப்போம். சில வேளைகளில் "பகீல் பகீல்" என்று தோன்றும்! சமீபத்தில் அம்மாஞ்சியும் நானும் கேட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றைப் பின் வருமாறு விஸ்தரிக்கிறேன்.

"ஹல்லோ! யாரு? ராமசாமியா? என்னப்பா? ஆமாம்—ஆமாம்—இல்லையே—போய்ட்டாரே—நேற்று ராத்திரிதான்"

(சற்று நிசப்தம்)

"அவர் காலமாய் மூன்று வருஷங்கள் ஆய்விட்டதே."

"அவரா! அவர் டிபன் சாப்பிட்டு விட்டு உடனே போய் விட்டார்"

"என்ன? யாரு? எங்க அப்பாவா?"

"ஓஹோ! அவர் அயோக்கியத் தனத்துக்கு அஞ்சவே மாட்டாரே! இங்கே நங் கூரம் பாய்ச்சிவிட்டு உட்கார்ந்திருக்கிறுர். கழுத்தைப் பிடித்துத் தள்ளினுலும் போகமாட்டேங்கிறுர்."

இதைக் கேட்டுக்கொண்டு சமீபத்தில் உட்கார்ந்திருந்த அவருடைய தகப்பனுர் கழியை ஓங்கிக்கொண்டு அடிக்க வந்து விட்டார். கேட்ட கேள்விகளும் காதில் விழுந்திருந்தால் விபரீதமாக இருந்திராது. பதில்களை மாத்திரம் கேட்டுக் கொண்டிருந்த தகப்பனுருக்கு அடக்க முடியாத கோபம் கிளம்பியது நியாயம் தானே! நடந்த சம்பாஷணையோ இப்படி: மூன்று வருஷங்களுக்கு முன்னே காலமாய்விட்ட ஒரு நண்பரைக் குறித்துக் கேட்ட கேள்விக்குப் பதில் சரியாகத் தெரிந்தது. அடுத்த கேள்வி ஒரு விருந்தாளியைக் குறித்து; அவர் டிபன் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டதாகச் சொன்

ஞர். மூன்றாவது கேள்விவேறு ஒருபொது நண்பருடைய தகப்பனரைக் குறித்துக் கேட்டதாகும். சரியாகக் காதில் விழாத தால், "எங்கப்பாவா" என்று கேட்டு விட்டு, பிறகு மூன்றாவது மனிதருடைய அப்பா என்பதைக் காதில் வாங்கிக் கொண்டு, அவரைப்பற்றித் துச்சமாக அடுக்க ஆரம்பித்துவிட்டார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த கிழவருக்கு இந்தச் சம் வாதம் காதில் விழாததால், தம்மைப் பற்றித்தான் பேசுவதாக எண்ணிக் கொண்டு கழியை ஓங்கிக்கொண்டு அடிக்க வந்துவிட்டார்!

கடிதங்களை எழுதும்போது அநேகவித மான வார்த்தைகளை வழக்கமாக உப யோகப்படுத்துகிறோம். அவைகளைக் குறித்துச் சிறிது ஆராய்ச்சி செய்தால் சிரிப்பு வரும். "அன்புடையீர்!" அல்லது "அன்பார்ந்த ஐயா" என்று ஒரு கடி தத்தை ஆரம்பித்து, "தாங்கள் சென்ற வாரம் எழுதிய கடிதத்தைப் படித்து மிக கவும் வருத்தப்படுகிறேன். தாங்கள் இவ்வளவு கேவலமான நடையில் எழுது வீர்கள் என்று நான் கனவிலும் நினைக்க வில்லை. என் மனதை மிகவும் புண் படுத்திவிட்டீர்கள்" என்று முடிப்ப துண்டு. இக் கடிதத்தில் முதலிலே குறிப் பிட்ட அன்புக்கும், நடுவிலே குறிப்பிட்ட வருத்தத்துக்கும், பிறகு குறிப்பிட்ட கேவலத்துக்கும், முடிவில் குறிப்பிட்ட புண்ணுக்கும் முடித்துப் போட்டுப் பார்த்தால் வேடிக்கையாகத்தான் காணும். கடிதங்களில், சாதாரணமாக, அன்பு, அருமை, ஆசிர்வாதம், நமஸ்கா ரம், வணக்கம், விண்ணப்பம், கோரிக்கை இம்மாதிரியான வார்த்தைகளுக்கு அர்த் தமே வைக்கக்கூடாது! "இந்தக் கடி தத்தை தந்தியாகப் பாவித்து, தாங்கள் எனக்குச் செலுத்த வேண்டிய தொகையை உடனே அனுப்பும்படி கோருகிறேன். தவறினல் உம்முடைய நடத்தையைப் பற்றி யாவரும் அறியும்படி உமது மேல் நடவடிக்கைகள் எடுக்க அஞ்சமாட் டேன். இது நிச்சயம். வணக்கம். உமது அன்பன்" இப்படியும் கடிதங்கள் உண்டு. எவ்வளவு தோரணையுடன் கோரிக்கை, என்ன மிரட்டல், அதற்குப்பின்பு வணக் கமென்ன? முதலில் ஒழுக ஒழுக அன் பென்ன! இப்படித்தான் வழக்கம்!

அம்மாஞ்சி யெழுதும் கடிதங்களில் பெரும்பாலும் சுக துக்கம், சல்லாபம் அனுதாபம், தோத்திரம் வெறுப்பு இவை கள் மாறி மாறி நிறைந்திருக்கும். அவை கள் தான் வாழ்க்கை நிலையை யொட்டி வருவதாக அவன் சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவான். உதாரணமாக. "தங்க ளுடைய கடிதம் கிடைத்தது. மிகவும் சந்தோஷம். ரயில்கோளாறினல் இரண்டு தினங்கள் தாமதித்துக் கிடைத்ததைப் பற்றித்தான் வருத்தம். தங்களுடைய மனைவியாருக்கு சுகப்பிரஸவம் ஆன தைப்பற்றிக் களிப்புற்றேன். ஆயினும் பெண் குழந்தையாகப் பிறந்து விட்டதே யென்று தான் விசனிக்கிறேன். கிரமப் படி தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அதிகச் சம்பளம் கிடைத்ததாகத் தெரி கிறது. மிகவும் சந்தோஷம். எனினும் அதிகமாகக் கிடைத்த பணம் முழுதும் வருமான வரியில் அடித்துக் கொண்டு போய்விடும் என்று செய்தி கிடைத்து மிகவும் வருந்துகிறேன். உம்முடைய இலாகாவில் வெள்ளையத் தலைவன் நீங்கி இந்தியன் ஒருவனுக்கு, பதவி கிடைத்த தாகத் தெரிந்து மிகவும் திருப்தியடைந் தேன். ஆனல் அந்தப் பதவி உங்களுக் குக் கிடைக்கவில்லையே யென்று மிகவும் துக்கப்படுகிறேன். உமது உடம்பு தெம் பாக இருக்கிறதென்று குண்டப்பன் சொன்னன். நல்ல செய்திதான். ஆனல் குண்டப்பனுக்கு முகவாட்டம் அதிகரித் திருக்கிறது. அதுதான் கவலைக் கிடமா யிருக்கிறது. எல்லாம் ஈசன் செயல். தங் கள் அன்பன் அம்மாஞ்சி" இந்த மாதிரி கடிதம் எழுதுவதால் தான் அம்மாஞ்சி யை எல்லோரும் மெச்சிக்கொண்டு, பழக் கத்துக்கும் சிநேகத்துக்கும் மிகவும் பாத் திரமானவன் என்றும் சொல்லுகிறார் கள். கேட்க வேணுமா?

வாழ்த்துக் கடிதங்களுக்கு பதில்எழுது வதும், வாழ்த்துப் பரிசுகளை அங்கீகரிப் பதும், தினசரிப் பத்திரிகைகள் மூலமா கச் செய்வது தற்கால நாகரீகம். செல் வாக்கு அதிகமாயிருப்பவர்களிடத்தில் இந்த வழக்கம் அதிகம். பெண்ணுக்குக் கலியாணம் செய்வதென்று பிரமாதமா கக் ஜோடிப்பார் ஒருவர். ஒரு மாதத் துக்கு முந்தியே அழைப்புப் பத்திரங்கள் அச்சிட்டு ஆய்விடும். எதற்காக வென் பீரோ? அழைப்பாளிகள் எல்லோரும்

அனுப்பவேண்டிய பரிசுகளை ஜோடிக்க வேண்டாமா, அதற்காகத்தான். வெள்ளிப் பாத்திரங்கள் செய்யவேண்டியவர்களுக்கும், பிரத்தியேகமாகத் தறியிட்டு, சேலைகள் நெய்து கொண்டு வருகிறவர்களுக்கும் அதமபக்ஷம் இரண்டு வாரங்களாவது அவகாசம் வேண்டுமே! அதுவும் தவிர, மதுரையிலே கலியாணத்தை நடத்துகிறவர்கள், டில்லி, கல்கத்தா, பம்பாய் முதலிய பட்டணங்களிலிருப்பவர்களுக்கு பத்திரங்கள் அனுப்பினுல், அந்தந்தப்பட்டணங்களிலிருந்து பரிசுகள் வருவதற்கே ஒருவாரம், பத்து நாட்கள் ஆய்விடுமே! இல்லாவிடில் டில்லி, பம்பாய், கல்கத்தாவிலிருந்து பிரயாணச் சங்கடங்களை அனுபவித்துக்கொண்டு அழைக்கப்பட்டவர்களெல்லாரும் நேராக வரவேண்டும் என்கிற உத்தேசத்துடனு அழைப்புப் பத்திரங்கள் செலுத்தப்படுகின்றன? இரண்டாயிரம் பத்திரங்கள் அச்சிடப்படும்; அழைப்பாளிகள் விலாசங்களெல்லாம் பலவிடங்களிலிருந்து சேமிக்கப்படும்; சர்க்கார் சிவில்லிஸ்டுகள், கிளப்புகளின் அங்கத்தினர் லிஸ்டுள், டெலிபோன் டைரக்டரிகள், வாக்காளர்களின் லிஸ்டுகள், ஜூரர்களின் லிஸ்டுகள், இவைகளெல்லாவற்றிலிருந்தும் பெயர்களும் விலாசங்களும் எடுக்கப்படும். கலியாணம் சிறப்பாக நடக்கும். வந்த பரிசுகளையெல்லாம் விமரிசையாக மேஜைகளின் பேரில் ஜோடித்திருப்பார்கள். புகைப்படம்கூட எடுப்பார்கள். எல்லாம் கழிந்து ஒருவாரத்திற்குப் பிறகு பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் இருக்கும். "மிஸ்டர் அண்ட் மிஸஸ் காத்தவராயர், தம்முடைய அருமைப் புதல்வி திருநிறை செல்வி அழகுவர்ணக் கிளியின் திருமணத்தை யனுசரித்து அனுப்பப்பட்ட ஆயிரக்கணக்கான வாழ்த்து இதழ்களையும், கணக்கற்ற விலையுயர்ந்த பரிசுகளையும் அன்புடன் அங்கீகரிக்கிருர்கள். அனுப்பிய அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியே வணக்கம் செலுத்தச் சந்தர்ப்பப்படவில்லை. அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிருர்கள்." எப்படியிருக்கிறது இந்தப்பதில்? அழைக்கும்போது ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பத்திரம்; அவைகளோடு கூடவே ஒரு ஆயிரம் அங்கீகரிப்புக்கார்டுகளையும் அச்சிட்டிருந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்! அப்படியில்லாமல், நன்கொடை செலுத்தும்போது கும்பலிலே கோவிந்தம்போலே பத்திரிகையில் பிரசுரம்! இதுதான் தற்கால வழக்கம்!

சினிமாபடங்களில் மிகவும் சுவை இருக்கிறவர்கள் படங்களைத் தாங்கள் மாத்திரம் பார்த்துஆத்மார்த்தமாக அனுபவிக்க மாட்டார்கள். ஒரு முறைக்குப் பத்து முறை ஒவ்வொரு படத்தையும் பார்ப்பதுடன், சகாக்கள் இரண்டு மூன்று பேர்களையும் கூட்டிக்கொண்டு போவார்கள். படங்களில் நன்ருக நடித்தவர்களுக்குப் புகழ்ப் பாத்திரமும் எழுதிப் போடுவதுண்டு. படத்தைப் பத்துமுறை பார்த்ததாகவும், தாமும் தமது நண்பர்களும் பூரித்துப் போய்விட்டதாகவும், நடிப்பு பிரமாதம் என்றும், தம்முடைய களிப்பை இவ்விதம் கடிதம் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுவது கேவலம் தம் கடமையேயென்றும், நடிகருடைய போட்டோ ஒன்றை அனுப்பிக் கொடுத்தால் தம் வீட்டில் மாட்டி வைத்து அலங்காரம் செய்து பெருமைப் படுத்துவதாகவும் எழுதுவதுண்டு. நடிகரிடமிருந்து பதில் வரும். "தாங்கள் அன்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது. தங்களுடைய மன மகிழ்ச்சியைக் கண்டு நான் பெருமைப் படுகிறேன். தங்களைப் போன்ற ரசிக மணிகளின் மகிழ்ச்சிக்காகவே நான் இந்தத் தொழிலில் ஈடுபட்டு உழைக்கிறேன் (தொழிலில் பணம் காசு ஒன்றுமே கிடையாது போலும். ரசிகமணிகளுடைய மகிழ்ச்சிக்காகத்தான் இவர் உழைக்கிருர்). என் உள்ளமும் கருத்தும் பொது மக்களின் சந்தோஷத்துக்காகவே நான் அர்ப்பணம் செய்து வருகிறேன் (பொது மக்களின் சந்தோஷத்துக்கா, டைரக்டர் ஆட்டி வைக்கும் ஆட்டத்துக்காவென்று உள் நுழைந்து பார்த்தால் தெரியும்). தங்களுடைய கடிதத்தை ஒரு அருமையான பரிசாகக் கருதி எக்காலத்திலும் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்து, எனது ஊக்கத்துக்கும் உற்சாகத்துக்கும் தூண்டுகோலாக அவ்வப்பொழுது பார்த்துக் கொண்டேயிருப்பேன்."—இவையெல்லாம் நிஜமான வாக்குகள் என்று எண்ணிக் கொண்டிருப்பார் ரசிகர். கடிதாசி எழுதியது நடிகருடைய குமாஸ்தாவென்று அவருக்குத் தெரியுமா? இது போலவே எத்தனையோ

கடிதங்கள் எழுதியிருப்பாரென்றும் அவருக்குத் தெரியுமா?

மூட்டுப் பூச்சிக் கதையென்று ஒருகதை அம்மாஞ்சி சொல்லி நான் கேட்டிருக்கிறேன். ஒரு ரயில்வே ரிடைரிங் ரூமில் மூட்டுப்பூச்சி உபத்திரவம் பொறுக்காமல் ஒரு பிரயாணி அதிகாரிகளுக்கு ஒரு பிராது கடிதம் எழுதினாராம். ரயில் அதிகாரி அதைப்படித்துவிட்டு, "வழக்கமாய் அனுப்பப்படும் மூட்டுப்பூச்சிக் கடிதம் அனுப்புவது" என்று ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி அந்த லெட்டருடன் வெளியே அனுப்பிவிட்டாராம். இரண்டு நாட்களுக்குப் பிறகு பிராது எழுதினவருக்கு இரண்டு பக்கங்கள் நிறைந்து ஒரு கடிதம் வெகு கோவையான பாஷையில் கிடைத்ததாம். அதைப் படித்ததும் பிரயாணி பூரித்துவிட்டார். "அடடா, என்ன சிரத்தை, என்ன வினயம், என்ன கோவை. நாம் செய்த பிராதை எவ்வளவு சிரமப்பட்டுக் கவனித்திருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டு கடிதத்தை மடித்து இடும்போது, மேல்அதிகாரி எழுதியிருந்த துண்டுக் காகிதம் அகப்பட்டதாம் (ஆபீசிலுள்ள குமஸ்தா மறந்து போய் அதையும் பதிலுடன் குத்தியனுப்பிவிட்டார்). அப்பொழுதுதான் விளங்கியது நம் பிரயாணிக்கு நிஜ மர்மம். பின்னே அவருக்கு ஏற்பட்ட மனச் சங்கடத்தைப்பற்றிச் சொல்லவேண்டுமா?

இதைப் போன்ற பதில்கள், புத்தகப் பிரசுராலயங்கள், சங்கீத வித்வத் சபைகள், நிகழ்ச்சிகளை நடத்தும் கோஷ்டியார் முதலிய இடங்களிலிருந்து சகஜமாக வருவதைக் காணலாம். ஒரு நிகழ்ச்சியை மெச்சிக்கொண்டு கடிதம் எழுதினால் வணக்கத்துடன் ஒரு பதில் வரும். தூஷித்து ஒரு கடிதம் எழுதினால், வருத்தம், வணக்கம் இரண்டும் கலந்து ஒரு பதில் வரும். பதில்களில் தேன் ஒழுகும், பால் சொட்டும். என்ன வினயம்! நிகழ்ச்சிகளை நடத்தியவர்களுக்கும் இந்த ரசிகர் ஒருவரே தான் மிகவும் ஆப்தர் போலவும், அவருடைய அபிப்பிராயந்தான் அவர்களுக்கு அடிக்கோல் போலவும் பதில் எழுதுவார்கள்

"எங்களாலியன்ற வரை நேயர்களுடைய அபிப்பிராயங்களை அனுசரித்தே நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம்"

"நாங்கள் எதிர்பார்த்தபடியே தங்களிடமிருந்து வந்த கடிதத்தில் எங்களுடைய அல்ப முயற்சியை அபிமானத்துடன் மெச்சியதைக் கண்டு களிப்புற்றோம்."

"தாங்கள் எடுத்துக் கூறிய குறைகளை முன்னதாகவே யாம் உணர்ந்துள்ளோம். அடுத்த முறை அவ்விதமான குறைகள் இல்லாமல் நிகழ்ச்சிகளை நடத்துவோம்."

இத்தகைய பதில்களைப் படிக்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்ளுவார்கள்? தங்களுடைய கடிதங்கள் சென்றவுடன், காரியாலயங்களிலுள்ள அதிகாரிகளெல்லாரும் ஓடிவந்து, வட்ட மேஜையிலமர்ந்து கடிதத்தைச் சூழ்ந்துகொண்டு "இதோ பார்க்கட்டும், இங்கே காட்டுங்கள். ஆஹா, ஆஹா" என்று அனுபவித்து வாசித்திருப்பதாக எண்ணுவார்களல்லவா? ஐயோ பாவம்! அப்படியெல்லாம் ஒன்றும் நடந்திராது. காரியாலயத்தில் பூனை தூங்கிக்கொண்டுதானிருக்கும். கடிதாசி ஒரு மூலையில் விழுந்து கிடக்கும். பதில் எழுதியவர் ஒரு கூலிக்கு மாரடிக்கும் குமாஸ்தாவாக இருப்பார். மாமூல் பதிலில் மூன்றாவது ரகம், இரண்டாவது ரகம் என்கிற ஒரு அச்சிட்ட ரகத்தைப் பார்த்துக் காபி அடித்திருப்பார். இது தான் வழக்கம்!

# கட்டழகி ரங்க நாயகி



எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

தஞ்சை மா நகரின் ராஜ வீதி. அதன் நடுவே மேக மண்டலத்தை முத்த மிடும் மாளிகை. அம்மாளிகையின் கீழ்பால் ஒரு பளிங்கு மண்டபம். அதனை யடுத்து ஒரு நிலா முற்றம்.

அந்த ரங்க விலாஸ மண்டபத்திலே சுவர் முழுதும் சித்திரங்கள். அவற்றிலே தேர் வேந்தர், அவர் தம் தேவியர் ஒரு பால். நடன சிங்காரிகளின் நடையழகு ஒருபால். கண்ணபிரானது திருவிளையாடல்கள் ஒரு பால். கமலக் கண்ணன் ஒருபால்.

மண்டபத்தின் மத்தியிலே ரமணீயமான பீடமொன்று. அதன் மீது கட்டிளம் பெண்ணொருத்தி. உண்மையில் சித்திரமா? உயிர்

ஓவியமா? அல்லது அழகின் கனியா? என்றே எண்ண நேரும்.

அவ்வடிவம் சற்றே பெருமூச் செறியும். சிறிதே தலை தூக்கும். ஒரு சமயம் உற்றுநோக்கும். ஒரு சமயம் குஞ்சிரிப்புக் கொள்ளும். ஒரு சமயம் ரங்கா என்று வாய் திறக்கும். கூர்ந்து கவனிப்பின், சூத்திரப்பாவை என்றேகாணும்.

வடிவுமிக்க அந்த உருவின் முன்னே, ஒரு பக்கம் தேன் கலந்த நஞ்சு! ஒரு பக்கம் ஒள்ளிய உடைவாள்! ஒரு பக்கம் கூரிய குத்திட்டி! ஒரு பக்கம் அக்கினிக் குழம்பு! எதிரேயுள்ள அனைத்தையும் பார்க்கிறது அவ்வடிவம். அப்பால் பதைக்கிறது. அதன்பின் கலகல என்று நகைக்கிறது.

தாதிக்கோ கிட்டவர அச்சம். எட்டி நீங்கவும் நடுக்கம். பரிந்து பேசவோ ஆசை மிகுதி, பதைப்பும் பயமும் பிடரியில் குந்தியுள, குறுக்கேயும் நிற்கின்றன. "நாளை இவளைக் காணக் கிடைக்குமோ? எதிரேயுள்ள நான்கிலே ஒன்று இவளுயிரைப் பருகிவிடுமே! பெற்ற வயிறு பற்றி எரிதல் கிடக்கட்டும். வளர்த்த பாசம் மனத்தை ஒடிக்குமே," என்ற ஏக்கம், என்செய்வாள் தாதி.

"மதுரை மன்னவனும், நாயக்க வேந்தனும், திருமலை நாயக்கனும்! என்ன மோகம் அவனுக்கு.' மனித வடிவு கொண்டுள்ளான்; ஆனால் மிருகப் பிராயமே! துருக்க வெள்ளத்தை வரவழைத்தான்; தமிழகத்தைக் கெடுத்தான்; செஞ்சியைப் பறிகொடுத்தான்! இம்மாபாதகங்கள் போதாவோ? தஞ்சையையுமா சீரழிக்கவேண்டும்?

"தந்தை தாயர் பார்த்து, வெறுத்தவனுக்கு இம்மகள், இக் குலமகள், இந்த எழில் மகள், மாலையிடுவளோ? க்ஷத்திரிய மரபில் வந்தவள், சேவக குலத்தானுக்குக் கைநீட்டுவாளோ? கழுத்தைக் காட்டுவாளோ? கொற்றவனும் அவன்? கொற்றவனுக்குரிய கண்ணியமெங்கே? ஆண்மை எங்கே? குருவின் குமரியைப், பட்டரின் புதல்வியைத், தன் மகளே போல் பாவித்து வந்த பெண்ணை இச்சித்தவன் எதுதான் செய்யான்!

"தஞ்சை யழியலாம், தஞ்சையரசும் சாயலாம். வேந்தன் விஜயராகவன் வெட்டுண்டு வீழலாம், இம்மாளிகையும் தரைமட்டமாகலாம். நமது கண்மணி ரங்கநாயகி கிடக்கட்டும். பெண்ணென்று பெயர் படைத்த எவரையும் அவன் தன் கண்ணால் இனிப் பார்க்க முடியாது. கண்ணாடியிலேனும் பத்மினியைப் பார்த்து மகிழ்வதாகப் பரிதவித்த அல்லாவுதீனைப் போல் ஆசை நோயில் ஆழ்ந்துழல வேண்டியதுதான்!

"பாவி மகன் முளைத்தான், தென்னாட்டிலே ஓர் அரசு துருக்கர் வசமானது; மற்றோர் அரசு மண்ணாகப் போகிறது. அவனரசும் நாளடைவில் நலியப் போகிறது! இதனையுணராமல், ஏதேதோ சூது விளைவிக்கிறான் அவன். நம் சேனாதிபதியை விலைக்கு வாங்கப் பார்க்கிறான். படைஞரையும் பேதிக்கப் பாடுபடுகிறான். தஞ்சைப் பெருவுடையாரே! எல்லாம் உமது சித்தம்!"

என்று அத்தாதி நெஞ்சம் பிளக்க விம்முகிறாள்; பெண்ணுக்கு அழகை ஏன் படைத்தான் பிரமன், என்று பிரலாபிக்கிறாள்; 'ஸ்ரீரங்கம் அரங்கநாதனது அருளால் தோன்றிய இவளை, பெரியாழ்வார் புதல்வியே போல் பக்தி வாய்ந்த இவளை, அழகென்பதெல்லாம் ஒருங்கே திரண்டு வந்து குடிகொண்டுள்ள இவளைப், பேதை மானிடர் கொள்ளக் கூடாதென்பதே அவ்வள்ளலின் கருத்துப் போலும்!' என்று கருதி நைகிறாள்.

அத்தறுவாயில், 'மோகனமே, சோகமேன்?' என்றாள் கட்டழகி ரங்கநாயகி. அதன்மேல் அருகே சென்று, தனது ஆவி சோர அக்காரி கையைத் தழுவிக் கொண்டு தவிக்கலானாள், மோகனாங்கி என்னும் அச் செவிலித்தாய். அதுகண்டு அவளது கண்ணருவியை மறித்து, ஆறுதல் பலவும் பேசியபின், கலக்கம் ஒரு சிறிதுமின்றி ரங்கநாயகி பகர்வாள்:—

"ஈன்றெடுத்த அன்னையினும் இனிய அன்புகாட்டும் மோகனமே! நானோ சிறியவள். நீயோ முதியவள். நீயே எனக்கு ஆறுதலும் தேறுதலும் அளிக்கவேண்டும்? நானா உனக்கு உயர்நீதியும் போதமும் புகட்டுவது? பிறந்த அன்றே, இறப்பு என்பதும் உண்டு. எனவே இறப்பினுக்கு அஞ்சுவோர் பேதையரே! பிறப்பின் பயன் யாது? பெருமை மிக்க கருமங்கள் புரிந்து, பிறவாதிருக்க வழி தேடுவதன்றோ?

"அத்திருமலை என்பான் புல்லுருவியாக முளைத்துவிட்டான். அவன் கையில் சிக்காதிருக்கவேண்டும், என்பதே என் பிரார்த்தனை. தேவி திரௌபதி அரசவையிலே துகிலுரியப்பெற்றாள்: சீதா தேவியோ அசோக வனத்தில் ஒன்பது மாதம் உயிரொடுங்கிக் கிடந்தாள்: அத்தகைய இழிநிலை எனக்கு நேரக்கூடாதென்றே அரங்கநாதனைத் தினந்தோறும் துதித்து வருகின்றேன். என்னொருத்தி பொருட்டாக, இத்துணை உயிர்ச்சேதமா, என்பதே என் உள்ளத்தை உடைக்கின்றது.

"எனது கருத்தையறிந்த எந்தையோ உன்னிஷ்டம், என்றுரைத்து விட்டார். என் இஷ்டம் என்ன? நீயே அறிவாய். க்ஷத்திரிய குலம் என்னால் மாசுபடுமோ? இது கிடக்கட்டும். அமுதமென நெஞ்சார இந் நஞ்சை அருந்துவதா? அல்லது பட்டாக்கத்திக்குப்

பெருமை தருவதா? இன்றேல், குத்திட்டிக்குக் கீர்த்தி கொடுப்பதா? அல்லது அழல் பிழம்பினுக்கு அரிய மகிமை ஊட்டுவதா?

“தட்சன் அலட்சியமாய் நடத்தியகாலையிலே, பார்வதி தேவி தீக்கடவுளுக்கே சிலாக்கியம் அளித்தாள். முப்புரங்களை முன்னவன் சிரித்தே எரித்தான்; அஞ்சனை மைந்தனும் அன்று தென்னிலங்கையில் தீயையே கொளுத்தினான். என் வயிற்றழலும் நெஞ்சழலும் தணிய, ஈனச் சேவக குலத்தான் இச்சித்த இந்த யாக்கை ஏதுமில்லாமல் வெந்தவிய, அக்கினி பகவானுக்கே என்னை அர்ப்பணஞ் செய்யப் போகின்றேன்.”

இவ்வாறு ரங்கநாயகி கூறியதும், மோகனாங்கியோ சோகம் ஒரு பக்கம், ஆனந்தம் ஒரு பக்கம் ததும்ப, “என் கண்ணே! கருதரிய களஞ்சியமே! வேந்தர் பிரானது விருப்பம் அறியாயோ நீ? நாயறியுமா ஒரு சந்திப் பானை என்பர். அங்ஙனமே அறியாதுழலும் திருமலை நாயக்கன் என்பானது கண்ணெச்சில் பெண் சவத்தின் மீதும் படக்கூடாது என்பதே நம் இறைவன் கோட்பாடு! ஆதலின், அந்தப்புரத்தைச் சுற்றிலும், அடிப்படைச் சுவரிலே வெடி மருந்து வைத்துளது!” என்று கூறும் சமயம்.

ராணி அச்சுதம்மாளின் பணிப் பெண்ணொருத்தி, பங்கஜவல்லி என்று பெயர் படைத்தவள், அந்தரங்க விலாஸ மண்டபம் குறுகினாள்; ரங்கநாயகியின் முகப்பொலிவினை நோக்கினாள்: அதன்மூலம் மனமலர்ச்சியையும் மதித்துணர்ந்தாள். “ஆண்டாளம்மையின் மறுபிறப்பே! நாச்சியாரின் நற்சாயலே! விஜயநகர ராஜமரபை விளக்கவந்த மாணிக்க தீபமே! வந்தனம்.” என்று வணங்கினாள்.

பின்பு அம் மோகனத்தைப் பார்த்து, “என் தோழி, உன்மகளும் என்மகளும் இன்றிரவே அந்தப்புரம் புகத் தீர்மானித்துளர். விடிய விடிய ரங்கபூஜையும் பஜனையும் நடக்குமாம். மறுதினம் அதிகாலையிலே மாதரனைவரும் நறுநீராடி நல்லுடைதரித்து, அணி பலவும் பூண்டு, ஆனந்தமயமாக அக்கினிக் கடவுளை அடையப் போகின்றனராம். நமது மகளிருக்குமட்டுமே அம்மகிமையோ, நமக்கில்லையோ? உன் கருத்து யாது?” என்றுகேட்டனள்.

உன்கருத்தே என்கருத்து, என்றாள் மோகனாங்கி. அதுகேட்டு, “அத்தனை மாதருமா இறக்கப்போகின்றனர்” என்று வியந்து வினவினாள் அவ்வேந்தன் குமாரி; பின்பு சிறிது சலித்தாள். அதனை முகத்தில் கண்டதும் மோகனம் மொழிவாள்:-

“பெண்கள் நாயகமே! வடநாட்டினுக்கு நம் தென்னாடு தோற்குமோ? அன்னியத் துருக்கரின் அட்டகாசங் கண்டு, ஆகும் வரையில் அருஞ்சமர் ஆற்றி, முடிவிலே மஞ்சள் உடை தரித்து, மகாதேவனைத் துதித்து, ரஜபுத்திரர் வீரசுவர்க்கம் புகுவர். அதற்கு முன்னதாக அக்குலமாதர் அனைவரும் பன்னீர்த் தடாகத்தில் பாய்வதேபோல் அக்கினிகுண்டத்தினுள் பாய்ந்துவிடுவர்.

“நம் தென் நாட்டினிலே அத்தகைய நிகழ்ச்சியினுக்கு இன்றளவும் காலம் இடம் வாய்க்கவில்லை. பெண்பித்தனுக்குப் போதம் புகட்டவும், தென்னாட்டிலும் க்ஷத்திரிய மாதர் உண்டென்பதை உணர்த்தவும், தஞ்சைக்கு ஓங்குபுகழ் நாட்டவும், முடிவு கட்டியுளர் நமது மாதரார். தஞ்சைநாயக்க வம்சம் மறையினும், அவர்தம் தனிப்புகழ் நிலைநிற்க வேண்டுமன்றோ? பெண்டிரின் கற்பென்பதும் பெருமை என்பதும் பேசப்போமோ.”

இவ்வாறு மோகனம் பேசியபின்னர், இரவு வந்து புகுந்தது. அனந்தன்மீது அறிதுயில் கொள்ளும் அரங்கநாதப்பெருமானது ஓவியத்தைச் சுவர் மீது பார்த்த வண்ணம் மோகனமும் ரங்கநாயகியும் துயில் கொண்டனர். அவர்தம் கண்களோ மலர்ந்திருந்தன செந்தாமரை மலர் போல். மனமோ மாயவனது தூய ஓவிய வடிவில் குவிந்து கிடந்தது.

தஞ்சாவூரில் நடக்கும் காட்சியினைக் காண விரைவான்போல், கதிரவனும் தனது ஆயிரம் கிரணங்களையும் வீசிக்கொண்டு கிளம்பினான். திருமலை நாயக்கனது தளபதியான வேங்கடகிருஷ்ணன் என்பானே இன்று போரை முடிவுகட்ட வேண்டுமென முனைந்தவனாய், வீரர் குழாங்களை அணிவகுத்தனன்.

அந்நாளிலே தஞ்சாவூரில் வெளிக்கோட்டையொன்றும், உள் கோட்டையொன்றுமாக இரண்டு கோட்டைகள் இருந்தன. வெளிக்கோட்டையோ முன் தினமே சிதைவுண்டு போய்விட்டது. உள் கோட்டையும் ஒரு சிறிது பழுதுற்றுக் கிடந்தது. முடிவு நாளில், யாது நிகழுமோ, என்பதே அத்தளபதியின் கவலையாயிற்று. ஆதலின், கண்குத்திப் பாம்புபோல் அவன் மிகவும் கருத்தாயிருந்தனன்.

படைவலியினால் வெல்லாமல், பெரு வஞ்சனையினாலேயே திருமலை நாயக்கன் வெல்லுவதைக் கண்ட விஜயராகவன் மனம் கசந்தானாயினும், தளர்ந்தானில்லை. போர்க்குல வகுப்பில் வந்தோர் நோய் நொடியினால் சாகாமல், வாள் முனையிலேயே மடிவாராதலால், அத்தகைய பாக்கியம் தனக்கு இத்தள்ளாத வயதில் கிட்டியதென உள்ளங் களித்தனன். அப்போது அவனுக்கு வயது எண்பதுக்கு மேலிருக்கும்.

இங்காளிலே இருபதிலே ஏற்றம், முப்பதில் முறுக்கு, நாற்பதில் நழுவல், ஐம்பதில் அசதி, அறுபதில் ஆட்டம், எழுபதில் ஏக்கம், எண்பதில் தூக்கம் (சாவு) என்பார்கள். அன்று எண்பதுக்கு மேற்பட்ட விஜய ராகவன் போர்க் கோலம் பூண்டதும், முப்பது வயது ஆண்மகனே போல் புலப்பட்டான். உடைவாளும் குத்திட்டியும் தரிக்கையில், சீரிய சிங்கநாதமுஞ் செய்தான்.

போர்க் கோலம் பூண்டதும், மன்னார்குடி ராஜகோபால சுவாமியை மனத்தகத்தே நினைத்தான்; பின்பு கால் நடையாகப் பிருகதீசுவரர் ஆலயம் புகுந்து, அமலனை முடி படியுற வணங்கினான்; பரிமீதமர்ந்தான்; பாங்குடன் அந்தப்புரம் சேர்ந்தான்; வெடி மருந்து வைத்துள்ள இடங்களைச் சோதனை செய்தான்; குமாரி ரங்காயகியை முன்னிட்டு மாதர் அனைவரும் திக்கடவுளை யணையத் தீர்மானித்திருப்பதைக் கண்டான், கழிபேருவகை கொண்டான்!

பின்னர் மிக்க மனமலர்ச்சியுடன் போர்க்களங்குறுகினான் அப்பெரு வேந்தன். அந்தப்புரத்தில் ஆனந்தமாகப் படுத்துக் கிடக்கும் விஜய ராகவனா இவன், என்று பெரிதும் பிரமித்தான் மதுரைத் தளபதி! கடும் போர் மூளுமெனக் கருதி, கவலையுங் கொண்டான். விஜய ராகவன் அமர்க்களம் நோக்கிப் புறப்பட்டது கேட்டதும், அந்தப்புரத்தில் ஆரவாரம் மிகுந்தது.

நஞ்சருந்திச் சிலர்; வாளில் நான்று கொண்டு சிலர்: ஈட்டிக் குத்துக்கொண்டு சிலர், இப்படியாக மாதர் பலர் மரித்து வீழவே, எஞ்சிய மாதர் மணிகள் இனிய முகத்துடன் அந்தரமளாவக் கொழுந்துவிடும் அக்கினிகுண்டத்தை யணுகினர். அவ்வளவில், வெடிமருந்து பற்றிக்கொண்டது. கொள்ளவே, கல்லும் மண்ணும் காற்றில் பறந்தன; மங்கையரின் நிணமும் சதையும் வானத்திலே சிதறின, எங்கும் இரத்தத் துளி சிந்தியது.

அது கண்டதும் போரில் முனைந்தான் விஜயராகவன். அவ்வீர வேந்தன் வீரசுவர்க்கம் புகுவதும், தஞ்சையரசு தாழ்வதும், வேறு கதை.

1673-ஆம் ஆண்டு நடந்த சம்பவம் அது. தஞ்சை யரண்மனையிலே தற்போதும் அம்மாதர் தீக்குளித்த இடத்தை நோக்கலாம். அரண்மனையின் வடமேற்கு மூலையில்தான் அத்தீக்குளி நிகழ்ந்தது. அவ்விடம் இன்றும் சோபையற்றுத் தோன்றும்.

தஞ்சை நாயக்கருக்குப் பின்னர் ஓர் இரு நூறு வருட காலம் மராட்டியர் தஞ்சைச் சீமையை ஆண்டுவந்தும், மாளிகையிலே அந்த இடத்தைப் பழுது பார்க்கவில்லை. அதனை அணுகவுமில்லை.

அந்த அரண்மனையைச் சுற்றி வந்தால், தொண்டு கிழவராயுள்ளோர் அவ்விடத்தைச் சுட்டிக் காட்டுவர்.

அரசகுல அரிவையர், அழகின் மிக்க மாதர், ஆருயிரினும் மானமே சிறந்ததெனக் கொண்ட மங்கையர் திலகங்கள்—ஓர் எண்ணூறுபேர்—அவ்வாறு தீக்குளித்தனர். அவ்விடம் பாழ்பட்டுக் கிடப்பதோ? அங்கே பத்தினிப் பெண்டிர்க்கென ஓர் ஆலயம் சமைக்கலாகாதோ? அல்லது சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இடமென அதனைப் பாதுகாத்து வருதல் வேண்டாமோ?

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

# தாமரை பேசினாள்!

அ. நவநீதக்கண்ணன்

கிராமத்தின் வெளிப் பக்கத்திலுள்ள குளக் கரையின் மேல் உலாவிக்கொண்டிருந்தேன். எங்கிருந்தோ காற்றலைகளின் மீது புரண்டுகொண்டே வந்து என் செவிகளில் நுழைந்தது ஓர் சோகமான குரல்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒருவரையும் காணோம்! ஆனாலும் அந்தச் சோகக் குரல் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது! குனிந்து பார்த்தேன்! பச்சைப் பசேலென்றிருந்த இலைகளின் நடுவில் 'தாமரை' தலையை நீட்டிக்கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் அவளுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. கம்மிய குரலுடன்,

"மனிதனே! சற்று நேரத்திற்குள் நான் சாகப்போகிறேன். தயவு செய்து இந்த அபலையை அந்தப் பயங்கரமான மரணத்திலிருந்து காப்பாற்று!" என்றாள்.

நான் அவள் சமீபம் உட்கார்ந்துகொண்டேன்!

"மரணமா? அழகியே! உன்னைக்கூடவா மரணம் அழைத்துக் கொள்ளும்?" என்று கேட்டேன்.

"ஆம்! தோழனே! அதுவும் இன்னும் சற்று நேரத்தில்!"

"அது உனக்கு எப்படித் தெரியவந்தது."

"என் சுற்றத்தார்களின் தலைகளை 'மடக்' கென்று ஒடித்து எடுத்துச் சென்ற மனிதனை நேற்று மாலையில் நான் கண்டேன். ஆக, இன்றும், அதைப்போல என் தலையையும், நெஞ்சில் கிஞ்சித்தும் இரக்கமின்றி ஒடித்துப் போய்விடுவான்."

"யார் அவன்?" என்று ஞாபகமறதியாகக் கேட்டுவிட்டேன்.

"யாரா? அவனும் உன் இனம். உன் வர்க்கம்."

"கலங்காதே! கன்னியே! உன்னைக் காப்பாற்றுகிறேன்."

இதைக் கேட்டவுடன் தைரியம் பிறந்தது அவளுக்கு! மேலும் பேசினாள் தாமரை:-

"என்ன வாழ்க்கை இது! காலையில் பிறப்பதும் மாலையில் இறப்பதும் சகஜமானதுதானே! இதற்காக, என் மனம் உடைந்துபோய் மருண்டுவிட்டேனே! நீ மட்டும் என்ன, சிரஞ்சீவியாக வாழ வரம் பெற்றவனா? அநித்யமான வாழ்க்கையோடுதானே நீயும் ஒட்டிக்கொண்டிருக்கிறாய். பெண்களென்றால் ஒரு மாதிரியாக நினைக்கும் தன்மையுள்ளவன்தானே நீயும். உன்னிடம் தஞ்சம் புகுந்தேனே. நான் ஒரு பேதை! அவனும் உன்னைப்போன்றவன்தான்! ஆறிலும் சாவு! நூறிலும் சாவு! இதற்காக என் குரல் வறள இப்படி அலறுவானேன்!

"பூதஉடம்போடு கூடிய மனிதனை விட்டுத் தள்ளு! அவனுக்குப் பதிலாக ஒரு புயற்காற்று வீசியடிக்க ஆரம்பித்தால் என் கதி—?

"கற்பனையில்கூடச் சாவின் சாயை அழகாகத்தான்படிந்திருக்கிறது. என் செவ்விதழ்களெல்லாம் சிதறுண்டு போய், இப்பொழுது நான் நிமிர்ந்து கம்பீரமாகத் தலை தூக்கி நின்றுகொண்டிருக்கும் குளத்தின் நீர் மட்டத்தின்மேல் மிதக்கும். அவற்றைக்காணும் மனிதன் 'ஐயோ' என்றுபச்சாத்தாபப்படவா போகிறான்? இல்லை! ஒருகாலும் இல்லை.


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

| கும்பகோணம் கிளை :— | திருச்சி கிளை :— |
|---|---|
| 7, சாரங்கபாணி கோவில் மேலவீதி. | 15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட். |

"அரூபியான ஆண்டவனை—எங்களை எல்லாம் தோன்றச் செய்தவனை—அர்ச்சிக்கவும் அலங்கரிக்கவும் எங்கள் பிணமல்லவா பயன் படுகிறது! போகும் கதி நல்கதி ஆகக் கடவுளை வழிபட வண்ண மலர்கள் இல்லையே என்று வருத்தப்படும் மனிதன் எங்களுடைய வர்க்கத்தின் வாழ்க்கையையே கண நேரத்தில் நாசமாக்கி விடுகிறான். நாங்கள் அறை கூவிக் கேட்கிறோம், "அவனுக்கு நல்ல கதி ஆண்டவன் கொடுப்பாரா?" என்று! ஆனால் அவன் பக்தன்! ஆண்டவனுக்குப் பிரியமான பாத்திரம்! அவனும் தான் வாழ்கிறான்! வருத்தமின்றி! ஏன் அப்படி என்னை ஒருவிதமாக உற்றுப் பார்க்கிறாய்? உங்கள் சமூகத்தை உதாசீனமாகப் பேசுகிறேனென்றா? அல்லது உனக்கும் ஏதாவது "ஆசை" பிறந்து விட்டதா என் மேல்!

"அது சர்வ சாதரணமாக ஏற்படக் கூடியது தான். நான் சிங்காரியாக இருக்கிறேன்! அதற்கு—அழகிற்கு—அடிமையாக இருக்க நீ விரும்பலாம்!

"கடந்த இரவு என் இதயம்—பெண் உள்ளம்—எப்படி இருந்தது தெரியுமா? அது எண்ணற்ற கற்பனைக் குவியல்களை உருவாக்கும் உலைக்கூடம்!

"ஹூம்—! உனக்கு எங்கே தெரியப் போகிறது!

"ஒரு பெண்ணின் உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் சக்தி, ஆண்களுக்கு இருக்குமென்று என்றால் ஸ்திரப்படுத்திச் சொல்லவே வாய் கூசுகிறது! பெண்! பெண்! பெண்! அவள் வாழ்ந்தாலே போதும்! அழகு மட்டும் அணுக்கூடக் குறையாது இருக்க வேண்டும். உங்கள் கண்களுக்கு அதுவே பிரும்மானந்த விருந்து!

"என் மேல் அசைக்க முடியாத இரக்கங் கொண்ட தோழனே! என் மனம் எரிமலையாகி விட்டது. அதனால் தான் நான் என்னென்னவோ பேசி விட்டேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். எனக்கு அந்த மனிதன் வருகையை நினைத்ததுமே சொல்லொணாத பீதி உண்டாகிறது. அது ஏனோ தெரியவில்லை. அந்தோ! நான் என் செய்வேன்!" என்று ஒரு வழியாகக் கூறி முடித்தாள்.

என் மௌனத்தைக் கலைக்க நீண்டதொரு நெடு மூச்சும் விட்டாள்.

"என் மனங்கவர் தாமரையினியாளே! நின் கூற்று யாவும் மெய்யே! என்னால் ஆவது ஏதேனுமுண்டோ" என்று அவளை வினவினேன்.

"அன்பனே! உன்னாலாவதொன்றுண்டு. அதை நீ செய்குவையோ!"

"அட்டியின்றி ஆரணங்கே!"

"ஆம்! அதுவே தான்! உனக்கும் எனக்கும் நிகழ்ந்த சந்திப்பை எல்லோரும் அறிந்து உண்மை தெரியச் செய்ய வேண்டும். அதுவே நீ எனக்காற்றும் உதவி. அதோ! தொலைவில் பக்தனும் வந்து கொண்டிருக்கிறான் குடலையுடன்! நான் சாகத் துணிந்து விட்டேன். இனி எனக்குச் சமுத்திரமும் முழங்கால் அளவு தான். நீ என் வேண்டுகோளை மட்டும் நிறைவேற்றி விடு. அது என் மரண கீதமாக எல்லோர் உள்ளத்திலும் ஊடுருவட்டும். அன்பனே! அபலைக்கு விடை கொடு! நான் செப்பியது ஞாபகமிருக்கட்டும்," என்றாள்.

"அப்படியே செய்கிறேன்," என்று இயம்பினேன் நானும்.

* * *

"எப்படியடா செய்யப் போறே," என்ற என் தாயின் குரலைக் கேட்டுப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். என் முகத்திற்கு நேராகச் சுவரில் மாட்டியிருந்த கடியாரம் 'டிங் டிங்' என்று எட்டு முறை அடித்தது. என் படுக்கை அறை முழுதும் அச்சப்பதத்தின் அலைகள் பரவி ஓய்ந்தது.

Aid to Beauty a Guardian of COMPLEXION
மருந்து சத்துக்கள், தாவர எண்ணெய்கள்—முக்கியமாக வேப்பெண்ணெய்—வாசனைத் திரவியங்கள் இவைகளைக் கலப்பதில் கைதேர்ந்த அனுபவத்தில் உருவானது மலபார் லிம்டா சோப். தொடர்ந்து உபயோகித்தால் சரும நோய்களை அண்டவிடாமல் தடுக்கும். மிருகக் கொழுப்பு சேராதது. உஷ்ணப் பிரதேசங்களுக்கேற்றதோர் அருமையான சோப்.
LIMDA
LIMDA
MALABAR LIMDA SOAP
VEGETABLE SOAP WORKS, CALICUT.
PROPRIETORS: SAIT N.P. & CO., LTD CALICUT-BOMBAY-2, MADRAS-1.

# பெண்களுக்குப் பிரத்தியேகமானது

ஷிபாலி செளத்ரி — சாரி

## தபால் பெட்டி

இந்த மாதம் சமையல் முறை, தின் பண்டங்கள் செய்யும் விதம் இவைகளை எழுத வேண்டுமென்று பலர் கேட்டுக்கொண்டதால், அந்த ரீதியில் எழுத முன்வந்தேன். ஏற்கனவே சிலருக்குத் தெரிந்ததாக இருக்கலாம். சர்க்கரையே கிடைக்காத நாளில் டாபி (Toffee) எப்படிச் செய்வது என்று கோபிக்கவேண்டாம். எளிய முறையில் தயாரிக்கக் கூடியதும், வெல்லம் சேர்ப்பதுமான கொட்டாங்கச்சி கேக் செய்து பாருங்களேன்! அரிசி குறைவாக இருக்கிறதே என்று கவலைப்படுகிறவர்க்கு அடுத்த முறை வேறு பண்டங்கள் யோசித்து எழுதுகிறேன்.

தையல் பகுதியில் கொடுத்துள்ள குழந்தை உடுப்புக்களும், குஷனும் உங்களுக்கு நிச்சயம் பிடித்திருக்கும். ஏன்? சோளிதான் நன்றாக இல்லையா? அந்தப் பெண் எவ்வளவு மனோஹரமாகத் தோற்றமளிக்கிறாள்!

சுசீலா.

*　　　*　　　*

அக்கா, என் தலை மயிர் கூடு கூடாய்க் கழன்று போகிறதே. எனக்குத் துக்கம் தாங்கவில்லை. ஒரு மருந்து சொல்லேன்?

ருக்மணி.

பதில்:- உடல் நலத்தை முதலில் கவனி-தவிர, இந்தப் பழைய காலத்து உபாயத்தை உனக்குச் சொல்கிறேன், செய்து பாரு. பலன் இருந்தால் எனக்கு எழுது. ஒரு பிடித்த பிடி சாயப்பாக்கு-அலகுப் பாக்கு, சாலியம்பாக்கு என்று சொல்வதும் உண்டு-எடுத்து $\frac{1}{2}$ ஆழாக்கு ஜலத்தில் ஊறவைத்து, மறுநாள் சாய ஜலத்தைத் தலையில் தேய்த்துத் தடவிக் கொள்ளு. $\frac{1}{2}$ மணி கழித்து நன்றாக அலசி ஸ்நானம் செய்துவிடு. இதை வாரம் இரண்டு முறை செய்தால் போதும். பாக்கில் உள்ள துவர்ப்புச் சத்து, தலை மயிரை உதிரவொட்டாமல் பிடித்துக் கொள்ளும் என்று நினைக்கிறேன். வருத்தப்படாதே. சரியாகிவிடும்.

———

## சமையல்

### 1

சப்பாத்தியோடு சாப்பிடுவதற்குக் கத்திரிக்காயை இம்மாதிரி தேங்காய்ப் பாலில் தயாரித்தால் மிக ருசியாக இருக்கும்.

தேவையான சாமான்கள்:—

கால்வீசை கத்திரிக்காய்.

ஒரு சிறிய தேங்காய்.

இஞ்சி, பச்சைமிளகாய், வெங்காயம் (சிறு துண்டங்களாக நறுக்கியது.)

உப்பு.

மஞ்சள் பொடி.

சிறிதளவு எண்ணெய்.

ஒருசிறிய கரண்டி நெய்.

கத்திரிக்காயை நீளத்தான்களாக நறுக்கி, உப்பும் மஞ்சள் பொடியும் சேர்த்து, எண்ணெயில் நன்றாக வதக்கி எடுத்துக் கொள்ளவும்.

ஒரு கற்சட்டியில் நெய்யை ஊற்றி இஞ்சி வெங்காயத் துண்டங்களை அதில் வதக்கி, பிறகு கத்திரிக்காய், பச்சைமிளகாய்த் துண்டங்களைப்போட்டு, தேங்காய்ப்பால் சேர்த்துக் கொதிக்கவிடவும். 10 நிமிஷம் ஆனதும், கத்திரிக்காய் நன்றாக வெந்து, கூட்டு சற்றுக் கெட்டியானவுடன் இறக்கி உபயோகிக்கவும்.

தேங்காய்ப்பால் தயாரிக்க: துருவின தேங்காயை வெண்ணெய்போல் அரைத்து ஒரு டம்ளர் ஜலம் சேர்த்து, 20 நிமிஷம் கொதிக்கவிட்டு, ஆறியபின் வடிகட்டி எடுத்துக்கொள்ளவேண்டும்.

2

காலிபிளவர் துண்டங்களை இதேபோல் கறி செய்தால் நன்ருக இருக்கும். பெரிய கொத்துக்களாக ஒடித்து, உப்பு, மஞ்சள்பொடி சேர்த்து வதக்கி எடுத்துக் கொள்ளவும். நெய்யில் இரண்டு ஏலம், கிராம்பு, துளி லவங்கப்பட்டை இவைகளையும் பச்சைமிளகாய்த் துண்டங்களையும் வறுத்துக் கொண்டு, பிறகு காலி பிளவர் தான்களைச் சேர்த்து, சிறிது மிளகாய்ப்பொடியோடு தேங்காய்ப்பாலைக் கொட்டி வேக வைக்கவும். தான் கைக்கு மிருதுவானதும் இறக்கிவிடவேண்டும்.

ஒரு பெரிய காலிபிளவருக்கு ஒரு தேங்காயின் பால் வேண்டியது.

3

சர்க்கரை கிடைப்பது சிரமம்தான். கிடைக்கும்போது:—இந்தக் கட்டிப் பால் டாபி (Condensed Milk) குழந்தை

களுக்கு மிகவும் பிடிக்கும் பண்டம். செய்து பாருங்கள். ஒரு டீஸ்பூன் ஜலத்தில் இரண்டு அவுன்சு வெண்ணெய், ஒரு கப் சர்க்கரை சேர்த்துப் பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி, கரைய விடவும். பிறகு ஒரு சிறிய டின் புட்டிப்பாலை இதில் சேர்த்து 20 நிமிஷம் கொதிக்கவிடவேண்டும். நெய் தடவிய ஒரு தட்டில் கொட்டி, சூடாக இருக்கும்போதே, கூரான கத்தியினுல் சிறு துண்டங்களாய் நறுக்கி எடுத்து உபயோகிக்கவும்.

4

'கேக்' வடிவத்தில் இருப்பதால், இந்தப் பக்ஷணத்தை 'கேக்' என்றும் கொட்டாங்கைச்சியில்தயாரிப்பதால் கொட்டாங்கைச்சி கேக் என்றும் பெயர் கொடுப்பது பொருத்தமானது! சிரிக்க வேண்டாம்.




தேவையான பண்டங்கள்:—

¼ படி அரிசியை இயந்திரத்தில் ரவைபோல் உடைத்து, மணம் வரும் வரையில் சிவக்க வறுத்துக்கொள்ளவும்—

¼ படி வெல்லம்
1 தேங்காய் (துருவல்)
ஏலப் பொடி

ஒரு கொட்டாங்கைச்சியை உள்ளும் வெளியும் நன்ருய்த் தேய்த்துச் சுத்தம்

செய்து, அடியில் மூன்று துவாரங்கள் போட்டுக் கொள்ளவும். பக்ஷணம் தயாரிக்க இது முக்யமான சாதனம்.

இப்பொழுது-வெல்லத்தைப் பொடித்து, மட்டாக ஜலத்தில் கரைத்து, தயாரித்த அரிசிப்பொடியில் ஏலப் பொடி சேர்த்துக் கலந்துகொண்டு, வெல்ல ஜலத்தைத் தெளித்துப் பிசிறி வைத்துக் கொள்ளவும்.

கும்மட்டியில், ஒரு சிறிய வெண்கலப் பானையில் பாதி அளவுக்கு ஜலம்விட்டுக் கொதிக்க விடவேண்டும். கொட்டாங்கைச்சியில், அடியில் கொஞ்சம் தேங்காய்த்துருவல் அதன்மேல் அரிசிப்பொடி, பிறகு தேங்காய், மீண்டும் அரிசிப்பொடி இவ்வாறு போட்டு ¾ அளவு நிரப்பிக் கொண்டு கொட்டாங்கைச்சியை வெண்கல 'பானைமீது நன்ருய்ப் பதியும்படிவைக்கவும்; இடைவெளி இல்லாமல் ஒரு சிறு துணியைச் சுற்றலாம். கொட்டாங்கைச்சியை ஒருசிறிய தட்டினுல் மூடவும். ஜலம் நன்ருய்க் கொதித்தவுடன், இரண்டு நிமிஷத்தில் கொட்டாங்கைச்சிமேல் இருந்து ஆவி கிளம்பும். அப்பொழுது இதையும் சேர்த்து ஒரு அடுக்குப் பாத்திரத்தினுல் மூடி, இன்னும் ஒரு நிமிஷம் கழித்துத் திறந்து கொட்டாங்கைச்சியை ஒரு தட்டில் கவிழ்க்கவும். 'கேக்' அதேவடிவத்தில் நிற்கும்! இதே மாதிரி பாக்கியுள்ள மாவையும் 'கேக்' தயாரித்து எடுக்கவும். ஒரு 'கேக்' மூன்று நிமிஷத்தில் தயாராகி விடும்.

ஒவ்வொன்றையும் தனித்தட்டில் எடுத்து மேலே காய்ந்த நெய் ஊற்றி, ஒரு ஸ்பூனை வைத்துச் சாப்பிடக் கொடுக்கவும்.

---



## தையல் பகுதி

1. குஷன்

2. குழந்தை உடுப்புக்கள், சோளி.

(1) பூ. சாய்ந்த ஸாடீன் தையலில்,

(2) ஒற்றை - Single - தையல்

(3) லேசி-டெய்சி தையல்



(4) ஒத்தைத்தையலும், பிறகு உள்ளே ஸ்டெம் தையலில் ஒருவட்டமும்— வேறு கலர்களில்

(5) Running Stitchம், பிறகு வேறு வர்ணத்தில் அதற்கு நடுவே இன்னொரு நூலும்- பூக்களை- கெட்டிச்சிவப்பு, மஞ்சள் நீலம், ஆரஞ்சிலும், இலைகளைப் பச்சையிலும்- தைக்கவும்.

குஷன்- வெளுத்த மஞ்சள் கதர்துணியில், உங்கள் பழைய-Wool-கம்பளி நூலினால்—இந்த உல்லாசமான-திண்டு தையுங்கள்.

(1) பத்துவயதுப் பெண்ணுக்குப் பிராக் போட விரும்புவோர் இதைத் தைத்துப்

பார்க்கலாம்- பாவாடைபோல் இடுப்பில் சுருக்கித் தைத்திருப்பது அழகாய் இல்லை?

2. உங்கள் ஐந்துவயது கமலாவுக்கு ஏற்ற பூப்போட்ட சீட்டி பிராக்கு! வெள்ளைக் காலரும், முன்புறம் வளைவுகளும் கொடுத்து அழகாய்த் தைக்கவும்.

3. லேசான மஞ்சள்நிறத்தில் இந்த ரவிக்கையில் சாஜ்-கண்ணாடிகள் வைத்து வேலை செய்தது. கீழேகண்ட வர்ணங்களில் கரையைத் தையுங்கள். ஓரத்திற்கு வெளிக்கோடுகள் சிவப்பு. நடுவில், பச்

சைக் கோடுகளும் - outlines-மத்தியில் கறுப்பும் பூக்கள். பலநிறங்களில். கண்ணாடியைச் சுற்றிச் சிவப்பும், கறுப்பும், காஜாதையல்- கண்ணாடியைச் சுற்றி உள்ள புள்ளிகளைச் சிவப்பும் மஞ்சளுமாய்த் தைக்கவும்.

கத்யவார் தையல் வேலை தெரியாதவர் இதேமாதிரியைச் சாடின்தையலில் தைக்கலாம். புள்ளிகளுக்குக் கிராஸ்தையல் முதலியவை உபயோகிக்கலாம்,



# தாயும் சேயும்

**லீலா கோபாலன்**

ஏழ் கடல் கடந்து கப்பலிலும் ஆகாய விமானத்திலும் பிரயாணம் செய்து இங்கு வந்து பார்த்தாலும் பெண்கள் பெண்களாய்த்தான் இருக்கிறார்களே தவிர இயற்கையாக உள்ள பெண்மை மங்கவில்லை. பிரிட்டிஷ் பெண்களின் சதாரண பழக்க வழக்கங்களைப் பற்றி நான் முன்பு எழுதியது உங்களுக்கு நினை

விருக்கலாம். இப்பொழுது இங்குள்ள தாய்மார்களையும் அவர்கள் குழந்தைகள் வளர்ப்பதைப் பற்றியும் கொஞ்சம் பார்க்கலாம்.

மணம் முடித்த இளம் தம்பதிகள் தங்கள் உல்லாசமான வாழ்க்கையின் நிம்மதியைக் குறைக்காமல் இருக்க, சுமார் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள்வரை தங்களுக்குக் குழந்தை பிறக்காமல்இருக்க மிகவும் கவனம் காட்டுகிறார்கள். அரசாங்க ஆஸ்பத்திரிகளும் டாக்டர்களும் குழந்தைகளை விருத்தி செய்யாமல் இருப்பதற்கு ஆண் பெண் இருவருக்கும் கவனத்துடன் எல்லாம் படிப்பித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு பெண்ணாவது தாய்மை ஸ்தானத்தை அடையாமல் வெறும் மலடியாக வாழ்நாளைக் கழிக்க எண்ணுவாளா? எங்கும் இது சகஜம் தானே! ஆகையால் எப்பொழுது தாங்கள் சந்ததியை விருத்தி செய்யலாம் என்று நிச்சயிக்கிறார்களோ அப்பொழுது தான் பெண் பெருமையை அடைகிறாள். தங்களுக்கும் குடும்பம் ஏற்பட்டு, தகப்பனாக ஆகப்போகிறோம் என்று தெரிந்ததும் ஆண்களும் கையில் கொஞ்சம் பணம் சேகரிக்க ஆரம்பிக்கிறார்கள். இங்கு ஒருவராவது கையில் சுமார் 50 அல்லது 60 பவுன் வரை சேகரிக்காமல் குழந்தையை அடைய முயற்சிக்கமாட்டார்கள். இதுவும் குழந்தையின் அதிர்ஷ்டம் தானே?

பெண்கள் மூன்று அல்லது நான்கு மாதம் கர்ப்பவதியாக இருந்தால் டாக்டர்களோ அல்லது ஆஸ்பத்திரிகளோ ஒரு ஸர்ட்டிபிகேட் (Certificate) கொடுக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு, ரேஷன் ஆபீஸில் குழந்தையை எதிர்பார்க்கும் தாய் என்பதற்கு அறிகுறியாக ஒரு தனி நீல நிறப் புஸ்தகம் கொடுக்கப்படும். அதில் குழந்தைக்கும் தாய்க்கும் பலத்தைக் கொடுக்கக் கூடிய வைடமின் மாத்திரைகள், காட்லிவர் ஆயில் (Cod liver oil), முட்டைகள், ஆரஞ்சுப்பழ ரசம் இன்னும் ஒரு தனி நபருக்கு ரேஷனில் என்னெல்லாம் கொடுக்கப்படுமோ அவைகளும் கொடுக்கப்படும். இந்த நீல நிறப் புஸ்தகத்தை யார் கையில் கண்டாலும் அவர்களுக்குப் பஸ் வரிசையிலோ, கடையிலோ முதன்மை ஸ்தானம்தான் கிடைக்கும். மிகவும் அதிசயமாக இங்கு இறக்குமதி செய்யப்பட்டுச் சொற்ப கடைகளில் விற்கப்படும் வாழைப்பழம்கூடப் பிள்ளையை எதிர்பார்க்கும் தாயின் புஸ்தகத்திற்குத் தான் கிடைக்கிறது. மேடர்னிடி பெனிபிட் (Maternity benefit) என்று வாரத்திற்குக் கொஞ்சம் பணம் தாய்மார்களுக்குப் பிரசவத்திற்குச் சில வாரங்களுக்கு முன்பும் சில வாரங்கள் பின்பும் அரசாங்கத்திலிருந்து கிடைக்கிறது. கூலி வேலையைச் செய்து பிழைக்கும் பெண்களுக்குக் கடைசியில் வேலைக்குப் போக முடியாததினால்தான் இந்தச் சலுகை. ஆனால் இதில் எவ்வளவு நன்மை இருக்கிறது என்பதைக் கஷ்டப்படும் அந்தத் தாய் தான் சொல்ல முடியும்.

வசதிகள் இருப்பவர்களுக்கு வீட்டிலேயே பிரசவம் பார்க்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் வீட்டில் வசதி இல்லாதவர், ஆஸ்பத்திரிகளில் ரிஜிஸ்டர் செய்யப்படுவார்கள். எல்லாம் 6 மாதம் முன்பே ஒழுங்கு செய்யப்படும். வீட்டில் பிரசவத்துக்கு இருக்கும் பெண்களுக்கு உதவி அளிப்பதற்காக ஒரு நாளைக்கு 8 மணிநேரம் வேலை பார்க்க ஆட்களும் நியமிக்கப்படுகிறார்கள். டாக்டர், உதவி மருந்துகள் இன்னும் இதர தேவைகள் எல்லாம் இலவசமாக அளிக்கப்படும்.

மேற்சொன்னபடி பலவித சௌகரியங்களுடன் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் தாய்மார்களின் புத்திக் கூர்மையைப் பற்றியும் நான் சொல்லவேண்டியது அவசியம்தான். இங்கேதான் மணம் முடித்த மறுநாளே பெண்களுக்குத் தன் தனிக் குடும்பம் ஏற்பட்டு விடுகிறது என்று சொன்னேன் அல்லவா? சிலபெண்களுக்கு வீட்டில் சொந்த மனிதர் இல்லாவிட்டாலும், புத்திமதி கூறி எப்பொழுது என்னென்ன செய்யவேண்டும் என்றெல்லாம் கற்றுக்கொடுக்க யாராவது முன்வருவார்கள். ஆனால் சொந்த அனுபவமும், யாதொரு உதவியும் இல்லாத சிறு பெண்கள் தாய்மையை அடையும்பொழுது என்ன கவனம் செலுத்த வேண்டும், குழந்தை பிறந்தால் என்னென்னவெல்லாம் சேகரிக்க வேண்டும், எப்படி குழந்

ங்தையைக் குளிப்பாட்டி உடுத்தவேண்டும், குளிரில் வியாதி வராமல் எப்படி பாது காக்கவேண்டும் என்றெல்லாம் பெண்க ளுக்குப் பிரத்தியேகமான மாதப் பத்திரி கைகளும் வாரப்பதிப்புகளும் விஸிட் டு தி கிளினிக் (Visit to the Clinic) என்ற தலைப்பில் கட்டுரைகள் பிரசுரிக்கின்றன. எந்த முறையில் தாய்மார்களுக்குப் புத்தி கற்பிக்க முடியுமோ அவ்வளவும் காணப் படும்.

சாதாரண அலுவல்களிலும் ஆபீஸ் உத்யோகங்களிலும் ஒரு இயந்திரத் தைப் போல் உழன்று வேலை செய்யும் இங்நாட்டுப் பெண்கள் தங்கள் குழந்தை களை வளர்ப்பதிலும் சதா ஒரு சக்கரம் போல் தான் சுற்றுகிறார்கள். குழந்தை ஜனித்த மறு நாளிலிருந்து அதையும் மணிக் கணக்கில் பழக்குவதற்கு ஆரம் பம் செய்யப்படுகிறது. 3 மணி நேரத் திற்கு ஒரு முறைதான் பால் கணக்காகக் கொடுக்கப்படும். நவநாகரிகம், குழந் தையைத் தாய்ப்பால் கொடுத்து வளர்த் தால் தன் அழகு மங்கிவிடும் என்று நினைப்பது இங்நாட்டில் மிக மிகச் சொற் பம். சுமார் 8 மாதம் வரை பூராவும் தாய்ப்பால் கொடுக்கப்படுகிறது. நம் பெண்களில் சிலர் தமக்கு வேலை இல்லா விட்டாலோ அல்லது வீட்டில் உள்ள பெரியவர்களின் கீழ் வேலை செய்யச் சோம்பல்பட்டோ குழந்தையின் சாக்கை வைத்துக் கொண்டு, சதா அதற்குப் பால் கொடுப்பதை நான் எவ்வளவோ பார்த் திருக்கிறேன். குழந்தையும் தன் நிதா னம் அறியாமல் பாலை உண்டு வயிற் றுக்கு ஆகாமல் இரவு பூராவும் அழுது கொண்டே இருக்கும். இங்கே கணக்கு என்றால் எல்லாம் கடிகார முறையில் தான் நடக்கிறது.

நடுங்கும் குளிரோ அல்லது கொட்டும் பனியோ பகல் அல்லது காலை மாலையில் குழந்தைக்கு நல்ல சுத்தமான காற்று படு வதற்காக ஒவ்வொரு தாயும் குழந்தை கள் தள்ளும் வண்டியில் வைத்துத் தங் கள் பல வித அலுவல்கள் மத்தியிலும் சற்று வெளியில் சென்று உலாவத் தயங்க மாட்டார்கள். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் தகப்பனார் தம்மாலான உதவி செய்வதற்கு இந்த மேற் சொன்ன வேலையை ஏற்றுக்கொள்வார். பிரபல மான ஹைட் பார்க், கிரீன் பார்க் (Hyde Park, Green Park) முதலிய இடங்க ளில் எண்ணற்ற குழந்தை வண்டிகளைக் காணலாம். அதுவும் சூரிய வெளிச்சம் இருந்துவிட்டால் கேட்கவேண்டாம்.

இங்கு மிகவும் போற்றத் தகுந்த ஒரு விஷயம் தாய்மார்கள் தங்கள் சிறு குழந்தைகளைச் சுமந்து கொண்டு சினிமா, நாடகக் கொட்டகை, பாட்டுக் கச்சேரி, நடனம், விருந்துச் சாப்பாடு, தேநீர் விருந்து ஒன்றுக்கும் போகாதது தான். எப்பொழுதும் Nanny அதாவது ஆயா வைக்க வசதி இல்லாத பெண்கள் வாரத் தில் அல்லது 15 நாளைக்கு ஒரு முறை தான் சாயங்கால வேளையில் வெளிச் செல்வார்கள். தாய்மார்கள் வெளியில் செல்லும் பொழுது குழந்தைகளைக் கவ னித்துக் கொள்ள பேபி ஸிட்டர்ஸ் (Baby sitters) என்று பல பெண்கள் உதவி புரிய முன் வருவார்கள். அவர் களுக்கு 1 மணி நேரத்திற்கு $2\frac{1}{2}$ ஷில்லிங். படிக்கும் பல பெண்கள் தங்கள் படிப் பையும் கவனித்துக் கொண்டு மாலை நேரங்களில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள முன்வருகிறார்கள். படிப்பும் முடியலாம், பணமும் கைக்கு வரும். ஆனால் முரண் பிடித்துக் குழந்தை அழு தால் அவள் பல மணி நேரத்திற்கு என்ன செய்ய முடியும் என்று நீங்கள் கேட்டால், அது அவள் தலைவலி.

இரவு 6 மணிக்குமேல் ஒருகுழந்தையை யாவது நாம் தெருவில் காண முடியாது. ஏன் சிறு குழந்தையைச் சொல்வா னேன்? 15 வயதுக்கு உள்பட்ட எந்தக் குழந்தைகளையும் இரவில் காண முடி யாது. காலையில் ஆகாரம் முடித்துப் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு அங்கேயே பகல் போஜனம் இலவசமா கக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வருக்கு $\frac{1}{2}$ பாட்டில் பாலும் குடிப்பதற் குக் கிடைக்கிறது. அரசாங்கத்தைச் சேராத சொந்தப் பள்ளிகளில் சாப்பாட் டிற்குக் குறைவாகப் பணம் வசூலிக்கப் படுகிறது. பாலர்களுக்கும் சிறுமிகளுக் கும் படிப்பு வசதி எவ்வளவு இருக்கிறது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரிந்த விஷயம் தானே?

சிறு வயது முதற்கொண்டே குழந்தை களுக்கு அதாவது சுமார் 7 வயதிலிருந்து

கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு விஷயமும் கற்பிக்கப்படுகிறது. சித்திரம், கணிதம், சாஸ்திரம், சங்கீதம் எல்லாம் தான் தெரிய வேண்டும். வாரத்திற்கு 2 அல்லது 3 ஷில்லிங் தாய் பிள்ளைக்குச் சொந்தச் செலவிற்கென்று (Pocket Money) கொடுப்பது இங்கு வழக்கம். பிள்ளை மார்கள் படம் பார்ப்பதற்கோ, விளையாட்டுச் சாமான் வாங்குவதற்கோ அல்லது சேமித்து வைக்கவோ செய்யலாம். எங்கும் பயமின்றித் தனிமையில் செல்ல, சுமார் 8 வயதிலிருந்தே பையன்களும் பெண்களும் கற்றுக் கொடுக்கப்படுகிறார்கள். செல்லம் கொடுத்து ஒரு அறையிலிருந்து மற்ற அறைக்குச் செல்லப் பயப்படும் எவ்வளவோ குழந்தைகள் நம் நாட்டில் இருக்கிறார்கள். ஆரம்பம் முதலே அரசாங்கத்தின் கொள்கை, தாங்கள் எந்தக் கட்சியை ஆதரிக்கலாம், பிற நாட்டின் கொள்கை என்ன, முதலாளித்வம், ஜனநாயகம், பொதுவுடைமை சம உரிமை என்றெல்லாம் பேசும் அநேக சிறுவர்களை நான் கேட்டிருக்கிறேன்.

தாய்தகப்பன் இருவரும் ஆலோசித்து, தங்கள் பிள்ளையின் கவனம் எந்தத்துறையில் செல்லுகிறதோ அதிலேயேமுன்னேற வழி செய்வதில் அதிக சிரத்தை செலுத்துவது முக்யம்தானே. அதில் தங்கள் தீர்மானத்தைத் தவறான வழியில் முடிவு செய்வதே இல்லை. மக்களுக்குத் தாய் தந்தையர் கடமை எவ்வளவு உண்டோ அவ்வளவுவரைதான் கட்டுப்படுவார்கள். பெண்ணாவது பிள்ளையாவது தக்க வயது வந்து மணம் முடிந்தால் அவர்கள் குடும்பம் வேறுதான். "என் உயிர் உள்ள வரை குடும்பத்தில் பிரிவு ஏற்படக் கூடாது" என்று சொல்லும் நம் நாட்டு மக்களில் சிலர் குடும்பத்தில் வேண்டாத விஷயங்களிலெல்லாம் தலையிட்டு, வீண் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு, மண்டையை உடைத்துக் கொள்வதை நினைக்க எனக்குப் பரிதாபம்தான் ஏற்படுகிறது. "தாய் பிள்ளை ஆனாலும் வாய் வயிறு வேறுதான்" என்று சொல்வதை இந் நாட்டில் கண்டிப்பாகக் காண முடியும்.

ஒரே வீட்டில் தாயும் பிள்ளையும் இருப்பார்கள். சாப்பாட்டு நேரமானால்கூட அவரவர் தம் தம் அறைக்குச் சென்று இருப்பார்களே, தவிர ஒன்றுகூட மாட்டார்கள். நல்ல நாளிலும் விருந்துக்கு வா என்று அழைத்தால் தான் எல்லோரும் ஒன்று கூடுவது பழக்கம். மணம் முடித்துச் சிலகாலம் ஒன்றாக இருந்து, வேண்டாத சில்லறை விஷயங்களில் எல்லாம் சண்டை இட்டு, கடைசியில் தனிக் குடும்பம்போட்டால் ஒன்றுபிள்ளையின் மனைவி பொல்லாதவள் அல்லது தாய் கொடூரமானவள் என்று பட்டம் பெறுவதைத் தவிர்க்க, ஆரம்பத்திலேயே பிள்ளை தன் விஷயத்தைத் தானே கவனிக்க இடம் கொடுத்துவிட்டால் எவ்வளவு விசேஷம். ஏன், இந்நாட்டில் தனக்குக் குடி இருக்க வசதி ஏற்படுத்திக் கொண்டு தான் பிறகு கல்யாணம்.

அப்படியே மணம் முடிக்காத பெண்களாவது பிள்ளைகளாவது 18-வயதுக்கு மேல் தக்க உத்யோகத்திலிருந்தால் அவர்கள் கண்டிப்பாகக் குடும்பச் செலவுக்கென்று வாரம் 3 அல்லது 4 பவுன் வரை கொடுக்கத்தான் வேண்டும். தாய்க்கோ, தகப்பனுக்கோ "நீ ஒரு இடத்தில் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, சாப்பாட்டுக்கு கொடுக்கும் பணத்தை எங்கள் வீட்டுச் செலவுக்குத் தரத்தான் வேண்டும்" என்று சொல்ல உரிமை இருக்கிறது. கணக்கு என்றால் எல்லாம் கணக்குத் தானே!

# வட்டைத் தொட்டி

**வாரன்**

தனுஷ்கோடியிலிருந்து சென்னைக்குச் செல்லும் இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ் மாலை 2-30 மணிக்கு ராமநாதபுரம் வந்து சேர்ந்தது. கும்பல் அதிகமாய் இல்லாததால் ஒரு வண்டியில் பெஞ்சிக்கொரு ஆளாகப் படுத்தோம். எனக்கு எதிர் பெஞ்சியில் ஹோல்டாலை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தவர் மழையில் நனைந்தவர் போலக் காணப்பட்டார். புரட்டாசி மாச வெயில் கடுமையால் அவர் உடலில் வழிந்த வியர்வை அவர் சட்டையை நனைத்து, கண்ணை மூடிக்கொண்டே அவர் கையால் ஏந்தியிருந்த கனத்த புஸ்தகம் ஒன்றையும் நனைத்து விட்டது. ரயில் நின்றதும் கானல் தாங்காமல் எழுந்து உட்கார்ந்

தார். தம் படுக்கையில் கிடந்த பத்திரிகையால் விசிறிக்கொண்டே புஸ்தகத்தைப் பிரிக்க ஆரம்பித்தார்,

அப் பொழுது இரண்டு பெட்டிகளும் ஒரு பெரிய படுக்கையும் கொண்டு 'சாமீ இங்கே இடம் இருக்குது' என்று சொன்ன வண்ணம் ஒரு போர்ட்டர் கதவைத் திறந்து உள்ளே வந்தான். என்னெதிரில் இருந்தவர் விரித்திருந்த தம் படுக்கையை மடக்கியதும் போர்ட்டர் பெஞ்சியின்மீது ஒரு சிறு பெட்டியை வைத்து, மற்றச் சாமான்களை உயர விருந்த பலகையில் ஏற்றினன். 'அரசாங்க உத்தியோகஸ்தராயிருக்குமோ?' என்று நான் நினைக்க ஆரம்பிக்கும் போதே பஞ்ச கச்ச வேஷ்டியுடன், சட்டையின் மீது மயிற்கண் விசிறிமடிப்பு அங்கவஸ்திரம் அணிந்த ஒருவர் அவ்வண்டியில் ஏறினர். மாநிறமும், சற்று வளைந்த மூக்குடன் பிரகாச மாகத் தோன்றிய அவர் முகமும், போர்ட்டருக்குத் ''திருப்தியா'' என்று கேட்டுக்கொண்டே பணம் கொடுத்த அவர் செய்கையும் என் கவனத்தைக் கவர்ந்தன. ரயில் புறப்பட்டதும் தம் கைப்பெட்டியி லிருந்து ஒரு கையெழுத்துப் பிரதியை வெளியே எடுத்துப் படிப்பதும் சற்றுச் சிந்திப்பதும், உடனே வரிகளினூடே பென்சிலால் ஏதோ எழுதுவதுமாயிருந்தார். வண்டியில் இருந்த மற்றப் பிரயாணிகளை அவர் கவனிக்கவில்லை. என் எதிரே உட்கார்ந்திருந்தவர் என்னைப் போலவே புதிதாக வந்தேறியவரைச் சற்றுக் கவனித்துவிட்டுத் தம் கையில் வைத்திருந்த புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

இரண்டொரு பாடல்களை அவர் சற்று வாய்விட்டுத் தமக்குள்ளே பாட ஆரம்பித்த பொழுதுதான் அவர் கையிலிருந்தது கம்பராமாயணப் பிரதி என்று தெரிய வந்தது. அவர் பக்கங்களைத் திருப்பிக் கொண்டே போனபொழுது புத்தக நடுவில் சுமார் பத்துக் காகிதங்களைக் குண்டூசியால் ஒன்று சேர்த்து வெவ்வேறாகப் பிரிக்க முடியாமல் குத்தியிருந்தார். அது என் கண்ணைக் கவர்ந்தது. அது வரை எதிரே அமர்ந்திருந்த அம் மனிதருடன் எந்தவிதமான குசலப்ரச்னமும் செய்யாத போதிலும் அதைப்பற்றிக் கேட்க ஆவல் உண்டாயிற்று. 'பின் (குண்டூசி) குத்தியிருக்கும் பக்கங்களில் என்ன விசேஷம்?' என்று கேட்டேன்.

'நாங்கள் பலர் சேர்ந்து கம்பராமாயணப் பாடல்களை ஒவ்வொன்ருக ஆராய்ச்சி செய்து வருகிறோம். கம்பரால் செய்யப்படாத போலிப் பாடல்கள் பிற்காலத்தில் கலந்திருக்கவேண்டும் என்று முடிவுசெய்தவற்றைத் தள்ளிவிடுகிறோம். குண்டூசி குத்தியிருக்கும் இப் பக்கங்களிலுள்ள பாடல்கள் வரிசையாகச் சுமார் நூறு வரையிலும் போலி. பதரும் நெல்லுடன் கலந்து நெல்லைப்போலத் தோற்றமளிக்கிற தல்லவா? அது போல்தான் காவியங்களிலும்? குண்டூசி குத்திய இப்பக்கங்களில் அப் போலி விசேஷத்தைத் தவிர வேறெதுவு மில்லை' என்ருர். அதுவரை கையெழுத்துப் பிரதியில் ஈடுபட்டிருந்த புதிய மனிதர் எங்கள் சம்பாஷணையைக் கவனிக்க ஆரம்பித்தார். கம்பராமாயணப் பிரதியைக் கேட்டு வாங்கிப் பார்த்துக் கொண்டே, 'தாங்கள் ஆராய்ச்சி செய்வது சென்னையிலா?' என்று கேட்டார். அந்நண்பர் 'அல்ல, திருநெல்வேலியில் ஒழிவு நேரமுடைய பல நண்பர்கள் ஒன்று சேர்ந்து ஆர்வத்துடன் சோதித்துப் படித்து வருகிருேம். அக் குழுவிற்கு 'வட்டைத் தொட்டி' என்று பெயர். இதுவரை பல நூற்றுக்கணக்கான போலிப் பாடல்களைக் கண்டுபிடித்து விலக்கியிருக்கிருேம்' என்று கர்வம் தோன்றச் சிரித்துக்கொண்டே பதில் சொன்னுர்,

இப் பதிலைக் கேட்டுக்கொண்டே புதிய மனிதர் புத்தகத்தில் பக்கங்களைத் தைத்திருந்த குண்டூசியை உருவினர். விலக்கிய பாடல் ஒன்றைக் காட்டி 'இதைப் படித்துக் காட்டுங்கள்' என்று அப் பிரதிக்குரியவரைக் கேட்டுக்கொண்டார்.

இன்னே பலவும் பகர்வான் இரங்கா
தாளை நோக்கி
'சொன்னேன் இன்றே இவள் என்
தாரம் அல்லள் துறந்தேன்;
மன்னே ஆவான் அப் பரதன் தனை
யும் மகன் என்று
உன்னேன் முனிவா! அவனும்
ஆகான் உரிமைக்கு' என்ருன்.

[இன்னே இவ்வாறு, பகர்வான் - சொல்லும் தசரதன், இரங்காதாளை - மனம்

இரங்காத கைகேயியை, இவள் - இக் கைகேயி, தாரம் - மனைவி, உன்னேன் - கருதமாட்டேன், முனிவா—(வசிட்ட) முனிவரே, உரிமைக்கு—பிரேதத்திற்குச் செய்யவேண்டிய காரியங்களுக்கு].

இப்பாடலை வட்டைத் தொட்டி ஆராய்ச்சியாளர் வெகு அழகாகப் பூரி கல்யாணி ராகத்தில் பாடிக் காட்டினர். பாடி நிறுத்தியதும் 'இப் பாட்டை உங்கள் கோஷ்டியில் எதனல் போலி என்று நினைக்கிறீர்கள்?' என்று புதிய மனிதர் கேட்டார்.

'எங்கள் செவிப் பழக்கம் தான். ஆசாரிக்குத் தங்கத்தைத் தட்டும் ஓசைக்கும் செம்பைத் தட்டும் ஓசைக்கும் வித்தியாசம் தெரிவதில்லையா? அதுபோல் ஒரு கவிஞன் பாடலைக் கேட்டுப் பழகிய காதுக்கு வேறு கவிஞர்களின் பாடல் கலந்து வந்தாலும் ஓசையில் வித்தியாசம் தெரிந்து விடும்' என்று சிரித்துக்கொண்டே அலட்சியமாகப் பதில் கூறினர்.

புதிய மனிதரின் முகம் சிவந்தது. அதிலிருந்து அவர் வாயிலிருந்து வந்த ஒவ்வொரு வார்த்தையிலும் நயம் இருந்த போதிலும் ஆத்திரமும் தோன்றத்தான் செய்தது. "பலவித ஓசை நயங்கள் இருக்கவேண்டுமென்று ஒரு கவியே வெவ்வேருன சந்தங்கள் அமைத்துப் பாடி வருகிருன், ஒரேவித ஓசை இருக்க வேண்டு மென்று பெருங் காவியமாகிய ராமாயணத்தில் எதிர் பார்ப்பது பெருந் தவறு. கருத்தைத்தான் கவனித்துப் பாடல்களில் இடைச் செருகல் உண்டா? என்று ஆராய் வேண்டும்" என்று உரத்த குரலில் கூறினர்.

'கருத்தைக் கொண்டு கம்பர் பாடல் தான் என்று தாங்கள் எப்படி நிரூபிக்க முடியும்?' என்று வட்டைத் தொட்டிக்காரர் கேட்டதும் புதிய மனிதர் வெகு அழகாக அவ்வண்டியிலிருந்த பிரயாணிகள் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய தெளிவான பாஷையில் பதில் சொன்னர். அதன் சாரம்:—

## தனிமரம் காடாகுமா?

கைகேயியின் இரு வரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட தயரதன் முதலில் சோகங் கொண்டான். இராமனைக் காட்டுக்குப் போகாமல் காத்துத் தன் உயிரையும் காத்துக் கொள்வதற்காகக் கைகேயியைப் பலவாறு கெஞ்சினுன். அவள் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. கோபம் கொண்டு அதட்டிப் பார்த்தான். அவள் காலில் விழுந்து தன்னையும் ராமனையும் காப்பாற்ற வேண்டுமென்று சரணுகதி செய்தும் பார்த்து விட்டான். கைகேயி சிறிதும் விட்டுக் கொடுக்க வில்லை. 'அரசன் பிரதிக்ஞையை நிறைவேற்றிச் சத்தியத்தைக் காக்காவிட்டால் சூரிய குலத்திற்கே பழியுண்டாகும். அந்நிலையைக் கண்டு தன்னல் உயிரோடு வாழ முடியாது. தான் உயிருடன் இருக்க வேண்டுமானல் ராமன் அபிஷேக முகூர்த்தம் கழியுமுன் ஜடையும் மரவுரியும் தரித்து வனம் புக வேண்டும்' என்று உறுதியாய்க் கூறி விட்டாள்.

அப் பொழுது தயரதனின் சோக உணர்ச்சி சீற்றத்துடனும் வியப்புடனும் கலந்து உச்ச நிலையை அடைந்தது. தயரதன் ஆத்திரத்துடன் பேசுகிருன். கைகேயியைப் பார்த்து, 'இவள் பெண்ணல்ல; பெண் வடிவத்தில் வந்த யமன் என்பது தெரியாமல் இவளை மணந்து நான் முடிகிறேன். நான் முடிவதைக் கண்டும் இரங்காத பாவி, உனக்குத் தாலிக்கயிறு எதற்கு? உன் கழுத்திலிருப்பதை உன் பரதன் பட்டாபிஷேகத்திற்குக் கையில் காப்புக் கயிருகக் கட்ட உபயோகித்துக் கொள்' என்று இவ்வாறு பலவற்றைச் சொல்லிக் கொண்டே போனன்.

கைகேயியின் மனம் சிறிதும் இரங்கவில்லை. அவள் மனவுறுதி சிறிதும் குலைய வில்லை. அதைக் கண்ட அரசனுக்கு ஆத்திரம் அதிகரித்தது; உச்ச நிலையை அடைந்தது. அப் பொழுது அவன் வாயிலிருந்து வந்த ஒவ்வொரு வார்த்தையும் காவிய ரஸம் மிகுந்தது. நாடகப் பண்பு வாய்ந்திருப்பதால் நடித்தும் அனுபவிக்கவேண்டிய சிறந்த பகுதி என்றும் சொல்லலாம். கம்பரும் வால்மீகியும் இக்கட்டத்தை நாடக ரீதியாகவே எழுதி அனுபவிக்கிருர்கள்.

'இக் கணமிருந்தே இவள் எனக்கு மனைவியில்லை. விலக்கிவிட்டேன். இவள்

சூழ்ச்சியால் அரசனாகப் போகிற பரதனும் எனக்கு மகனில்லை. நான் இதோ இறக்கப் போகிறேன். என் பிரேதத்திற்குக் கருமம் செய்யவும் அவனுக்கு உரிமையில்லை' என்று வரும் உணர்ச்சிச் சித்திரத்தை வான்மீகத்திலும் அழகாகக் காணலாம்.

' த்யஜாமி ஸ்வஜம் சைவ தவ புத்ரம் ஸஹ த்வயா ' [தவ — உன்னிடம், ஸ்வஜம்—எனக்குப் பிறந்த, புத்ரம் ஏவ புதல்வனையும், த்வயா ஸஹ—உன்னோடு கூடவே, த்யஜாமி—விட்டு விடுகிறேன் ]

ஸபுத்ரயா த்வயா நைவ கர்த்தவ்யா
ஸலிலக்ரியா

[ஸபுத்ரயா—உன் புதல்வனோடு கூடிய, த்வயா — உன்னால், ஸலிலக்ரியா ஏவ—பிரேத கருமங்கள் என்பதே, ந கர்த்தவ்யா—அனுஷ்டிக்கத்தக்கதல்ல.]

இப் பகுதியைக் கம்பரைத் தழுவி எழுதிய அருணாசலக் கவிராயரின் ராமாயண கீர்த்தனைகளிலும் காணலாம். இவ்வுணர்ச்சிச் சித்திரத்தைப் பூர்ணமாக அனுபவிக்க இப்பகுதி மட்டும் போதாது. 8000 பாடல்கள் கடந்தபின் வரும் யுத்த காண்டப் பகுதிக்குச் செல்ல வேண்டும். இரண்டையும் சேர்த்துப் பார்ப்பவர்களுக்குத்தான் காவியத்தில் அனுபவிக்க வேண்டிய ஒருமை யழகின் ரஸம் கிட்டும்.

காவியத்தின் ஒருமை யழகு மின்சாரம் போன்றது. விளக்கும்விசிறியும் யந்திரத்தின் சக்கரமும் வெவ்வேறு பொருளாயிருந்தாலும் அவை எல்லாவற்றிலும் பரவி ஒன்றாக அவற்றைப் பிணைத்துக் கொண்டிருக்கும் மின்சாரத் தன்மை அறிஞர்களுக்கு மட்டும் தானே தெரியும். காவியத்தில் வரும் கதைப் பகுதிகள் வெவ்வேறாகவிருக்கும். ஒவ்வொரு பகுதியிலும் வரும் ரஸப்போக்கை அப்பொழுதப்பொழுது அனுபவித்து அதை மறந்து மேலேசெல்பவர் சாமானியர். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து வெவ்வேறான பகுதிகளில் ஊடுருவிச் செல்லும் ஒருமையழகைக் கண்டு அநுபவிப்பவன் தான் கவிதாரஸிகன். அவனே ஆத்மாநுபவத்திற்கு அடுத்தபடியான கவிதானுபவத்தைப் பெறுகிறான். தனி மரம் காடாகுமா? எல்லா மரங்களும் சேர்ந்து


| | | |
|---|---|---|
| அதிகாரம்பெற்ற மூலதனம் | ரூ | 1,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ,, | 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ,, | 53,00,000 |
| ரிஸர்வ் நிதி | ,, | 62,00,000 |

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி.




தி
இந்தியன் பாங்க் லிட்.

காடாகி ஒவ்வொரு மரமும் காட்டின் வனப்பிற்குத் துணை செய்கிறதல்லவா? அதேபோல் காவியத்தில் ஒவ்வொரு பகுதியும் மற்றொன்றிற்குத் துணை செய்கிறது. பிரதான பாத்திரத்தின் பண்பைப் பிரகாசப் படுத்த பல உப பாத்திரங்களும் ஒவ்வொரு சிறு சம்பவமும் துணை செய்வதை அறிந்து அநுபவிக்க வேண்டும்.

ராவணன் முடிந்து விபீடணன் முடிசூடிய பின் ராமபிரான் சீதையைச் சந்திக்கிறார். அவள் கற்பின் மகிமையை உணர்த்தவேண்டித் தேவர்கள் ராமன் எதிரே கூடினர். சுவர்க்கத்திலிருந்து தயரதனையும் ராமனிடம் கொண்டுவந்து காட்டினர். ராமன் வணங்கவே தயரதன் அவரை அள்ளி எடுத்துத் தன் மார்பினில் கட்டித் தழுவினான். 'இறந்து சுவர்க்கம் அடைந்தும் மறக்க முடியாத வேதனையைச் செய்துகொண்டிருந்த கைகேயியின் கொடிய சொல்லை இப்பொழுது தான் மறந்தேன். ராமா! அவள் கூறிய வார்த்தை என்நெஞ்சில் வேல்போல் பாய்ந்திருந்தது. உன்னைத் தழுவிய இப்பொழுது தான் உனது மார்பாகிய காந்தத்தால் என்னைவிட்டு விலகிற்று. ஏதாவது உனக்கு வேண்டிய வரத்தை என்னிடம் கேட்டுப் பெற்றுக்கொள்' என்று ராமனிடம் தெரிவித்தான்.

ராமன் உடனே தயரதனிடம்ஒருவரம் வேண்டுகிறார். வேண்டுகிற அப் பாடலைப் படித்து அதனோடு சேர்த்து, போலியென்று தள்ளிய பாடலையும் அனுபவித்துப் பார்த்தால் போலி என்று சொன்னதற்குப் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளத் தோன்றும்.

ஸ்ரீராமன் என்னவரம் கேட்டார் தெரியுமா? கைகேயி பரதன் விஷயமாகத்தான்.

"குரு ப்ரஸாதம் தர்மக்ஞ கைகேய்யா பரதஸ்ய ச" [கைகேயியிடத்திலும் பரதனிடத்திலும் மனச்சாந்தியைக் கொண்டருள்வீராக.]

என்று ராமன் தந்தையை வேண்டினார். அவ்வேண்டுகோளைக் கம்பர் மேலும் விவரிக்கிறார்.

ராமன் தம் தந்தையைக் கைகேயியை மனைவியாக அங்கீகரிக்கவோ, பரதனை மகனாகக் கொள்ளவோ, வேண்டவில்லை. தயரதன் இருவரையும் கோபத்தில்விலக்கியதை ரத்து செய்யாவிட்டால் தாம் கைகேயியைத் தாய் என்றும் பரதனைத் தம்பி என்றும் பாவிக்க முடியாதாகையால், கைகேயியை, 'அம்மா' என்று அழைக்கவும், பரதனை 'அம்பி' என்று அன்போடு அழைக்கவும் தமக்கு உரிமை தந்தருளும்படி தயரதனை வேண்டுகிறார். அப்பேச்சால் வெளியான கருணைத் திறத்திலே அங்கே கூடியிருந்தவர்களெல்லாரும் ஈடுபட்டு ஆரவாரம் செய்தார்களாம். இவ்வழகைப் பாடலிலே தான் அனுபவிக்கவேண்டும். சொல்லிச் சொல்லி அனுபவிக்க வேண்டும்.

> ஆயினும் உனக்கு அமைந்ததொன்று [உரைஎன அழகன்
> தியள் என்று நீ துறந்த என் தெய்வ மும் மகனும்
> தாயும் தம்பியும் ஆம்வரம் தருகஎனத் தாழ்ந்தான்
> வாய்திறந்து எழுந்து ஆர்த்தன உயி ரெலாம் வழுத்தி.

[உரை என—கேள் என்று தயரதன் சொல்ல, அழகன்—ராமன், தியள்—கொடியவள், என் தெய்வம்—எனது தெய்வம் போன்ற கைகேயியும், மகனும்—பரதனும், ஆர்த்தன—ஆரவாரம் செய்தன, வழுத்தி—புகழ்ந்து.]

புதிய மனிதர் இப்பாடலை அனுபவித்து இருமுறை சொன்னார். இதைப் படித்துப் பார்த்தால் முந்திய பாடலைப் போலி என்று சொல்ல முடியுமா? இந்த யுத்த காண்டப் பாடலையும் 'போலி' என்று சொல்ல உங்கள் ஆராய்ச்சிக்கூட்டத்தார் துணிவார்களா? என்ன சொல்லுகிறீர்? என்று என்னெதிரிலிருந்தவரைக் கேட்டார். அவர் பதிலே சொல்லாமல் மௌனமாக விருந்தார். நான் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்ததையறிந்ததும் அப்புதிய மனிதரிடம் என் நோட் புஸ்தகத்தைக்கொடுத்து அவர் விலாசத்தை எழுதித்தர வேண்டினேன். அவர் உடனே தம் பெட்டியிலிருந்து அவர் விலாசம் அச்சிட்ட ஒரு கால் கடுதாசியை என்னிடம் கொடுத்தார். அதைப் பெற்று மானமதுரையில் இறங்கி விட்டேன். அதைப் பிரித்துப் பார்த்த பொழுது நான் கேள்விப்பட்ட சேது சமஸ்தானம் மஹாவித்வான், பாஷா கவி சேகரர் ஆர். ராகவய்யங்கார் என்ற பெயராகவேயிருந்தது மிகவும் ஆச்சரியமாக விருந்தது.

# அரசியின் ஆடை

நா. கி. நாகராசன்

சென்ற நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவிலிருந்த கண்ணாடித் தொழிற்சாலை முதலாளி யொருவர் ஸ்பெயின் அரசி இன்பன்டாவுக்கு மிக விந்தையானதொரு பரிசையளித்தார். மெல்லிய கண்ணாடி இழைகளைப் பட்டுடன் நெய்து ஆடையாகச் செய்து அவர் அவ்வரசிக்கும், அமெரிக்க நடிகை ஒருத்திக்கும் பரிசாக அனுப்பினார். ஹாலிவுட்டும், ஆடையின் தேவையைப் பற்றியே அடிப்படையான ஐயமுள்ள சினிமா நடிகைகளும் இல்லாத அக்காலத்தில் ஸ்பெயின் அரசி இவ்வாடையுடன் மக்களின்முன் காட்சி யளித்தாளா என்பது தெரியவில்லை! அது எப்படியோ போகட்டும். அக்காலத்தில் விந்தைப் பொருளாக இருந்த கண்ணாடித் துணி இப்போது சாதாரணமாய் வழங்கும் பொருளாய் விட்டது. இதைக் கேட்டதும் சிலர் நம் நாட்டிலும் கண்ணாடிப் புடவை "பாஷனா"க வந்து விடுமோ என அஞ்சலாம். ஆகையால் கண்ணாடித் துணி ஆடையாகப் பயன்படாது. வேறு வகைகளில் தான் பயனாகிறது என்று உறுதி கூறுகிறேன்.

கண்ணாடியிலிருந்து நூல் போன்ற இழைகளை எடுப்பதொன்றும் இப்போது வந்ததல்ல. பார்க்கப்போனால் கண்ணாடியைக் கண்டுபிடித்த மானிடன் அதை இவ்வடிவிலேயே முதலில் கண்டிருக்கலாம். இளகிய கண்ணாடியை என்னையுமறியாது நீட்டி மெல்லிய இழைகளாக வீணாக்கிக் கல்லூரிப் பேராசிரியரின் கோபத்திற்கு ஆளானது நான் மாணவனாக இருந்தபோது அடைந்த அனுபவம்! கண்ணாடி இழைகளை அவ்வளவு எளிதாகச் செய்ய முடியும். இடைக் காலத்தில் இவ்விழைகள் "நூற்ற கண்ணாடி" என்னும் பெயருடன் வழங்கின. பல நிறங்கொண்ட கண்ணாடி இழைகளைக் கூட்டிச் சித்திர வேலைப்பாடமைந்த ஜாடிகளையும் படங்களையும் அப்போது செய்து வந்தனர்.

இதன் பின்னர் மேற்கூறிய அமெரிக்கர் இவ்விழைகளை ஆடையாக நெய்ய ஓர் எந்திரத்தை அமைத்தார். அதிலிருந்து பெற்ற துணியைப் புகழ்பெற்ற மாதருக்குப் பரிசாக அளித்ததுடன் இவர் நின்றுவிடவில்லை. விளக்கு மூடிகளையும், வனப்புள்ள கைக்குட்டைகள், 'டை'கள், 'மப்ளர்'கள் முதலியவற்றையும் அவர் தயாரித்து விற்றார். ஆனால் நேர்த்தியான இழைகளைப் பெற அவரால் இயலவில்லை. இதனால் அவர் தயாரித்த துணி மடித்தால் நொறுங்கி விடுவதாக இருந்தது. ஆகையால் அவரது பரிசான ஆடையை ஸ்பெயின் அரசி அணிந்து கொண்டு வெளிக் கிளம்பியிருந்தால் அவள் நடக்கும்போதே அது நொறுங்கித் தூளாய் அவளுக்குத் தொல்லை விளைத்திருக்கும்! இக் காரணத்தாலேயே கண்ணாடித் துணி அவ்வளவாக வழக்கத்திற்கு வராது வெறும் விந்தைப் பொருளாகவே இருந்துவந்தது.

அப்போதுதான் முதல் உலகப் போர் வந்தது. பல தொழில்களுக்கு இன்றியமையாத கல்நாரை ஜெர்மனியால் பெற இயலவில்லை. ஆகையால் அந்நாட்டு விஞ்ஞானிகள் இதற்கொரு மாற்றுப் பொருளைக் கண்டுபிடிப்பதில் முனைந்தனர், கல்நாரையொத்த பண்புகள்கொண்ட கண்ணாடி இழைகளை அதற்குப் பதிலாகப் பயன்படுத்தலாம் என்பது அப்போது தெளிவாகியது. இதனால் மிகமெல்லிய கண்ணாடி இழைகளைச் செய்யும் முறைகள் வழக்கத்திற்கு வந்தன. கண்ணாடி வளையல் துண்டொன்றை அடுப்பில் இளக்கி நீட்டினால் அது மெல்லிய இழையாவதை நம் நாட்டுச் சிறுமியர் நிச்சயம் அறிந்திருப்பார்கள். இதையே எந்திரங்களாற் செய்து இழைகளைப் பெறலாம். இம் முறையே முதன்முதற் பயன்பட்டது. இப்போது இதற்கு வேறு முறைகள் கையாளப்பட்டாலும் இம் முறையும் இன்னும் ஓரளவு வழங்கி வருகிறது.

கண்ணாடியில் முக்கியமாக மணல், சுண்ணாம்பு முதலிய பொருள்களும், சோடியம் பொட்டாஸியம் இவ்விரு உலோகங்களின் சல்பேட்டு உப்புக்களும் உள்ளன. இவற்றின் விகிதத்தைத் தேவையானவாறு மாற்றிக் குறிப்பிட்ட அனற்பதனில் உருக்கி நாம் விரும்பும் பண்புகள் கொண்ட கண்ணாடியைப் பெறலாம். இழை எடுப்பதிலும் முதலில் மிகத் திருத்தமான அளவில் இப் பொருள்களைச் சேர்த்து, எரிவாயுவால் சூடேற்றப்படும் பெரிய தொட்டி போன்ற உலையில் இவற்றை உருக்க வேண்டும். அப்போது பொருள்கள் சீராகக் கலந்து தொட்டியின் அடியிலுள்ள சிறு துளைகளின் வழியே ஒழுகுகின்றன. மெல்லிய தாரையாக வரும் இளகிய கண்ணாடியின்மேல் அமுக்கம்நிறைந்த நீராவியையோ, காற்றையோ ஊதினால் அத்தாரை மேலும் மெலிந்து சுமார் முக்காலடி நீளமுள்ள சிறு துண்டங்களாக விழுகிறது. கண்ணாடியின் அனற்பதன், துளைகளின் அளவு, நீராவி அல்லது காற்றின் அமுக்கம் இவற்றை மாற்றி இழைகளின் பருமனையும், நீளத்தையும் தேவையானவாறு கட்டுப்படுத்தலாம். இம்முறையில் ஆயிரத்திலொரு பங்குக்குக் குறைவான பருமனுள்ள இழைகளைப் பெறலாம். இவ்விழைகள் நெகிழ்வும், மென்மையும் கொண்டு வெண்ணிறமான கம்பளிநூலைப் போலிருக்கும். ஆகையால் இது "கண்ணாடிக் கம்பளி" (Glass Wool) எனப்படும்.

இவ்வாறு வெளிவரும் இழைகள் பல ஒன்றுகச் சேகரிக்கப்பட்டுத் தேவையான பருமனுள்ள நூலாகப் பெறப்படும். இதன்மேல் நிலையான கனிய எண்ணெயொன்றை இலேசாகத் தடவி அதன் நெகிழ்வை அதிகப் படுத்தலாம். இதைக் கொண்டு போர்வைகள், சமுக்காளங்கள், பலகைகள் முதலியவற்றைச் செய்யலாம். நீராவிக் குழாய்களுக்கு உறையிடவும் இது பயனாகும்.

ஆனால் இம்முறையிற் கிடைக்கும் இழைகளைத் துணியாக நெய்ய இயலாது. கண்ணாடி ஆடைகள் நெய்யத் தக்க இழைகளைத் தயாரிக்க வேறு முறை கையாளப்படுகிறது. இதில் முதலில் கண்ணாடியைச் சிறு கோலிகளாகச் செய்து அதை மின்சார உலையிலிட்டு



உருக்குகின்றனர். உலையின் அடியி லுள்ள தொளைகளின் வழியே வரும் உரு கிய கண்ணாடியை உருளைகளின் மேல் சுற்றிப் பல மைல் நீளமுள்ள இழைக ளைப் பெறலாம். இதை முறுக்கிப் பல இழைகளை ஒன்றாகப் பின்னி உறுதியான நூலையும் பெறலாம். இந்நூலைத் துணி யாக நெய்தால் நல்ல வெண்ணிறப் பட் டையொத்த துணி கிடைக்கும். இம்மு றையால் மிக மெல்லிய நூலைப் பெற முடிகிறது. ஒரு இராத்தல் கண்ணாடியி லிருந்து பெறப்படும் இழையின் நீளம் சுமார் 4,400 மைல் என்பதிலிருந்தே இதன் மென்மை தெளிவாகும். ஆகையால் சுமார் நூறு இழைகளை ஒன்றாகச் சேர்த்து நூலாக்கினாலும் அது நெய்யத் தகுதியற்றவாறு அவ்வளவு மெல்லிய தாக இருக்கும். ஆகையால் இரண்டு அல்லது மூன்று நூல்களை ஒன்றாகப் பின் னிய பின்னரே இதை நெய்ய முடியும்.

மற்ற வகை இழைகளைப் போலன்றிக் கண்ணாடி இழைகள் கரியற்ற (Inorganic) பொருள் வகையைச் சேர்ந்தவை. ஆகையால் இவற்றிற்குத் தனிப்பட்ட நல்லியல்புகள் உண்டு. இவை தீப்பிடிப் பதில்லை. ஈரத்தைச் சிறிதும் ஏற்காத இழைகள் இவை ஒன்றே. ரசாயன விளைவுகளால் பாதிக்கப்படாத காரணத் தால் இவை காற்றிலும் அதிலுள்ள கார வாயுக்களாலும் கெடுவதில்லை. இவற் றின் இழுவலிமை (Tensile Strength) மிக அதிகம். மற்ற இழைகளைப் போல் இவை சுருங்கவும், நீளவும் செய்யாததும் ஒரு நல்லியல்பாகும். நல்ல பளபளப் பும், மென்மையும் உள்ள இவற்றிற்குச் சாயமேற்றும் முறையும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெய்யிலி லும், காற்றிலும் இச் சாயம் சிறிதும் மங்காது. இவ்விழைகளைப் பூச்சிகள் அரித்துவிடுமென்ற ஆபத்தும் இல்லை. ஏனெனில் எப் பூச்சியும் கண்ணாடியைத் தின்று உயிர் வாழ விரும்பாது!

இவ்வளவு தனிச் சிறப்புகள் கொண்ட கண்ணாடி இழையாலான ஆடை பல்வேறு வகைகளிற் பயனாவது இயற்கையே. தியேட்டர்கள், பொது மண்டபங்கள், காரியாலயங்கள் முதலிய இடங்களில் திரைகளுக்கும், மேஜைத் துணி முதலிய வற்றிற்கும் வனப்புமிக்க தோற்றமுள்ள கண்ணாடித் துணி பயனாகிறது. உரே னியக் கண்ணாடி ஆடைகள் தீயணைக்கும் படையினரின் உடுப்பாகப் பயனாகின்றன. எதிரொலியைக் குறைக்கவும், வெப்பம் வெளியேறாது தடுக்கவும் கட்டிடங்களில் கண்ணாடிக் கம்பளி பயன்படுகிறது. கண்ணாடிச் சமுக்காளங்கள் நுண்ணிய வடிகட்டிகளாகப் பயனாகின்றன. மின் கடத்தாப் பொருளான கண்ணாடி இழை மின்சாரக் கம்பிகளுக்கு நல்ல காப்புறை யாகிறது. சுருங்காத, எரியாத, ரசாயன மாறுபாடுகள் அடையாத துணி எங்குத் தேவையாயினும் அங்கே கண்ணாடித் துணி பயனாவதைக் காணலாம். மருத்து வத்தில் குடல், ரத்தக் குழல் முதலியவற் றைத் தைக்கச் சில சமயங்களில் கண் ணாடி நூல் பயனாகிறது. இதைச் செயற்கை ரப்பருடனும், பிளாஸ்டிக்கு களுடனும் சேர்த்து உறுதியான துணி யைப் பெறலாம். விமானங்கள், மோட் டார்கள், ரயில்வண்டிகள் முதலியவற் றில் இது பெரிதும் வழங்குகிறது. அழ கிய தொப்பிகளையும், கால் உறைகளை யும், ஜோடுகளையும் கண்ணாடித் துணி பெண்டிர்க்குத் தந்துதவுகிறது. தற்கால ரசாயன ஆராய்ச்சியின் விளைவான பல பொருள்களின் பயன் நாளுக்குநாள் அதி கரித்து வருகிறது. அவற்றில் கண்ணாடி இழையும் ஒன்று.

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

## சென்ற இதழில் வெளிவந்த கதைச் சுருக்கம்

மனைவியையும் தாங்கிக்கொண்டு, கரையிலிருந்து சீறிவரும் யதியின் வீரர்களுடைய அம்பு மழைக்கும் தப்பி நதியிலேயே நீந்தி வரும் வீரன் தேவப்ரஸாதை யதி நெருங்கி வருகிறார். இருவரும் பேசிக்கொண்டே கரையேற தேவப்ரஸாத் யதியின் மூலமே மனைவியின் உயிர் துறந்த சடலம்தான் மிச்சம் என்று அறிந்து மனம் புழுங்கிப் பாய்ந்து யதியைக் கழுத்தைப் பிடித்துக்கொள்கிறான். சரியான தருணத்தில் வந்து சேர்ந்த வல்லபனும் அவன் வீரரும் யதியின் வீரர்களை வதைக்க ஆரம்பிக்கின்றனர். தேவப்ரஸாத் யதியுடன் மீண்டும் நதியில் முழுகி இறந்துவிடுகிறான். யதி பிராணாயாமபலத்தால் தப்பிக் கரையேறி வருகிறார். வல்லபன் சிறை செய்துகொள்கிறான்.

கம்பீரமல்லனைத் தேஹஸ்தலத்துக்கு அனுப்பிவிட்டு வல்லபன் மேரளம் வழியாகப் பட்டண் செல்லத் தொடங்குகிறான்.

இதனிடையே, பிரஸன்னாவிடம் கோபம் கொண்டிருந்த திரிபுவனை அவன் இளம் காதலி விஷயத்தைச் சொல்லி மனதை மாற்றி அவனையும் கூட அழைத்துக்கொண்டு முரார்பாலனிடம் செல்கிறாள். நல்ல பேச்சைக் கேட்காத அவனை மயக்கிச் சாவியைப் பெற்றுக்கொள்கிறாள். பலாத்காரமாய்ப் பிடுங்க எத்தனிக்கும் அவனைத் திரிபுவனன் வீரவாள் இடைமறிக்கிறது. பட்டண் ராணிக்கும் கெட்டவனாகஆகி, பிரஸன்னாவிடமும் மதியையும் மானத்தையும் இழந்து அவன் வெட்கிப் போய்விடுகிறான். இதனிடையே தட்டப்பட்ட கதவு திறக்கப்படவில்லை. டுங்கர் நாயக் சிரித்துக்கொண்டே சும்மா நின்றுவிடுகிறான்!

---

### பட்டண் வாசிகள் கோபம்.

பிரஸன்னாவும் திரிபுவன் பாலனும் அரண்மனைப் பக்கம் சென்றார்கள். போகும்போது இருவர் உள்ளமும் ஆனந்தத்தினால் பந்துபோல் குதித்துக்கொண்டிருந்தன. திரிபுவனைப் பிரஸன்னா செய்த தமாஷ் எல்லாம் விடாமல் சிரிப்பு மூட்டிக்கொண்டே இருந்தது. அவர்கள் அரண்மனைக்குத் திரும்பியவுடன் கலியாண மல்லன் யாரோ இருவர் மூவர் சமாசாரம் கொண்டு வந்ததாக அறிவித்தான். திரிபுவன் பாலன் உத்தரவு பெற்று அந்த மூவரும் அவனருகே வந்தனர்.

முதல்வீரன் பட்டண் சேனையின் ஒருவீரன். பட்டண் சேனையின் ஒரு பகுதிக்கும் விக்ராட் சேனைக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல வந்திருந்தான். மற்றொரு வீரன் மாளவ அரசன் குஜராத்தில் புகுந்திருப்பதை அறிவிக்க வந்திருந்தான். மூன்றாவதவன் மிகுந்த கஷ்டப்பட்டு வந்திருப்பதாகத் தெரிந்தது.

---

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த க. ஸ்ரீ நாதுராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

"மகாராஜ்! என்னை நீங்கள் அறிந்து கொள்ள முடியவில்லை. நான் தான்......"

"யாரது ராம் சிங்கா?" திரிபுவன் பாலன் முன்னேறிச் சொன்னான்: "ஏன், என்ன சமாசாரம்? ஏதாவது புதிய விஷயம் உண்டா? அப்பா, வல்லபன்.........?"

"என்னை வல்லபசேன மஹாராஜா அனுப்பினார்......!"

"அவர் எங்கே இருக்கிறார்?"

"உணவளிப்பவரே! அவர் சேனையுடன் விக்ராட் சமீபம் வந்திருப்பார். என்னை சமாசாரம் சொல்ல முன்னமேயே அனுப்பினார்."

பிரஸன்னா பக்கம் திரும்பி, திரிபுவன் சொன்னான்: "சபாஷ் இப்பொழுது உன் அத்தை நன்றாய் அனுபவிப்பாள். என் தந்தையின் புண்யம் இப்பொழுதுதான் சுடர் விட ஆரம்பித்திருக்கிறது!......அது சரி அப்பா......?"

கலவரம்தோன்ற ராம்சிங் சொன்னான்:"... ஒரு விஷயம்..... !"

திரிபுவன் திடுக்கிட்டான்..."ஆம். சொல்?" ராம்சிங்குக்கு எப்படிச் சொல்வது என்றே புரியவில்லை?

"நான் கம்பீரமல்லனுடன் இருந்தேன்...."

"ஆம், மண்டுகேசுவரத்தில்தானே! தந்தை தான் சரியான சமயத்தில் வந்து சேர்ந்திருப்பாரே.? பிறகு...? ஏன் கலவரம் காட்டுகிறாய்? என்ன சமாசாரம்? அட, இது என்ன, கண்ணீருகுக்கிறாயே?...!" திரிபுவனனும் பரபரப்புக் காட்டினான்.

ராம்சிங் அழுதுவிட்டான். "அன்னதாதா! மன்னித்துவிடுங்கள். மண்டலேசுவரர் இந்த உலகைத் துறந்துவிட்டார்."

திரிபுவன் முகம் முதல்நாள் கொண்டிருந்த உக்கிரத்தையும் கடுமையையும் மீண்டுமொரு முறை ஏற்றது. மிகுந்த கஷ்டத்துடன் உணர்ச்சிகளை எல்லாம் அடக்கி, "எங்கே, எப்பொழுது?" என்று கேட்டான்.

"நேற்று இரவு சரஸ்வதி நதியில்......"

"சரஸ்வதியிலா...? தாயார்?..."

ராம்சிங் கதையை முற்றிலும் சுருக்கமாகச் சொல்ல நேரிட்டது. அவன் முக்கியமான விஷயங்களைச் சொன்னான். திரிபுவனனும் கேட்டான். அவன் கேட்டுக்கொண்டிருக்கும் போதே லீலாதரன் ஊதா முதலியவர்களும் வந்து சேர்ந்தனர். எல்லோரும் இந்த வருத்தக் கதையைக் கேட்டுத் துயரமுற்றனர். பிரஸன்னா லீலாதரனைத் திரிபுவனனிடம் இருக்கும்படி கட்டளையிட்டாள். திரிபுவனன் சற்று நேரம் சும்மா இருந்தான். அவன் கண்கள் நீருகுக்கவில்லை; முகம் துயர்க்குறிகள் காட்டவில்லை; முகம் பிணம்போல் குறி நீங்கிக் காட்டிற்று. கண்கள் நெருப்புத் துண்டுகள் போன்று ஒளித்துக்கொண்டிருந்தன. அவன் கர்ஜித்தான்.

"ஊதா சேட்! போ. பட்டணம் முழுவதும் தண்டோரா போடச் சொல். பண்டிதர்கள், சாஸ்திரிகள் சிற்றரசர்கள் வியாபாரிச் சங்கங்கள் எல்லோரையும் கூட்டம் கூடச் சொல்." திரிபுவன் அங்கிருந்து அப்பால் போய்விட்டான். ஒருவருக்கும் அவனைத் தொடரத் தைரியம் வரவில்லை. பிரஸன்னா மட்டும் தொடர்ந்தாள். அவளுக்கும் உள்ளூரப் பயம்தான். எப்படியிருந்தாலும் திரிபுவனை அமர்த்துவது அவள் கடமை. திரிபுவன் அறைக்குள்ளே சென்று எந்தப் பக்கமும் திரும்பாமல் மெத்தைமேல் படுத்துக் கொண்டான்.

பிரஸன்னா ஒரு நிமிஷ நேரம் தயங்கி நின்றாள். இந்த இரு தோழர்களும் எவ்வளவு வருஷங்கள் ஒன்றாய் இருந்து எழுந்து விளையாடி ஆட்டம் போட்டு விஷமங்கள் செய்து கழித்திருக்கிறார்கள்! கடந்த இரண்டு நாட்களாக இருவருடைய பரஸ்பர சம்பந்தத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் இருவருமே இனி எந்தமாதிரியான சம்பந்தம் இருக்கும் என்பதை அறிந்திருந்தனர். இந்த அறிவு பிரஸன்னா மனதை மிகவும் பாதித்திருந்தது. திரிபுவனைத் தொடுவது, இன்ப அலைகளில் மிதந்து சென்று அவன் கையைத் தாண்டிப் பிடிப்பது ஏதோ ஒரு பகிரத காரியம்போல, ஒரு பெரிய சுகத்தைப்போல் அல்லது லாபத்தைப்போல் தோன்றிற்று. இன்று அவள் முன்பின் அறியாத ஓர் வெட்கத்தால் தடைப்படுத்தப்பட்டாள். இனி தோழியைப்போல் அதட்டியோ கொஞ்சியோ அவனிடம் நடந்து கொள்ளமுடியாது என்று அவள் உணர்ந்தாள். இந்தச்சமயத்தில் ஸ்திரிகளுக்குள்ள இயற்கை ஞானத்தினால் திரிபுவன் மனம் மாறி வெறிகொண்டு நிற்கிறான் என்று கண்டுகொண்டாள். அவன் உணர்ச்சிகள் எல்லாம் வெளியேறாமல், வெளியேற வகையறியாமல் ஒன்று சேர்ந்து இறுகிப் பயங்கரமாகி நிற்கின்றன. இந்த நிலைமை மிகக் கெட்டது. "அவனைக் காப்பாற்றத் தான் ஒருத்திதான் உரிமையுடையவள்; தன்னால் தான் முடியும்" என்று தீர்மானித்து, அவள் லஜ்ஜை மரியாதை எல்லை எல்லாவற்றையும் அலக்ஷியம் செய்து, திரிபுவன் அருகில் சென்று அமர்ந்துகொண்டாள். பிறகு மெதுவாக அவன் கையைத் தன் கையால் எடுக்க முயற்சி செய்தாள். திரிபுவன் ஆத்திரத்துடன் அவள் கையைத் தூரத்தள்ளி, பிரஸன்னாவை வெறிகொண்ட சிங்கம்போல் பார்த்தான். அவள் பயப்படாமலே "திரிபுவன்!" என்று கூப்பிட்டாள்.

"நீ இங்கிருந்து போய்விடு. இங்கே எனக்கு ஒருவரும் தேவையில்லை" என்று ஆர்த்துவிட்டு

இன்னும் ஒரு சினிமா நட்சத்திரத்தை
வசியப்படுத்திவிட்டது—இந்த
லக்ஸ் டாய்லட்
சோப்பின்
புதிய பரிமளம்!
"மகிழ்ச்சியுடன்
அதிக மலர்ச்சியைத் தருவது
லக்ஸ் டாய்லட் சோப்பின்
இந்த புதிய பரிமளம் தான்"
...என்கிருர் கே. ஆர். செல்லம்
LUX
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 202-23 TM

அவன் எழுந்து உட்கார்ந்துகொண்டான். பிரஸன்னு இன்னும் கொஞ்சம் நெருங்கி அமர்ந்தாள். அவன் கையைத் தன் கையால் தாங்கி, மற்ருெரு கையால் அவனை மடியில் சார்த்திக்கொள்ளப் பிரயத்தனப்பட்டாள். "போகிருயா, இல்லையா?" என்று கத்திக் கொண்டே திரிபுவன் அவளைத் தூரத்தள்ளி விட்டான். "எப்பொழுதும் தமாஷ்தானு?"

பிரஸன்னுவுக்குக் காயம்பட்டது. இருந்தும் அவள் மறுபடி அவனருகே வந்து மீண்டும் அமர்ந்து திரிபுவன் கழுத்தில் கையை அணைத்து "நீ என்னதான் செய்யவேண்டும் என்கிருய், சொல்லேன்!" என்ருள்.

திரிபுவன் மற்றும் சீறினுன். ஆத்திரத் துடன் கையை மடக்கியவன் காதலி பிரஸன்னுவின் அமுதம் பொழியும் முகத்தின் நீர் நிரம்பிய கண்களைப் பார்த்துக் கைகளைக் கீழே போட்டான்.

அவன் சொன்னுன்: "பிரஸன்னு, இந்தச் சமயம் ஏன் என்னைத் தூண்டிவிடுகிருய்? என் தந்தை போய்விட்டார், தாயார் போய் விட்டாள். இந்த உலகில் நான் இனித் தனித்துவிட்டேன். இதை நீ பார்க்கவில் லையா?" என்று சொன்ன அவன் உள்ளம் ஒரே கணத்தில் வன்மை நீங்கித் தண்ணீராகி, கண் வழியே பாய ஆரம்பித்துவிட்டது. அவன் கோவென்று கதற ஆரம்பித்தான். விக்கிக்கொண்டே "அப்பா, ஐயோ அப்பா!" என்று அலறினுன்.

அவன் குழந்தையாகி விட்டான். பிரஸன்னு ஒன்றும் சொல்லாமலே அவனைத் தன்மேல் சார்த்திக் கொண்டு அவன் நெற்றியையும் தலையையும் குழந்தையைத் தடவுவதுபோலத் தடவிக்கொடுக்க ஆரம்பித்தாள். துக்கத்தின் பளுவால் நசுங்கும் திரிபுவன் முற்றிலும் அவள் கைப்பொம்மையாக ஆகி விட்டான். பெண்களிடம் எந்தப் பருவத்திலும் தாயம்சம் தழைத்து நிற்கிறது. அந்த அம்சம் தான் பொறுமை, மன்னிப்பு, அன்பு முதலியவைகளைத் தூண்டுகிறது. துயரைக் குறைக்கும் வல்லமை பெற்று விளங்குகிறது. அதனுல் தான் பெண்வெற்றி சுலபத்தில் கிட்டிவிடுகிறது.

நகரம் பூராவும் சமாசாரம் பறந்து பரந்து விட்டது. ருத்ரமஹாலயத்தில் மண்டலேசுவரனை எரிக்க யதி முற்பட்டதும் ஆற்றில் விழுந்தும் தப்பிக்க முடியாமல் அவனைச் சூழ்ச்சியால் யதி கொன்றதும் ஒவ்வொருவருக்கும் தெரிந்த கதையாகி விட்டது. ஜனங்கள் துடித்து எழுந்தனர். நாலு பக்கங்களிலும் ஜனங்கள் அழும் சப்தம் கேட்கத் தொடங்கி விட்டது. பட்டண் ஜனங்கள் வீரத்தன்மையின் பக்தர்கள். மண்டலேசுவரன் மற்று எப்படியிருந்தாலும் வீரன். அவன் இயற்கை, அவன் புகழ் கொண்டபுயவலி, மணம், சாவு இவை ஒவ்வொன்றும் மர இதயம் படைத்தவனைக்கூடப் பக்தியால், புகழும் உள்ளத்தால் நிரப்ப வல்லதாயிருந்தது. பட்டணம் முழுவதும் சொந்தத் தந்தை இறந்து விட்டதைப் போல மக்கள் உணரலாயினர். எல்லோருள்ளத்திலும் ராணியிடமும் சந்திராவதியிடமும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்து ஓங்க ஆரம்பித்தது. ஊதா அழைப்பு அனுப்பி நகரத்துப் பெரிய மனிதர்களை எல்லாம் தர்பாருக்கு வரவழைத்தான். எல்லோரும் வருத்தமும் கோபமும் துள்ள அரசவைக்கு வந்து சேர்ந்தனர். எல்லோரும் வந்த பிறகு மண்டலாதிபதி கேங்கார் திரிபுவனனை அழைத்து வந்தான். திரிபுவன் மிகவும் அமைதியடைந்தவனுகக் காணப்பட்டான். அவன் கண்கள் மட்டும் ரத்த வெறி பிடித்திருப்பதைக் காட்டின. அவன் வந்தவுடன் எல்லோரும் எழுந்து நின்று வணங்கி வரவேற்றனர். அவர்கள் அமர்ந்தவுடன் திரிபுவன் பேச ஆரம்பித்தான். அவன் குரல் தணிந்தும் பதற்றமில்லாமலும் இருந்தது.

"அன்பர்களே! குஜராத்தின் சிம்மாஸனத்துக்கு எவ்விதத்தில் தீங்கிழைக்கப் பட்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். நான் உங்களை வரவழைத்ததற்கு ஒரே காரணம்தான். என் தாயையும் தந்தையும் இழந்த எனக்குப் பிள்ளை என்ற முறையில் செய்ய வேண்டியது ஒன்று தான் உளது. அதை என் வாள் செய்தே தீரும். ஆனுல் அதை நீங்கள் விரும்புவீர்களா? இதுவரை இங்கே வேற்றுத் தேசத்தவர் நுழையக் கூடாது என்பதற்காகச் சண்டைப் போட்டோம். இனி நான் ராஜத் துரோகியாய் விட்டேன். நீங்களும் அதற்குத் தயாராக இருக்கிறீர்களா? என் புத்திக்குப் பட்ட படி ராணி மீனல் தேவிக்கு ஒரே ஒரு வழி தான் உள்ளது. அவர்கள் இனி சந்திரபுரி திரும்பிவிட வேண்டியது தான். அவர்கள் போனபிறகு ஸோலங்கி வீரன் ஜயதேவ குமாரன் பட்டத்தில் அமரமுடியும். நான் உயிருடனிருக்கும் வரை மீனல் தேவி பட்டணத்தில் நுழைய முடியாது. நீங்கள் இதற்கு ஒத்துக்கொள்ள முடியாவிட்டால் என்னை விட்டுவிடுங்கள். நான் போய் விடுகிறேன். என் சேனை காத்துக்கொண்டிருக்கிறது, பழிவாங்கத் துடித்துக் கொண்டு. நீங்கள் எல்லோரும் அறிவாளிகள். பட்டணின் விதியை நிர்ணயிக்கத் தக்கவர்கள். யோசித்துச் சொல்லுங்கள். நீங்கள் மண்டலேசுவரனின் சாவுக்குப் பழிவாங்குகிறீர்களா அல்லது சும்மா இருக்கிறீர்களா?"

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். திரிபுவன் பாலன் சொன்னன்: "சரி, நான் போகிறேன். நீங்கள் நன்கு யோசித்தே தெரிவியுங்கள். நான் பிறகு வருகிறேன்" பிறகு அவன் தர்பாரை விட்டு அடுத்த அறைக்குச் சென்றான்.

* * *

அங்கே ராஜகுலப் பெண்களும் கர்ண தேவ மகாராஜாவின் இரண்டு பழைய ராணிகளும் நின்றிருந்தனர். அவர்கள் வேலை நன்ருய் உண்டுகளிப்பதும் ராஜ்ய கடவடிக்கைகளை ஏதோ கேளிக்கை போல் பார்த்துக்கொண்டிருப்பதும் தான். எந்த ஸோலங்கி வந்தாலும் அவர்களுக்கு ஒன்று தான். அங்கே அந்தக் கூட்டத்தில் பிரஸன்னவைக் காணேம். அங்கிருந்து திரிபுவன் மேலே சென்றான். அங்கே பிரஸன்ன தன் உடை நகைகளை ஓடி ஓடி எடுத்து வந்து குவித்துக்கொண்டு நின்ருள்.

"இது என்ன செய்கிருய், இந்தச் சமயம்?"

"பட்டணே விட்டு வெளியேற ஏற்பாடு!"

திரிபுவன் அருகே வந்தான் அவன் வன்மை கொஞ்சம் குறைந்திருந்தது. அவன் பிரஸன்னவின் கையைப்பிடித்து, செய்நன்றி ததும்பும் உள்ளத்துடன் அமுக்கினன். பிரஸன்னவின் கையும் அவனை அறியாமலேயே அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டது. இருவரும் சற்று நேரம் தம்மை மறந்துநின்றனர்.

அங்கே, தர்பாரில் தலைவர்கள் எல்லாரும் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் ஓரிரு விஷயங்களில் எல்லோரும் ஒத்துக்கொண்டனர். தேவப்ரஸாதைக் கொலை செய்த முறை பட்டண் கௌரவத்துக்கு ஏற்பட்ட இழுக்கு என்பதில் அவர்களுக்குச் சந்தேகமில்லை. அதற்கு ஏதாவது செய்ய வேண்டியது தான். இரண்டாவது மீனல் தேவியிடம் ஒருவருக்கும் நல்லெண்ணம் ஏற்படவில்லை. பண்டிதர் கூட்டத்தில் லீலாதரன் கஜானனன் தவிர மற்ற யாவரும் ராணிக்கு விரோதமாகவே இருந்தார்கள். சிற்றரசர்களிடையேயும் மண்டலேசுவரன் காரணமாகவோ அல்லது சந்திராவதியின் அதிகாரத்திடம்கொண்ட பொருமை காரணமாகவோ ராணியிடம் விரோதம் காட்டினர்கள். முதலில் சேட்டுகள் மாறுபட்டார்கள். ஆனல் பேசிய பிறகு அவர்களும் ராணி மீனல்தேவி இருக்கும் வரை கலவரம்தான் என்ற ஒத்த முடிவுக்கு வந்துவிட்டனர். எல்லாம் சேர்ந்து அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். கேங்காரும் லீலாதரனும் திரிபுவனிடம் சென்றனர்.

கேங்கார் சொன்னன்: "மஹாராஜ்! வாருங்கள் நாங்கள் முடிவு செய்துவிட்டோம்."

'என்ன?'

"பட்டண் முழுவதும் தங்கள் பக்கம்: வாருங்கள்."

திரிபுவன் கவலை நீங்கி வெளியே வந்தான். பிரஸன்னவும் மூட்டை கட்டுவதை நிறுத்தி அவர்களைத் தொடர்ந்தாள்.

கொஞ்ச நேரத்தில் எல்லோரும் தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டனர். திரிபுவன் முழு அதிகாரத்தையும் ஏற்றுக் கொண்டான். ஊதாவை முரார்பாலிடம் அனுப்பி, அவனை ராணியிடம் அனுப்பிவைத்தான். அவனும் பட்டணில் இருப்பதைவிட அந்த வேலை செய்வது நல்லது என்று செல்லத் தயாராகிவிட்டான்.

வல்லபனுக்கும் செய்தி அனுப்பப்பட்டது. பட்டண் முழுவதும் திரிபுவன் வசமாகி விட்டது. அதனல் சேனை அங்கே தண்டு இறங்கிக் காத்துக்கொண்டிருந்தது.

## ராணியின் ஏமாற்றம்

சாம்பானேரி கதவு ராணிக்கு வழிவிட்டு மரியாதை செய்யத் தவறினவுடனேயே அவள் கோபமும் ஆத்திரமும் சீறி எழுந்தன. முரார்பால் இப்படிச் சிக்கவைத்து விடுவான் என்று அவள் கனவிலும் எண்ணிய வளல்லள். யாரிடம் கோபத்தைக் காட்டுவது என்றே அவளுக்குப் புரியவில்லை. அதனலேயே அவள் கோபம் வெறிகொண்டு திரிய ஆரம்பித்தது. ஏமாந்த ராணியுடன் சென்ற கூட்டம் கூடாரங்கள் அடித்துத் தங்கியிருந்த இடத்துக்குத் திரும்பி வந்தது. ராணியும் தன் டேராவுக்குச் சென்ருள். நல்ல காலமாகச் சேனதிபதி தவிர மற்றெருவருக்கும் ராணி பட்டண் சென்று திரும்பினள் என்று தெரியாது.

இந்தச் சமயத்தில் யாரை அணுகிப் புத்திமதி கேட்பது? ஆனந்தசூரி இதுவரை திரும்பவில்லை. கலவரமடைந்த ராணி அவரையும் திட்டிக்கொட்டினள். வேறு யாரிடம் புத்தி கேட்பது என்று அவளுக்குப் புரியவேயில்லை! ஆம், முஞ்ஜாலிடம் கேட்கலாம். ஆனல் மூக்கைத் தானே அறுத்துக்கொள்ள யார் தான் சம்மதிப்பார்கள்? முஞ்ஜால் கைதியாகி, பாராக்காரச் சேவகர்களுடன் சுற்றிக் கொண்டிருந்தான். ஒருவரிடமும் பேசவில்லை.

அவனுடைய புத்திமதி தற்பொழுது பொன்னனது என்று ராணியறிவாள். ஆனல்

மானத்தைவிட்டுக் கேட்டாலல்லவா அது கிடைக்கும்? ராணி இந்த எண்ணத்தைத் துறந்து துரத்தினாள். இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் முஞ்ஜால் சொல்லி வந்ததின் உண்மையை உணர ஆரம்பித்தாள். 'என் புத்தியினால்தான் உன் சக்கரம் சுழலுகிறது' என்று அவன் சொன்னதிலும் உண்மை இருக்கிறது போலத்தான் இருக்கிறது! அப்

பொழுதெல்லாம் அவள் எண்ணினாள்; அது மட்டுமா? வேண்டுமென்றேதான் முஞ்ஜால் தன் அதிகாரத்தை நிலை கொள்ளாமல் தடுக்கிறான் என்றும் எண்ணினாள். இப்பொழுது அவனுடைய அரசியல் முறையிடம் அவள் பெருமை கொள்ள ஆரம்பித்தாள். முன்னே பட்டண் கதவடைத்து நிற்கிறது. பின்னே தேவப்ரஸாத் சேனையுடன் நிற்பான். சந்திராவதியை நம்பி வேற்றுத்தேச அரசியைப் போல அவள் இங்கே நிற்கிறாள்! அவள் அதிகம் எண்ண எண்ணச் சிக்கல் அதிகம் சிக்கிற்று. தன் கதியற்ற நிலையின் சித்திரத்தை அவள் தெளிவாய்ப் பார்க்க ஆரம்பித்தாள்.

"தாயே! ஒரு தூதன் ஏதோ சமாசாரம் கொண்டுவந்திருக்கிறான். ஸேனாபதி உள்ளே அனுப்பியிருக்கிறார்!"

ராணி தலை நிமிர்ந்து பார்த்தாள். எதிரே நின்றது அவள் உண்மை ஊழியன் ஒரு சோப்தார். "சரி, வரச்சொல்" என்றாள்.

வந்தவன் சொன்னான்: "அம்மா இங்கிருந்து இரண்டு யோஜனை தூரத்தில் வல்லபசேனன் சேனை வந்து சேர்ந்திருக்கிறது."

'ஊம்! அப்படியானால் மண்டலேசுவரரும் கூட இருக்கிறாரா?"

"இல்லை தாயே! மண்டலேசுவரர்தான் ஸரஸ்வதியில் முழுகி இறந்துவிட்டாரே! யதி மண்டுகேசுவரர் கோவிலை எரித்துவிட்டார் என்ற சேதியும் தங்களுக்குத் தெரியாதோ?"

ராணி திடுக்கிட்டாள். "உனக்கு எப்படித் தெரியும்? இது உண்மையா?"

"தாயே, இதை எல்லாம் கேட்டுத்தானே இங்கே வந்திருக்கிறேன்."

"சரி, இனி ஏதாவது இருந்தால் சொல். இல்லாவிட்டால் போ"

"விஜயபாலன் சமாசாரம் அறிய ஆள் அனுப்பியிருக்கிறார்"

"சரி" என்று சொல்லி ராணி அவனை அனுப்பிவிட்டாள்.

ராணியின் எண்ணச் சுழலில் அதிக அழுக்குகள் சேர்ந்தன. மண்டலேசுவரன் மடிந்தான். வல்லபசேன் நெருங்கிவிட்டான். விசுவபாலன் வல்லபசேனன் அசையாத் தன்மையைப் பற்றி முன்னமே சொல்லியிருந்தான். ராணி தூங்கும் புதல்வன் ஜயதேவனின் கபடற்ற முகத்தைப் பார்த்துப்பார்த்து, கண்ணீருகுத்தே இரவைக் கழித்தாள். ஒவ்வொரு கணமும் அவளை வெருட்டிற்று. காலையில் இன்னும் நம்பகமான செய்திகள் கிடைத்தன. வல்லபசேனன் இரண்டு யோசனை தூரத்தில் தங்கிவிட்டான். அவனிடம்தான் ஆனந்தசூரி கைதியாகத் தங்கியிருக்கிறார். ஒற்றர்கள் சொன்னதிலிருந்து "மண்டலேசுவரன் இறந்தபிறகும் அவனுடையசேனை கலையத் தயாராயில்லை. சந்திராவதி சேனை பெரியதாயிருப்பதால் வல்லபசேன் சும்மா இருக்கிறான்!" என்று ராணி தெரிந்து கொண்டாள்,

குமாரன் ஜயதேவன் கேட்டான். "அம்மா, நேற்று நாம் ஏன் திரும்பிவிட்டோம்? வாயேன் பட்டண் போகலாம்."

மீனல் தேவி ஆசுவாசப்படுத்தினாள். "போவோம் அப்பா, போகலாம்; கொஞ்சம் பொறு." இந்த வேற்று மனிதர்களிடையே ஜயதேவனுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. மேலும் நிலைமை ஏதோ மாறி நிற்கிறது என்றும் ஒருவாறு தெரிந்து கொண்டிருந்தான். அதனால் அவன் மேலே பேசாமல் சும்மா இருந்தான்.

பகல் ஏறிவந்தது. ராணி விசுவபால், மற்ற இரண்டு மூன்று நம்பகமான சிற்றரசர்கள், சாந்திசந்திரனின் பையன் வினயசந்திரன், சந்திராவதி சேனாதிபதி விஜயபாலன் முதலியவர்களைத் தன்னிடம் கூப்பிட்டனுப்பினாள். மண்டலேசுவரன் சாவினால் அவர்களுக்கே ஒரு சந்தோஷம் ஏற்பட்டிருந்தது. இனி வெற்றி நிச்சயம் என்று அவர்கள் எண்ண ஆரம்பித்திருந்தனர். இதனிடையே பட்டண் ஜனங்கள் கோபித்து நிற்கின்றனர் என்ற விஷயம் தெரிய வந்தது. ஆனாலும், அங்கே அவர்களை நடத்த யார்? அவர்கள் ஆவேசம் தான் எவ்வளவு நேரம் நீடிக்கும்? இந்த எண்ணங்களால் உந்தப்பட்டு அவர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளே வந்தனர்.

எல்லோரும் அமர்ந்து இனிச் செய்ய வேண்டியது என்ன என்று யோசிக்க ஆரம்பித்தனர். இரவு நடந்ததை ராணி ஒருவரிடமும் சொல்லவில்லை. வினயசந்திரனும் விசுவபாலனும் கூட இருந்த காரணத்தால் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களும் அதைப் பற்றிப் பேசவில்லை.

விஜயபாலன் அனுபவசாலி. அவன் யோசித்துச் சொன்னான்; 'மஹாராணி,' எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. நம் சேனை வீரர்கள் நம்பகமானவர்கள். எண்ணிக்கையும் அதிகம் இருக்கிறது. ஆனால் நாம் இருதலைக் கொள்ளி எறும்பாயிருக்கிறோம். ஒருபக்கம் பட்டண் நகரம், மற்றொருபக்கம் வல்லபன் இருக்கிறான். ஆகவே எந்த விதமாகவாவது ஒரு பயத்தை அகற்றியாக வேண்டும். பட்டண் நம்பக்கம் தான் என்று நீங்கள் நிச்சயமாக நம்பினீர்களானால் அதைச் சந்தோஷப்

படுத்துங்கள். கேங்கார் அல்லது மற்றயாரையாவது கொண்டு அந்த வேலையைச் செய்தாக வேண்டும்: அல்லது பட்டணைச் சூழ்ந்து கொள்ள வேண்டும். இப்படி உட்கார்ந்திருந்தால் வீரர்களும் சிப்பாய்களும் உத்ஸாகத்தை இழந்து விடுவார்கள்."

ராணி விசுவபால் வினயசந்திரன் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் நம்பிக்கை கணத்துக்குக் கணம் குறைந்து வந்தது. ஆனால் யாரிடம் சொல்வது? பேசிக் கொண்டே சற்று நேரம் சென்றபின் பட்டண் நகரத்திலிருந்து செய்தி



யுடன் ஒரு சிற்றரசன் வந்திருப்பதாகத் தெரிந்தது. எல்லோரும் ஆவலுடன் அவனை வரவேற்றனர். கொஞ்ச நேரத்தில் வெட்கத்தால் தலைகுனிந்து, தன் அசட்டுத் தனத்துக்கு வருந்தி, பட்டணில் கிடைத்த பரிசுகளுக்கு நடுங்கி முரார்பால் வந்து சேர்ந்தான்.

ராணி அவனைப் பார்த்து ஆனந்தக் கூச்சலிட்டாள். சரியான சமயத்தில் மிகுந்த நம்பிக்கையுள்ள சிற்றரசனைப் பார்த்து ராணி உண்மையிலேயே அகமகிழ்ந்தாள். "முரார்பால்! வா, வா! என்ன சமாசாரம்?"

"அம்மணி துயர்ச்செய்தி தான் கொண்டு வந்திருக்கிறேன்."

"பரவாயில்லை உட்கார்." ராணி தன் ஆசனத்தருகேயே அமர இடம் தந்தாள். அப்பொழுதே "நேற்று இரவு சமாசாரத்தை மட்டும் திறந்து விடாதே!" என்று சைகை காட்டி அறிவித்தாள். முரார் பாலனும் அதை அறிந்து கொண்டான்.

"மகாராணி! நான் பட்டணிலிருந்து தூது வந்திருக்கிறேன்"

வினய சந்திரன் எழுந்தான். "பட்டணிலிருந்தா? பட்டணிலிருந்து மகாராணிக்குத் தூதா? அது யாரப்பா அப்படி அனுப்பியது?" என்றான்.

"வேறு யார்? இந்தச் சமயம் பட்டண் அதிபதியாயிருக்கும் திரிபுவன் பால் சோலங்கி தான்!"

விசுவபாலன் "அந்தச் சிறு பயல் என்ன செய்வானாம்?" என்றான்.

"மகாராணி, இப்பொழுது அவன் சிறு பயல் இல்லை. நீங்கள், முஞ்ஜால் யாருக்குத் தான் அரசு செலுத்தும் வகை தெரிந்தது? இன்று அவன் தான் உண்மையிலேயே ஒரு குடையரசன்! உங்களுக்கும் தூது அனுப்புகிறான். சொல்லட்டுமா?" முரார் பால் கேட்டுக்கொண்டே சேனாதிபதி விஜயபால் பக்கம் திரும்பினான்.

"சொல். இங்கு எல்லோரும் வேண்டியவர்கள் தான்."

"திரிபுவன் பால் சொல்கிறான்:– "மீனல் தேவி இருக்கும் வரை ஜயதேவ குமாரன் பட்டணத்தில் காலடி வைக்க முடியாது. ஒன்று மீனல் தேவி ஒழிய வேண்டும். அல்லது பட்டண் தூளாக வேண்டும்"

ஒரு கண நேரம் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து இருந்தனர். ராணி கஷ்டப்பட்டுத் தன்னை நிலைப்படுத்தி, "ஏன் அங்கு எல்லார் புத்தியுமா தொலைந்து விட்டது?" என்று கேட்டாள்.

"மகாராணி, உண்மையைச் சொல்கிறேன்; மன்னித்து விடுங்கள். கடந்த மூன்று நாட்களாக நான் பார்த்தவைகள் எல்லாம் மிகப் புதிய விஷயங்கள். இந்த நிலைமை இதுவரை எக்காலத்தும் ஏற்பட்டிருக்க முடியாது." என்ற பீடிகையுடன் நடந்தது முழுவதும் சொல்லி நிறுத்தினான். ராணி ஏமாற்றம் வர வர ஏறிக்கொண்டே வந்தது. கனவிலும் காணாத கஷ்டங்கள் எதிரே வந்துநின்று கொண்டன. எல்லோரும் பட்டண் கௌரவத்தையும் பட்டண் ஜனங்களின் ஜன்மபூமி அன்பையும் பற்றிப் பேசிய போதெல்லாம் சிரித்து நகையாடி வந்திருந்தாள். தன் அதிகாரம், தன் பெருமை, தன் சக்திக் கெதிர் அவளுக்குப் பட்டணைப்பற்றிக் கொஞ்சம்கூட லக்ஷியமில்லை. இன்று பட்டணின் புத்தி வன்மை அவளைக் கடந்து விட்டது. பேச்சு வாக்கில் பிரஸன்னா விஷயத்தையும் கேள்விப்பட்டு அவள் ஆச்சரிய மடைந்தாள். "யார்? என் சகோதரன் மகள் பிரஸன்னாவா?"

முரார்பால் உள்ளுக்குள்ளேயே வெட்கி, "ஆம் ராணி, அவளும் வீராங்கனை ஆகி விட்டாள்?" என்றான்.

ராணிக்குப் பேரதிசயம் ஏற்பட்டது. பேச்சு முடிந்தவுடன் எல்லோரும் இனி என்ன செய்வது என்று மீண்டும் யோசனை செய்ய ஆரம்பித்தனர். முரார்பாலுக்கு ஒன்றாலும் 'நடக்கும்' என்ற நம்பிக்கையே இல்லை. எப்படியாவது பட்டண் வாசிகளை வசப்படுத்த வேண்டும் என்ற ஓர் நிச்சயத்தைச் செய்து கொண்டு கலைந்துவிட்டனர்.

தங்கி நின்ற முரார்பாலனிடம் கதவு திறக்காத காரணத்தை ராணி கேட்க அவன் ஏதோ பிடிபட்டதாகச் சாக்குச் சொல்லித் தப்பித்துக்கொண்டான்.

"முரார்பால்! திரிபுவன் பிரஸன்னா இடையே நேசம் இருந்ததே! அது எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள் ராணி.

"எனக்குத் தெரியவில்லை. அப்படித்தான் இருக்கவேண்டும்!" என்றான். அவனுக்கு நேற்றுப்பட்ட காயம் மீண்டும் பசுத்தது.

"பிரஸன்னாவைக் கொண்டு முயன்றால் திரிபுவன் ஒத்துக்கொள்வானா?"

முரார்பாலுக்குச் சந்தேகம்தான். உண்மையான காரணத்தைச் சொல்லமுடியவில்லை. சொல்லியிருந்தால் ராணியே சந்தேகத்தை வலுச்செய்துகொண்டிருப்பாள்.

"முரார்பால்! நீ பயந்துவிட்டாய். நான் இப்பொழுதே வினய சந்திரனை அனுப்பி, பிரஸன்னுவை அழைக்கிறேன்,"

"தங்கள் இஷ்டம். எனக்கு இதில் பல னிருக்குமென்று படவில்லை!"

"சரி, பார்க்கலாம்." ராணிக்குக் கொஞ்சம் நம்பிக்கை தோன்றவே அவள் உள்ளமும் கொஞ்சம் கனியுண்டது! முழுகுபவன் நம் பிக்கையைப்போல் அவளும் அசட்டு நம் பிக்கை கொண்டு செயல் ஆற்றத் துணிந் தாள்.

நடுப்பகல் சென்றபின் வினயசந்திரன் இருபத்தைந்து வீரர்களுடன் மோண்டேரி வாயிற்பக்கம் போய்ச் சேர்ந்தான். அங்கே சற்று நேரத்தில் கேங்காரைச் சந்தித்தான். "மீனல்தேவி பிரஸன்னமுகியிடம் பேச விரும்புகிருர்கள்" என்ற தகவலைத் தெரிவித் தான். வெகு நேரம் சென்று திரிபுவன் பாலன் வந்து சரிஎன்று ஒப்புக்கொண்டான். ஆனுல் ஒரு நிபந்தனை: இருபக்கமும் ஆயுதம் தாங்கிய இருபத்தைந்து இருபத்தைந்து வீரர்கள் துணைக்கிருக்க, க்ஷேமராஜ் தோட் டத்தில் மீனல்தேவி பிரஸன்னமுகியைச் சந் திக்க வேண்டும்.

மீனல்தேவி எப்படியாவது பட்டணுடன் தணிந்து போவதுதான் நல்லது என்ற எண்ணத்தைத் தீவிரமாக்கிக் கொண்டாள். எப்படியோ ஏமாற்றியோ, சந்தோஷப்படுத் தியோ வசம் செய்து கொள்ளவேண்டும். பட்டண் கர்ணுவதி இரண்டு நகரங்கள்தான் குஜராத் முழுவதிலுமே அவளுக்கு வேண்டிய நகரங்கள். மோண்டேராவுக்கு அவள் அநேக தூதர்களை அனுப்பிப் பார்த்துவிட்டாள். அங்கிருந்து பதிலே வரவில்லை. இந்த நிலை யில் அவள் பட்டணையும் எதிரியாக்கிச்சூழ்ந்து விட்டால்? பிறகு பெயரளவுக்குக்கூட வேண் டியவர்கள் இருக்கமாட்டார்கள்; சந்திரபுரி திரும்பிச் செல்வதைத்தவிர வேறு வழியிருக் காது. சந்திராவதி நகரின் முக்யஸ்தர்கள் பட்டணுடன் விரோதம் கொள்ளச் சம்மதிப் பார்களா என்றும் ராணிக்குத் தெரியாது. சந்திராவதி சேனுதிபதி விஜயபாலன் பட் டணை முற்றுகையிடத் தயாராயிருந்தான் என்பது உண்மைதான். நாளையே அவன் மாறிவிட்டாலும் விடலாம். முற்றுகையிட் டால்தான் 'பட்டண் படிந்துவிடும்' என்று எப்படிச் சொல்வது?

என்ன செய்வது? ராணி கனவிலும் பட் டண் இவ்விதம் எதிர்த்து நிற்கும் என்று கருதியவளல்ல. இப்படித் தலைதூக்கி அது ராணியை அறைகூவி நிற்கிறது! முற்றுகை இடுகிருயா? அல்லது மதிப்பை இழக்

கடவுளின் கோவிலுக்கான பரிசுத்தம்




தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது கோத்ரெஜ் ஸாண்டலில் நன்மை பயக்கக்கூடிய கலப் படமற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே ஏனைய சேர்த்து உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. வெறுக்கத் தகுந்த மிருகக் கொழுப்புகள் யாதும் அவை களில் கிடையாது. சுயமான மைசூர் சந்தனத் தைலம் ஏதேஷ்டமாய்க் கலக்கப்பட்ட கோத்ரெஜ் சந்தண சோப்பானது, இன்பமான குளிர்மை, இதம், கமழும் மணம் இவைகளையுடைய நுரையையளிக்கும்.



கோத்ரெஜ் லிம்டா — கிருமிகளைக் கொல்லவும் சொஸ்தமளிக்கவும் வல்ல வேப்பின் குணங்களையுடைய ஸோப்.

Godrej Sandal
chavi brand

# கோத்ரெஜ் ஸாண்டல்

சாவி மார்க் (சந்தண)

# டாய்லெட் (ஸ்நான) ஸோப்

இந்தக் குறைந்த விலையில் சிறந்த சந்தண சோப் வேறு எந்த சந்தண சோப் தயாரிப்பிலும் கிடையாது.

கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்,
மதராஸ்: 164, பிராட்வே: கொச்சின்: 6/36, கல்வத்தி.

19842
M211, NU1KV

கிறாயா? என்று கேட்கிறது. ராணியோ முற்றுகையும் இடாமல் மானத்தையும் காப்பாற்ற வழி செய்துகொண்டிருந்தாள்.

## பழைய கண்கள் புது வேடிக்கை

இரண்டாம் நாள் காலை பட்டணுக்கும் விக்ராட்டிற்கும் இடையே உள்ள க்ஷேமராஜ் தேவன் குளத்தருகில் உள்ள கோயிலில் பட்டணின் உரிமையிழந்த ராணி அமர்ந்திருந்தாள், அவள் புத்தி ஒளி சிதறும் நெற்றியில் கவலைக் குறிகள் நிழலிட்டுக் காண்பித்தன. அவளுடைய சிறிய கண்கள் ஆழத்தில் சென்றிருந்தன. நாலு பக்கங்களிலிருந்தும் இடர்கள் இடித்து வந்த போதிலும் அதை எதிர்த்து நிற்கும் ஆற்றல் கொண்ட அவள் தலை நிமிர்ந்தே இருந்தது. உதடுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டியிருந்தன. கர்ண தேவன் இறந்த பிறகு அவள் தன் சங்கல்பங்களைத் திடம் செய்து கொண்டிருந்தாள். அதில் மாறுதல் ஏற்படாமலிருக்க இன்னும் திடம் கொள்ள வேண்டியிருந்தது. மெதுவாக அவள் பெருமை சீர்குலைந்து வருவதைக் கண்டாள். எந்த மருமகள் அவள் எண்ணவாயிலை அணுகக்கூட உரிமை பெறுமல் இருந்தாளோ அவள் வழிக்கு ஏங்கிக் கொண்டு நிற்கத்தான் நேர்ந்தது, அவள் உள்ளத்தைப் பொசுக்கிக் கொண்டிருந்தது. எப்படியானாலும் அவளைத் தன் வசப்படுத்த வேண்டும்!.

முரார்பால் சொல்லிச் சென்ற வார்த்தைகள் அவள் காதுகளை அரித்துக் கொண்டிருந்தன. ஒன்று மீனல் தேவி இல்லை; அல்லது பட்டண் இல்லை.

இதே சமயம் சோப்தார் ராணியின் எண்ணக் கடலில் விழுந்தான். எங்கேயும் எப்பொழுதும், ராணி யாயிருந்த போதும் அந்தப் பதவி நீங்கி மருமகளை எதிர்பார்த்து நிற்கும்போதும், சமர் அவளுக்கு ஒரேவிதமான மரியாதையைத்தான் காட்டிவந்தான்.

"தாயே பட்டண் ஜனங்கள் வந்து சேர்ந்து விட்டார்கள் போலிருக்கிறது."

"சரி, வந்தவுடன் பிரஸன்னாவை உள்ளே அனுப்பிவை"

கொஞ்ச நேரத்தில் குதிரைகளின் காலடிச் சத்தம் காற்றுடன் விரைந்தன. அவைகள் குறைந்தன, மறைந்தன. சிலம்புகள் ஒலித்தன. அதையும் கேட்டாள் ராணி. சமருடன் பிரஸன்னா உள்ளே வந்ததையும் பார்த்தாள். மீனல் தேவி சிரமப்பட்டுக் கவலைக் குறிகளை அழித்து மெழுகி அதிகாரக் கோலமிட்டாள். மிகுந்த பெருமை காட்டி, பிரஸன்னா பக்கம் திரும்பிய அவள் முகம் தன்னையறியாமலே ஒளி மங்கிற்று. தன் வார்த்தைகளுக்கு நடுங்கி ஆடும் அந்தப் பிரஸன்னா எங்கே? இதோ அதிகாரத்தின் உருவாய் நிற்கும் இந்தப் பெண் எங்கே? கண்களின் சைகையைக் கண்டே காரியங்களைச் செய்யும் அந்தப் பெண் எங்கே, இதோ அதை மறந்து கண்களோடு கண்கள் உராயும் இந்தப் பெண் யார்? ஒன்று மறியாத இளம் பெண் ஒருத்தியை, திருதிரு என விழித்து வெட்கிக் கண்மூடி தலை குனிய நிற்கும் தன் மருமகளை அல்லவா அவள் எதிர்பார்த்தாள்; ஆனால் இதோ கண்களில், முகத்தில், அவயவங்களின் அழகிய அசைவில், நடையில் பெருமையும் அரசுரிமையும் பொங்கி வரும் ராணியல்லவா நிற்கிறாள்! ராணியின் இதயம் முதலிலேயே ஓட்டம் காட்ட ஆரம்பித்து விட்டது. பிரஸன்னா வந்து அத்தையின் காலடியில் விழுந்தாள். "அத்தை! எப்படியிருக்கிறீர்கள்? உடல் நிலை சரியில்லைபோல் தோன்றுகிறதே?"

"இல்லை. வழி நடையினால் அயர்வு ஏற்பட்டிருக்கும்!"

இந்த விதம் பேசுபவர்களை முன்னம் என்றால் மீனல் தேவி கைது செய்யாமல் விடமாட்டாள். ஆனால் இன்று? பொறுக்கி எடுத்த இனிமை கனிந்த வார்த்தைகளை உபயோகித்து அந்தச் சிறுமியை வசப்படுத்தும் காலம்!

"நீ எப்படி இருக்கிறாய்? உட்கார்". ராணி சைகை தெரிந்து சமர்வெளி யேறினான்.

"ரொம்ப சௌகரியமாய் இருக்கிறேன்; என்னை ஏன் கூப்பிட்டனுப்பினீர்கள்?"

பிரஸன்னாவும் வெளிக்கு மிகவும் தைரியத்தைக் காட்டினாலும் உள்ளூர அவள் உள்ளம் உதறிக்கொண்டிருந்தது. மீனல் தேவி எந்த வார்த்தையில் ஏமாற்றி உதறி விடுவாளோ? என்ற பயம் அவளை விடவில்லை. ஆகவேதான் அவள் இடம் கொடுக்காமல் நேரடியாகப் பேச்சை ஆரம்பித்து விட்டாள்.

"குழந்தாய், நான் உன்னை வேண்டியவள் என்று கூப்பிட்டனுப்பியிருக்கிறேன். பட்டண் வாசிகள் இது என்ன நாடகம் ஆரம்பித்து விட்டார்கள்? அவர்கள் என் மக்களல்லவா? ஏன் இப்படி தாயுடனேயே எதிரித்தனம் கொண்டாட முற்பட்டுள்ளார்கள்? என்னை வருத்தி என்ன அடைய விரும்புகிறார்கள் அவர்கள்?"

பிரஸன்னா மனதுக்குள் அத்தையின் புத்தித் திறமையைப் புகழாமல் இருக்க முடியவில்லை. "அத்தை, இதை என்னிடம் ஏன்

கேட்கிறீர்கள்? என்னிடம் சொல்லி நான் என்ன செய்வேன்?"

"பிரஸன்னு! நான் அங்கே என்ன நடக்கிறதென்று அறியவிரும்புகிறேன். ஏன் அகாரணமாக மக்கள் பதைத் தெழுந்தார்கள் என்றுசொல். பட்டண் வாசிகளின் ரத்தம் சிந்துமுன் அதைத் தான் நான் கொஞ்சம் தெரிந்து கொள்கிறேன்" மீனல்தேவி வார்த்தைகளை நிறுத்து அவைகளின் ஆழத்தை அறிந்து சொல்லி வந்தாள்.

"ஒருவரும் ஒன்றும் சொல்ல வில்லை; கேட்க வில்லை. பிறகு ஏன் இந்தப் பித்துக் கொண்டசெயல்கள்? நல்லகாலமாக இந்தச் செய்தி இன்னும் வெளியே பரவ வில்லை. பரவினல் பட்டணுக்கு என்ன கௌரவம் மிஞ்சும்.?,,

பிரஸன்னு மெதுவாக மீனல் தேவியின் வார்த்தைகளை அதன் மந்திரப் பிடிப்பிலிருந்து விடுவித்து, அதன் உண்மைப் பொருளை அறிய முயன்றுகொண்டிருந்தாள். ஆனல் அவள் பயங்கரமான கூர்விழிகள், இனிய ஆனல் கௌரவம் கொட்டும் வார்த்தைகள் பிரஸன்னுவின் புத்தியைச் சூழ்ந்து இறுக்கின. அத்தையின் மதிப்பு எங்கே அதிக வேலை செய்யும் என்று அறிய முயன்ருள். அதற்குள் தான் சிக்கக்கூடாது என்ற நிர்ணயத்துடன் கொஞ்சம் அலக்ஷியத்துடனேயே பேச ஆரம்பித்தாள்:" அத்தை, இதை எல்லாம் என்னிடம் சொல்லி என்ன செய்யப் போகிறீர்கள்? இவற்றையெல்லாம் ஆக்குபொருள் நீங்கள்தானே!."

"என்ன? அப்படியும் சொல்கிருர்களா! உனக்காக? உன் தேசத்தின் நன்மைக்காகத் தானே, அமைதியைப் பெரிதாக எண்ணித் தானே என் துக்கம், குதகத்தைக்கூட மறந்து வெளியேறினேன். நான் வெளியேறிச் சென்றிராவிட்டால் மண்டலேசுவரனும் முஞ்ஜாலும் அடித்து மடிந்திருப்பார்கள் என்று தெரியுமா யாருக்காவது? அது மட்டுமா? நான் போயிராவிட்டால் மண்டலேசுவரன் சேனை இதற்குள் இங்கே வந்திருக்கும் என்பதையும்பற்றி யாராவது யோசித்துப் பார்த்தார்களா?"

"அத்தை, அதை ஒருவரும் ஒத்துக் கொள்ளத் தயாரில்லை. எல்லோருடைய குற்றச்சாட்டும் என்ன தெரியுமா? நீங்கள் தான் வேற்று நாட்டவரை வரவழைத்து மண்டலேசுவர மகாராஜாவின் உயிரை வாங்கிவிட்டீர்கள்!"

ராணி "மகாராஜா"வின் இந்தப் புதிய உருவைக் கண்டாள்! மனது துடிக்க, "சந்திராவதி ஜனங்கள் உனக்கு வேற்றவர்களா? தேவப்ரஸாதை நான் ஏன் கொலை செய்விக்கிறேன்? நான் கேட்டவரையில் ருத்திரமஹாலயம் தீப்பற்றி எரிய அவரும் அதிலே மடிந்துவிட்டாராம்."

"அத்தை, தங்களிடம் பேச நான் வல்லமையற்றவள். ஏன் அழைத்தீர்கள் என்று மட்டும் சொல்லுங்கள்" பிரஸன்னுவுக்குப் பேச்சை வளரவிடப் பயம்!

"பிரஸன்னு, குழந்தாய்! இந்த மக்களின் மனமாற்றம் என்னல் பார்க்க இயலவில்லை. எனக்கும் என் அருமைப் பட்டண் மக்களுக்கும் இடையே என்ன குறையினலோ இந்த விரோதம் ஏற்பட்டுவிட்டது. நீ இடைப் பட்டுத் தீர்த்து வை" என்று சொல்லவே உன்னை அழைத்தேன்.

"நான் தீர்க்கவா? நான் எம்மட்டுக்கு? என்னல் என்ன ஆகும்.?"

"உன்னல் ஆகும். இப்பொழுது எல்லா அதிகாரமும் திரிபுவனன் கையில் தானே இருக்கிறதாம்.!"

பிரஸன்னு திருத்தினள். "அந்த அதிகாரத்தைப் பட்டண் வாசிகள் சேர்ந்து ஒப்புவித்திருக்கிருர்கள்."

உதட்டை மடித்து மீனல்தேவி சொன்னுள்: "சரி. அப்படியே வைத்துக்கொள்வோம். திரிபுவனை அடக்கியாள்வது உன் கையில் இருக்கிறது!"

பிரஸன்னு சிரித்தாள். அடக்கியிருந்த பேச்சு வன்மை பீறிக் கிளம்பிற்று. "இது எப்படி அறிந்தீர்கள்? அவர் எப்படி என் பிடியில் அகப்படுவார்? அவர் தாயாரை ஆயுள் முழுவதும் தம் கணவனிடமிருந்து பிரித்துவைத்தீர்கள் நீங்கள்! மேலும் தாயையும் தந்தையையும் கொல்வித்தீர்கள். இன்று அவர் என் வார்த்தையைக் கேட்பார் என்கிறீர்களே?"

"பெண்ணே! உலகம் முழுவதும் ஒருவர் சொல்லுக்கு அடிமைப்படும்."

"அது யார்?"

"தன் காதலியின் சொல்லுக்கு."

பிரஸன்னு திடுக்கிட்டாள்; வெளிச்சத்தை உணர்ந்தாள். "அத்தை உண்மையான காதலி கணவன் விரதத்துக்குக் குறுக்கிட மாட்டாள்" என்ருள்.

"இது என்ன இது. புதிர் போடுகிருய்? திரிபுவனனுக்கு என்ன வேண்டும்? நான் என் ஆசீர்வாதத்துடன் அவனுக்கு உன்னை

மணம் புரிவித்து வைக்கிறேன். பிறகு என்ன வேண்டும்"

பிரஸன்னா அதிரச் சிரித்தாள்! "அத்தை, கடந்த மூன்று தினங்களில் மூன்று உலகங்கள் மாறிவிட்டன, தெரியுமா?"

"என்ன?"

"நான் முன்னைய பிரஸன்னா அல்ல. அவள் மாறிவிட்டாள். எப்பொழுது மயக்க மருந்திட்டு என்னைக் கடத்திச் சென்றீர்களோ அந்த நிமிஷத்திலிருந்து நான் மாறிவிட்டேன். நீங்கள் செய்து வைப்பதென்ன? உங்கள் மறுப்புக்கும் இனி மதிப்பு இராது. நான் அவரைத்தான் மணக்கப்போகிறேன். ஏன்? மணந்துகொண்டேவிட்டேன்." என்று சொல்லிப் பிரஸன்னா மீண்டுமொருமுறை சிரித்தாள். கடைசி வார்த்தைகள் சொல்லும்பொழுது அவள் முகம் சிவந்து வெட்கிக் காட்டிற்று.

மீனல் தேவியின் புருவங்கள் நீண்டு ஏறின. மற்றக் கணமே அதை மாற்றி நடிப்புக் காட்டி, "பிரஸன்னா! இனி நீ என் வேலையை முதலில் பார்க்கவேண்டும். குழந்தாய், நீ என்ன வேண்டும் சொல். திரிபுவனனுக்குச் செய்து வைக்கிறேன்."

"அத்தை, இந்தச் சமயம் பேசுவது எனக்கழகல்ல. இருந்தாலும் தூண்டுகிறீர்கள். சொல்கிறேன். திரிபுவன பாலுக்குக் கொடுக்கும்படியாகத் தங்களிடம் ஒன்றும் கிடையாது. அதற்கு மாறாக அவர்கள் வேண்டுமானால் தங்களுக்கு ஏதாவது தர இயலும்!"

ராணிக்கு எழுந்த கோபம் நீண்ட முயற்சியினாலேயே அமிழ்ந்தது. "அப்படியா? சரி, நீதான் ஏதாவது செய்யேன்! தேசத்தில் உன் பெயர் நிலைக்கட்டும்!"

அவள் தலையசைத்துச் சொன்னாள்: "எனக்குப் பெயரும் வேண்டாம்; புகழும் வேண்டாம். ஆனால் நீங்கள் விரும்புவது மட்டும் நடக்காது."

அமிழ்த்தும் ஏமாற்றத்தை ஆத்திரத்துடன் நெட்டித்தள்ளி ராணி கேட்டாள், 'ஏன்?' என்று.

"திரிபுவன் பால் பிரதிக்கினை எடுத்துக் கொண்டிருக்கிறார்."

"என்ன?"

"பட்டணில் ஒன்று நீங்கள் இல்லை; அல்லது அவர் இல்லை!"

ராணி நடுக்கம் கொண்டாள். "ஆனால் நீ?"

"என் கணவன் இருக்கும் பக்கம் நான்!"

மீனல்தேவி உதட்டைக் கடித்து நிலை பெற்றாள். "பெண்ணே! இந்தப் பிரதிக்கினையின் பொருள் அறிந்தயா நீ?" என்று சீறினாள்.

"ஆம், பிரதிக்கினை எடுத்துக் கொண்டவர் அதையும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்."

"பெரிய மண்டலேசுவரன் இருந்த இடம் தெரியாமல்போன இடத்தில் இந்தச் சின்னப் பயல் என்ன ஆவான் தெரியுமா.?"

"தகப்பனைத் தோற்கடிக்கும் பிள்ளைகளைப் பற்றிக் கேட்டதில்லையா?"

"சிறுமி! பிறகு வருந்துவாய்! மீனல்தேவி கைகள் பின்னிடைந்து விட்டன என்று எண்ணி இறுமாப்படைகிறாய்! இதோ விக்ராட்டில் இருக்கும் சேனையைப் பார்த்தாயா? லாட்டிலிருந்தும் படை வரும். பதினைந்து நாட்களில் பட்டண் கோட்டையின் ஒவ்வொரு செங்கல்லும் இடந்தெரியாமல் போய்விடும்!"

பிரஸன்னா இந்தச் சக்தியின் ஆரவாரத்தெதிரே அலறினாள் என்றாலும் உள்ளூரத்தான். வெளியே அச்சமின்மை காட்டி, "அத்தை, யவனர்களின் சேனை நக்ஷத்திரங்களின் எண்ணிகைக்யை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததே. அதற்கு அழியவில்லையே பட்டண் கோட்டை!"

"நிரம்ப நல்லது. இன்னும் எண்ண நேரமிருக்கிறது. நாளைக்காலை வரை எண்ணி மாற்றம் ஏற்பட்டால் சொல்லி அனுப்புங்கள்!"

"அத்தை, நான் கொடுத்தபதில்தான் ஒருகால் புது உடையில் வரும்!"

மீனல்தேவி எரிந்து விழுந்தாள், "சரி, செய்ததற்குப் பலனையும் உண்ணத் தயாராயிருங்கள்!"

"சரி, நான் போகிறேன். ஜயதேவனிடம் நான் ஞாபகப் படுத்தினதாகச் சொல்லுங்கள்."

"ஜயதேவனும் உன்னையே எண்ணிக் கொண்டிருக்கிறான்."

ஒரு எண்ணம் அவள் உள்ளத்தை நனைக்கப் பிரஸன்னா திரும்பினாள். "அத்தை ஒருவார்த்தை சொல்கிறேன், கேட்பீர்களா?"

"என்ன சொல்லப் போகிறாய்?"

"ஜயதேவ குமாரனை என்னுடன் அனுப்பி வையுங்கள். நீங்கள் ரேவா நதிக்கரைக்குப்

போய் வாழ்நாளைக் கழியுங்கள். நாளைக் காலையே ஜயதேவன் பட்டாபிஷேகத்தைக் கண் குளிரச்செய்து வைக்கிறேன். காது குளிரக் கேட்கலாம்!''

மீனல் தேவி தலை நிமிர்ந்து தயங்காமல் சொன்னாள்: "சிறுமி, அறிந்து பேசக் கற்றுக் கொள். மீனல் தேவி இருந்தால் பட்டணின் அரசன் தாயாகத்தான் இருப்பாள். இல்லாவிட்டால் பட்டண் அழிவதும் ஒன்றுதான், நான் மடிவதும் ஒன்று தான். எனக்கு ஒன்றும் பெரிதில்லை.''

"சரி, பிறகு தங்களிஷ்டம்''. பிரஸன்னா இளம் வயதுள்ள அரசி. எனவே அங்கிருந்து சென்று விட்டாள்.

அவள் சென்று மறைந்தும் ராணி எவ்வளவு நேரம் வாயிற்படியையே பார்த்திருந்தாள் என்றுசொல்ல முடியாது. முணுமுணுக்க ஆரம்பித்தாள்: "ஏ கடவுளே! இது என்ன நடக்கவிருக்கிறது. சாணுயரம் உள்ள சிறார்கள்; இது என்ன இப்படி ஆகிவிட்டார்கள்? என்னை ஒருவரும் திரும்பிக் கூடப் பார்க்க மறுக்கிறார்களே!'' அவள் கண்களுக்கெதிரே இருள் சூழ்ந்து வந்தது. அவள் தன் கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டாள். வருங்காலத்தைப்பற்றி எண்ணவே அவள் மனம் அச்சமுற்றது. யாரிடம் புத்திமதி கேட்பாள்? என்ன செய்வாள்? எந்த முகம் கொண்டு அவள் விக்ராட் பக்கம் திரும்புவாள்?

மிக முயன்று எழுந்தாள்; சமர் சேனைக் கூப்பிட்டாள். 'திரும்பிச் செல்வோம்' என்று உத்தரவிட்டாள்.

(தொடரும்.)



# சுவர்க்கம்

சௌரி

கான்யகுப்ஜத்து அரசன் ஜயசந்திரனுக்கு, ஆஸ்தான பண்டிதரான ஸ்ரீஹர்ஷரின் ஆவேசமான போக்கில் பற்றுதல் குறைய ஆரம்பித்தது. அவருடைய அசாதாரணமான பாண்டித்யம், யாரும் ரசிக்கமுடியாதபடி பாலைவனத்திலே வார்க்கப்பட்ட பாலைப்போல, தர்க்க வாதங்களிலும் கண்டன சித்தாந்தங்களிலுமே விரயமாக்கப்படுவதைக் கண்டு அரசன் வேதனைப்பட்டான்.

கலைகளையும், காவியங்களையும் ரசித்துப் போற்றி வளர்த்த அந்த ராஜ சபை, அவைகளுக்காக ஸ்ரீஹர்ஷரையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டது.

ஸ்ரீஹர்ஷரோ, தர்க்கவாதத்தால் அவமானப்படுத்தப்பட்ட தம் பிதா, இறக்கும் தறுவாயில் வேண்டிக்கொண்டபடி, தர்க்க வாதிகளையே பழி வாங்குவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அதனால் அரசனது வேண்டுகோள் அவருக்குக் கசப்பாக இருந்தது.

ஒரு நாள் அரசனே அவர் இல்லத்திற்கு வந்து வேண்டிக்கொண்டபோது ஸ்ரீஹர்ஷரால் மறுக்க முடியவில்லை.

"ஸ்ரீஹர்ஷரே! இந்தப் பிடிவாதமான வழக்கத்தைத் தாங்கள் மாற்றிக்கொள்ளத்தான்வேண்டும். இதனால் உங்களுக்கும் சாசுவதமான கீர்த்தி ஏற்படாது. புகழ் பெற்ற என் ராஜ சபைக்கும் பெருமை வளராது" என்று தாழ்மையோடு சொன்னான் ஜயசந்திரன். சிறிது நேரம் மௌனியாகச் சிந்தித்த பிறகுதான் அரசனது வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டிய தம் பொறுப்பை ஸ்ரீஹர்ஷரால் உணர முடிந்தது.

"அரசே! நான் என்ன செய்யவேண்டும்." என்றார். ஜயசந்திரனுக்கு உற்சாகம் தலை தூக்க ஆரம்பித்துவிட்டது.

"ஸ்வாமி! இனிமேல் தேவரீர் சிறந்த காவிய நாடகங்களான கலைப் பொக்கிஷங்களையே இயற்றவேண்டும். என்றென்றும் அழியாது அகண்ட ஜோதிபோல் ஒளிவீசும் ஓர் மஹா காவியத்தைச் சிருஷ்டி செய்யுங்கள். இதுவரை எந்தக் கவியாலும் கையாளப்படாத உருவகங்களையும், உபதேசங்களையும், மேலும் பல அம்சங்களையும் இழைத்து அதை ஓர் அமர காவியமாகத் தாங்கள் உருவாக்க வேண்டும். இதுதான் எங்களுடைய........."

அரசனது துடிப்பைக்கண்டு இலேசாகச் சிரித்தார்.

"என்ன அரசே? விசித்திரமான உத்தரவாக இருக்கிறதே! இங்கேயுமா ராஜ கட்டளை.........?!"

ஜயசந்திரன் திடுக்கிட்டுவிட்டான்.

"அப்படி இல்லை, ஸ்வாமி! கலாபிமானிகளின் வேண்டுகோள். காவிய ரசிகர்களின் தாகம்தான் இது. தங்களிடம் குமுறிக் கொண்டிருக்கும் நிறைந்த ஜீவ சக்திகளை வெளிக் கிளப்பி, பலருக்கும் பயன்படச் செய்ய நான் ஒரு தூண்டு கோல்: அவ்வளவு தான்."

"உணர்ந்துவிட்டேன், ஜயசந்திரரே! ஆனால், கடுமையான வழியிலேயே பழகி விட்ட என் சுவபாவம் திரும்புமா என்று தான் சந்தேகிக்கிறேன்."

"தேவரீர் மனது வைத்தால் முடியாததும் இருக்குமா? தயவுசெய்து அந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளுங்கள்!"

"என்ன இருந்தாலும், போர்க்களத்திலே பிரவேசித்தவன் பிரேமகீதம் பாடமுடியுமா, அரசே?"

"பிரேமகீதம் பாடவேண்டியவர் போர்க்களத்திலே தங்கலாமா, ஸ்வாமி?"

ஸ்ரீஹர்ஷர் மேலே பேசவில்லை. விரிந்து ஒளிவீசிய அவரது கண்கள் அரசனது ஆர்வத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தன. அந்தப் பார்வையில் தென்பட்ட அனுதாபத்தின் சாயை ஜயசந்திரனுக்கு ஆறுதலளித்தது.

அரசனது ஆவலை நிறை வேற்றுவதாக உறுதியளித்துப் புறப்பட்டார் ஸ்ரீஹர்ஷர்.

2

பல்லக்கிலமர்ந்து, பணியாட்கள் சூழ்ந்துவர ராஜோபசாரத்தின் வெளிப்பகட்டோடு ஸ்ரீஹர்ஷர் கிளம்பவில்லை. வெளியாடம்பரங்களையும், போக போக்யங்களையும் உதறித் தள்ளி வெறுத்தும்விட்ட யோகிஅவர்.

தாமியற்றும் காவியம் பண்டிதர்களுக்கும் பயன்படும்படி அமைய வேண்டுமென்று ஸ்ரீஹர்ஷர் கருதினார். அதற்கான சாஸ்திரத் திறமையும், கவித்வமும் நிறைந்திருந்தும், உலகானுபவத்திலும் அதிகத் தேர்ச்சி பெற வேண்டுமென்று விரும்பினார். அந்த ஆர்வமே அவரை யாத்திரை செய்யத் தூண்டியது.

பலதேசங்களுக்குச் சென்றார். மக்களோடு நெருங்கிப் பழகியதால் அநேக அனுபவங்கள் அவருக்கு ஏற்பட்டன; அவை யெல்லாம் அவர் மனசில் பெரும் கொந்தளிப்பையே ஏற்படுத்தின. அவர்கண்ட இடங்களிலெல்லாம் வறுமைதான்

வளர்ச்சி பெற்றிருந்தது. ஏழைகளின் எண்ணிக்கை ஏராளமாக இருந்தது. பிச்சைக்காரக் கூட்டங்கள் கும்பல் கும்பலாகக் காட்சியளித்தன. பண்டிதர்களெல்லாம் யாசகர்களாக அரசர்களையும், தனவந்தர்களையும் துதிபாடிப் பிழைக்க வேண்டியிருந்தது. பல அரசர்களும், பணக்காரர்களும் யாசகர்களை வெறுங்கையோடு விரட்டுவதற்குத்தான் பணம் செலவழித்தார்கள். அவர்கள் தினமும் விருந்துகள் உண்டு கும்மாளமும், கூத்துக்களுமாகக் குதூகலித்திருப்பதையும் ஸ்ரீ ஹர்ஷர் கண்டார். பஞ்சம், பசி, பட்டினி இவைகளின் பேயாட்டம்தான் அவருக்கு அதிகமாகத் தென்பட்டது. ஜனங்களிடம் பூலோகம் நரகமென்ற தீர்மானம் வலுவடைந்து வந்தது. மேலே தான் சுவர்க்கமென்ற உலகம் உண்டு; அங்கேதான் சுகமும், நிம்மதியும் ஏற்படுமென்று எண்ணினர்களே யொழிய, தியாகத்தாலும் திருப்தியாலும் பூமியையே சுவர்க்கமாக ஆக்கலாமென்ற நம்பிக்கையும், முயற்சியும் மனிதர்களிடம் ஏற்படவில்லை.

இவைகளை யெல்லாம் கண்ட ஸ்ரீ ஹர்ஷருக்கு எந்த விதத்திலும் ஆறுதல் உண்டாகவில்லை. தாம் வந்த நோக்கத்தை மறந்து, ஜனங்களுக்காகப் பாடுபட வேண்டுமென்ற உறுதியுடன் தர்மப் பிரசாரம் செய்யத் தொடங்கினர்.

தானத்தின் மகிமைகளையும், தானம் செய்தவர்களின் பெருமைகளையும், தானம் செய்கிறவர்களுக்கு ஏற்படும் நன்மைகளையும் பற்றி அரசர்களிடமும், தனவந்தர்களிடமும் சலிக்காமல் உபதேசித்தார். படித்த பெரியோர்களை யெல்லாம் இம்மாதிரி தர்மோபதேசத்தில் ஒற்றுமையாக ஈடுபடச்செய்தார். மிக விரைவிலேயே பலர் கொடையாளிகளாக மாறிவிட்டார்கள். தான தர்மங்கள் செய்வதை எல்லோரும் பெருமையாகவும், கடமையாகவும் மேற்கொண்டார்கள். அன்ன சத்திரங்களும், தர்மசாலைகளும் வளர்ந்தன. பூலோகத்தை நரகமென்று வெறுத்தவர்களெல்லாம் 'சுவர்க்க பூமி' என்று போற்றத் தொடங்கினர்கள், அவர்களுக்குச் சுவர்க்கம் என்ற ஒரு தனி இடம் இருக்கிறதென்ருே, இருக்கவேண்டுமென்ருே சிந்திக்கவே தோன்றவில்லை.

ஸ்ரீ ஹர்ஷர் செய்த உபதேசங்கள் ஜனசமுதாயத்தில் அதிக மதிப்பைப் பெற்றன. யாசகர்களை விரட்டிய இடங்களிலெல்லாம், தேடினலும் யாசகர்களைப் பார்க்க முடியாத சுபிட்ச நிலை பரவியது. ஸ்ரீ ஹர்ஷர் தம் முயற்சி பலருக்கும் நன்மையளித்ததைக் கண்டு பெருமையடைந்தார். எல்லாத் தேசங்களுக்கும்போய் இப்படியே பிரசாரம்செய்து காலத்தைக் கழித்துவிடலாமென்று எண்ணினர். உடனே கான்ய குப்ஜத்து அரசனுக்களித்த வாக்குறுதி நினைவிற்கு வரவே காச்மீரம் போய்ச் சேர்ந்தார்.

ஸ்ரீ ஹர்ஷரைப் போற்றி வளர்த்துப் பல சாஸ்திரங்களையும் பயிலுவித்த பண்டிதோத்தமர்கள் காச்மீரத்தில் வாழ்ந்து வந்தார்கள். அமைதியையும், ஊக்கத்தையும் கொடுக்கும் சூழ்நிலையை எப்போதும் காணக்கூடிய இடமாக இருந்தது அந்தத் தேசம். மேலும் எவ்வளவோ கலைஞர்களையும் கவிகளையும் வளர்த்தெடுத்து, எத்தனையோ கலைப் பொக்கிஷங்களையும், காவியங்களையும் உருவாக்க உதவி யளித்ததால்தான் அந்தக் காச்மீரத்தையே ஸ்ரீ ஹர்ஷரும் தம் காவியத்தை இயற்றுவதற்கு ஏற்ற இடமாக்கிக் கொண்டார்.

3

**நா**மியற்றிய காவியத்தைத் திருப்பிப் பார்த்ததும் ஸ்ரீ ஹர்ஷருக்கே பிரமிப்பாக இருந்தது.

"எதிர்பார்த்ததைவிட எத்தனையோ அதிசய அம்சங்கள் இதில் நிறைந்துவிட்டன. இவ்வளவு சிறப்புள்ள காவியத்தை இதுவரை யாரும் இயற்றவில்லை. இனிமேல் யாரால் முடியப்போகிறது? என்னுலேயே முடியாதே! இதுதான் என் கடைசி சிருஷ்டி. நம் திறமைகளையும், பெருமைகளையும் நாமே இதில் தெரிவித்துக்கொள்ள வேண்டியதுதான். பொருமையைப் பிறப்புரிமையாக்கிக்கொண்டுவிட்ட பண்டித உலகத்தில் யார் தான் என்னை உள்ளபடி அறிந்து போற்றப் போகிருர்?"

ஸ்ரீ ஹர்ஷர் தமக்கேற்பட்ட இந்த எண்ணத்தை அப்படியே செயலாக்கினர். நைஷதம் என்ற பெயரில் காவியம் உருவாயிற்று. அதனுள் ஒவ்வொரு ஸர்க்கத்தின் முடிவிலும் தம் பெயரையும், பெருமைகளையும் முத்திரையடித்தாற்போல் பதியவைத்தார்.

பல கலைகளிலும் தேர்ச்சிபெற்ற காச்மீரத்துக் கவிகளும், சாஸ்திர நிபுணர்களும் ஸ்ரீ ஹர்ஷரது நைஷத காவியத்தை மிகவும் கொண்டாடினர்கள். இந்த ஒரு பெருமையே ஸ்ரீ ஹர்ஷருக்கு ஆத்மதிருப்தியைப் பூர்ணமாக அளித்துவிட்டது!

ஸ்ரீ ஹர்ஷர் திரும்பிவிட்டார் என்றதும் கான்யகுப்ஜ நகரமே சந்திரனைக் கண்ட கடல்போலப் பொங்கி வந்து வரவேற்றது.

ராஜோபசாரங்களோடு எதிர்கொண்டழைத்தான் ஜயசந்திரன்.

நைஷத காவியத்தின் அரங்கேற்று விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொருவரும் அந்த விழாவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பல தேசத்து வித்வான்களும் நிறைந்த சபையில் நைஷத காவியம் அரங்கேற்றப்பட்டது.

ஸ்ரீ ஹர்ஷர் தாமே படித்து விளக்கிச் சொல்லிக்கொண்டு வந்தார். சுவை மிகுந்த கருத்துக்களையும், தத்துவ ரகசியங்களையும் விவரிக்கும் இடங்களிலெல்லாம் ஸ்ரீ ஹர்ஷரின் உணர்ச்சி மிகுந்த சொற்பொழிவு சபையோர்களை உணர்ச்சி யற்றவர்களாகவே செய்துவிட்டது.

"கம்பீரமான நடை, சொற்களின் வசீகர அமைப்பு, மனித வாழ்க்கையிலேயே சுவர்க்கத்தைக்காண வழி சொல்லும் உபதேச மொழிகள், யாரும் கையாளாத, கையாளவும் முடியாத விசித்திர வர்ணனைகள், பண்டிதர்களையும் பல்லைப் பிடித்துப் பார்க்கும் பல சிக்கலான தத்துவ முடிச்சுகள், பாமரர்களும் ரசித்துப் பயனடையும் எளிய கட்டங்கள், இம்மாதிரி பல அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்றது நைஷத காவியம்" என்று சபையோர்கள் புகழ்ந்தார்கள். அதற்கு 'மஹா காவியம்' என்ற தகுதியான பெரும் பட்டத்தையும் சூட்டி, 'நைஷதம் வித்வான்களுக்கு ஔஷதம்' என்ற கௌரவத்தையும் அளித்தார்கள்.

கடைசியில் ஸ்ரீ ஹர்ஷர் நன்றி செலுத்திய போது செய்த பிரசங்கம் எல்லோருடைய மனதையும் உருக்கிவிட்டது.

அவர் சொன்னார்: "ரசிகர்களான சபையோர்களின் புகழ்ச்சிக்குப் பாத்திரமான நான், பலருக்கும் நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். என் பிதாவை அவமானப் படுத்தி, அகால மரணத்திற்கும் ஆளாக்கிய தர்க்கவாத நிபுணர்களுக்கு என் முதல் அஞ்சலி. அவர்கள் அப்படிச் செய்திராவிட்டால் என் பிதாவும் இறுதி வேண்டுகோளை எனக்கு விடுத்திருக்க மாட்டார். நானும் ரோஷத்தோடு தீவிரமாகக் கல்வி பயின்று இத்தகைய பதவியை அடைந்திருக்க மாட்டேன்.


# DON'T WORRY !!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles ! Speedy and harmless !! Thousands satisfied !!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

"RASAYAN" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra.)

**Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)**

TOLLYGUNGE, CALCUTTA - 33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

1. இண்டோ மெடிகல் ஸப்ளைஸ், 29, வைத்யநாத முதலித் தெரு, சென்னை—1.
2. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர் ஸிடி.
3. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹனுமான்மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
4. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலா தெரு, கல்கத்தா
5. இங்க்லீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
6. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)

"அடுத்தபடியாக இதை இயற்ற என்னைத் தூண்டிவிட்ட பெருமை அரசர் ஜயசந்திரருக்கு இருந்தாலும், என் காவியத்திற்கு உயிர் கொடுத்தது உலகானுபவம்தான். அதை எனக்குக் காட்டிக் கொடுத்தவர்கள் ஏழைகளும், யாசகர்களுமே ஆவர். அவர்களுக்கு நான் நிரம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

"தர்க்க வாதங்களிடையே பழகி, கரடு முரடாகிவிட்ட என் அறிவிற்கு இத்தகைய காவியமியற்றும் பண்பு எப்படி ஏற்பட்டதென்று பலரும் ஆச்சரியப்படலாம். எனக்கே முதலில் மலைப்பாகத்தானிருந்தது. இருந்தாலும், பிரேமையில் இணைந்து இறுகிவிடும் பெண்ணுக்கு மனமொத்தகணவன்கிடைத்துவிட்டால், அவனோடு குலாவும் இடம் உயர்ந்த மஞ்சமானாலும் கிழிந்த பாயானாலும், மண் தரையாகவே இருந்தாலும் அவளுக்கு எல்லாம் சமம்தான். அன்பும், அனுபவமும் தான், பிரதானம்! அதுபோல, என் வித்தை எந்த வழியிலும் எனக்கு வெற்றியைக் கொடுக்கும் என்பதை உணர்ந்துகொண்டேன்.

"மேலும், அழகிய யுவதியால் ரசிகர்களான வாலிபர்களின் உள்ளங்களைத்தான் கவர முடியுமேயன்றி, தேர்ச்சியற்ற சிறு பிள்ளைகளை வசீகரிக்க முடியாது. அதே போல என் அமுதமொழி அறிவாளிகளுக்குத்தான் ஆனந்தத்தைக் கொடுக்குமேயன்றி அறிவிலிகளுக்கும், மதிக்காத அற்பர்களுக்கும் எந்தச் சுவையையும் அளித்துவிடாது.

"நான் எந்தச் சுயநலத்திற்காகவும் இந்தக் காவியத்தை இயற்றவில்லை. என்னைப் போற்றிவரும் ரசிக ஜனங்களுக்கு என் கடமையைச் செய்திருக்கிறேன். இனி நான் தேசம் தேசமாகச் சஞ்சாரம் செய்து தர்மப் பிரசாரகனைத் தொண்டாற்றப்போகிறேன். இவ்வுலகைத் துக்க பூமி யென்றே தீர்மானித்துவிட்ட ஜனங்களிடம், இவ்வுலகத்தையே சுவர்க்கமாக்க, பரோபகாரம், மனத் திருப்தி முதலியவைகளைப் பதியவைக்கப் போகிறேன். அரசர்களும், தனவந்தர்களும் யாசகர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்யாதவரை, உதவி பெற்றவர்கள் மனத் திருப்தியோடு வாழாதவரை சுவர்க்கத்தை அவர்கள் எங்குமே காணமுடியாது என்பதையும் வலியுறுத்தப் போகிறேன்.

"இனி நான் எந்த ராஜசபைக்கும் அடிமையல்ல; எந்தத் தேசத்திற்கும் நிலையான பிரஜையல்ல."

ஸ்ரீ ஹர்ஷர் இவ்வாறு பேசி முடித்ததும் சபை முழுவதும் சந்தோஷ ஆரவாரம் எதிரொலித்தது.

## 4

அரசனும், பிரதானிகளும் எவ்வளவோ வேண்டியும் ஸ்ரீஹர்ஷர் கான்யகுப் ஜத்திலேயே நிலையாகத் தங்க மறுத்துவிட்டார்.

"ஸ்வாமி! இங்கேயே தங்கி, தர்மப் பிரசாரம் செய்துகொண்டிருங்களேன். மற்ற எல்லாத் தேசங்களிலிருந்தும் பிரதிநிதிகளை இங்கே வரவழைத்து, தங்களிடம் உபதேசம் பெற்றுச் செல்ல ஏற்பாடு செய்கிறேன். அதன் மூலம் உங்களுக்கு விருப்பமான சுவர்க்கத்தை இங்கேயே காணலாம்; இங்கிருந்து கொண்டே பரப்பலாம். நீங்கள் சிரமபட்டு அலையவேண்டாம்." என்று வேண்டினன் ஜயசந்திரன்.

ஸ்ரீஹர்ஷர் சிரித்துக்கொண்டே அர்த்த புஷ்டியுள்ள ஓரேவாக்கியத்தில் தம் பதிலை முடித்துக்கொண்டார். அரசன் மேலே மறுத்துப்பேசவில்லை. அவர் சொன்ன:

"த்யௌர் ந காசித், அதவா அஸ்தி நிருடா
ஸைவ ஸா சரதி யத்ர ஹி சித்தம்!"

(சுவர்க்கம் என்பது நிலையான ஓர் இடமல்ல; எந்த இடத்தில் மனது ஈடுபடுகிறதோ அந்த இடம் தான் சுவர்க்கம்!) என்ற வாக்கியத்தையே உச்சரித்துக்கொண்டிருந்த ஜயசந்திரன் ஸ்ரீ ஹர்ஷர் போவதைக்கூடத் தடுக்கவில்லை.

போகிற வழிகளிலெல்லாம் "இங்கேயே இருக்கக் கூடாதா? ஏன் போகிறீர்கள்?" என்று கேட்ட பல நண்பர்களுக்கும் ஸ்ரீஹர்ஷர் அதே வாக்கியத்தைத்தான் பதிலளித்தார்.

"ஸ்ரீ ஹர்ஷர் எங்கே? ஏன் அனுப்பினீர்கள்?" என்று மன வேதனையோடு விசாரித்தவர்களிடமெல்லாம் ஜய சந்திரனும் அதே வாக்கியத்தைத் தான் பதிலாக அளித்தான்.

தன் இடத்தை மட்டும் எப்போதும் பிரகாசப்படுத்துமென்று எண்ணின சுவர்ண தீபம் பலருக்கும் பொதுச் சொத்தாகி விட்டதே என்று ஏங்கினன் அரசன்.

கிரகணத்திலிருந்து விடுபட்ட பூர்ண சந்திரன் தண்ணொளிவீச, சுதந்திரனுகக் கிளம்பி விட்டானென்று பல பெரியவர்கள் ஆறுதலடைந்தார்கள்.

மனித வர்க்கத்தை நரகவாசியாக்கிவிடும் விஷக்கிருமிகளையும், சோம்பல் சோர்வுகளையும் அழித்து, புத்துணர்ச்சி மிகுந்த ஆனந்த வாழ்வையளிக்க, சூரியன் கிளம்பி விட்டதாகவே ஜனங்கள் பூரித்துப் போனார்கள்.

எதற்கும் மனது தானே காரணம்!

# நாடகக் கலை மறுமலர்ச்சி

ஆண்டி

நாடகக் கலையே இல்லாத—அரங்க மேடையைக்கூட அறியாத சில விசித்திர நாடுகளும் உலகத்தில் உள. மத்திய ஆப்ரிக்காவிலுள்ள குள்ளர்நாடு, மொராக்கோ தேசம், அபிஸீனியா, வட துருவத்தருகிலுள்ள லாப்பு தேசத்தினர், எஸ்கிமோ ஜாதியார், தென் துருவத்தருகிலுள்ள பாட்டகோணியா, ஆசியாவிலுள்ள அரபிநாடுகள், பலூசிஸ்தானம், இவர்களுக்கெல்லாம் நாடகமேது? அரங்கமேடையேது? உலக நாகரிகத்தின் வேகத்தோடும்கூட ஓடமுடியாமல் பரிதவித்திடும் நாடுகள் இவை.

இன்னும் சீன, சயாம், பர்மா, ஜாவா, திபெத், ஆப்கானிஸ்தானம், பாரசீகம், துருக்கி, எகிப்து, போர்ட்டுகல், தென் அமெரிக்க நாடுகள், சிங்களம், இண்டோ சீன முதலான தேசங்களிலும் நாடகங்கள் இருப்பினும் அவை உயிரற்று, மாசுபடிந்தும், அழுகியும், கல்லறைகளுக்குள் கிடக்கின்றன. இன்னும் கூத்துப் பருவத்தைவிட்டு உயர்ந்தபாடில்லை !

ஆனல் இவைகளைத் தவிரவுள்ள இதர தேசங்களிலோ? நாடகமும், திரைப்படக் கலையும், ரேடியோவும் ஆங்காங்கெல்லாம் நாகரிக வாழ்க்கையின் இன்றியமையாத அம்சங்களாகிவிட்டன. எதிர்காலத்தில் அவைகளே ஓரோர் தேசநாகரிகத்துக்கும், செல்வாக்குக்கும் அளவு கோலாகவும் அமையப் போகின்றன. பற்பல மேலை நாடுகளிலே இப்பொழுதே இம் மூன்றும் சமூக அரசியல் சீர்திருத்தப் பிரசார கருவிகளில் முக்கியஸ்தானம் பெற்றுவிட்டனவே!

## ஆனல் நமது நாட்டிலோ?

பெறற்கரிய நாடகக்கலைச் செல்வத்தை இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே நாம் பெற்றிருக்கிறோம். திரைக் கலையையும் ரேடியோவையும்கூட நாம் பெற்று முப்பது வருஷங்களாயின. அவைகள் உலகிலே தோன்றிய நாள் முதலே பிரதி தினமும் நாம் பார்த்தும், கேட்டும் வருகிறோம். குரங்கின்கைப் பூமாலை போலும், பன்றிக் கூட்டத்திலிடப்பட்ட முத்து மாலையைப் போலும் அவைகள் படும் அவதியைக் கண்டு அடிக்கடி வருந்தவும் செய்கிறோம். மேலைநாட்டுத் திரைப் படங்களுடனும், நாடக இலக்கியங்களுடனும், தாரதம்மியப்படுத்திப் பார்த்து நாணமுறுகிறோம்.

ரஸிகர் உள்ளங்களில் தோன்றிய இந்த நாணத்தின் அறிகுறிதான் இப்பொழுது சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட "நாடகக்கலை மறுமலர்ச்சிக் கமிட்டி." இக் கமிட்டியார் சென்ற மூன்று மாதங்களாக ஆந்திர தேசத்திலுள்ள நாடகாபிமானிகளிட மிருந்தும், ரஸிகர்களிட மிருந்தும், ஆசிரியர்களிட மிருந்தும் அபிப்பிராயங்களைச் சேகரித்து வருகிறார்கள். இனிமேல் தமிழ் நாட்டுக்கும் வருவார்கள்.

## தற்கால நாடகக்கலை

"நாடகக்கலை மறுமலர்ச்சி" என்ற வார்த்தையைக் கேள்வியுற்ற ஒரு நண்பர் என்னிடம்,

"திரைக் கலையும் ரேடியோவுமாக நாடகக் கலையையே விழுங்கிவிட்டனவே! இனி நாடகமாவது மறுமலர்ச்சியாவது!" என்று நகைத்தார்.

நான்: திரைக்கலையும் ஒருவித நாடகம் தானே! ரேடியோவிலும் நாடகங்களை ஒலிபரப்பவில்லையா?

நண்பர்: தமிழ் ரேடியோ நாடகங்களையும் நாடகங்களாக மதித்துப் பேசுகிறீரே! அசடுவழியும் உயிரற்ற தமிழில், இரண்டொருவர் பேசிக் கொள்ளும் "கற்பித சம்பாஷணைகள்" (Imaginary Conversations) தானே! நாடகத்தின் பிரேதங்கள் என்று கூறவேண்டும். கைதேர்ந்தஅனுபவமுள்ள, ஒரு தமிழ் நாடகாசிரியனாவது ரேடியோ நிலையத்துடன் ஒத்துழைக்கிருனா? திரைப் படங்களிலோ கேட்கவேண்டியதில்லை! நமது தெய்வங்

களையும், புனிதமான கொள்கைகளையும், மத குருக்களையும் முக்கால ஞானியரான முனிவர்களையும் தேள் கொட்டுவதைப் போல் கொட்டி நமது மனதைப் புண் படுத்துகிறார்கள். இது நாடகக்கலை யல்ல, நாடகக் கொலை.

நான்: அல்ல. கற்சிலையாய்க் கிடக்கிறது நமது தமிழ் நாடகக் கலை. ஞானப் பாலூட்ட வேண்டிய கருவியால் விஷத்தை ஊட்டுகிறார்கள் கலை நுட்ப மறியாத அரக்கர்கள்.

## இந்திய நாடகத்தின் உச்சநிலை.

நண்பர்: வெள்ளி வளைகளும், பொன் னேலையும், கால் மெட்டியும், மஞ்சள் பூசிய முகமும் உடைய அகல்யையா? வைரக் கம்மலும், கைக் கடிகாரமும், ஸில்க் ஸாரியும், பாதமுயர்ந்த ஜோடு களும் அணிந்து, பௌடரும் ஸ்னோவும் பூசிக்கொண்டு, லிப் ஸ்டிக்கு (lip-stick) தடவி, நெளிந்து நடக்கும் ரூபவதிகளைப் பார்த்த கண்களுக்கா அகல்யையின் பூர்வ வடிவக்காட்சி?

நான்: யுவப் பருவத்தைப்பற்றிப் பேசி னேனேயன்றி ஆடை அணிகலன்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. கிழவி குமரி யானால் காலத்திற் கேற்ற கோலமா அணியாதிருப்பாள்?

நண்பர்: யுவப் பருவமா? அப்படியென் றால் சிசுப் பருவமென்றும், பாலப் பருவ மென்றும் இருந்தனவோ?

நான்: ஆம், இந்திய நாடகக்கலை ஆதி யாக கி. மு. 2 ஆம் நூற்றாண்டிலே, வட மேற்கு எல்லை மாகாணத்திலே, ஊமை நாடகமாக உற்பவித்தது என்று மாத்தி ரம் தெரிவிக்கிறேன். சிறிது காலத்திற் குள் அது பேசவும் கற்றுக்கொண்டது. பேசியது பைசாசி யென்ற பிராகிருத பாஷையில். பின்பு கி. பி. முதல் நூற் றாண்டில் பாலப் பருவமடைந்து, சம்ஸ் கிருதத்திலும் பேச ஆரம்பித்தது. அக் காலத்திய நாடகாசிரியர்தான் அசுவ கோஷர் என்ற பௌத்த மதகுரு. ஆனால் கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் இந்த நாடக நங்கை பிரும்ம வர்த்தத்தை விட்டு இறங்கி ஆரிய வர்த்தத்துக்கு வந்து, உலகை மயக்கும் வனப்புடைய யுவதி யாக விளங்கினாள்.

நண்பர்: என்ன! 1800 வருஷங்களுக்கு முன்பா?

நான்: ஆம், அக்காலத்தில் இப்பாரத பூமியின் சூழ்நிலை பின்வருமாறு. சைவம், வைணவம், சௌரம், சாக்தம், காண பத்யம், வேதம் என்ற அறுவகைப்பட்ட சமயங்கள் இந்திய வைதிக சமுதாயத் திற்குள்ளேயும், பௌத்தம், ஜைனம், நாஸ்திகம் முதலிய மதங்கள் அதற்கு வெளியேயுமாகத் தோன்றி இப்பாரத நாட்டையே சின்னபின்னமாக்கிச் சிதைத்தன. அச் சிதைவைத் தடைசெய் யும்பொருட்டு முக்கால வுணர்ச்சியுடைய முனிவர்களும், கவிகளும், ஞானியரும் புராண ரூபமாகவும், நாடக ரூபமாகவும் கதாகாப்பியங்கள் மூலமாகவும் பாமர ஜனங்களுக்கு இந்திய நாகரிக உண்மை களைப் புகட்டி, அவர்களை ஒற்றுமைப் படுத்த முயன்றார்கள். பரப் பிரும்மமே கடவுள் என்றும், பராசக்தி, த்ரிமூர்த்தி கள், இந்திராதி தேவர்கள், இதர தேவதைகள் இவர்களெல்லாரும் அதன் அம்சங்களே யென்றும் இவர்களிடம் தோன்றும் முரண்பாடுடைய லீலைகள் உலக நன்மைக்கே யென்றும் விளக்கக் கூடிய சரிதைகளை இயற்றினார்கள். இவ் வித வேத வேதாந்த சாரங்களையும், உவ மைகளையும், பதினெட்டுப் புராணங்கள் வாயிலாக வெளியிட்டார்கள். இந்தச் சூழ்நிலை நிரம்பிய அக் காலத்திலும், அதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்புமாகத் தோன்றி, நமது நாடக மங்கையைக் காதலித்தவர்கள்தான் பாஸ மகாகவி, சூத்திரகர், காளிதாஸர், ஸ்ரீ ஹர்ஷர், மகேந்திர விக்கிரமன், பவ பூதி, விசாகதத்தர், சக்திபத்திரர், ராஜ சேகரர் முதலிய நாடகாசிரியர்கள்.

நண்பர்: அவர்கள் காதலித்தது நாடக மங்கையையா, புராண மங்கையையா?

நான்: நாடக மங்கையை; ஏனெனில் புராணம் அப்பொழுது ஒரு சிசுவேயா யிருந்தது. கி. பி. 5-ஆம் நூற்றாண்டி லிருந்த விக்கிரமாதித்தன் காலத்திலே தான் அதுவும் யுவப்பருவமடைந்தது. இக் காலத்திய அரசியல் உணர்ச்சி யைப் போலவே அக்காலத்தில் மத உணர்ச்சி இந்திய ஜனங்களிடையே பரவியிருந்தது. ஆகையால் அக்காலத்

# போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!




## Use **Fordson** MAJOR TRACTORS

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

# ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

**போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்**

**202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2**

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)**

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

திய தீர்க்கதரிசிகள் மதபரமான இதிகாசங்கள் மூலம் இந்திய ஒற்றுமைக்கு வழிதேடினார்கள். பாஸமகாகவி முதல் விசாகதத்தன் வரையிலுமுள்ள கவிஞர் உள்ளங்களில் தோன்றிய பாரத நாகரிகத்தையே! ஸ்ரீ சங்கரர் உருப்படுத்தி நிலைநாட்டினார். அக்காலத்து மேடைகளும், ஊமை நிழல் பொம்மை ஆட்ட மேடைகளும், இந்திய நாகரிக ஒற்றுமைப் பிரசாரத்துக்கு உதவி புரிந்து பாமர ஜனங்களுக்கு உயிரூட்டின.

நண்பர்: பின் எப்படி இந்நாடக யுவதி கிழவியானாள்?

### ஸ்ரீ சங்கரருக்குப்பின்

நான்: சங்கரருக்குப் பிற்காலம் பௌத்த சங்கச் சூழ்ச்சிகளைப்பற்றிய பயம் ஒழியவே இந்தியாவின் அரங்க மேடைகளின் அவசியமும் குன்றிற்று. அத்துடன் நாடகக்கலை ரசிகர்களுடைய ஆவேசமும் அகன்றது. ஒரு நூற்றாண்டிற்குள் புராண இதிகாச நாடகங்களின் உண்மை லக்ஷியங்களும் மறந்துபோயின. மறுபடியும் ஜாதிச்சண்டை, சமயச் சண்டை, ஆசாரச்சண்டை, நாமம் விபூதிச் சண்டை முதலியன முளைத்தெழுந்தன. சைவன் வைஷ்ணவனையும் சாக்தன் சைவனையும், வைணவன் சாக்தனையும் தூற்ற ஆரம்பித்தார்கள். காளிதாசன், பவபூதி, பாஸன் முதலான மகாகவிகளுடைய உயர்ந்த சமரஸ லக்ஷியங்களை மறந்து, துவேஷ புத்தியுடன் புராணக் கதைகளை நாடகாசிரியர்களும் மதபோதகர்களும் அற்ப மனப்பான்மையுடைய சிற்சில அரசாங்கங்களின் உதவியுடன் வக்கிரப்படுத்தவும் மாறுபடுத்தவும் செய்தனர். அத்துடன் நிற்காமல் சமயப்போட்டி நாடகங்களையும் கற்பனை செய்ய ஆரம்பித்தனர். ''பிரபோத சந்திரோதயம்'' என்ற அத்வைத நாடகத்துக்குப் போட்டியாக, ''சங்கல்ப சூரியோதயம்'' என்ற விசிஷ்டாத்வைத நாடகமும், ''மோகராஜ பராஜயம்'' என்ற ஜைன நாடகமும் தோன்றின. ''ஐயா பாணம்'' என்ற ஹாஸ்ய நாடகத்துக்கெதிராக ஒரு ''அம்மா பாணம்'' தோன்றியது!

கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான இந்தப் பிற்போக்கு முறை நமது நாகரிக உணர்ச்சியை மழுங்கச் செய்து, புராண இதிகாசக் கதைகளைக் காமச் சுவையும், நகைச்சுவையும், பகைச்சுவையும் ஊட்டும் கருவிகளாக மாற்றி விட்டது. நமது புராணக் களஞ்சியத்தில் இத்தகைய அரக்கர்கள் புகுந்து சூறையாடியதின் பயனாக நாட்டின் ஒற்றுமை குலைந்து, பாரதத்தாயும் இஸ்லாமிய அன்னிய நாட்டானுக்கடிமை யானாள். சீர்குலைந்த நாடக நங்கையும் சிலையாயினாள்.

### புராணங்களின் அட்டூழியம்

நண்பர்: அப்படியானால் சென்ற இரு நூற்றாண்டுகளாக ஜாதி மதச் சண்டைகளில்லாம லிருந்தனவே. ஆங்கிலக் கல்வி மூலம் நமக்குக் கிடைத்த கலை ஞானத்தை நம்மவர்கள் ஏன் பயன்படுத்திக் கொள்ளவில்லை? நமது திரைக் கலையும் நாடக மேடைகளும் பழைய புராண வக்கிரங்களையே இன்னும் கையாண்டு வருவதேன்? லக்ஷக்கணக்கான நவநவ சம்பவங்களும், அனுபவங்களும், தத்துவங்களும், விஞ்ஞானங்களும் உலகிலே தோன்றி மறைகின்றன வாயினும் நமது நாடகாசிரியர்களுடைய மூளைகள் மாத்திரம் நமது கோயில் மூலவர்களைப்போல் கல்லாய்ப் போனது எது பற்றி? ஆசிரியர்கள் மனோதர்ம மற்றுப் போயினும் ரசிகர்களுடைய மூளைகளும் துருப்பிடித்துப் போகவேண்டுமா? ''நாட்டியதர்மி''யை யொழித்து, ''லோகதர்மி''யைத் தழுவிய கதைகளே எங்களுக்கு வேண்டுமென்று முரண்டிக் கொண்டு, கண்ணபிரானுக்கும் நாரத முனிவருக்கும், முருகக் கடவுளுக்கும், தேவேந்திரனுக்கும், அக்கினி பகவானுக்கும் நாடகவரங்கத்திலோ திரைப்பட ஸ்டூடியோவிலோ பௌடரிட்டுக் கொண்டு, பெண் வேட்டை, சக்களத்திச் சண்டை, பெண் தரகு முதலிய ''லீலை''களைப்புரியக்கூடாதென்று ஒரு தடையுத்தரவு பிறப்பித்திருக்கக்கூடாதா? இயேசு நாதரையாவது, முகம்மது நபியையாவது புத்தர் பிரானையாவது, மஹாவீரரையாவது, மோசேயையாவது, ஆப்பிரகாமையாவது அவரவர் மதஸ்தர்கள் அரங்க மேடையிலேற்றி, இழிவடையச் சம்மதிக்கிறார்களா? ஆப்பிரகாமும், மோசேயும், முகம்மது நபியும் சக்களத்திச் சண்டை

களை ருசி பார்த்தவர்கள்தாமே. நமக்கு மாத்திரம் ஏன் இப்படிச் சுயமதிப்பும், நாணமும், மான அவமான உணர்ச்சியும் இல்லாமற் போயின?

நான்: நமது புராணக் கதைகளுக்கெல்லாம் வெளிப்படையான பொருளேயல்லவென்றும், வேறு கூடார்த்தங்களுண்டென்றும், அவர்கள் வாதிக்கிறார்களே?

நண்பர்: அதை நானும் மறுக்கவில்லை. ஆனால் வெளிப்படையான திருசியகாவியமாக நடித்துக் காண்பிக்கவேண்டிய மறைபொருள் கதைகளுக்கும் ஒரு வரம்பு வேண்டாமா? இந்திரனுக் கேற்பட்ட ஆயிரம் யோனிகளையும் அரங்கமேடையில் சித்திரிக்கலாமா? நமது பாரத மாதாவை ஒரு நாடகக் கணிகையாகக் கற்பனைசெய்து இக்ஷ்வாகு, மாந்தாதா, யுதிஷ்டிரர், சந்திரகுப்தன், விக்கிரமாதித்தன், அக்பர், நாதர்ஷா, கிளைவ் பிரபு, காந்திஜீ முதலியவர்களால் முறையே காதலிக்கப்பட்டு அவர்களுடனெல்லாம் நடனமாடினாளென்று மறைபொருள் கற்பனை யொன்றை நடித்துக் காண்பித்தால் இந்திய மக்கள் பொறுப்பார்களா? இக் கற்பனையிலும் சரித்திர உண்மைக்கு மாறுபடாத "கூடார்த்தம்" இருக்கத்தானே செய்கிறது? ஆகவே இதைப்பற்றிய ஒரு நிர்வாக மேற்படும் வரையிலும் புராணக் கதைகளை நடிப்பதையே நிறுத்திவிட வேண்டியதுதான்.

## நிர்வாகமா, தடையுத்தரவா?

நான்: நாடகக் கலை உத்தாரணக் கமிட்டியின் முயற்சிகளை ஏளனம் செய்த நீரே இப்பொழுது நாடகங்களைப் பற்றிய "நிர்வாகம்" ஏற்படவேண்டுமென்கிறீரே! அத்துடன் நிற்காமல் இன்றே 144-ஆம் வகுப்புப்படி ஒரு உத்தரவு பிறப்பித்துப் புராணக் கதைக் காட்சிகளையே நிறுத்தி வைக்கவேண்டுமென்கிறீரே! மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டை விட்டோடுவதா என்று அவர்கள் வாதிக்கமாட்டார்களா?

நண்பர்: மூட்டைப்பூச்சி யல்ல இது. நமது அருந்தவச் செல்வங்களாகிய சுதந்திரத்தையும் ஒற்றுமையையும் ஒரேயடியில் நாசம் செய்திடும் பிளேக் கிருமி. இதை ஒழிக்கும் வரையிலும் வீட்டைக் காலி செய்தே தீரவேண்டும். இல்லாவிடில் வீடுமிராது, நாடுமிராது.

நான்: இவ்வளவு நூற்றாண்டுகளாகப் பொறுத்திருந்த நீர், அந்த "நிர்வாகம்" ஏற்படும் வரையிலும் பொறுத்திருக்கலாமே!

நண்பர்: இவ்வளவு நாளும் நான் அடிமையா யிருந்தேன். என்னென்ன தவம் செய்தோ இன்று சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறேன். இச் செல்வக் குழந்தையை விஷக் கிருமி யிடமிருந்து எப்படிக் காப்பாற்றுவது? அதனாலே தான் ஆத்திரப்படுகிறேன்.

நான்: "விஷக்கிருமி" யென்று கூறுவதை "அம்மன்" என்று கொண்டாடுபவரும் இருக்கின்றனரே! அவர்களும் உமது "சுதந்திரக் குழந்தை" யிடம் உரிமை பாராட்டுகிறவர்கள்தான். மேலும் இன்றே தடையுத்தரவைப் பிறப்பித்தால் கோடிக்கணக்கான தொகைகளை மூலதனமிட்டு நிர்மித்திருக்கும் அப்பழுக்கற்ற "சாகுந்தலம்", "விக்கிரமோர்வசீயம்", "பிரதிமா நாடகம்" போன்ற காளிதாஸ், பாஸ, பவபூதி நாடகங்களுக்கும் வினை வந்துவிடுமே! "நிர்வாகம்" இன்னதென்று கூட உமக்கே ஒரு நிதானமேற்படாதிருக்க, முன்பின் யோசனையின்றித் தடையுத்தரவைப் பிறப்பிப்பார்களா புத்திமான்கள்?

"இதைப்பற்றிய "சர்ச்சை" தான் இப்பொழுது மேற்கூறிய கமிட்டியார் செய்து வருகிறார்கள். அவர்கள் செய்து வரும் வேள்விக்குப் பங்கமேற்படாமல் நாமும் உதவுவோமானால், நமது சுதந்திர அரசாங்கமும் முன்வந்து நமதாணைப்படி கல்லாய்க் கிடக்கும் நாடகக் கலையையும் கண்ணைக்கவரும் நங்கையாக மாற்றி விடாதா?"

# மனோதத்துவம்

ஜி. எஸ். மணி

அங்கதன்

'**தா**யும் சேயும்' என்ற தலைப்புடன் கூடிய ஆராய்ச்சிப் புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தேன்.

ஏழாவது மாதத்திலேயே வயிற்றிலிருக்கும் சிசுவுக்கு உயிர், உணர்ச்சி எல்லாம் வந்துவிடுகின்றனவாம். ஆகவே அந்த நிலையில் கர்ப்பிணி இருக்கவேண்டிய நிலையைப்பற்றியும், அவள் மனோபாவம் அமையவேண்டிய தன்மையைப் பற்றியும் அந்தப் புத்தகம் சவிஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டே வந்தது. வயிற்றினுள்ளே இருக்கும்போதே தாய்க்கும், சேய்க்கும் உண்டாகும் தொடர்பைப்பற்றி அற்புதமாக வர்ணித்தது; தாயின் மனோபாவம் குழந்தைக்குப் படியும் விதத்தைப்பற்றியும் விவரித்தது; பூரண கர்ப்பவதியை மன நிம்மதியுடனும், சந்துஷ்டியாகவும் வைத்திருக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியும் அடிக்கடி வற்புறுத்தியது. தாயாகப் போகிறவளை மனம் நோகாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும், முன்னோர்கள் அவளைப் பேணிவந்த விதத்தையும் பற்றி அழகாக எடுத்துக் காட்டியது.

புத்தகத்திலேயே ஆழ்ந்து கிடந்தேன்.

மனைவி பரபரப்புடன் ஓடிவந்தாள்.

வரும்போதே எல்லை மீறிய அதிசயத்துடனே, "சங்கதி தெரியுமோ? என் தோழி பார்வதிக்கு ஊமைப்பிள்ளையாகப் பிறந்திருக்கிறதாம்!" என்று கூவிக்கொண்டே வந்தாள்.

எனக்கும் திகைப்பாகத்தான் இருந்தது. "அட பாவமே!" என்றேன்.

அவளும் அனுதாபத்துடனே, "எல்லாமே பண்ணின பாவம்தான் போங்கள்! பூரண கர்ப்பமாயிருக்கும்போதுகூட அவளுடைய புக்ககத்தில் ரொம்ப பாடாய் படுத்திவிட்டார்களாம்; கொஞ்சம்கூடப் பரிவே காட்டவில்லையாம்" என்றாள்.

"தங்கமான பெண்தான், பாவம்; புக்ககத்தில் படுத்துகிறார்களென்று நான்கூடக் கேள்விப்பட்டேன்" என்றேன்.

"ஆனாலும் பார்வதியும் அஸாத்ய நெஞ்சழுத்தக்காரி; ஒன்றையும், யாரிடமும் அவ்வளவு எளிதில் வெளிக்காட்டிக்கொள்ள மாட்டாள். அகமுடையானும் அடவில்லை; எல்லாவற்றையும் மனசு விட்டு வெளிச் சொல்லாமல் உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொண்டு புழுங்கி, புழுவாய்த் துடித்திருக்கிறாள்! அதனால்தான் குழந்தையும் ஊமையாகப் பிறந்துவிட்டதோ என்னவோ?" என்றாள்.

"இருக்கலாம்" என்று நானும் ஆமோதித்தேன்; "நான் இப்போது படித்துக்கொண்டிருக்கும் இந்தப் புஸ்தகமும் அந்த மனோதத்துவத்தைப் பற்றித்தான் சொல்லுகிறது; உன் விஷயத்திலேயேகூடத்தான் மனோதத்வ அனுபவம் ஏற்பட்டிருக்கிறதே?" என்றேன்.

"என் விஷயத்தை நினைத்துக்கொண்டுதான் இப்போது பார்வதியைப் பற்றியும் பேசுகிறேன்" என்றாள்.

எங்கள் வாழ்க்கையிலேயே உண்டான அந்த அனுபவத்தைப்பற்றி அப்போது நானும்தான் நினைத்துக்கொண்டேன்.

2

"**ஆ**ண் குழந்தை பிறந்துள்ளது; தாயும் சேயும் ஸௌக்யம்" என்று வந்த தந்தியைப்பார்த்து என்னை அறியாமலேயே பூரித்துப் போனேன்.

ஆனால் அந்த ஆனந்தம் அதிகநாள் நீடித்திருக்கக் கொடுத்து வைக்கவில்லைபோலும்; மூன்று மாதங்களுக்குப்பிறகு என் மனைவியிடமிருந்து வந்த கடிதம் சொல்லியது:—

"இப்போது நான் உங்களுக்குத் தெரியப் படுத்தப் போகும் சங்கதியை உங்கள் மனம் எவ்விதம் ஏற்குமோ, தெரியாது. அதைப் பற்றி என்னால் கற்பனை செய்துகொள்ளவும் முடியாது. ஆனால் என் உள்ளம் சுக்கல் சுக்கலாகச் சிதறிவிட்டது. எவ்வளவோ ஆசையுடன் இருந்தேன்; அவ்வளவும் வெம்பி வீணாகிவிட்டது. அளவின்றிப் பெருமைப்

பட்டுக்கொண்டிருந்தேன்; எல்லாம் பாதாளத்தில் போய், பதுங்கிக்கொண்டு விட்டது: அன்றொருநாள் நாமிருவரும் 'குழந்தையின் அழுகை'யைப்பற்றி விளையாட்டாகத் தர்க்கம் பேசியது என் நினைவில் பிதந்தபடியே இருக்கிறது. நீங்களும் ஞாபகப்படுத்திக்கொண்டு பாருங்கள்: என்ன சொன்னீர்கள்? நினைவுக்கு வருகிறதா? குழந்தை ஏன் பிறந்தவுடன் அழுகிறது? அது ஏன் சிரிக்கக்கூடாது? என்று கேட்டீர்களே? நான் என்ன பதில் சொன்னேன்? "நாளைக்கு உங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை அழப்போகிறதா? சிரிக்கப்போகிறதா? 'பார்ப்போம்' என்று பதில் சொன்னேனே?

"பிறந்தவுடன் குழந்தை அழுமென்றுதான் அன்று திடமாக நம்பினேன்; இயற்கையும் அதுதான்.

"ஆனால் நமக்குப் பிறந்துள்ள அழகான குழந்தை பிறந்ததுமுதல் இந்த நிமிஷம் வரையில் அழவுமில்லை; சிரிக்கவுமில்லை. பார்ப்பதற்கு என்னவோ வெகு லட்சணமாகத் தானிருக்கிறது, கண் திருஷ்டிகூடப் பட்டுவிடுமோ என்று நினைக்கும்படி. ஆனால் ஸத்தியமாகச் சொல்லுகிறேன்: பிறந்த நிமிஷம்முதல் இந்த மூன்று நான்கு மாதகாலமாக அது அழவுமில்லை; சிரிக்கவுமில்லை. எப்போதும் 'உம்'மென்று மொங்தைக் கலயமாகவே கிடக்கிறது; அடிக்கடி தூக்கிவாரிப்போடுகிறது. நாமாகப் பார்த்துக் குழந்தைக்கு ஆகாரம் கொடுத்தால்தான் உண்டு; கவனிக்காவிட்டாலும் 'சிவனே'யென்று தான் கிடக்கிறது. பார்க்க ரொம்ப பரிதாபகரமாய் இருக்கிறது. உடலில் கோளாறு ஒன்றுமில்லையென்றும் சொல்லுகிறார்கள். இரவு பகலாக எனக்கு இதே கவலை பிடுங்கித் தின்கிறது. என்ன பாவம் பண்ணி இந்த மாதிரி குழந்தை வந்து பிறந்ததோ தெரியவில்லை. போட்டது போட்டபடியே கிடக்கிறது. அழுதால்தான் குழந்தைக்குக் குடலும் வளரும். அத்துடன் உடலும் வளரும் என்று சொல்லுவார்கள். பிறந்தவுடனேயே அழவேண்டாமோ? பிணம் மாதிரி கிடக்கிறது" என்று எழுதியிருந்தாள்.

உள்ளம் எவ்வளவுக்கு ஏமாற்றம் அடைந்து அவ்வளவு தூரம் எழுதும்படி அவளைத் தூண்டியிருக்கவேண்டும் என்று நினைத்துப் பார்க்கையில் எனக்கே தாங்கத் தான் முடியவில்லை.

தலைப் பிரசவம்; என்னென்ன மனக்கோட்டைகள் கட்டியிருப்பாளோ? உலக நியதிக்கு விரோதமாக இருந்தால் வெறுப்புண்டாவது இயற்கைதானே? இல்லாவிட்டால் தன் முதல் குழந்தையை ஒரு தாய், பிணம் என்ற சொல்லால் குறிக்க அவள் மனம் இடந்தருமா?

குழந்தையைப் பார்த்துவர நானும் போயிருந்தேன்.

ஒரே வார்த்தையில், "நானும்தான் ஏமாந்துவிட்டேன்."

நிஜமாகவே கண்ணைக் கவரத்தக்க வனப்புடன்தான் குழந்தை விளங்கியது.

ஆயினும்—வீட்டிலே எப்போதும் சாவைப் போன்ற நிசப்தம் தான். உள்ளம் உடைந்து போன என் மனைவிதான் விசித்து விசித்து அழுதாள்.

3

நாளடைவிலே குழந்தை வளர்ந்து வரலாயிற்று.

எத்தகைய ஊனம் இருந்தால் தான் என்ன? பெற்றமனம் பாறையாகி விடுமா?

வேளைக்குத் தக்கபடி ஆகாரம் கொடுத்து அதன் உடலை வளர்ப்பதிலுள்ள சிரத்தை மட்டும் தாய்க்குக் குறையவேயில்லை.

அதிசயிக்கத் தக்க விதத்தில் குழந்தை வளர்ந்து வந்தது. பிறவியே அதிசயப்பிறவி தானே?

அநேகமாகக் கண்களை மூடியபடி எப்போதும் தூங்கிக்கொண்டே கிடக்கும். தூக்கத்தினிடையே திடுக்கிடும்; தூக்கிவாரிப்போடும்; கண்ணை விழித்து எங்கேயோ—எப்படியோ பார்க்கும். பயமென்று தெளிவாகத் தெரிந்தது; ஆனால் ஏன் பயம்? எதற்காகப் பயம்? அந்தப் பயம் எப்போது எவ்விதம் ஏற்பட்டது? பயத்தால் வீரிட்டு அலறவேண்டுமே? ஏன் இல்லை? குரலே இல்லையா? ஊமைக் குழந்தையா? செவிடும் சேர்ந்ததா? உலக உணர்ச்சியே தோன்றாமல் பிறந்து விட்டதா? உயிருள்ள வெறும் ஜடப் பொருளைப்போன்றதா?......அல்லது ஏதாவது வியாதியா? உடலைப் பொறுத்த மட்டில் ஒருவிதமான குறைவும் தென்படவேயில்லை.

யாருக்கும் அதைப்பற்றி ஒன்றும் புரியவுமில்லை. மந்திரம்—தந்திரம் ஒன்றுக்கும் கட்டுப்படாததாகவும் தோன்றியது.

குழந்தையின் அழுகை பொறுக்கமுடியாத ஒரு வேதனை—என்று ஒரு சமயம் நானே சொல்லியிருக்கிறேன்.

ஆனால் அதே அழுகைக்காக இப்போது நாங்கள் ஏங்கிய ஏக்கம்! பொருமிய பொருமல்! வார்த்தைகளைக் கொண்டு எங்கள்

டால்டாவில் தயாரித்த
ஜிலேபிகளை குழந்தைகள்
மிகவும் விரும்புகிறார்கள்!
2 கப் மைதாமாவில் தண்ணீர் ஊற்றி
பிசைந்து நெகிழச்செய்து கொள்ள
வும். பிசைந்தமாவை மூடி இரண்டு
தினங்கள் வைத்திருக்கவும். ½ பவு
ண்டு சர்க்கரையில் நீர்க்க பாகுதயா
ரித்து அதில் ½ தேக்கரண்டி குங்குமப்
பூவும் சில சொட்டுகள் பன்னீரும்
சேர்த்துக்கொள்ளவும். பிசைந்த மா
வில் 1 தேக்கரண்டி தயிர்விட்டு நன்
ருக கலந்துகொள்ளவும். கலவை
யை ¼ அங்குலம் குறுக்களவுள்ள
துவாரம் வழியாக ஊற்றவும். தகரப்
போணியில் அல்லது உலர்ந்த கொட்
டாங்கச்சியில் துவாரம் செய்து
இதற்காக உபயோகிக்கலாம். டால்
டாவை குழிவுகுறைந்த வாணலியில்
நன்ருக சூடாக்கி மாவை வட்ட வட்
டமாக பிழிந்து வறுத்தெடுக்கவும்.
பிறகு சிறு சூடான பாகில் போடவும்.
சிலமணி நேரம் ஊறின பிறகு ஜிலே
பிகளை அப்புறப்படுத்தி நல்லகாகிதத்
தில் பரப்பி உலரவைக்கவும்.
போஷாக்குகளை இழக்காமல்
காய்கறிகளை சமைப்பது
எப்படி?
இலவசமான ஆலோசனை
களுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானுலும்—
எழுதுங்கள்!
தி டால்டா
அட்வைஸரி
ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1
HVM. 95-23 TM
DALDA
VANASPATI

நெஞ்சின் துயரத்தை வெளிப்படுத்தவே முடியாது.

என் மனைவி நடைப் பிணமாகிவிட்டாள். அருகில் எங்கேயாவது குழந்தை அழும் சப்தம் கேட்டால் தன் குழந்தைதான் அழத் தொடங்கிவிட்டதோ என்று மனப் பிராந்தியுடன் ஓடிப்போய்ப்பார்ப்பாள்; உயிர்ப்பிணமாகவே அது கிடப்பதுகண்டு ஓய்ந்துபோய்த் திரும்புவாள். தெருவில் மற்றக் குழந்தைகள் ஆடிப்பாடிக் கூச்சலிட்டு மகிழ்வதைக் கண்டு அப்படியே மலைத்து நிற்பாள். அவள் வேண்டிக் கொள்ளாத தெய்வமில்லை; போகாத கோவில் பாக்கியில்லை. கடைசியில் ஒன்றுமே பற்றில்லாமல் வாழ்வே வெறுத்துப்போய் மனம் சலித்துவிட்டாள்.

எனக்கும் வாழ்வதாகவே தோன்றவில்லை.

அந்தமாதிரி ஸந்தர்ப்பத்தில்தான், ஒரு நாள், முற்றிலும் எதிர்பாராதவிதத்தில், என் பால்ய நண்பன் பாலனை நடுத்தெருவில் சந்தித்துத் திகைத்தேன்.

"ஏண்டா பிரும்மஹத்தி! என்னைக்கூட மறந்துவிட்டாயா நீ?" என்று அன்புடன் விசாரித்தான்.

அவன் என்னைக் 'கொலை பாதகமே' என்று அழைத்திருந்தால்கூட அப்போதைய மன நிலையில் நான் அதை ஒப்புக்கொண்டு தான் இருப்பேன்,

"இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறாய் பாலா? உன்னைப் பார்த்துப் பல வருஷங்கள் ஆகிவிட்டனவே?" என்றேன்.

"நான் இப்போது பெரிய மனஸ் தத்துவ டாக்டர்டா! தெரியுமா? லேசாக நினைத்து விடாதே!" என்று பெருமையுடன் பேசிக்கொண்டான்.

"மனஸ் தத்துவ டாக்டரா நீ? அப்படியானால் குழந்தைகளின் மனப் பண்பையும் பற்றி உனக்குத் தெரியுமோ?" என்று ஏதோ கேட்டுவைத்தேன்.

"உன் மனசே இப்போது இருக்கவேண்டிய நிலையில் இருக்கவில்லைபோலிருக்கிறதே? என்ன சங்கதி, சொல்லு?" என்று கேட்டான்.

என் குழந்தையின் விஷயமனைத்தையும் அவனுக்கு விவரமாகத் தெரிவித்தேன்.

குழந்தையையும், அதைப்பெற்ற தாயாரையும் பார்க்கவேண்டுமென்று சொல்லியவனாய், பாலன் என்னுடன் வீட்டை நோக்கி விரைந்து வந்தான்.

## 4

"நீங்கள் பிரஸவிப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னதாக ஏதேனும் ஒரு சம்பவம் நடந்து, அதனால் பயந்து போயிருக்கிறீர்களா?" என்று பாலன் என் மனைவியை வினவினான்.

"அப்படியொன்றுமே நடக்கவில்லையே?" என்று அவள் பதில் சொன்னாள்.

"நன்றாக யோசித்து நினைவு படுத்திப் பாருங்கள்?" என்று பாலன் மேலும் வற்புறுத்தினான்.

அவள் சற்றே நிதானித்துப் பார்த்தாள்.

"ஆமாம்; இப்போதுதான் நினைவுக்கு வருகிறது; பிரஸவிக்க இரண்டு வாரங்கள் முந்தி ஒன்று நடந்தது: அதிகாலையில் நான்கு மணி சுமாருக்கு எழுந்து கிணற்றடிக்குப் போனேன்......"

"தனியாகத்தான் போனீர்களா? கூட யாராவது துணைக்கு வந்தார்களா?" என்று குறுக்கிட்டான் பாலன்.

"பத்தடி தூரம்தானே, துணை தேடவில்லை; தனியாகத்தான் போனேன்; பரம அமைதியான வேளையாக இருந்தது; கொஞ்சமும் எதிர்பார்க்காத ஸமயத்தில், அமானுஷ்யமான குரலில், திடீரென்று, ஏதோ ஒன்று கோரமான குரலில் கத்தியது கேட்டது. அதுவும் எனக்கு வெகு ஸமீபத்திலேயே ஒலித்தது; அப்படியே பதறிப் போய்விட்டேன். என்னவென்று நிதானிப்பதற்குள் அடுத்தடுத்து, அதேமாதிரி, பயங்கரமாய்க் கத்தியது. நெஞ்சு உலர்ந்து, நாக்கு வறண்டு ஓட்டமாய் ஓடித் தூங்கிக்கொண்டிருந்த என் அம்மாவிடம் போய் அவளை இறுகக் கட்டிக் கொண்டுவிட்டேன். அயர்ந்த நித்திரையிலிருந்த அவளே தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு அலறிவிட்டாள். அந்த விதமாய் அவளைப் பற்றிக்கொண்டிருந்திருக்கிறேன். என் உடலெல்லாம் கட்டுமீறிப் பதற, 'அம்மா! கொல்லைப்புறம் என்னமோ கத்தறதே!' என்று சொல்லமாட்டாமல் உளறினேன். அப்புறம் இருவருமாய் விளக்கை எடுத்துக்கொண்டு மீண்டும் கிணற்றடிக்குப் போய்க் கவனித்தோம். அப்போதும் என் தேகம் கட்டுமீறி நடுங்கிக்கொண்டுதானிருந்தது. சில நிமிஷங்களுக்குள்ளேயே மறுபடியும் அதே சப்தம் வந்தது. உயிர் போகும் தறுவாயில் ஏதோ அழுவதைப் போலவே இருந்தது. கிணற்றுக்குள்ளே தண்ணீர் அடிபடும் ஓசையும் 'சளக்-சளக்'கென்று கேட்டது. என்னைவிட அம்மா எவ்வளவோ தைரியசாலிதான்; விளக்கின்

ஒளியைக்கொண்டு கிணற்றுக்குள்ளே நோக்கினாள்: பார்த்தால் பூனை ஒன்று தவறிப் போய்க் கிணற்றில் விழுந்து உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தது. அப்புறம் யாரோ புருஷர்கள் வந்து பூனையை உயிருடன் வெளியில் எடுத்து விட்டுவிட்டார்கள். 'செத்தேன் பிழைத்தேன்' என்று அது ஓடியதைப் பார்த்ததும் தான் எனக்கும் கூண்டில் உயிர் வந்தது''—என்று சொல்லி முடித்தாள் என் மனைவி.

சம்பவத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவள் உடலில் புல்லரித்ததாக உணர்ந்தேன்.

பாலனின் முகத்திலே வெற்றிக்களை கூத்தாடியது; உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

''பூரண கர்ப்பிணியாக இருந்த நீங்கள் பயந்து விட்டதன் காரணமாக



உங்கள் வயிற்றுச் சிசுவும் பயந்து விட்டது. வெளியிட்டுச் சொல்ல முடியாத உங்கள் உணர்ச்சி உங்கள் குழந்தையின் தொண்டையை அடைத்துவிட்டது" என்று அவன் சொன்னான்.

"சிகிச்சை உண்டா?" என்று நாங்கள் இருவரும் ஏக காலத்தில் ஆவலுடன் அவனை வினவினோம்.

"ஒரே வழிதான் உண்டு; ஆனால் அதன் மூலம் ஒரே நொடியில் நிவர்த்தி ஏற்பட்டாலும் ஏற்பட்டு விடும்—அல்லது குழந்தையின் உயிருக்கே ஹானி வந்தாலும் வரலாம்—உங்கள் மன உறுதியின்பேரில் தான் பரீட்சையைத் தொடங்கவேண்டும்" என்றான் எங்களைப் பார்த்துக் கொண்டே.

குழந்தை பிழைத்தால் குரலோடு இருக்கட்டும்; இல்லாவிட்டால்—இந்தத் தர்ம சங்கட நிலையிலிருந்து ஒரே அடியாகப் போய் விடுவதே நல்லதென்று எனக்குத் தோன்றியதுபோல் அவளும் நினைத்திருக்க வேண்டும்; என்னையும் முந்திக்கொண்டு ஸம்மதம் தெரிவித்துவிட்டாள்.

பாலன் கண்களை மூடிக்கொண்டிருந்த குழந்தையின் அருகே சென்றான். எங்களைப் பார்த்து நிசப்தமாய் இருக்கும்படி சமிக்ஞை பண்ணினான்.

'என்ன செய்யப் போகிறானோ' என்ற அபரிமிதமான ஆவலுடன் கவனித்துக் கொண்டிருந்தோம்.

இரவு வேளையானபடியால் வீட்டிற்கு வெளியிலும் எங்கும் நிசப்தமே நிலவி நின்றது.

குழந்தையின் காதருகிலே வாயை வைத்துக்கொண்டு பாலன் சற்றே உரத்த குரலில் பூனை கத்துவதைப்போலவே சப்தித்து உறுமினான்.

குழந்தைக்குத் தூக்கி வாரிப்போட்டதைக் கண்டோம்; கூடவே அதன் உடல் சிலிர்த்ததையும் பார்த்தோம்.

பாலன் அவசரமாக எங்கள் பக்கம் வந்தான்; மெதுவான குரலில், "உங்கள் இருவருக்கும் மனோ தைரியமும் உறுதியும் இல்லையேல் நீங்களும் இங்கு நிற்காமல், வெளியில் போய்விடுவது நல்லது; குழந்தையின் நன்மைக்காகவும் உங்கள் நன்மைக்காகவும் சொல்லுகிறேன்; என்னை நம்பி, போய்விடுங்கள்" என்று எச்சரித்தான்.

நான் என் மனைவியை நோக்கினேன்! அவளுக்குத் தன்னைப் பற்றியவரை தைரியம் இல்லைபோலும்! "அறைக்கு வெளியேபோய் நிற்கலாம், வாருங்கள்" என்று என்னையும் அவளுக்குத் துணையாக அழைத்தாள்.

கடவுளின்மீது பாரத்தைப் போட்டுவிட்டு அப்பால் நகர்ந்தோம்.

பாலன் அறைக் கதவை மூடிக்கொண்டான்.

நெஞ்சு படபடக்க வெளியில் நின்றோம்.

நிசப்தம், நிசப்தம், நிசப்தம்! மயானத்து அமைதியே நிலவுவதுபோல் உணர்ந்தோம். எங்கள் நெஞ்சு அடித்துக்கொள்வது பலமாகக் கேட்டது.

இரண்டு நிமிஷங்கள்தான் ஆகியிருக்கும்.

அறைக்குள்ளிருந்து பெருத்த சப்தத்துடன் மகா கோரமான ஒரு அலறல் உச்சஸ்தாயியில் கிரீச்சிட்டுக்கொண்டு வெளிப்பட்டது.

நானே கதிகலங்கி நின்றுவிட்டேன். அதென்ன அவ்வளவு கோரம்? வெறி கொண்ட யானையின் பிளிறலா? அல்லது பயங்கர ஜந்து ஒன்றின் உறுமலா? பூனையா? புலியா? பிசாசா? அந்தக் குரலில் எல்லாம் இருந்தன.

பாலனா அப்படி அலறுகிறான்? அவனே அரண்டுபோய்த் தான் அப்படிக் கூவுகிறானா?

ஒரு நிமிஷ நேரத்திற்குத் தொடர்ந்து அது கேட்டுக்கொண்டேயிருந்தது.

என் மனைவி என்னைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டிருப்பதிலிருந்து, பூனை கிணற்றில் விழுந்து கத்திய சமயம் அவள் தன் அம்மாவைக் கட்டியிருந்த விதத்தை ஒருவாறு உணர்ந்தேன்.

அந்தப் பயங்கரமான குரல் உச்சஸ்தாயியிலேயே திடீரென்று அறுந்துவிட்டதுபோல் நின்றுவிட்டது.

அதே கணத்திலே குழந்தை திடீரென்று வீரிட்டு அழுதது. அடைபட்டிருந்த குரலொலி பீறிட்டுக்கொண்டு வெளிக்கிளம்பி விட்டதுபோலே வீரிட்டு அழத் தொடங்கி விட்டது.

அறைக் கதவை விரியத் திறந்துவிட்டு அங்கே புன்னகையுடன் அமைதியாக நின்று கொண்டிருந்தான் பாலன்.

"கடவுள் காப்பாற்றிவிட்டார்!" என்று அவனே நன்றி உணர்ச்சி பொங்கும் குரலில் சொன்னான்.

குழந்தையின் பக்கம் திரும்பினோம்.

கைகளையும், கால்களையும் "விண்விண்" ணென்று உதைத்துக்கொண்டு பிரமாதமாக வீரிட்டு அழுதது; அமைதியின்றிப் படுக்கையிலே புரண்டு புரண்டு நெளிந்தது; வெள்ளக்காடான வியர்வையில் மிதந்தது.

"பயம் வேண்டாம்; நன்றாக அழுது தீர்க்கட்டும்; அப்புறம் தானாகவே ஓய்ந்துவிடும். இனிமேல் அடிக்கடி அதன் அழுகையை நீங்கள் கேட்கவேண்டியவர்களே!" என்றான் பாலன்.

குழந்தை வீரிட்டு அழுதுகொண்டேயிருந்தது.

# டில்லிமாநகரில் சரணார்த்திகள்

சாரி

பிரியமுள்ள——க்கு

பிரயாணம் முடிந்து நான் ஊர் வந்து சேர்ந்து சில தினங்கள் ஆகின்றன. பிரயாணக் கடிதங்களில் கடைசியான இதில் டில்லிமாநகரில் நடைபெறும் இயக்கங்களில் ஒன்றான சரணார்த்திகளின் உதவி வேலைகளை நான் தெரிந்துகொண்ட மட்டில் உனக்குச் சொல்ல விரும்புகிறேன்.

டில்லியை விட்டுக் கிளம்பி கான்பூர், பாட்னா வழியாகக் கல்கத்தா வந்து, சில நாட்கள் அங்கே தங்கி, மதராஸை அடைந்தேன். அந்தச் சமயத்தில்தான் சர்க்கரைப் பஞ்சம் ஆரம்பித்தது. எங்கும் ஒரே கூக்குரல். கல்கத்தாவிலோ அனேக இடங்களில் கடைகளில் புகுந்து சர்க்கரையைக் கொள்ளையடித்து வீணாக்கி, கலாட்டா செய்தார்கள். இவ்வளவுக்கும், அந்த நகரத்தில் தெரு மூலை தோறும் ஒருவர்க்கு 2½ சேர் சர்க்கரை வீதம் கொடுக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் பார்த்த எனக்குத் தென்னிந்தியராகிய நமக்கு சகிப்புத் தன்மை, பொறுமை அதிகம் என்று தோன்றிற்று. நான் வந்தபோது சென்னையிலும் நம் ஊரிலும் சர்க்கரையே கிடையாது. ஆனால் நான் சந்தித்த ஒவ்வொருவரும் "இதற்கு என்ன செய்கிறது? கள்ள மார்க்கெட்டில் வாங்குவதா? நாங்கள் எல்லாரும் வெல்லம் போட்ட காப்பி குடிக்கப் பழக்கிக் கொண்டோம்" என்றே சொன்னார்கள்.

ஊருக்கு வந்ததும்——ஹோட்டலுக்கு அனுப்பி, காப்பி வாங்கி வரச் சொன்னேன். "இங்கே வெல்லம் போட்ட காப்பிதான் இருக்கிறது, தம்பீ; அவர்களுக்கு அது பிடிக்காது. போடாமலே தருகிறேன்; அவர்களிடம் சர்க்கரை இருக்கும், போட்டுச் சாப்பிடட்டும்," என்று சொல்லி ஹோட்டல்காரர் இனிப்பில்லாத காப்பியை அனுப்பினார். என்னிடமும் சர்க்கரை கிடையாது; பேசாமல் கசக்கும் காப்பியை அந்த வேளைக்குக் குடித்தேன். இம் மனப் பான்மையைக் கல்கத்தாவில் நான் காண முடியவில்லை.

இரண்டு முறை அரிசிக் கார்டுகளுக்குச் சர்க்கரை கொடுத்தார்கள்; சர்க்கரையே உபயோகியாத கிராமத்து ஜனங்களிடமிருந்து கார்டுகளை கள்ள மார்க்கெட்டு விலைக்கு வாங்கி, அதிக அளவு சர்க்கரையை அனேகர் பெற்றுக் கொண்டார்கள்; கள்ள மார்க்கெட்டுச் சர்க்கரையும் நடமாடிக் கொண்டுதான் இருக்கிறது. இந்தக் கேட்டிற்கு எப்பொழுது விமோசனம்?

நிற்க, டில்லியில் நான் சென்று பார்வையிட்ட ஸ்தாபனங்களில் நிரந்தரமாய் நடைபெறும் (School of Social Work) போன்றவை பல—படித்துப் பட்டம் பெற்ற முப்பது பெண்களுக்கு அங்கே சமூகத் தொண்டில் பயிற்சி அளிக்கிறார்கள். இந்தப் பயிற்சி முடிந்து இரண்டு வருஷங்களில் வெளியில் அனுப்பப்படும் பெண்கள் உத்யோக முறையிலும், அல்லாமலும் அநேக நற் காரியங்களில் ஈடுபடுகின்றனர். "அன்பின் மூலம் ஒருவருக்கொருவர் பணி செய்வோம்" என்பதை நோக்கமாய்க் கொண்ட நாஷனல் Y. W. C. A. சங்கத்தினரால் இந்தப் பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு, டில்லி சர்வகலாசாலையோடும் இணைக்கப் பட்டுள்ளது. சமூக தத்துவ சாத்திரம் அரசியல், சமூகப் பொருளாதாரம், குடும்பம், குழந்தை பராமரிப்பு இவை போன்ற உபயோகமான விஷயங்களில் பயிற்சியும் நேர் முகமான அனுபவமும் பெற வசதி அளிக்கப்படுகிறது.

சரணார்த்திகள் டில்லியில் வந்து குவிந்ததும், தேசிய சர்க்கார் அவர்களைக் கணக்கு எடுத்து, பிரித்து, குடி வைத்து,

வேலை தந்து, பண உதவி புரிந்து, இன்றளவிலும் செய்துவரும் அசாத்தியமான வேலைகளை நீயும் நானும் அறிவோமல்லவா? என்னதான் பத்திரிகையில் படித்தாலும் நேரில் பார்க்கும் அளவு இச்சாதனைகள் மனதிற்குத் தெளிவு படுவதில்லை. ஓரிரண்டு ஸ்தாபனங்கள் நடைபெறும் மாதிரிகளைக் கேளு.

1. புரானகிலா, சென்ட்ரல் ரிலீப் கமிட்டி (Welfare Centre).

2. கிங்ஸ்வே காம்பு (Kingsway Camp).

3. பால நிகேதன்.

4. ஸ்ரீமதி Mrs. பூரி அம்மையின் 'வராந்தா வகுப்பு'.

5. மற்றொரு அகதிகள் (Work shop). இவைகளில் எல்லாம் முக்யமாய்ப் பெண்களுக்கே உதவி அளிக்கப் படுகிறது. இவ்விடங்களில் நான் கண்ட வேலைச் சிறப்பை எழுதுவது எளிதல்ல.

பால நிகேதன் என் மனதை முற்றிலும் கவர்ந்த இடம். ஊர், பெயர், தாய் தந்தை யற்ற சரணார்த்திக் குழந்தைகள் சுமார் 250 பேரை இவ்விடத்தில் பரிபாலிக்கிறார்கள். 2 வயது பாலகன் முதல் 12 வயது வரை குழந்தைகள் இங்கே வசித்து உண்டு, உடுத்து, உறங்கி, பாடம் படித்து, ஒரு பெரிய குடும்பமாய் இருக்கிறார்கள். ஒரு டாக்டர் இதன் மேற்பார்வையாளர். கஸ்தூர்பா சேவிகைகள் சிலர் பாடம் கற்பித்து மற்ற உதவிகளும் புரிந்து குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள். பால நிகேதனில் குழந்தைகளின் ஆகாரம் தயாரிக்கப்படும் சமையல் அறையின் பரிசுத்தம் என் மனதை விட்டு அகலவில்லை. மூன்றே பிராயம் உள்ள ஒரு சிறுமியும் சிறுவனும், ராதா கிருஷ்ணனாகப் பாவித்து நடனம் ஆடிய அழகைத்தான் எவ்வாறு மறப்பது? தாய் தந்தை யில்லாமற் போனால் என்ன? இப்பரந்த உலகத்தின் எல்லையில்லாத அன்பு முழுவதும் இச் செல்வங்களுக்குச் சொந்தமாகவேண்டி யிருக்கையில் இவர்களுக்குக் குறைவென்ன என்று மனதில் நினைத்துக்கொண்டேன். சமூக ஊழியர்கள் பார்வைக்குள் அகப்படுமுன் இவ்வனாதைகள் என்னவெல்லாம் கஷ்டப் பட்டார்களோ என்று எண்ணும் போதோ, மனம் கசிந்து உருகிற்று.

அடுத்தபடியாக மிஸஸ். பூரி என்கிற ஒரு மிலிடெரி டாக்டரின் மனைவியார் ஏற்படுத்தியுள்ள சரணார்த்திப் பெண்கள் தையல் வகுப்பைக் குறிப்பிட வேண்டும். பெரிய பங்களாவில் வசிக்கும் சீமாட்டி தன் வீட்டு முன் தாழ்வாரத்தை எவ்வளவு நல்ல உபயோகத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மிஸஸ். பூரி நிரூபிக்கிறார்; அதோடு தங்கள் நேரத்தையும் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்!

அங்கே போனதும் நான் கண்டதென்ன? 6 அடி அகலம் 70 அடி நீளமான தாழ்வாரத்தில் நீள வரிசையில் 100 பெண்கள், சிறுமிகளும் வயதானவருமாக, உட்கார்ந்து ஏதோ தைத்துக் கொண்டு இருந்தார்கள். நடுவில் ஒரு மேஜை அருகே நின்று, ஆர்டர்கள் பதிவு செய்து, புதிய மாதிரிகள் வரைந்து கொடுத்து, புதுப் பெண்களைப் பதிவு செய்து ஒரு கணமும் என்னோடு வார்த்தையாடச் சமயம் கிடைக்காமல் வேலை செய்த பெண்மணி மிஸஸ் பூரி. ஒத்தாசைக்கு ஒரு சகோதரியும், சம்பளம் கொடுத்து அமர்த்தியுள்ள ஒரு பெண்ணும் கூட இருந்தார்கள். தினம் 6 மணி நேரம் வேலை நடக்கிறது.

இவர்கள் தைத்துக் குவித்த அருமையான உருப்படிகளைக் குறிப்பிட்ட கடைகளில் சரியான காலத்தில் சேர்ப்பது, மொத்தமாகத் துணியும் தையல் சாமான்களும் வாங்குவது, புதிய ஆர்டர்கள் கேட்டு வாங்குவது, சர்க்காரிடமிருந்து பண உதவி பெறுவது, கணக்கு வைப்பது, இவை போன்ற எண்ணற்ற காரியங்களை அந்த அம்மாள் தாமேசெய்கிறார். ஸ்தாபனத்தைச் சர்க்கார் உதவியுடன் கூட்டுறவு முறையில் நடத்துகிறார். ஒரு பெரிய இயந்திரசாலைபோல் இதை நடத்தும் பெண்மணியின் ஆற்றலையும், அன்றாடக் கூலிக்காக உட்கார்ந்து தைத்துத் தவம் புரியும் பெண் தெய்வங்களின் பொறுமையையும் கண்டு வியந்தேன்,

இதே ரீதியில் நடைபெறும் மற்றொரு சிறிய கார்யாலயத்தையும் சென்று பார்த்தேன். தையல் தவிர வயோதிக

ஸ்திரீகளுக்குக் காகிதப் பைகள் செய்யக் கற்றுக் கொடுத்து, தினம் ஒன்றுக்கு 1—0—0 வீதம் கூலி தருகிறார்கள். ஒரு பெண் 200, 300 பைகளை அளவுக்குத் தகுந்த மாதிரி, ஒரே தினத்தில் செய்கிறாள்.

புரானகிலாவில் நடக்கும் கார்கானாவிலோ நூற்றுக் கணக்கில் பெண்கள் தையல் வேலை செய்கிறார்கள். மிஷின்கள் மட்டும் இரண்டு டஜனுக்குமேல் உள்ளன.

இவற்றை யெல்லாம் கேட்கும்போது, இவ் எழுத்து வாசனையில்லாத இவ்வளவு பெண்களுக்குத் தையல் கற்பித்து வேலை வாங்குவது எப்படி, அவர்கள் கற்கவே வருஷக் கணக்கில் ஆகுமே, சர்க்காரும் உதவி புரியும் பெண்மணிகளும், இதை எவ்வாறு சமாளிக்கின்றனர் என்று தோன்றுகிறதல்லவா?

இந்த ஒரு விஷயத்தில் சரணார்த்திப் பெண்கள் அதிர்ஷ்ட சாலிகள். சர்க்காருக்காவது பொறுப்பு ஏற்கும் சமூக ஊழியர்க்காவது இந்தப் பெண்களுக்குத் தொழில் கற்பிக்கும் சிரமம் கிடையாது. பரம்பரையாக அற்புத அழகுள்ள தையல் வேலையை இந்தப் பெண்கள் கற்றிருக்கிறார்கள். இதனால் எளிதில் வேலை செய்து சம்பாதித்துப் பிழைக்கும் ஆற்றல் இவர்களுக்கு உள்ளது. சிந்தி அகதிப் பெண்கள், வயல்களில் வேலை செய்யும் போதுகூடப் பட்டாடையும், வெல்வெட்டும் அணிவது தேச வழக்கமாம்; ஆடைக்கும் அந்தஸ்திற்கும் சம்பந்தமே கிடையாதாம்.

தேசிய அரசாங்கம், சரணார்த்திகளின் இந்தத் தொழில் திறமையைச் சீக்கிரத்தில் தெரிந்துகொண்டு எண்ணற்ற நாரிஷாலாக்களை ஏற்படுத்தினர். முன்பு எழுதிய பிரகாரம், கூட்டுறவு முறையில் 20 பெண்களுக்கு ஒரு தையல் மிஷின் என்கிற ரீதியில் பெண்களாலேயே மேற்பார்வை பார்க்கப்பட்டு, இவை நடைபெறுகின்றன. ஒரு வருஷத்தில் 2000 தையல் மிஷின்கள் இவ்வாறு சர்க்காரால் விநியோகம் செய்யப்பட்டதென்று ஒரு ஸ்பெஷல் ஆபீசர் என்னிடம் சொன்னார்.

அவரை இந்தப் பெண்கள் தயாரிக்கும் ஆடைகளை வாங்குவது யார் என்று கேட்டேன். அவர் சிரித்தார். அகதிகளுக்கு வியாபாரத் தந்திரமே தெரிவதில்லையாம். ஒருவர் துணிக்கடை வைத்தால், அவர் கூட்டாளி தையற்காரர். இவர் அவரிடம் துணி வாங்கினால், பதிலுக்குத் தைத்துக் கொடுத்து விடுகிறார்! ஒரு பழக் கடைக்காரன் பசிக்கும்போதெல்லாம் பழங்களை எடுத்துச் சாப்பிடுவான். ஆம், இதை விற்றுவரும் காசைக் கொண்டு சாமான் வாங்கி, சமைத்து உண்பானேன்? வியாபாரம் தங்களுக்குள்ளாகவே நடக்கிறது.

இது தவிர, சரணார்த்திகளைக் குடியேற்ற ஒவ்வொரு அறை கொண்ட விடுதிகளை ஏராளமாய் உண்டாக்கி, மாதம் 10 ரூ. வாடகைக்குக் கொடுக்கிறார்கள். டில்லியில் வேலை செய்பவர்க்கு மாத்திரம் இவை வழங்கப்படுகின்றன. மற்றவர்க்கு நிலமோ, பொருளோ, பணமோ அவரவர் தேவைக்குத் தகுந்த பிரகாரம் கொடுத்து, முகாமில் இருந்து வெளியிடங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். 46 லக்ஷம் அகதிகளில் பெரும்பான்மையோர் இந்த முறையில் குடியேற்றப்பட்டு விட்டதாக நான் நினைக்கிறேன்.

அகதிகள், தங்களுடைய கஷ்டங்களுக்கிடையே மனம் சோராமல் தலை நிமிர்ந்து நிற்பது அவர்களுடைய ஒரு ஆர்வ குணம். நம் ஊரில், இந்த நிலைமையில் ஜனங்கள் உருகிப் போவார்கள்.

அகதிகள் சற்றுக் கர்வம் படைத்தவர்கள் என்றால்கூடப் பொருந்தும். முகாம்களிலோ, தெருக்களிலோ ஒரு பிச்சைக்காரனைக்கூடக் காணமுடியாது. ஒரு சிறு பெண், மற்றொரு குழந்தை வைத்து உண்ணும் மிட்டாயியை ஆவலோடு நோக்குகையில், ஒருவர் அவளுக்கு 2 அணா அளித்து மிட்டாயி வாங்கிக் கொள்ளுமாறு கூறினார். அந்தச் சிறுமி அதை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டாளே! நம் ஊர்களானால், சாலை நெடுகப்பிச்சைக்கார மயமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எந்தப் பெண்ணும் தான் ஏதாவது சம்பாதிக்க வேண்டும் என்கிற மனப்பான்மை கொண்டவளாக இருக்கிறாள்.

ஆணைப்போலப் பெண்களும் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள். சரணார்த்திகளைப் புதிதாய்க் குடியேற்றும் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஒரு கனிந்த மனம் வாய்ந்த உத்யோகஸ்தரிடம் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. சரணார்த்திகளை உய்விக்கும் தொண்டுக்குத் தற்சமயம் தம்மையே அர்ப்பணம் செய்துள்ள இவர் சில ரஸமான விஷயங்களைச் சொன்னார்.

ஆரம்பத்தில், தொண்டு செய்பவர்கள், பொறுமையும் பச்சாத்தாபமும் நிறைய உடையவராய் இருந்து, ஒவ்வொரு தனி ஆளையும் அவர் கஷ்டம் என்ன, சர்க்காரிடம் எம்மாதிரி உதவி கோருகிறார் என்றெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்வார்களாம். சில அகதிகள் துக்கத்தினால் பேசவே சக்தியில்லாமல் இருப்பார்கள். சிலர் மனம் சிதறிப்போய், கதை சொல்வார்களே தவிர, லேசில் தங்கள் தேவையைத் தெரிவிக்க மாட்டார்கள். உத்யோகஸ்தர்க்கு இதையெல்லாம் கேட்க அவகாசமெங்கே? இவ்வாறு காலம் கடத்தாமல், இப்போதெல்லாம் 2, 3 கேள்வி கேட்டுத் தெரிந்து, அவர்கள் தேவையைப் பதிவு செய்து அனுப்புகிறார்களாம்.

ஒரு பணக்காரப் பையன் படிப்பிற்காகச் சீமை சென்று இருக்கையில் பாகிஸ்தானத்து நெருப்பினால், தாய், தந்தை, வீடு வாசல், சகலமும் இழந்தான். ஊர் திரும்பி வந்தவன் கண்டது என்ன? அழுதான் புரண்டான். பைத்தியமே பிடித்துவிட்டது. மெள்ள மெள்ளத் தொண்டர் ஒருவரின் உதவியால் நிதானம் பெற்று, உத்தியோகத்தில் அமர்ந்தான். இப்பொழுது தொண்டரிடம் மாறாத நட்புக் கொண்டவனாக இருக்கிறான்.

ஆயிரம் ஜனங்கள் கொண்ட ஒரு கூட்டம் ஒரு முகாமுக்கு வந்தது. சீக்கிரத்தில் சேம்பேறிகள், வேலைக்கு லாயக்கில்லாதவர் என்று பெயர் எடுத்து ஒரு

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்கரேயின் பாலாம்ருதம்



K.T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

முகாமிலும் வேண்டாதவராகி விட்டனர். உத்யோகஸ்தர் அவர்களிடையே பேசுகையில், "இம்மாதிரி பெயர் எடுத்தது வெட்கும் காரியமில்லையா? போகிறது, உங்களுக்குக் 'கார்' ஓட்டத் தெரியுமா?" என்ருர். தெரியாது என்ற பதில் வந்தது.

"தையற்காரர் யாரும் உண்டா?"

"கொத்து வேலை?"

"தச்சு வேலை?"

இல்லை யென்கிற பதிலே கிடைத்தது. ஒரு அகதிக்குக் கோபம்வந்து, "நாங்கள் மேளக்காரர். நாயனம் ஊதத்தான் எங்களுக்குத் தெரியும்." என்று சீறினர். "அச்சா, ஒரு தொழிலாவது நீங்கள் கற்றிருப்பது விசேஷம்தான். ஆனால் உங்கள் சங்கீதத்தை இங்கே கேட்பவர் யார்?" என்று உத்யோகஸ்தர் கேட்கவும் அவர்கள் வெட்கிப்போய், "ஐயா, ஏதாவது தொழில் சொல்லிக் கொடுங்கள்; நாங்கள் செய்கிறோம்" என்று உறுதி கூறினர். அவர்களைக் கட்டிட வேலையில் போட்டதில், ஒரே மாதத்தில் சிறந்த தொழிலாளிகளாகி விட்டனர். அவர்கள் வேலை புரிந்த இடத்தில் அவர்களை எங்கும் மாற்றக் கூடாதென்று கேட்குமளவில் திறமைசாலிகளானுர்கள்.

தட்டான் வேலை தெரிந்த இன்னெரு கூட்டத்தார் யந்திரவேலை நுட்பங்களைப் புரிந்து கொண்டு, இவரைவிடத் திறமையுள்ளவர் கிடைப்பது கடினம் எனப் பெயர் வாங்கினர்கள்.

இப்படிச் சம்பாதிக்கிருர்களே, ஏதாவது பணம் சேர்க்கிருர்களா? கிடையவே கிடையாது. 100 ரூ வில் 99 ரூபாயை உடனேயே செலவு செய்து விடுகிருர்கள்; சேமிப்பு என்பதையே அறியாதவர்கள் இவர்கள்.

சர்க்கார் அகதிகளுக்குச் செய்யும் உதவிகளை நான் கண்ணுற்றவரை, உனக்குச் சிறிது சொன்னேன். இதல்லாமல் பொது மக்கள் அநேகம் பேர் இந்த இயக்கங்களில் ஓர் அளவு ஈடுபட்டு உதவி புரிகின்றனர். ஓர் நண்பர் தம் வீட்டில் வேலை செய்யும் அகதிப் பெண்ணுக்கு, தம் சினேகிதர் வீட்டு வேலைகளையும் சம்பாதித்துக் கொடுத்து, அவள் வருவாய் அதிகரிக்க ஏற்பாடு செய்கிருர்; அரிசி புடைத்து, மாவு அரைத்து, இம்மாதிரி-

வடக்கிந்திய பட்டணங்களில் உத்யோகஸ்தர் வீட்டுப் பின்புறம் உள்ள அறைகளில் (Godowns) அகதிகள் குடும்பத்தோடு குடியேறியிருப்பதைக் காணலாம். ஆண்களுக்கு வேலை தேடிக் கொடுத்தும், பெண்களுக்குத் தையல் வேலை தந்தும், இலவசக் குடியிருப்பு வசதி ஏற்படுத்தியும் உதவுகிருர்கள். அகதிகளை ஸ்தாபிப்பதில் பொதுமக்களும் சர்க்காருடன் ஒத்துழைப்பது அவசியம், அல்லவா?

அஜ்மீரில் ஒரு கம்பீரமான சிந்திக்காரரை மூட்டையோடு, சைகிளில் காணலாம். அவர் பெயர் சேவக்ராம். கராச்சியில் அவருடைய பெரிய ஷாப்பில் தினம் ஒன்றுக்கு 1000 ரூ. வியாபாரம் நடக்குமாம். இன்ருே? அவர் ஒரு அகதி. சாமான்களை விலைக்கு வாங்கி, சைகிளில் எடுத்து வந்து உங்களிடம் வியாபாரம் செய்கிருர். குண்டூசி வேண்டுமா? சோப்பா? நூலா? சீமை சென்டு சீஸாவா? துணிமணியா? எது வேண்டும்? சீப்ஜாக் இடம் சொல்லுங்கள்; மறு நாட்காலையில் உங்கள் வீடு தேடி அந்தச் சாமான் வந்து நிற்கும். ஆம், அவர் தம்முடைய பெயரை (Cheap Jack) என்று வைத்துக்கொண்டு இருக்கிருர். சாமான்கள் 'சீப்' ஆக இருக்கிறதோ என்று கேட்கிருயோ? அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஒரு அகதியின் மனே தைரியத்தை எடுத்துக்காட்ட, சீப் ஜாக்கை உதாரணமாய்க் கொள்ளலாம்.

பிரிய——சரணார்த்திகளைக் குறித்தே இவ்வளவு நீண்ட கடிதம் எழுதிவிட்டதை மன்னிப்பாய். கண்ணுள்ளவர் பார்க்கட்டும் என்கிற மாதிரி டில்லியைச் சூழ்ந்துள்ள இந்த முகாம்கள் கண்ணைக் குத்துகின்றனவே. சாதா பைஜாமா அணிந்த சிக்கியப் பெண்களும், கொசுவம் உள்ள பைஜாமா அணிந்த பஞ்சாபிப் பெண்களும் குவிந்து கிடக்கும் டில்லியில் இவற்றைக் கவனியாமல் என்ன செய்வது? பாகிஸ்தானத்து நரக வாயிலின்

நெருப்பிலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பீதியோடு ஓடி, தப்பிப் பிழைத்துள்ள இவர்கள் ஒவ்வொருவருடைய சோகக் கதைகளையும் கேட்டு, பேச்சளவிலாவது ஆறுதல் அளிக்க மனம் துடிக்கின்றதே.

வட இந்தியாவில் நடைபெறும் இயக்கங்களைத் தென்னிந்தியாவில் உள்ள நமக்கு எடுத்துக் கூறுவார் இல்லை. பத்திரிகைகளில் வெளிவரும் சிறு விஷயங்களைப் படித்தால் மட்டும் போதாது. "இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்-சிலர் பலர் நோலாதவர்" என்ற திருக்குறள் ஒப்பாக எவ்வளவோ பெரிய ஸ்தாபனங்கள் ஒரு 'சிலரின் ஊக்கத்தாலும், தவத்தாலுமே குன்றாத பண்பைப் பெற்று விளங்குவதை நான் கண்டேன். உழைப்பவர்க்குள் ஏற்றத்தாழ்வு ஒன்றும் கிடையாது. "எல்லாரும் ஒரு நிகர்" என்ற கொள்கை ஸ்திரமாக இருக்கின்றது. உழைப்பவர் ஒன்று சேர்ந்து ஒரு குடும்பத்தைப் பாதுகாப்பது போல், தங்கள் ஸ்தாபனங்கள், சங்கங்களைப் பாதுகாக்கின்றனர்.

இம்மாதிரி பரந்த பெரிய ஸ்தாபனங்களை நிறுவி வேலை செய்யாவிட்டாலும் தென்னிந்தியாவில் சிறு இயக்கங்கள் தொடங்கி நம் கண்முன், நம் இடத்தில் நம்மாலியன்ற ஒத்துழைப்பு வழிகளையும் முறைகளையும் கையாடி, சிறிய முயற்சிகளைப் பயன்படச் செய்யவேண்டும். இது நூற்றுண்டுகளாக மேற்கத்திய நாடுகளில் நடந்துவரும் சங்க நிர்வாக முறை என்பதை நீ அறிவாய்.

Co-operation, What is it but Christianity என்று கூறிய ஜப்பானிய காந்தி என்று பிரசித்திபெற்ற காகவா அவர்களின் கொள்கைக்கு ஒப்பானது. இக் கொள்கை நம் நாட்டு உபதேசத்திற்கும் பொருந்தியது என்பது விளங்கும். ஒன்று சேர்ந்து நாம் படிப்போம், ஒன்று சேர்ந்து ஊக்கமது கைவிடோம் என்ற உபநிஷத்து வாக்கியங்களை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்வோமாக.

* * *

**போ**தும்! இத்துடன் இதை நிறுத்திப் பாட்னவுக்குச் செல்வோம். பாடலிபுத்ரா என்கிற இந்த நகரம் கங்கைக்கும் யமுனைக்கும் நடுவே 10 மைல் நீளத்திற்கும் 3 மைல் அகலத்திற்குமாக அமைந்திருக்கிறது. இந்த ஊர் எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இவ்வளவு அசுத்தமான நகரம் இந்தியாவில் வேறு எங்கும் இராதென்று நினைக்கிறேன்.

தெருக்களில் ஆறடி அகலத்திற்கு இருபுறமும் கால்வாய் மாதிரி சாக்கடை நீர் ஓடுகிறது. சதுப்பு நிலத்தில் இருப்பதால் ஈரமும் கொசுக் கடியும் அசாத்தியம். பீஹார் ஏழைப் பிரதேசமல்லவா? இந்தக் குறைகள் என்றைக்கு நிவர்த்தியாகுமோ.

புது காபிடல் (Capital) என்கிற பகுதி புது டில்லிபோல் தோன்றுகிறது. இவ்வூரின் விசேஷங்களில் ஒன்ருன கோல்கர் எனும் கட்டிடம் நூறு அடி உயரத்திற்கு, ஒரு தேங்காய் மூடியைக் கவிழ்த்த வட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆதியில், இதனுள்ளே பஞ்சத்தை எதிர்நோக்கித் தானியம் சேமிப்பார்களாம். அக்காலத்து மக்களின் முன் யோசனையைப் பாரு. சேமிக்கத் தகுந்த இடமின்றி, கடைகளின் வாயிலிலும், ரயிலடியிலும், மூட்டை மூட்டையாய்த் தானியங்கள் கெட்டுப்போகும் செய்தியைப் பத்திரிகைகளில் இப்பொழுது படிக்கிருேம். இந்தக் கட்டிடத்திற்கு நாற்புறமும் வாயிலும் மேலே செல்லும் வளைவு படிக்கட்டும் இருக்கின்றன. சாதாரண செங்கல் காரையால் நிறுவப்பட்ட இந்த கோல்கர் என் மனதைக் கவர்ந்தது.

இந்நகரத்துக் கண்காட்சிச் சாலையில் 150 லக்ஷம் வருஷங்களுக்குமுன் மரமாக இருந்து, பூமிக்குள் கல்லாக மாறிய, ஒரு மரத்தை ஒரு தாழ்வாரத்தில் வைத்திருக்கிருர்கள். 53 அடி உயரம். மரம் போலவே கிளைகள் இருந்த தடங்கள், வேர்ப் பக்கத்துக் கனம், மேல் பட்டையின் கடினத் தோற்றம் பெற்றுள்ள தாயினும், இது கல்! பூமிக்குள் தங்கி Fossilise ஆகிவிட்டதாம். அசன்சால் என்னுமிடத்தில் ரயில் பாதை போடும் போது, வெட்டி எடுக்கப் பட்டதாக அங்கே குறிப்பிட்டிருந்தது.

இந்த அதிசயத்தைக் கண்ணுற்ற பிறகு, பழைய கதைகளில், "நீ கல்லாய்ச் சமைந்துபோகக் கடவாய் என்று சபித்தவுடன் கல்லாக மாறிப்போனாள்" என்று சொல்வதைச் சிரிக்காமல் நிச்சயமாக நம்பலாம் என்று தோன்றிற்று. விக்ஞானத்தினால் தெளிவாக்கப்பட்ட Fossilisation என்கிற சக்தியை அக்காலத்தில் இயற்கையை வெல்லும் ஞானிகள் தங்களுடைய யோகத்தினால் பெற்றிருக்கக் கூடும் அல்லவா?

இதேமாதிரி இன்னொரு மரத்தைப் பிற்பாடு கல்கத்தா கண்காட்சிச் சாலையில் பார்த்தேன். பாட்னாவில் காட்டு மனிதர்களின் (Aborginal Tribes) உடலைப் பக்குவப் படுத்தி நிற்க வைத்திருந்தார்கள். சோடா நாகபுரி சம பூமியில் வசித்த, இவர்களிடையே தொண்டு புரிந்த வெரியர் எல்வின் என்கிற ஆங்கிலேயரைப்பற்றி நீ படித்திருக்கிறாய் அல்லவா?

இரண்டு வருடத்திற்குப் பிறகு கல்கத்தா பழைய அழகான நகரமாய் இருந்தது. விக்டோரியா ஞாபகார்த்தக் கட்டிடம் திறந்திருந்தது. அதில் உள்ள படங்களும், சிலைகளும், விக்டோரியா அரசி முதல் இந்திய வைசிராய்களின் சொந்தக் கடிதங்களும், அவர்கள் அணிந்த பட்டாடைகளும், கத்தி கேடயங்களும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆட்சியை நினைவூட்டின. இவ்வளவையும் கப்பலேற்றி அவர்களுக்கே அனுப்பி விட்டால் என்ன என்றும் நினைத்துக் கொண்டேன்.

கல்கத்தாவில் இருந்து உல்பேரியா என்கிற இடத்திற்கு நதியில் 35 மைல், கப்பலில் உல்லாசப் பிரயாணம் ஏற்பாடு செய்கிறார்கள். இதை நான் மிக ரசித்தேன். திரும்பும் சமயம், நதியில் இருந்து கல்கத்தா நகரத்தின் விளக்குகள் அழகாய்க் காட்சிதருகின்றன. துர்க்காபூஜை, விஸர்ஜனம் இவைகளையும் கல்கத்தாவில் பார்த்தேன். 2500 ரூபாய் வரை செலவு செய்து உண்டாக்கும் இந்த அழகிய விக்ரஹங்களை வைத்திராமல், ஒவ்வொரு வருஷமும் நதியில் விட்டு விடுவது எனக்கு வருத்தத்தைக் கொடுத்தது. இந்த நாட்களிலும்கூட, படித்த மனிதர் உள்பட சகலரும் பூஜா விழாவில் சேர்ந்து, விஸர்ஜனத்தை நடத்தி வைப்பது கல்கத்தாவின் விசேஷம்.

பிரிய——இக்கடிதங்களின் இறுதிக்கு வந்து விட்டேன். ஆறு மாதமாக நான் பார்த்து அனுபவித்த விஷயங்களை, எனக்குத் தெரிந்த முறையில் எழுதிவிட்டேன். இன்னும் எதை எல்லாமோ, சொல்லி இருக்கக்கூடும்; அல்லது தள்ளியிருக்கலாம், இந்தக் குறைகளுக்கு என்னை மன்னிப்பாயாக.

---


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள் நாடு ரூ. அ. பை. | மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. அ. பை. |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப் பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

# அக்காட்சி

**ரா. ஸ்ரீ. தேசிகன்**

நீண்ட வாழ்க்கைப் பாதையில் பல எல்லைக் கற்களைக் கடந்து வந்துவிட்டேன். எனக்குப் பின்னே உடைந்த லட்சியங்கள், சிதைந்த கனவுகள், முறிந்த ஆசைகள்—இவைகள் பெருங் குவியலாக நிற்பதைக் கண்டேன். எனக்கு முன் ஓர் இருட் படலம் விரிந்தது: அதில் ஒரு கதிரொளி கூடத் தோன்றியபாடில்லை. திரைக்குமேல் திரையாய் அவ்விருள் வளர்ந்துகொண்டே போயிற்று.

என் உத்தியோகம் போயிற்று. என் மீது ஜனங்கள் காட்டிய மதிப்புங் கரைந்தது. என் செல்வம் மறையவே, என் நண்பர்கள் இலையுதிர்கால இலைகள்போல் என்னை விட்டகன்றனர். என் மனைவி என்னிடம் அன்பு காட்டுவதை நிறுத்திவிட்டாள். என் இடுப்பில் பணமில்லையன்றோ? என் சகோதரிகள் என்னை எட்டிப் பார்ப்பதில்லை. என் சகோதரர்களோ 'பண்ணின பாவம் யாரை விட்டது' என்று சொல்லிக்கொண்டே என்னைப் புறக்கணித்து விட்டனர்.

நான் தன்னந்தனியாய் ஒரு பேய்போலத் திரிந்தேன். என்னை ஒரு தகப்பன் என்று சொல்லிக்கொள்ளுவதற்குக்கூட என் மக்கள் நாணினர் என்றால் என் நிலையை என்னென்று கூறுவது. ஒரு திவலைகூட இன்பமில்லாத என் வாழ்க்கைக் கிண்ணத்தை உடைத்து எறிந்துவிட்டு மண்ணோடு மண்ணாய் மறைந்துவிடலாம் என்ற எண்ணம் வரும். ஆனால் இந்த இருண்ட வாழ்வுக்கப்பால்—இந்த மூடுபனி மரணத்திற்கப்பால் என்ன நிலை என்னை எதிர்நோக்குமோ ஒன்றும் ஓர்ந்திலன். அக்காரணத்தால் தற்கொலை செய்துகொள்ளத் தைரியமில்லை. ஆனால் ஒரு நாள் தற்கொலை செய்து கொள்ளும் பொருட்டே கொள்ளிடக் கரை மீதுள்ள கிராமத்திலிருந்த என் மனைவி மக்களிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டேன். திரிசிராப்பள்ளி போய்த் திரும்புவதாகப் பொய்யையுஞ் சொல்லிச் சென்றேன். ஆனால் என்னையறியாமல் திரிசிராப்பள்ளிக்கே போய்ச் சேரும்படி நேரிட்டது. அங்கே பாலக்கரையிலுள்ள ஒரு ஹோட்டலில் சாப்பிடுவேன். வெய்யில் மழை பார்க்காது ஊரைச் சுற்றுவேன். கடும் வெய்யிலில் சுற்றிப் பிராணன் போனாலும் நலந்தானே என்ற எண்ணமும் வரும். கொட்டுகிற மழையிலும் சீறி அடிக்கிற காற்றிலும் போர் முரசொலிபோல் இடையறாது முழங்குகிற இடியிலும் திரிவேன்.

எனக்குள்ளேயே பேசிக்கொள்ளுவேன்: "ஐயருக்குச் சித்தம் சரியாக இல்லையா?" என்றே பலர் கூறக் கேட்டுமிருக்கிறேன். 'ஆம்' சித்தம் சரியான நிலையில்தானில்லை,

எனக்கா? என்னைப் பார்த்து நகையாடுபவர்களுக்காக? என்ற எண்ணத்தில் என் சிந்தை தேக்கிய சோக முகத்தில் ஒரு புன்னகை மெல்லப் படரும்: அதுவும் ஓர் இமைப் பொழுதில் மாய்ந்துவிடும். விண்மீன்கள் காவலின் கீழ் உறங்கிக் கிடக்கின்ற திரிசிராப் பள்ளி மலைக் கோட்டைமீது ஏறி அங்கிருந்து கீழே விழ எத்தனித்த நாட்களுமுண்டு. நடு நிசியில்—ஓடுகின்ற தண்ணீரைத் தவிர வேறு அரவமே செவியில் விழாத நடு நிசியில்—பாலத்தின் மீது நின்று கொண்டு, கீழே பயங்கரமாய்க் கிழித்தோடுகிற வெள்



ளத்தை உற்று நோக்குவேன். அதுவும் என்னைப் பல தடவை கூவி அழைத்ததுண்டு. ஆனல் வாழ்வின் பாசம் என்னைச் சிறை செய்து விட்டது. குதித்து உயிரைமாய்த்துக் கொள்ளத் தைரியமில்லை. ஏதோ ஒரு தனியெண்ணம் குறுக்கே பாய்ந்து, என் தற்கொலைத் தீர்மானத்தைக் குலைத்து விடும்.

இப்படிச் சில நாட்கள் மெல்லத் தேய்ந்தன. "தற்கொலை இங்கே செய்து கொள்ளுவானேன். ஊரில் தான் கொள்ளிடமிருக்கிறதே என்ற எண்ணம் என் மனத்தில் புகுந்தது. நீராடப் போகிற பொழுது தவறிப் போய் விட்டார் என்ற வதந்தியில் அதிகமான குற்றத்தைக் காண முடியாது. அவர்கள் என்னைப் புறக்கணித்தாலும், அவர்களுக்கு நான் சஞ்சலத்தைத் தரக்கூடாது. நான் இங்கே உயிரை விட்டால், எல்லாவிதமான சந்தேகங்களும் தலை விரித்தாடும்." இத்தகைய சிந்தைப் பாதையில் நான் நிதமும் போய்க் கொண்டிருந்தேன். ஊருக்குத் திரும்பவும் உத்தேசித்து விட்டேன்.

பகல் இரண்டு மணிக்குச் சென்னைக்குப் புறப்படுகிற வண்டியில் ஏறினேன். நான் தனியாய் உட்கார்ந்துகொண்டு சிந்தையில் ஆழ்ந்தேன். அலைக்குமேல் அலையாய் என் எண்ணங்கள் பல திசைகளிலும், பல உலகங்களிலும் திரிந்து கொண்டிருந்தன, ஆனல் வாழ்க்கையின் இருண்ட பாகந்தான் எனக்குக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது.

''அதிகாலையில் ஏழு மணிக்குச் சாப்பிட்டீர்கள்; இட்டிலி எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று மிகப் பரிவுடன் உபசாரஞ் செய்யும் குரல்எழுந்தது. இந்த அன்பு ததும்பும் குரல் என் செவியில் தேனெனப் பாய்ந்தது. திரும்பிப் பார்த்தேன். சாந்தமும் அன்பும் வழிந்தோடுகிற ஒரு கிழவியின் உருவத்தைக் கண்டேன். பக்கத்திலுள்ள கிழவர் அக் கிழவியின் கணவரெனத் தேர்ந்தேன்.

''எனக்கேன் உபசாரஞ் செய்கிறாய்; அதோ நிற்கிறாளே நாட்டுப் பெண், அவளுக்குக் கொடு. ராத்திரி முழுவதும் தூக்கம் விழித்து நமக்கு வேண்டியதைச் செய்தாளே, குழந்தை. ''ஏனம்மா, நிற்கிறாய் எத்தனை நாழியாய் நிற்பாய். மரியாதையெல்லாம் அகத்தில் வைத்துக்கொள். வண்டியில் வேண்டாம்'' என்று அக் கிழவர் இருபது வயதுள்ள பெண்ணைப் பார்த்துப் பேசினார். அந்தப் பெண்ணின் முகத்தில் முறுவல் பூத்துத் தொங்கிற்று. அவள் உட்கார்ந்தபாடில்லை.

"ஏண்டா, ராமு, குழந்தைக்குக் கலியாணம் பண்ணினாயே; தீபாவளிக்கு ஏதாவது செய்யவேண்டாமா?"

''ஆமாம், செய்யவேண்டும்; கையிலிருந்ததெல்லாம் செலவாகிவிட்டது; என்ன பண்ணுகிறது; ஒன்றும் புரியவில்லை.''

"புரிகிறதென்ன? எதையாகிலும் விற்றுக் குழந்தைக்குச் செய்ய வேண்டியதுதான். நாளும் கிழமையுமாகப் பெண் கண்ணைக் கசக்கிக்கொண்டிருந்தால், நமக்கு நன்றாயிருக்குமா? பணம் இன்றைக்கு வரும், நாளைக்குப் போகும். அதை எப்படியாவது அடைந்துவிடலாம். ஆனல் நாள் போனல் போனது தானே."

''ஆமாம், நீங்கள் சொல்லுகிறது உண்மைதான். நாற்றங்காலை விற்றுவது நாளைக்கு அனுப்பப் போகிறேன்."

இதற்குள் ''பசி'' யென்று ஓர் பையன் வண்டிக்குள் நுழைந்துவிட்டான்.

"ஏண்டி, நாம் சாப்பிடுகிறது இருக்கட்டும்; அந்தப் பையனுக்குக் கொஞ்சம் கொடேன்'' கிழவி அவனுக்கு இரண்டு இட்டிலிகள் தந்தாள். அவன் அவைகளைத் தொண்டையடைக்கத் தின்றான்.

'' அவசரப்படாதே குழந்தாய் '' என்றார் அந்தக் கிழவரும்.

"எத்தனை நாள் பட்டினியோ?" என்ற ஒரு பரிவுக்குரல் எழுந்தது."

சிறிது நேரங்கழித்து ஒரு கர்ப்பிணி வண்டிக்குள் புகுந்தாள்.

'' அடே பிள்ளைத்தாய்ச்சி. இடம் விடுங்கள் இடம் விடுங்கள்'' என்றார்கள். பரிவிலே ஒரு பெரும் போட்டி ஏற்பட்டு விட்டது.

''அடே ராமு, நம்மூரில் நாணு வாத்தியாருக்கு உடம்பு எப்படியிருக்கிறது'' என்று மீண்டும் கிழவர் பேசத் தொடங்கினர்.

''படுத்த படுக்கை தான்?''

''சகாயத்திற்கு யார் ?''

''பையன்கள் தான் மாற்றி மாற்றித் தாங்குகின்றார்கள். அதுவும் மூத்த பையன் தெரியுமோ இல்லையோ''

''தெரியும்''

''அவருக்குத்தான் இந்த மழையெல்லாம். பெரிய உத்தியோகத்திலிருந்து லீவு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார். மலம் ஜலம் எல்லாவற்றையும் வாரிக் கொட்டுகிறார். அந்த நாணு வாத்தியார் நாட்டுப் பெண்கள் தான் பம்பரமாய் ஆடுகின்றனர். பெற்ற தகப்பன்மார்களுக்குக்கூட அத்தனை செய்ய மாட்டார்கள்.''

"அப்படியா! நாணு வாத்தியார் பண்ணின பூஜாபலந்தான்'' என்றார் கிழவனும்.

“நல்லது அவிந்தா போய் விட்டது” என்ற குரலும் எழுந்தது.

வண்டியில் ஓர் போர்வீரன் ஏறினான். அவன் மனைவியும் வழியனுப்ப வந்திருந்தாள். அவளுக்கொரு குழந்தை. போர்க்கோலத்தைக் கொண்ட தன் தந்தையைப் பார்த்தே அது அஞ்சிற்று. தொப்பியைக் கழற்றினதும் தன் தகப்பனைப் பார்த்து அது கலகலவெனச் சிரித்தது. இதைக் கண்டதும் இருவரும் சிரித்தனர்.

“என்ன தொழில் வேண்டியிருக்கிறது. கொலை பண்ணிச் சம்பாதிக்கும்படி என் தலையில் எழுதிவிட்டானே. ஒரு தொழிலும் அகப்படவில்லையே. நீ எத்தனை நாள் உன் அன்னை வீட்டிலிருக்கிறது. அதைக் கருதியே இந்த வேலையை ஒப்புக்கொண்டேன். நீ தனியாயிரு. வேண்டிய பணமனுப்புகிறேன்”

“என்னைப்பற்றிக் கவலைப்படாதேயுங்க. இந்தக் குழந்தையிருக்கு, இதைப் பார்த்துக் கொண்டிருந்தாலே உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோலப்படும். கோயிலுக்கு வேண்டியது வேண்டிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் காயம் படாமல் சௌகரியமாய் வந்து சேரவேண்டுமே, அதுதான் கவலையாயிருக்குங்க.”

“கவலைப்படாதே, நம்ம குலதெய்வம் வெங்கடாசலபதியிருக்கிறாரு.” அவருக்கும் முடி இறக்குவதாக வேண்டிக்கொண்டிருக்கிறேன் என்றாள் அந்த உத்தமியும்.

கொலைத் தொழிலில் திளைக்கிற போர்வீரனிடத்திலும் எத்தனை அன்பு? அன்பு ஊற்றுக்களெல்லாம் வற்றிப் போய்விடவில்லை. என்ற எண்ணமும் என் சிந்தையில் புகுந்தொலித்தது.

இன்னும் எத்தனையோ அன்புக் காட்சிகள் என்முன் அலர்ந்தன. வண்டியும் நகர்ந்தது. கொள்ளிடக்கரை ஸ்டேஷனில் இறங்கி வீடு சேர்ந்தேன்.

அன்றிரவு முழுவதும் அக்காட்சியை உன்னிப்படுத்திருந்தேன். தூய அன்பு, ஆழ்ந்த செய்நன்றி, உயர்தியாகம், நல்லறம், மனச்செம்மை இன்னும் எத்தனையோ ஆத்ம குணங்கள் நமக்குப் புலனாகாதபடி இருளில் புதைந்து கிடக்கின்றன; அவைகள் தம் உயர் தொழிலை நடத்துகின்றன. என்றதையும் கண்டுவிட்டேன். ஆனால் சுழித்தோடும் கொள்ளிடத்தில் உயிரை மாய்த்துவிட்டால் என்ன என்ற எண்ணம் என்னைத் தொடரும்.

ஆனால் ரயிலில் நான் கண்ட காட்சி, வாழ்க்கை இருண்டு வருகிற தருணத்தில் ஒரு வானவில்லெனக் காட்சி அளிக்கும். அது எனக்கொரு துணையாய் நிற்குமென்பதில் சந்தேகமில்லை,


# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

**K. S. MEHTA & CO.**

**250, China Bazaar, MADRAS.**



# பத்துக் கோடி மோட்டார் கார்

எஸ். என். ராமசாமி

**1948**-ல் அமெரிக்கா, 55 ஆண்டுகளில் (1893 முதல்) 10 கோடி மோட்டார்கார் உற்பத்தி விழாவைக் கொண்டாடியது. அதே 55 வருடங்களில் உலகத்தின் மற்றத் தேசங்கள் 2¼ கோடி கார்மட்டும் உற்பத்திசெய்தன. அமெரிக்க உற்பத்தி முறைகளின் முன்னேற்றத்திற்கு இதுவே ஒரு சான்று. விக்ஞான ஆராய்ச்சியும், ஆர்வமும் மூண்டதால், 15 கோடி அமெரிக்கர்களில் 90 லக்ஷம் நபர் மோட்டாரும், அதற்குச்சம்பந்தப்பட்ட தொழிலும் ஈடுபட்டு, சராசரி வருடத்திற்கு 5000 டாலர் (சுமார் 20,000 ரூபாய்) வருமானம் "தலைக்கு" கிடைக்கிறது. நான்கில் ஒரு அமெரிக்கருக்குக் கார் "சொத்து"காணப்

படுகிறது. நம் நாட்டைப்போல் 170 வருடங்களுக்குமுன் அமெரிக்கா விவசாய நாடாக இருந்தது. விவசாயத்தால் மட்டும், நாடு செழித்து முன்னேற முடியாது என்பதை உணர்ந்து, அவர்கள் தொழில் இயல் முன்னேற்ற முறைகளைக்கையாண்டார்கள். வெற்றி கண்டார்கள். முப்பது வருடங்களில் (1914-1945) இருமகாயுத்த வினைகளிலும் மீண்டார்கள். இன்று ஒவ்வொரு நாடும் அமெரிக்க உதவியையே நாடுகிறது. பல தூது கோஷ்டிகள் வந்து போகின்றன. தொழில் முன்னேற்ற இயந்திர சாதனங்கள் அமெரிக்காதான் "ஸப்ளை" செய்ய முடியும். அதன் செருக்கிற்குப் பங்கம் வருவது என்று பயந்து, அமெரிக்கா தானகவே உதவிபுரிய முன் வருகிறது. அதை விவரிக்க இது இடமில்லை.

தொழில் செழிப்பின் காரணம் என்ன? அடிப்படை அம்சங்கள் என்ன? அல்லது மந்திரஜாலமா? மோட்டார்கார் உற்பத்திச் சரித்திரம் ஓரளவு பதில் அளிக்கும். நம் நாட்டிலும் கார் உற்பத்தி விஷயத்தைப் பரிசிலனை செய்பவர்களுக்கு உதவலாம்.

1830-ல் அமெரிக்காவில் குதிரைவண்டிகள் தான் அதிகம். இங்கிலாந்து அனுப்பும் வண்டிகளை, வாங்க இஷ்டமில்லாமல், தாங்களே உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்கள். 1890—1900 பத்து வருட காலத்தில் இத்தொழில் உச்சநிலை அடைந்தது. 8000 கம்பனிகள், 75,000 தொழிலாளர்கள் மூலம், வருடா வருடம் 20 லக்ஷம் "கோச்" வண்டிகள் தயாரித்தன. அக் கம்பனிகளில் சில ஸ்டுடிபேகர், டியூரன்ட், பிஷர், டிம்கென் (Studebaker, Durant, Fisher, Timken,). தற்போதும் இப்பெயர்களைப் பிரபல கார்களில் காணலாம்.

"கோச்" வண்டி காலம், மோட்டார் உற்பத்தியான 1905 முதல், க்ஷீண தசை அடைந்தது. ஆனால் "கோச்" உற்பத்தி முதலாளிகள், சோர்வடைந்து, அரசாங்கத்தின் உதவி நாடாமல் (நம் நாட்டில் இப்படி மாறுதல் ஏற்பட்டால், 'குதிரையைக் காப்பற்ற, மோட்டார் கார் உற்பத்தி நிறுத்து" என்று ஒருநிபுணர்மசோதா பிரேரிப்பார். பலர் "குதிரை வீரர்"களாகக் கோஷிப்பார்கள்), பாதுகாப்புக் கோரும் "பாட்டு" பாடாமல் (நம் நாட்டில் 17 வருட சர்க்கரைப்பாதுகாப்பு இதற்கு எதிர் உபமானம்), கார்களுக்கு உகந்த "வண்டி" (Body) உற்பத்தி செய்தார்கள். இந்தத்தொழில் துணிவும், ஊக்கமும் தான், அமெரிக்க செல்வத்திற்கு அடிப்படை. பண்டைக்கால'கோச்'சாதனம் கால சக்கரத்தில் சுழன்று மறைந்தால், புதிய போக்குவரத்துச் சாதன முறை இயந்திரங்களின் உற்பத்தியைப் பெருக்க முயன்று, வெற்றி கண்டார்கள்.

"கோச்" உற்பத்தியாளருக்கு இடி விழுந்தது 1892-ல். அவ்வருடம் அமெரிக்காவில் சார்லெஸ் இ. துர்யியா (Charles E. Duryea என்பவர்)"உள் எரிஎன்ஜின்" (Internal Combustion Engin) கார் ஒன்று உற்பத்தி செய்தார். கல்லெண்ணெயில் ஓட்டப்பட்டது. போட்டிப்பந்தயமாகச் சிகாகோ வாகிகான் (Chicago to Waukegan) என்ற பாதையில், போய் வரும் 80 மைல் பாதையை 5½மணி நேரத்தில் காரில் ஓட்டினர்!! தற்போது அதே 80 மைல் செல்ல ஒரு மணி நேரம் கூடப் பிடிக்காது அமெரிக்காவில்!! இந்த 5½ மணி நேரத்தில் பத்துத்தடவை காரை நிறுத்தி, சூடான என்ஜின் தலையில் ஐஸ் வைக்கவேண்டியதாயிற்று. துர்யா Durya வைத்த உலை தான் "கோச்"காரர்களுக்கு! அவர் ஊன்றியது தான் அமெரிக்க கார் செல்வ மாளிகையின் அஸ்திவாரக் கல்—1893-ல்: நூறு வருடங்கள்கூடக் கழியவில்லை.

ஆனால் இவருக்கு முன்பு, 1883-ல் ஜெர்மனியில் கார்ல்பென்ஸ் (KARL BENZ) என்பவர் கல்லெண்ணெய்கார் உற்பத்தி செய்து ஓட்டியிருக்கிறார். உதவியாக காட்லியெப் டெய்ம்லர் (GOTTLIEB DAIMLER) என்பவரையும் சேர்த்துக் கொண்டு தற்போது பிரபலமாக இருக்கும் பென்ஸ் (BENZ) கார் உற்பத்தி ஆரம்பித்தார். கார்களும் உருப்படியாக உழைத்தன. இவ்விருவர்களின் சந்ததிகள் தான் டெம்லர்மெர்ஸிடீஸ் பென்ஸ் (Daimler-Mercedes Benz) கம்பனி நடத்துகிறார்கள்.

Benz கார் 1893-ல் சிகாகோ(Chicago) உலக கண்காட்சியில் வைக்கப்பட்டது.

அதுவரையில், நீராவி, மின்சார, கார் உற்பத்தியில் உழன்றுகொண்டிருந்த அமெரிக்கர்கள் விழித்துக்கொண்டு, கல்லெண்ணெய்கார் உற்பத்தியில் ஊக்கம் கொண்டார்கள். 10 கோடி. கார் உற்பத்திக்கு பென்ஸ் தூண்டுகோல் எனலாம்!! ஆனால் பழைய ஞாபகம், ஆசை 1910 வரையில் விலகவில்லை. பழமை மோகத்தால் பல கார் கம்பெனிகள் பணத்தை விரயப்படுத்தி, பாங்குகளைச்சிதற அடித்ததால், பின்னால் வந்த கார் உற்பத்தியாளர்களுக்கு, பண வசதியே கிட்டாமல் போய்விட்டது. இச் சந்தர்ப்பத்தில் நம் நாட்டு (பழமை கோரும்) குமரப்பா போன்றவர்களை நினைவுகொள்ளவேண்டும்!! இத் திரவியக் கோளாறு, ஒரு சமயம் ஹென்ரி போர்டை (Henry Ford)-யே கதிகலங்க வைத்து, தம் பூரா தொழிற்சாலையையும் 80 லக்ஷம் டாலருக்கு விலை பேச வைத்தது. அந்தச் சிக்கலில் மீண்ட பிறகு அதே போர்டு, நூறு கோடி டாலருக்கு விலைபேச வந்தவரை, விரட்டித் துரத்தினார்!! போர்டு முதல், மூலதனம் 28 ஆயிரம் டாலர்-விதியின் விளையாட்டா? அல்லது உழைப்பின் சிகரமா?

புதுமையான கல்லெண்ணெய் (Petrol) காரில் மோகம்கொண்டவர் பல ஆயிரம். மோகவலையில் மாண்டவரும் பலர். ஆனால் வெற்றி கண்டவர்கள் சிலரே. முக்கிய வீரர்கள்-போர்டு,(ஒரு என்ஜின்-ரைஸ்மில்போன்ற என்ஜின், ரெயில் என்ஜின் அல்ல), டாட்ஜ் (Dodqe) (சைகில் வியாபாரி) ஸ்டுடிபேக்கர் (Studebaker) (தச்சன், கருமான் வேலையாளர்), கிறிஸ்லெர் (Chrysler) (ரயில் சிப்பந்தி), ரான்ஸம் இ. ஓல்ட்ஸ் (Ransom E. OLDS) (இயந்திரம் செப்பனிடுபவர்) லீலண்ட் (Leyland) (இயந்திர ஆயுத உற்பத்தியாளர்.) இவர்களின் "பூர்வீக" தொழில் வேறு: மோட்டார் கார் உற்சாகத்தில், உழைத்துக் கோடீச்வரரானார்கள். இவர்கள் சமாளிக்க வேண்டியிருந்த இன்னல் பல. எதிர்ப்பு "பலே கடுமை"—ஜனங்களே "குதிரையில்லா வண்டி" வேண்டாமென்றார்கள். தடி எடுத்தவன் தண்டக்காரன் என்பது போல், தோன்றியவர்கள் எல்லாம்காரில் "இறங்கினார்கள்." நம் நாட்டில் தற்போது, "வட்டித் தொழில்" நிபுணர்கள் "சுதேசி" கார் உற்பத்தி—பூரா வெளிநாட்டுக் கார் உறுப்புக்களுடன்!!—ஆரம்பித்திருக்கிறார்கள். இதைப் பின்னால் கவனிக்கலாம். முதல் ஆர்வக்கூட்டம்,1500 நபர்கள்: முதலில் 2500 விதமான கார் "செய்தார்கள்". போர்டு இயற்றிய பொது "ஜன விலை குறைந்த கார்" என்ற கோஷத்தில், எல்லோருமே "பல்டி" அடித்துவிட்டார்கள். 1948ஆம் வருடத்தில், அமெரிக்காவில் 56 கம்பெனிகள், 21.வித கார், 59 வித "லாரி–பஸ்" உற்பத்தியில் உள. 1500 எங்கே, 56 எங்கே: 2500 விதம் எங்கே, 80 விதங்கள் எங்கே. இம்முறையில் எண்ணிக்கை குறைந்ததின் காரணம், தேசத்திற்கு நலம் என்று போர்டு வாழ்க்கையின் மூலம் காணலாம்.

"வயல் பையனா"யிருந்த அவர், டெட்ராய்ட் (Detroit) நகருக்குக் கடிகாரம் மலிவாக—மலிவான பண்ட உற்பத்தி, அவர் வாழ்க்கையின் அடிப்படை—உற்பத்தி செய்யவந்தார். ஆனால் விதி, அவரைக் கார் உற்பத்தி ஆராய்ச்சியில் இறக்கியது. பழைய சாமான்களால், முதல் கார்-கையால்-செய்து 200 டாலருக்கு விற்றார். ஆறு வருடத்தில்—1899ல்—டெட்ராய்ட் ஆட்டோ மோபைல் கம்பனி என்பதை 10,000 டாலர் மூலதனத்துடன் ஆரம்பித்தார். வருடத்தில், (ஒன்று 1000 டாலர் விலையில்) 10 கார் உற்பத்தியாக்க வேண்டும் என்ற ஒப்பந்தம்! அவருடைய "சகபாடி" லீலண்ட்: இவர் தொந்தரை பொறுக்க முடியாமல் போர்டு ராஜிநாமாசெய்தார். லீலண்ட் வருடத்திற்கு 2000 கார் உற்பத்தி செய்யக் காடில்லாக் மோட்டார் கம்பனி (CADILLAC Motor Co ,) ஏற்படுத்தி, அதையும்விட்டு லிங்கன் மோட்டார் கம்பனி அதிபதியானார். ஆனால் லிங்கன் கம்பனி பணச் சிக்கலில் மாட்டிக்கொண்டு சிதைந்தபோது, போர்டு அதை வாங்கினார். தற்போது போர்டு கம்பனியின் விலை உயர்ந்த கார், லிங்கன் தான்!! 1901ல் இரண்டாவது கம்பனி ஸ்தாபித்தார். அவர் ஆயுள் நோக்கமாகிய மலிவான கார் உற்பத்தி ஐக்யத்திற்கு மற்றப் பங்குதாரர்கள், இணங்காததால், அக்கம்பனி கலைக்கப்பட்டது. மனச்சோர்வு அடையாமல், பொது ஜனத்திற்கு உகந்த கார்

உற்பத்தி செய்தே ஆக வேண்டுமென்ற விடா முயற்சியுடன் 1903-ல் போர்டு மோட்டார் கம்பனி ஸ்தாபித்தார். அது தான் இன்றும் விளங்கி வருகிறது. தளரா ஊக்கத்தால், உற்பத்தி முறைகளையும், விதிகளையும் சீர்படுத்தி, அவருடைய டி. மாடல் என்ற காரின் விலையை 850லிருந்து 290 டாலருக்கு விற்று-லாபம் கண்டார். அதே மாதிரி 1½ கோடி கார் 26—5—1927 வரையில் உற்பத்திசெய்து விற்று, புதிய ஏ-"மாடல்" காரை 2.12. 1927-ல் வெளியிட்டார். இந்த 20 வருடத்தில் அவர் சாதித்தன பல. தொழிலாளிக்கு 2½ டாலரிலிருந்து 5 டாலர் தினச் சம்பளமாக உயர்த்தினுர். "போனஸ்" ஒரு கோடி டாலர் வழங்கினர். மூன்று லக்ஷம் கார் ஒரே வருடத்தில் விற்று, கார் வாங்கிய ஒவ்வொருவருக்கும் 50 டாலர் "வாபஸ்" கொடுத்தார். இவைகளின் அடிப்படை, அவருடைய உன்னத நோக்கம் தான்—ஜனங்களுக்கு நயமான மலிந்த சரக்கைத்தான் விநியோகிக்க வேண்டும். தற்போது வருடத்திற்குச் சுமார் இரண்டு லக்ஷத்திற்கு மேல் போர்டு கார் வெளிவருகிறது. 1899-ல் 10 கார்! தொழில் நிபுணர் தாமாகவே (பிறர் கைபார்க்காமல்) உற்பத்திப் பெருக்கம் செய்தும், ஒரு சமயம் போர்டு சொன்னுர்: "எனக்குப் பூரா விவரமும் தெரியாது. ஆனல் தொழில் ஆற்றல், புத்தி நுட்பம் உள்ளவரைக் கண்டெடுத்து, ஆதரவளித்து, போற்றத் தெரியும்" என்ருர்! "இரண்டு" தெரிந்தால், இந்தியாவைச் சீர்படுத்த கோஷமிடும் தற்காலத்து "நிபுணர்கள்" இதைச் சற்றே கவனிக்கவேண்டும்.

போர்டுக்கு அடுத்தபடி முன்னேறியவர் வில்லியம் ஸி. டூரண்ட் (William C. Durant). இவர்தான் ஜெனரல் மோட்டார்ஸ் ஸ்தாபித கர்த்தா. முதலில் காடிலாக், ப்யூக், ஓல்ட்ஸ் (Cadillac, Buick, OLDS) கம்பனிகளை இணைத்து, தமது சொந்தமான டூரண்ட், டார்ட் கம்பனியைப் பெரிதாக்கினுர். ஆனல் இப் பெரும் போக்கு, கவிழ்ந்தது. டூரண்ட் "தொலைந்தார்" என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனல், விளம்பரமில்லாமல் வேறு சிறிய கம்பனிகளை வாங்கி, 1915-ல் செவர்லெட் (CHEVROLET) கார் 16,800 வெளியிட்டு, 12½ லக்ஷம் டாலர் லாபமடைந்தார். மற்றவர் கதி கலங்கினுர்கள். டி.யூபாண்ட் (DUPONT) [வர்ண வியாபார பிரபலர்,] ஜான் ஜெ ராஸ்கோப் (John J. Raskob) உடன் கூட்டுச்சேர்ந்து தமது பழைய ஜெனரல் மோட்டார்ஸைத் திரும்பி வாங்கி, அதன் தலைவரானுர். 1920-வரை அந்தப் பதவியைச் சிறப்புடன் வகித்தார். தற்போது செவர்லெட் கார் மகிமை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. யாவரும் அறிந்ததே.

இக் கம்பெனியில் ஐக்கியமான ஆர்.இ. ஓல்ட்ஸ் (OLDS MOBILE கார் தற்போதுவிலையுயர்ந்த ரகம்) பிரிந்து, வேறு கம்பெனி ஸ்தாபித்தார். அவர் பெயரின் முதல் எழுத்தைக் கோத்து ரியோ (REO) என்ற புனை பெயர் கம்பனிக்கும், காருக்கும் சூட்டினுர்! இரண்டு—ஓல்ட்ஸ்மோபைல்—ரியோ, கார்களுக்குப் பெயர் கொடுத்த நபர், இவர் ஒருவரே தான்.

அமெரிக்காவில் கார் உற்பத்தியில் முதல் இரண்டு உன்னத ஸ்தானம் வகிப்பது போர்டு, ஜெனரல் மோட்டார்ஸ் இரண்டே தான். மற்ற சிதறிப்போன 1444 கம்பனி சரித்திரத்தை விவரிக்க இடம்போதாது! அவைமறைந்ததின் காரணம் பங்குதார்களின் பேராசையும், குறுகியநோக்கமும். ஒன்றென்ருக நூறு என்பதை மறந்து, ஒருமிக்க நூறு லாபமடைய ஆசைப்பட்டு மண்ணைக் கவ்வினுர்கள். பாமர மக்களுக்கு உகந்த [விலையில்] கார் செய்யும் ஆசையேயில்லை. உற்பத்தி முறைகள், சீர்திருத்த முன்னேற்றமடைந்தாலும், தொழிலாளி ஊதியம் 8-லிருந்து 50 டாலருக்கு உயர்ந்தது...... ஆகையால் வேலை செய்பவரே கார் வாங்குபவர் ஆனுர்கள். 1899-ல் 200 வாரம் உழைத்து வாங்கக் கூடிய கார் விலை, தானே குறைந்தும், உற்பத்தியாளர் சம்பளம் மேல் ஓங்கியதாலும், 30 வார சம்பளத்தில் கார் வாங்க முடிந்தது. முதலாளியும் படிப்படியாகத் தம் லாபத்தைக் குறைத்துக் கொண்டார். 1929-ல் 12, 1947-ல் 6 சதவிகிதம். தொழிலாளியும் உற்பத்திப் பெருக்கத்தால், தேசம் சுபிக்ஷம் அடைந்தால்தான் தானும் அதிகப் பங்கு எடுக்கலாம் என்ற ஆர்வத்துடன் உழைத்தான்.

இன்று மாதத்திற்கு 5½ லக்ஷம் அமெரிக்க கார் வெளிவருகிறது. நூற்றில் ஆறு அமெரிக்கர் கார், கார் சம்பந்தப்பட்ட தொழிலில் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

இச்சரித்திரத்தில் கவனிக்க வேண்டிய பல பொருளாதார தத்துவங்கள் உண்டு. 1500 கம்பனிகள் பொது ஜனத்தைத் திருப்தி செய்யும் போட்டியில், சண்டையிட்டு, 1444 பேர் "மாண்டார்" எனக் கூறலாம். சண்டையில், அரசாங்க பாதுகாப்பு, உதவி, சலுகை கோரவில்லை. அவனவன் தன் தொழில் பண்பாட்டைப் பணயம் வைத்தான். சீர்பட்டு முன்னேற்றமடைந்தவரைக் கவிழ்க்க, சூழ்ச்சி செய்யவில்லை. தோல்வியுற்றாலும், பொதுஜன ஆதரவை நிந்திக்கவில்லை. நம் நாட்டில் தற்போது சுதேசி என்ற பெயரால், நயம், தரம் இல்லாத பொருட்களை விற்று, "மூட்டை" கட்ட ஆசைப்படுபவர்கள், கண்டனத்திற்குள்ளாவார்கள், சிதைந்து போவார்கள்—அமெரிக்காவில்! 17 வருடம் பாதுகாத்து வளர்க்கப்பட்ட சர்க்கரை இன்னும் பாதுகாப்பு கோரி, உலக விலையில் மூன்று மடங்காக நம் தலையில் சுமத்த யத்தனித்தால், அதற்கு அடிப்படைச் சக்தியேயில்லை என்று தான் சொல்லவேண்டும். பதினெட்டு வயதில் "மேஜர்" என்பார்கள்!

ஆனால், இந்தியசுதந்திரம் மூன்றுவயது கூட இல்லை. நாட்டின் செல்வம் 4500 கோடி ரூபாய் தான். இதைக் கண்காணித்து, படேல் போல் நாம் ஒவ்வொருவரும் வளர்த்தால், நாடு செழிக்கும். "நாமே செய்வோம்" என்ற அகங்காரம் விலக வேண்டும். பிறர் உதவியைஅடைந்தே ஆக வேண்டும். நம் நாட்டில் 2 லக்ஷம் கார் தான் உண்டு. இந்த எண்ணிக்கை அமெரிக்க ஒரு தொழிற்சாலை 10 நாட்களில் உற்பத்தி செய்துவிடும். இதையே ஐந்து வெவ்வேறு கம்பனிகள் இந்தியாவில், "உற்பத்திச்சாலை" என்ற பெயரில் நிறுவியிருக்கிறார்கள். காரின் உறுப்புகளெல்லாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகி, நாம் "கோக்கிறோம்". அந்த உருப்படிகளை "இந்திய கார்" என்பவர்களை நகைக்க வேண்டியதே! ஏன் இந்த விபரீதம்? புள்ளி விவரம் கிடையாது. இரண்டாவது, சொந்த முறையில் செய்வோம் என்ற நம்பிக்கையில்லாததால், தரகு மனப்பான்மை மேலோங்கிவிட்டது. தரகில், பணமிச்சம் அதிகம்; முதலீடு குறைவு!! பிறர் நாட்டு ஒத்துழைப்பு இல்லாவிட்டால் கார் குறைந்த விலையில் செய்யமுடியாது. காரில் 15,000 வித உறுப்புகள் உண்டு. இன்று 900 ரூபாயில் இயந்திரத்தால் செய்யப்படும் கார், "கை"யால் செய்தால் 50,000-க்குக்கூடப் பூர்த்தியாகாது. இயந்திர சாதனங்களால் கோடிக் கணக்கில், கார் உற்பத்தியானால்தான், பொதுஜனங்களுக்கு, "கட்டுபடியான" விலையில் கார் விற்கலாம். தேசத்தின் போக்குவரத்து முறைகளும் சீர்படும். "குருட்டு" வழியால், விலை அதிகப்பட்டால், கார் பணக்கார வசதியாகவே தேங்கும். பணக்காரர்களுக்கு மட்டும் போதும் என்ற மனப்பான்மையால்தான், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி கார் தொழில் க்ஷீணித்து, சீர்கேடாயிற்று. விலையைக் குறைத்து, பொதுஜன ஆதரவு திரட்டியதால், அமெரிக்க கார் உற்பத்தி 10 கோடி எண்ணிக்கைக்கு மேலாகிவிட்டு, இன்னும் சீர்பட்டு வருகிறது. "சீரிய முயற்சிகள், சிறந்துமிக்கோங்குக" என்ற ஆசிப்படி, நம் நாட்டில் தொழில் உற்பத்திப் பெருக்கம் ஏற்படுமென்று எதிர்பார்க்கலாமா?

# இந்தியாவும் சீனமும்

டாக்டர். வே. ராகவன்

உலகத்திலேயே இரண்டு பெரும் நாடுகளாய் விளங்கும் இந்தியாவும் சீனமும் கொண்டுள்ள அன்யோன்ய நட்பு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போடப்பட்ட பலத்த அஸ்திவாரத்தைக் கொண்டது. நம் புராணங்களிலும் ஜைன புராணங்களிலும் சீனத்தை இந்திய ராஜ ரிஷிகளில் சிலர் வென்றதாகக் காணப்படுகிறது. மஹாபாரதத்தில் சீனர் சொல்லப்பட்டிருக்கின்றனர். கி. மு. 3-ஆவது நூற்றாண்டிலிருந்தே சீன தேசத்துப் பட்டு இந்தியாவிற்கு வந்து போற்றப்பட்டதோர் பொருளாய் வழங்கிற்று. சீன ம்ருகம், சீனம் என்றதோர் தான்யம், சீனத்திலுண்டாவதான சீனஜம் என்ற ஒருவகை இரும்பு, சீனவங்கம் என்ற ஈயம், சீனபிஷ்டம் என்ற சிந்தூரம், சீன கர்ப்பூரம் என்ற கர்ப்பூரவகை ஒன்று, இவ்வளவு சீனப் பொருள்கள் இந்தியாவிற்கு வந்தன. ஆனால் சீனத்திலிருந்து வந்த இவ்வளவும் இந்தியா அந்நாட்டிற்குக் கொடுத்ததின் ஒரு திவலையே. வர்த்தகப் பொருள்களிற்குப் பதிலாக இந்தியாவும் சீனத்திற்குப் பல பொருள்களைக் கொடுத்தது; ஆனால் இந்தியர் சீனத்திற்குக் கொடுத்த பெரும் பொருள்கள் நாகரிகப் பொக்கிஷங்கள்,—விஞ்ஞானம், கலை, கொள்கை, மதம். பத்து நூற்றாண்டுகளுக்கு மேல் இந்தியா, சீன ஆசிரியர்களுக்குப் பக்தியுடன் யாத்திரை செய்துவிட்டுப் போகும்படியான புண்யக்ஷேத்ரமாய் விளங்கிற்று. பரந்த பண்டை நாடு. ஆனாலும் கடல், மலை எல்லாவற்றையும் கடந்து சீனம் இந்தியாவிடம் சீடனாகி வித்யையைக் கற்ற முறை உலகில் நிகழ்ந்த அறிவுப் பரப்புகளிலேயே வியப்புறத் தக்கதானதோர் கதை.

கி. மு. 5, 4 ஆவது நூற்றாண்டுகளிலேயே சீனம் இந்தியாவைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தது. கி. மு. 570—490-ல் சீனத்தில் லோ-த்ஸு (Lao-Tzu) என்பார் தோன்றி தோ (Tao) அல்லது தௌ (Dhau) என்ற புது மதம் ஒன்றைப் போதித்தார்; Tao என்றால் 'வழி' என்று பொருள்; இது ரிக்வேதத்தில் சொல்லிய ரிதம் என்ற நன்னெறியையும், உபநிஷத்தில் சொன்ன ப்ரமத்தையும் ஒருவாறு ஒக்கும்; இப்புது வழிபாட்டில் யோகாப்யாஸம், ஸ்னானம், நதீதீரம் போன்ற ஏகாந்தங்களை ஸேவிப்பது முதலியவை அடங்கியிருக்கின்றன; இக்கொள்கை விரிவாய்ச் சீனம் முழுதும் பரவி இருந்ததேபின் இந்தியாவிலிருந்து சென்ற பௌத்தத்தின் பரவுதலுக்கு அனுகூலமாயிற்று. கி. மு. 2-ஆவது நூற்றாண்டில் லியு-ங்கன் (Liu-ligan) என்ற ராஜகுமாரன் எழுதிய நூலில் இந்தியக் கதைகளின் அம்சங்கள் காணப்படுகின்றன. காளிதாஸனின் மேகதூதக் கதையும் கவிதையும் ஒரு பழம் சீனக் கதையிலும் எதிரொலித்திருக்கின்றன.

கி. மு. 2-ஆவது நூற்றாண்டில் சான்-கியன் (Chan-Kien) என்ற சீன ஸேனாபதி ஸிந்துவை (Sien-du)க் கண்டுபிடித்தார். கி. மு. 1-ஆவது நூற்றாண்டில் முதன்முதலாய் இந்திய பௌத்த நூல் சீனத்திற்கு வந்தது. கி. பி. 65ல் முதன்முதலாய்த் தர்மரக்ஷர், காச்யபமாதங்கர் என்ற இரண்டு இந்திய பிக்ஷுக்கள் வந்து, 'வெண்குதிரை விஹாரம்' என்ற பௌத்த ஆலயத்தை ஏற்படுத்தி, முதன்முதலாய்ப் பௌத்த நூல்களைச் சீனத்தில் மொழிபெயர்க்க ஆரம்பித்தனர். இதிலிருந்து தொடங்கி, பல நூற்றாண்டுகளுக்கு இந்தியாவிலிருந்து சீனத்திற்கு இடைவிடாது கூட்டம் கூட்டமாய்ப் பண்டிதர்கள் யாத்திரை செய்தனர்.

சீனத்தில் பௌத்தத்தைப் பரப்ப சுமார் 2184 பௌத்த நூல்கள் இந்தியாவிலிருந்து கொண்டுபோய் மொழிபெயர்க்கப்பட்டன. சுமார் 103 இந்திய வித்வான்கள் சீனத்தில் இந்த மொழிபெயர்ப்பிற்காக விஜயம் செய்து மத ப்ரசாரகராய் வாழ்ந்துவந்தனர். 6-ஆவது நூற்றாண்டில் 3000 இந்தியர் சீனத்திலிருந்து மதத்துறையில் மட்டுமல்லாமல், விஞ்ஞானம், கலை, இலக்கியம், சிற்பம் என்ற ஒவ்வொன்றிலும் இந்திய நாகரிகச் செல்வத்தைச் சீனத்திற்கு அளித்து வந்

தனர். இந்திய சரித்ரம் படித்தவருக்கு இந்தியாவிற்குப் பௌத்த மத ஆராய்ச்சிக்காக வந்த சீன யாத்ரிகர் பா-ஹியன், ஹ்யூன்-ஸாங், இத்-ஸிங் என்ற மூவரை நன்கு தெரிந்திருக்கும்; ஆனால் இவர்களைப் போல் பௌத்தம் தந்த தாய்நாடெனப் பக்தியுடன் கயா முதலிய க்ஷேத்ரங்களைத் தர்சனம் செய்ய இந்தியாவிற்கு ஏராளமான சீன யாத்ரிகர்கள் வந்தார்கள். பா-ஹியன், ஹ்யூன்-ஸாங், இத்-ஸிங் முதலியவர் இந்தியாவைச்சுற்றிப் பார்த்துவிட்டு எழுதிவைத்துப்போன யாத்திரை நூல்கள் இன்று நம் பண்டை இந்திய சரித்ர ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாயிருக்கின்றன.

சீனத்திற்கும் இந்தியாவிற்குமிடையே ஏற்பட்ட இப் பெரும் கல்விக்கலப்பு பௌத்தத்திற்கு மட்டுமல்லாமல் ஸம்ஸ்க்ருத பாஷைக்கும் பேருதவியையும் வளர்ச்சியையும் தந்தது. சீன மொழி பெயர்ப்பில் இந்தியாவில் இன்று அகப்படாத பல பௌத்த மூல நூல்கள் அகப்படுகின்றன; அது மட்டுமல்ல; இதுகாறும் பௌத்தம் பெரும்பாலும் பாலி என்ற ப்ராக்ருத பாஷையிலேயே எழுதப்பட்ட மதம் என்ற கொள்கை வேரூன்றி இருந்தது; மத்திய ஆசிய பௌத்தவிஹாரங்களில் அகப்பட்ட சில நூல்களிலிருந்தும், பெரும்பாலும் திபெத், சீன மொழி-பெயர்ப்புகளிலிருந்தும் நமக்கு இப்போது நன்ருய்த் தெரியவருவது என்னவென்ருல் பாலியில் இருந்ததுபோல் பௌத்த மூல நூல்கள் எல்லாம் ஸம்ஸ்க்ருதத்திலும்கூட இருந்தன. சீனத்திற்குக் கொண்டுபோகப்பட்ட பௌத்த நூல்கள் ஸம்ஸ்க்ருதத்தில் அதிகமாய் இருந்ததால் ஸம்ஸ்க்ருத பாஷைக்குச்சீனத்தில் ஒரு முக்யமான ஸ்தானமும் ஆதரவும் ஏற்பட்டன. ஸம்ஸ்க்ருதத்தைப் படிப்பாளிகள் கற்க ஆரம்பித்தனர். கி. பி. 508-35 இல் 700 பௌத்த பிக்ஷுக்களுக்குத்தலைவராய், போதிருசி என்ற இந்திய பிக்ஷு நியமிக்கப்பட்டார்; இந்த 700 பிக்ஷுக்களுக்கும் ஸம்ஸ்க்ருதம் தெரிந்திருந்தது; பௌத்தத்தில் ஈடுபட்ட பெரும் சீன பிக்ஷுக்கள் எல்லோரும் ஸம்ஸ்கிருத தீக்ஷா நாமங்களைப் பூண்டனர்; பா-ஹியன் என்றவர் மோக்ஷாசார்யர் என்ற பெயரை வைத்துக்கொண்டார்; ஹ்யூன்-ஸாங் மஹாயானதேவர் என்ற பெயரைப் பூண்டார்; இத்-ஸிங் என்பாருக்குப் பரமார்த்ததேவர் என்று பெயர். சீன பிக்ஷுக்களுக்கும் இந்திய ஆசிரியருக்கும் ஸம்பாஷணையும், கடிதமும், போதனமுறையும் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே நடந்தன; இந்தியாவில் தாம் சுற்றும் போதும், சீனத்திற்குத் திரும்பிப்போன பிறகு தாம் இந்தியாவிற்கு எழுதிய கடிதங்களிலும் இந்தச் சீன யாத்திரிகர் ஸம்ஸ்க்ருத பாஷையையே உபயோகித்தனர். கி. பி. 1407 வரையில் ஸம்ஸ்க்ருதத்திற்குச் சீன தேசத்தில் ஸ்தானம் இருந்து வந்ததென்பது தெரிகிறது; அக்காலத்தில் அங்கு ஏற்பட்ட கல்லூரி ஒன்றில் படிப்பிக்கப்பட்ட மொழிகளில் ஸம்க்ருதமும் சேர்க்கப்பட்டிருந்தது. கி. பி. 7—9 நூற்ருண்டுகளில் நான்கு சீன–ஸம்ஸ்கிருத அகராதிகள் தொகுக்கப்பட்டன; மதானுஷ்டானங்களில் ஸம்ஸ்க்ருத பாஷையும் லிபியும் கையாளப்பட்டன; ஸம்ஸ்க்ருத வர்ண மாத்ருகையைக்கொண்டு சீன எழுத்துக்களும் உச்சாரப்படி 36 முதலெழுத்துகளை வைத்து வரிசையாய் அடுக்கப்பட்டன.



நன்-ஷியாங்-தங் Nan-hsiang T'ang குகைக் கோயிலிலுள்ள பௌத்த ஆலயச் சிற்பங்களில் ஒரு காட்சி. இங்கு தென்னிந்திய சிற்ப முறை பின்பற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தச் சீன-இந்தியப் போக்குவரத்திற்கு அனுகூலமாய் இருந்த பாதைகள் நான்கு; முதன் முதலாயும் முக்யமாயும் ஏற்

பட்ட பாதை மத்ய ஆசியா மூலம் சீனதேசம் செல்லும் வழி; கிழக்கே அஸ்ஸாம் என்ற காமரூபம், மேல் பர்மா வழி சென்ற பாதை இரண்டாவதாகச் சொல்லப்பட வேண்டும்; மூன்ருவதாக நாடப்பட்ட வழி நேபாளம், திபெத் வழியே சென்றது; நான்காவது கிழக்கே இருக்கும் கடல் வழி.

சீனத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த சீன பௌத்த யாத்ரிகரில் மிகவும் முக்யமானவர் பா-ஹியன், ஹ்யூன்-ஸாங், இத்-ஸிங் என்ற மூவர் எனச் சொன்னேம். மற்றும் ப்ரபலமானவர், ப்ரபலமல்லாதவர் பலர் இந்தியாவிற்கு வந்து போயினர். 3-ஆவது நூற்ருண்டில் பர்மா வழியே 20 சீன பௌத்த பிக்ஷுக்கள் வந்தனர்; அவர்களுக்காக ஸ்ரீகுப்த மஹாராஜன் புத்தகயா க்ஷேத்ரத்தில் சீன ஸங்காராமம் என்ற விடுதியைக் கட்டிக்கொடுத்தான். 7-ஆவது நூற்ருண்டில் மட்டும் 60 சீன பிக்ஷுக்கள் இந்தியாவிற்கு வந்தனர். புத்தகயாவில் கி. பி. 947—1033-ல் வரையப்பட்ட 5 சீன சிலாசாஸனங்கள் இருக்கின்றன; இவற்றுள் கடைசி சிலாசாஸனம் சீன மன்னன், அவன் தாயார் இருவருடைய க்ஷேமத்திற்காக இரண்டு ஸ்தூபங்கள் எழுப்புவதற்காக ஏற்பட்டன. பெரும் படிப்பாளிகளான சீன பிக்ஷுக்கள் வருவது 8-ஆவது நூற்ருண்டோடு நின்றுவிட்டதாய்ச் சொல்லலாம்; ஆனலும் ஸாமான்யமான யோக்யதை கொண்டவரும் பக்தி ஆர்வம் கொண்டவருமாய்ப் பலர் இந்தியாவிற்கு 11-ஆவது நூற்ருண்டு வரையில் வந்துகொண்டே தானிருந்தனர்; கி. பி. 964ல் இப்படி 300 சீன யாத்ரிகர்கள் வந்தனர்.

முன் சொன்னதுபோல் இந்தியாவிற்கு வந்த சீன யாத்ரிகரில் பா ஹியன், ஹ்யூன் ஸாங், இத்ஸிங் என்ற மூவரும் மிக முக்யமானவர். இம்மூவரிலும் சிறந்தவர் ஹ்யூன்ஸாங் என்றவர். இவர் 20 வயதிலேயே பிக்ஷுவாகி, கி. பி. 629-ல் இந்தியாவைக் குறித்து யாத்திரை கிளம்பி, 16 வருஷம் இந்தியாவில் இருந்து, நாளந்தா பௌத்தக் கல்லூரியின் தலைவர் சிலபத்ரரிடம் விக்ஞான வாதம் என்ற பௌத்த சாஸ்த்ரத்தைக் கற்றுணர்ந்து, ஸம்ஸ்க்ருதத்தை நன்கு அப்யஸித்து, வட இந்தியா தென்னிந்தியா வெல்லாம் சுற்றி, கி. பி. 645-ல் திரும்பிச் சீனத்திற்குப் போய்ச்சேர்ந்தார். திரும்பிய பிறகும் தம் இந்திய நண்பருடன் ஸம்ஸ்க்ருதத்தில்

துங்-ஹுவாங் (Tung-huang) என்ற இடத்திலுள்ள ஸமந்தபத்ரமூர்த்தி. இந்திய முகக்களைப் பூர்த்தி கவனிக்கத்தக்கது.



லுங்-மேன் புத்த விக்ரஹம்; கி. பி. 672-676-ல் மஹாராணி வு-த்ஸே-தியன் (Wu-Tse-t'ien) கட்டளையின் மேல் மலையில் செதுக்கப்பட்டது; சுமார் 50 அடி உயரமுள்ள வேலை.

கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். இந்தியாவிலிருந்து தாம் கொண்டுபோன நூல்களில் சுமார் 75 நூல்களை 19 வருஷம் பாடுபட்டு, 1335 வால்யூம்களாகச் சீன மொழியில் எழுதினார். இவர் இந்தியாவில் ப்ரயாணம் செய்துகொண்டிருக்கும் போது கான்யகுப்ஜத்தில் ஆண்டுவந்த ஸ்ரீ ஹர்ஷமஹாராஜாவுடனும் காமரூபத்தில் ஆண்டுவந்த பாஸ்கரவர்ம மஹாராஜாவுடனும் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார். பாஸ்கரவர்மன் ஹ்யூன்ஸாங்கை அழைத்து, 'ஸம்ஸ்க்ருதத்திலிருந்து பல நூல்களைச் சீனப்படுத்துகிறீரே, ஒரு சிறந்த சீன நூலை ஸம்ஸ்க்ருதப்படுத்தி இந்நாட்டிற்கு நீர் அளிக்க வேண்டாமா?' என்று கேட்க, சீனத்தின் Taoism என்ற மதத்தின் கொள்கைகள் அடங்கிய தோ-தே-இங் (Tao-Teh-King) என்ற நூலை ஸம்ஸ்க்ருதப் படுத்தலாம் என்று எண்ணினார்; சீனத்திற்குத் திரும்பி வந்ததும் இந்த மொழிபெயர்ப்பைத்தொடங்கினார் என்றும் தெரிகிறது; ஆனால் அதை முடித்தாரா, அம் மொழிபெயர்ப்பு எங்கே என்று ஒன்றும் தெரியவில்லை.

இந்தியாவிற்குக் கடைசியாக வந்த பெரும் சீனபிக்ஷு இத்ஸிங் எனச் சொல்லலாம். 15-ஆவது வயதிலேயே பிக்ஷுவான இவர், தம் 31ஆவது வயதில் கி. பி. 671-ல் ஸுமத்ரா வழியாய் இந்தியாவிற்கு வந்து, 10 ஆண்டுகள் நாளந்தாவில் இருந்து, 695ல் சீனத்திற்குத் திரும்பினார்; இவர் 400 ஸம்ஸ்க்ருதச் சுவடிகளைச் சீனத்திற்குக் கொண்டுவந்ததுடன், ஒரு சீன-ஸம்-ஸ்க்ருத அகராதியையும் தொகுத்தார்.

பெரும்பாலும் இச்சீன-இந்தியச்சேர்க்கை பௌத்த மத ஸம்பந்தமாகவே வளர்ந்திருந்தாலும், பௌத்தரோடு பல ப்ராம்மணரும் போய்க் குடியேறி கலைத்துறையிலும் ஸம்ஸ்க்ருதத் துறையிலும் சீன தேசத்தில் தொண்டாற்றி வந்தனர். என்று நன்றாய்த்தெரிய வருகிறது. கி. பி 657-ல் சீன சக்ரவர்த்திக்காக, அவர் வேண்டுகோளின்மேல், அவருடைய ஆயுர் பலத்தை அதிகரிக்கும் படியாய் ஏதாவதுசெய்ய ப்ராம்மண தாந்த்ரிகர் ஒருவரைத் தேடி அழைத்துப் போவதற்காக வாங்-ஹியுன்-த்ஸோ (Wang-Hiun-ts'o) என்றவர் இந்தியாவிற்கு வந்தார். கி. பி. 749-ல் சீனத்திலிருந்து ஜப்பான் சென்ற சீன பிக்ஷு சிஷ்யர் ஒருவர் தம் யாத்திரையை வர்ணிக்கும்போது, காண்டன் (Canton) என்ற இடத்தில் மூன்று ப்ராம்மணக் கோயில்கள் இருந்ததையும் அங்கு இந்திய ப்ராம்மணர் வஸித்து வந்ததையும் சொல்லியிருக்கிறார். இந்திய ஸங்கீதம் முதலிய கலைகளைச் சீனத்தில் கையாண்டுவந்த ப்ராம்மண குடும்பங்களைப்பற்றி மேலே தெரியவரும்.

இந்தியப்பண்பாட்டை சீனம் இப்படிப் பல துறைகளில் ஏற்றுக்கொண்டது. இந்தியக் கலைகளுக்குச் சீனம் கடன்பட்ட விவரங்களை ஒவ்வொரு துறையிலும் அடுத்த இதழில் ஆராய்வோம்: (தொடரும்.)

# லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

## அத்தியாயம்—7

“பங்குனி மாதத்துப் பகலில் பாஸ்கரனின் கொடிய வெப்ப ஆட்சியில் சிக்குண்டு தவித்து நின்ற, கஸ்தூரி நிலையத்திலுள்ள மரம் செடி கொடிகள் சந்தியாவின் ஆட்சி ஆரம்பமானதும் குளிர்ச்சி பொருந்திய புன்னகையினால் மாந்தருக்கு மகிழ்வளிக்கும் பாவனையாக இளந்தென்றல் காற்று மிதக்கலாயிற்று.

அநேக லக்ஷம் ரூபாயில் எழுந்தது கஸ்தூரி நிலையம். உள் நின்ற கட்டிடமே அரை மைல் விஸ்தீரணமுள்ளதாக இருக்கும். கட்டிடத்தைச் சுற்றியுள்ள தோட்டம், ரஸ்தாவிற்கும் கட்டிடத்திற்கும் நடுவில் ஒருபர்லாங் விஸ்தீரணத்தை ஏற்படுத்தியிருந்தது. பிறந்த சிசுவிலிருந்து வயது முதிர்ந்தவர்கள் வரை வசிக்கும் விடுதிகள் தனித் தனியாக அநேகம் உண்டு. படிப்பு, சங்கீதம், நடனம், கைவேலை முதலிய அநேகவித ஸ்தாபனங்களும் இருந்தன. ஒரு விடுதியிலிருந்து மற்றொரு விடுதிக்குச் செல்லக் குறைந்தது அரை பர்லாங்காவது நடக்க வேண்டும்.

வைத்திய வார்டிலிருந்து தன் விடுதிக்குச் சென்று கொண்டிருந்த லீலாவிற்குக் குளிர் காற்று மேல் பட்டதும் அம்மாடி! என்ற ஆச்வாசம் தோன்றினது. ‘வெய்யிலும், குளுமையும் மனிதர்களின் இன்ப துன்பங்களை எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன. ஏன் என் விஷயம்?’ என்று சிந்தனையில் மனதை லயிக்க விட்ட வண்ணம் பழக்கத்தினால் கால்கள் செல்லும் திக்கில் நடந்தாள்.

காதம்பரி தேவியும் தானும் நடத்தும் வாழ்க்கை எத்தகைய சிறப்புற்றது. இம் மூன்று வருஷகாலம் சென்றதே தெரியாமல் எவ்வளவு நிம்மதியுடன் சென்றன. இருவருமே ஏதோ சற்றுக் காதலில் மயங்கினோம். இறைவன் அருளினால் விலக்கி விட்டார். அவர் மனதில் இத்தகைய சிந்தனை கூடத் தோன்றுவதாகத் தெரியவில்லை. எனக்குங்கூட எப்பவோ ஏதாவது சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி தென்பட்டால் சற்றே சலனம் தோன்றுகிறது. ஆனால் உடனேயே மாறி விடுகிறது. மற்றப்படி என் வாழ்க்கையில் யாதொரு கஷ்டமும் தென்படவில்லை. பெண்கள் புருஷன் ஆதரவில் இருந்துதானாக வேண்டும்? கணவன் என்பவன் போய் விட்டாலும் அண்ணனோ, தம்பியோ, யாரோ ஒரு ஆண் பிள்ளையின் கீழ் இருந்துதான் ஆக வேண்டும் என்பது பழக்கத்திலிருந்தது. ‘தனிமையில் வசிப்பவளைச் சமூகம் வரவேற்காது. நிம்மதியான வாழ்க்கை நடத்த முடியாது’ என்பதெல்லாம் பழக்கத்தின் காரணமே. ஏன், எல்லாப் பெண்களும் இவ்விதம் வாழ்க்கை நடத்தக் கூடாது? இந்த நிலையத்திலுள்ள குழந்தைகளைப் பராமரிப்பதில் தான் மனம் எவ்வித சாந்தியைப் பெறுகிறது. அவர்களின் நலன் ஒன்றிலேயே மனம் செல்லுகிறதே தவிர மற்ற விஷயங்களில் கவனமே இல்லை. ‘இந்த நிம்மதியைப் பெற’ என்று நினைக்கும் பொழுதே அவளையறியாமல் சிரிப்பு வந்தது. ‘ஆஹா! என்ன அருமையான யோசனை. என் போலவே எல்லாப் பெண்களும் இருந்து விட்டால் நிம்மதி கொடுக்கும் குழந்தைகள் எப்படி? அதனால் ஆண் சமூகத்தை வெறுப்பது என்பதும் அசம்பாவிதமான பேச்சுத்தான். சூழ்நிலை சரியாக அமைந்தால்? மி. மாமி போன்று குடும்ப வாழ்க்கை நடத்துவதிலும் தன் நலன் பிறர் நலன் யாவற்றையும் கவனித்துக்கொள்ள முடிகிறது, அல்லாது இஷ்டமில்லாத, பொருத்தமில்லாத, தாம்பத்யத்தை ஏற்று, சண்டையும் சமாதானமும், கொடுமையும் கொஞ்சலுமாக வாழ்க்கை நடத்துவதைவிட இப்பணி மேலானது. ஒற்றுமையுள்ள தாம்பத்யத்திலும் சண்டை சச்சரவு ஏற்படத்தானே செய்கிறது என்று நினைத்தாலும், அந்த மனஸ்தாபம் வேறு ஏதோ காரியாகாரியங்களை உத்தேசித்து வார்த்தை வளருமானாலும், ஹ்ருதய அந்தரங்கத்துடன் வராது. அன்பும் மாறாது. சற்று நேரத்திற்கெல்லாம் தங்கள் தவறுதல்களுக்குத் தாமே வருந்துவார்கள். மற்றது அப்படியல்ல. அன்பற்ற மனம் குற்றம் ஒன்றையே தேடிக்கொண்டிருக்கும். புகைந்து கொண்டேயிருந்து திடீரென்று வெடிக்கும்

நிலைமை ஏற்பட்டுவிடும் தன்மையில் சமாதானமும் அமைதியும் சுலபத்தில் ஏற்படுவதில்லை. தாம்பத்யம் என்னவோ பார்ப்பவர்களுக்குக் கண்யமான முறையில் நடந்துவிடுகிறது.

இவ்வகையான தாம்பத்யத்தை நினைக்கும் பொழுதுதான் இந்த நிலைமை சாலச்சிறந்தது என்று தோன்றுகிறது. இந் நிலயத்தில் வேலை பார்ப்பவர்களையே எடுத்துக்கொள்ளுவோமே. என்போன்றவர் பலர். விதவைகள் அநேகர். சொற்ப வருவாயுள்ள குடும்பத்தில் புருஷன் வெளியில் உத்யோகம் செய்யவும் மனைவி இவ்விடம் வேலை செய்யவும், வீடுகளில் இருவரும் ஒற்றுமையுடன் வேலைகளை முடித்துக்கொண்டு, அவரவர் தொழில்களுக்குச் செல்லுவதுமாக இருக்கின்றனர். இந்நிலையமே சிறு உலகம். இதற்குள்ளேயே நாம் எல்லாவற்றையும் காண முடிகின்றது. காதம்பரிதேவி வாழ்க. நம்மை இந்தவழிக்கு அழைத்து வந்தார்களே. அவர் சொல்லுவதுபோல், விதியாகப் பார்த்து நமக்கு இந்த வாழ்வு வேண்டாமென்று ஒதுக்க, வேண்டுமென்று நாம் இழுத்துக்கொண்டு கஷ்டப்படுவானேன். உலகப் பணிக்கே நம்மை விதி ஏற்படுத்தியிருக்கிறது. காதம்பரி தேவி இவ்வளவு நாள்கள் உறுதியுடன் கழிக்கவில்லையா? ஏன் நாமும் கழிப்போம் என்பதில் சந்தேகமென்ன? 'ஆணுக்கு நிகர் பெண்' என்று தலை நிமிர்ந்து நடக்கலாம். ஆண் செய்யும் எந்த வேலை பெண் செய்யமாட்டாள்? எதுவும் முடியும். ஆனால் பெண்மைக்கு அழகு தருவதற்கும், ஆண்மைக்கு மதிப்புக் கொடுக்கவுமே சில விஷயங்களில் பங்குபெற வேண்டாம் என்றுவிட்டுக்கொடுக்கும் செயல். அதில் நம்மவர் குமரி கிழவனை யேற்றால், குமரன் கிழவியை ஏற்கலாம்? என்ற விஷயத்தைக்கூட நிலைநிறுத்த முன்வந்துள்ளார் என்றதும் சட்டென உதட்டைக் கடித்தவாறு, நம்மவர் என்ன உரிமை? நிமிர்ந்தாள்; எதிரில் வான முகட்டில் பௌர்ணமி சந்திரன் தோன்றினன். "உம்பாதி அம்புலிமானே உன் போலும் என் காதல் ஆமோ" என்று எதிர்ப்புறத்திலுள்ள வெற்றிலைபாக்குக் கடையிலிருந்த கிராமபோன் சங்கீதம் அவள் நடந்தது ரஸ்தா ஓரமாக உள்ள பாதையானதினால், அவள் காதில் நன்ருக ஒலித்தது. சந்தேகமென்ன? என்று வாய்க்குள் முணுமுணுத்த வண்ணம் மேலே செல்லப் படிகளில் ஏறினள். "ரோமியோ அண்டு ஜூலியட் இன்று கடைசி நாள்" என்று காந்தவிளக்கின்மேல் சுமந்து செல்லுவது அவள் கண்ணில் தென்பட்டது.

அவ்வளவே, அவ்வளவு நேரம் வீரம் பேசி வந்த மனம் கலக்கமுற்றது. ரோமியோ ஜூலியட்! உங்களால் இன்பமும் அடைந்தேன், துன்பமும் அடைந்தேன். துன்பத்தினின்றும் சீக்கிரம் விடுதலை உங்களுக்குக் கிடைத்தது. எனக்கு? ரோமியோ ஜூலியட்" என்று பல்லைக் கடித்தவண்ணம் விர்ரென ஓடிச்சென்று அறைக்கதவைத் தாழிட்டுக்கொண்டு படுக்கையில் முகத்தைப் பதித்துக்கொண்டு கண்ணீரில் சாந்தியைத் தேடினள்.

எட்டுமணி குண்டின் சப்தம் கேட்டதும் எழுந்து உட்கார்ந்தாள். அவள் மனம்போல் அந்த அறையும் இருண்டிருந்தது. சே! ஏன் இப்படி சஞ்சலமடைந்தேன். கிராமபோன் பாட்டும் சினிமா விளம்பரமும் என்னைப் பைத்தியமாகவன்றோ செய்து விட்டன. "பணி செய்து கிடப்பதே என்கடன்" என்ற மனப்பான்மையைச் சூழ்நிலை சிதறடித்துவிடுகிறதே. "பேய் மனமே, உன் ஆட்டத்திற்கு இடந்தர மாட்டேன்" என்று முணுமுணுத்த வண்ணம் விளக்கின் ஸ்விச்சைப் போட்டாள். கண்ணுடியில் முகத்தைப் பார்த்தாள். பிரதிபிம்பம் அவளை நோக்கிச் சிரிப்பது போன்றிருந்தது. முகத்தைக் கழுவிப் பொட்டு வைத்துக்கொண்டு, தன் அலுவல்களைக் கவனிக்கச் சென்ருள்.

தனது அலுவல்களை யெல்லாம் முடித்துக்கொண்டு பத்து மணிக்குத் தன் அறைக்கு வந்தவள் கதவைத் தாழிட்டுவிட்டு ஈசிச்சேரில் சாய்ந்துகொண்டாள். அவளை யறியாமலே சங்கிலியிலிருந்த லாக்கெட்டை எடுத்துத் திறந்தாள்.

"சங்கர்! உலகின் முன் தைரியமாக நடக்கிறேன். பணியில் மனே தைரியத்தை விடுவதில்லை. என்னை நான் வெற்றிகொண்டதாகக் கனவு காண்கிறேன். ஆனால் சங்கர்! உங்கள் முன் என் பலவீனத்தை ஒத்துக்கொள்ளுகிறேன். சுமார் ஆறுமாத காலமாக இவ்விதமான மனே துன்பம் ஏற்படவில்லை. இன்று ஏன் சாயங்காலமுதல் என் மனம் தாபமடைகிறது? ரோமியோ ஜூலியட்! அம்பிகாபதி, அமராவதி. லைலாமஜ்னூன். சங்கர்லீலா, காதம்பரி சுத......சே! அவர்கள் வழிவேறு. பெண் சமூகத்திற்கு வழிகாட்டியவர் காதம்பரி. கணவனால் கைவிடப்பட்டாலோ, கணவனை இழந்தாலோ, அவர்களுக்குத் தனது சுகம், இச்சை, மற்றப் பெண்களுக்குள்ள சுதந்திரம் ஒன்றும் கிடையாது, ஏன், அவர்கள் உணவு உடை முதல் வித்தியாசம், அவர்கள் ஆறறிவுள்ள மனிதர்களிலேயே சேர்க்கப்படாமல் ஓரறிவுள்ள மிருகங்களின் சலுகைதான் உண்டு என்ற நிலைமையை மாற்றி, விதியின் கோளாறு மனிதனின் கொடுமைக்குப் பாத்திரமாகிவிடு

கிறது, என்ற கொள்கையை மாற்றி, சமூகத்தின் உரிமைகளில் சிறிதளவாவது பங்கு பெற வழிகாட்டின அவ்வுத்தமி நீடூழிவாழ வேண்டும். தான்மட்டுமா அவ்விதம் செய்தார்? இன்று எவ்வளவு ஆயிரம் பெண்கள் கொடுமையினின்றும் விடுபட்டிருக்கிறார்கள். சங்கர்! உங்களது உள்ளன்பே என்னை இவரிடம் சேர்ப்பித்தது. இதே வாழ்க்கையில், இப்படியே உங்களைப் பார்த்து, நிம்மதியாக நடந்து வருவேன். சங்கர்! தாங்கள் எவ்விடமிருக்கின்றீர்கள் என்பதுகூட இரண்டு வருடமாகத் தெரியவில்லை. உங்கள் லக்ஷியம் நிறைவேறிவிட்டதோ இல்லையோ? நிறைவேறியிருந்தால் இந்நேரம் கிழக்காதலியுடன் கொஞ்சி விளையாடுவீர்களோ? அப்படிக் கொஞ்சும் பொழுதுகூட லீலாவின் காதற் கண்கள் உங்கள் மனக்கண்ணில் தோன்றிக் கொண்டுதானிருக்கும். சங்கர்! நான் இறப்பதற்குள் ஒரு தடவையாவது உங்களைக் கண்ணாரக்காணப் பகவான் அருள் செய்ய வேண்டும்" என்று புலம்பிவிட்டு லாக்கெட்டிற்குள்ளிருக்கும் சங்கரின் படத்தை முத்தமிட்டுவிட்டு கன்னத்தின்மீது படத்தை வைத்து உள்ளங் கையினால் அழுத்திய வண்ணம் கண்களை மூடிக்கொண்டாள். கடந்த காலத்தில் அவன் கன்னத்தில் முகத்தைப் பதித்துக்கொண்ட போது ஏற்பட்ட உணர்ச்சி தோன்றவே அந்த இன்ப லாஹிரியில் மனதை லயிக்க விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அவ்விதமிருந்தாளென்பதைஅறியவில்லை. "லீலா!" என்றுகதவைத் தட்டும் சப்தமும் குரலும் அவளைத் திடுக்கிட்டு விழிக்கச் செய்தன. சட்டெனப் படத்தை லாக்கெட்டிற்குள் வைத்து மூடிவிட்டுக் கதவைத் திறந்தாள். எதிர்பாராத விதமாகக் காதம்பரி நின்றாள்.

"அடடா நீங்களா? வாருங்கள்! வாருங்கள்! கடிதம் எழுதியிருந்தால் ஸ்டேஷனுக்கு வண்டியுடன் வந்திருப்பேனே" என்றாள்.

"கடிதம் எழுத அவகாசமில்லை. அறியாத ஊரா என்ன? டாக்ஸி வைத்துக்கொண்டு வந்து விட்டேன்."

"இப்பொழுது தான் வருகிறீர்களா? வண்டி லேட்டா? அல்லது ரோகிணி ஸிஸ்டரைப் பார்த்துவிட்டு வந்தீர்களா?" என்றாள்.

"வண்டி லேட்" நான் வந்ததே ஒருவருக்கும் தெரியாது, வாச்மேன் ராவுஜியைத்


# ஸ்டாண்டர்ட் ஜெனரல் அஷ்யூரன்ஸ்
## கம்பெனி லிமிடெட்

(ஹெட் ஆபீஸ்: கல்கத்தா)

சேர்மன்: ஸர் பத்ரீதாஸ் கோயென்கா, Kt., C.I.E.

ஜெனரல் மானேஜர்: U. N. சட்டர்ஜீ

நெருப்பு, கடல், மோட்டார் முதலிய எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் ஏற்றுக்கொள்ளுகின்றது

மதராஸ் ஆபீஸ்:

**37, எர்ரபாலு செட்டி தெரு**

தபால் பெட்டி நெ. 1602: மதராஸ்-1

போன் நெ. 4779 தந்தி: "STANGENAL"

மானேஜர்:

T. S. முத்துஸ்வாமி, M. A., B. L.

தவிர. வீதியிலே இறங்கி வந்து விட்டேன். முதலில் உன்னைப்பார்த்துவிட்டுத் தான் மற்ற வரைப் பார்க்க வேண்டும் என்றே தான் அவ்விதம் செய்தேன்" என்று சொல்லிக் கொண்டே கட்டிலின் மீது உட்கார்ந்தாள் காதம்பரி தேவி.

"கொஞ்சம் இருங்கள்; ஏதோ இருக்கும் சாப்பாட்டை எடுத்து வருகிறேன்"

"வேண்டாம். ஏழுமணிக்குக் கூடூர் ஸ்டேஷனில் சாப்பிட்டு விட்டேன். இப்பொழுது ஒன்றும் வேண்டாம். இப்படி என் பக்கத்தில்வந்து உட்கார். நீ ஆச்சரியப்படும்படியான சமாசாரம் சொல்லப்போகிறேன்" என்றாள்.

"சரி, இந்தப் பாலையாவது சாப்பிடுங்கள்; பிறகு சாவகாசமாகப் பேசலாம்"

"உனக்கு வைத்திருப்பதல்லவா. ஆனாலும் உன் திருப்திக்காக, நான் பாதி சாப்பிடுகிறேன். நீ பாதி சாப்பிடு" எனப் பால் டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டாள்.

பிறகு படுக்கையில் சாய்ந்துகொண்டாள் காதம்பரி தேவி. அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் மார்பின் மீது சாய்ந்து கொண்ட லீலாவை இடதுகையினால் அணைத்துக் கொண்டாள் காதம்பரி தேவி.

"லீலா, முதல் முதலாக உன்னைச் சந்தித்தபொழுது இப்படி உட்கார்ந்து விடிய விடியப் பேசினோம். பிறகு ஏதோ சில சமயம் தனிமையில் உட்கார்ந்து பேசினோமாயினும் இம்மாதிரி சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை. இன்று இரண்டாவது தடவையாகப் பேசுவோம். கதவைத் தாழிட்டு விட்டாயல்லவா?"

"உம், அப்பவே தாழிட்டு விட்டேன். ஏதோ ஆச்சரியப்படும் விஷயம் சொல்லப் போவதாகச் சொன்னீர்களே?" என்றாள்.

"சொல்லுகிறேன். எனக்குப் பதினைந்து வயது சிறியவள் நீ; என்றாலும், உன்னைப் பார்த்த அன்றிலிருந்து எனது அந்தரங்கத் தோழியாகக் கருதச் செய்தது உன் அருமருந்தன்ன குணம். அதனாலே எனது சந்தோஷ சமாசாரத்தை முதலில் உன்னிடம் தான் சொல்லவேண்டுமென ஓடிவந்தேன்."

"அக்கா, நான் மிக்க பாக்யவதி யென்பதில் சந்தேகமென்ன? உங்களின் பூர்ண அன்பு இருக்கும் வரை என் வாழ்க்கையில் கஷ்டம் என்பதையே காண முடியுமா? அதுபோகட்டும் விஷயத்தைச் சொல்லுங்கள்?"

"நான் பொது வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடப் போகிறேன்"

"என்ன? உண்மையாகவா?"

"உண்மையாகவே"

"அவர், சுதர்மன் வந்துவிட்டாரா?"

"சுதர்மன்!" என்று நீண்ட மூச்சிற்குப் பின் அவரை இச்சென்மத்தில் மறுபடி பார்க்கப்போவதில்லை. அவரின் பிரேமை ஹிருதயப் பெட்டிக்குள் மூடப்பட்டு விடும்?"

"பின் வேறு யார்?"

"ஓர் இளைஞன்"

"உங்கள் அண்ணா சம்மதம்கொடுத்தாரா? அந்த இளைஞன் யார்? எவ்வாறு சந்தித்தீர்கள்? இவ்வளவு காலத்திற்குப் பின் திடீரென்று மனம் மாறுவானேன்? எல்லாம் விபரமாகச் சொல்லுங்களக்கா!"

"அவரை சந்தித்ததையும், இவ்வெண்ணம் உண்டானதையும் அண்ணாவின் சம்மதத்தையும் பின்னால் சொல்லுகிறேன், முதலில் எவ்வளவிற்குப் பின் இந்த வாழ்க்கையை மேற்கொள்ளத் துணிந்தேனென்பதைச் சொல்லுகிறேன்."

"சுதர்மன் சென்றபின்பு கொஞ்ச நாள் வரை மனம் பட்ட வேதனை சொல்லில் அடங்காது. அப்படியிருந்தும் வெளிக்குக் காண்பிக்காமல் பொது வாழ்க்கையில் மனம் செலுத்தப் பிரயத்தனப் பட்டேன் அண்ணாவின் முயற்சியினால் பல துறையில் இறங்கி வேலை செய்யும்பொழுது மனம் கொஞ்சம் கொஞ்சமாக ஆறுதலடைந்து விட்டது. ஏதோ எப்பொழுதோ ஒரு சமயம் சற்றே தாபமேற்படும். அநேகமாக அதற்கு இடமில்லாமல் மனதிற்கு ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டிருக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொண்டிருப்பேன். அந்த ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டால் இன்னும் அவரைப்பற்றிய நினைவு அதிகம் உண்டாகமலிருக்கலாம் என்ற நினைப்புடன் ஐக்கிய மாகாணத்தில், ஓரிடத்தில், மதராசிகள் சேர்ந்து நடத்தும் ஒரு பள்ளிக்கூடத்தில் அண்ணா டீச்சராகவும் நான் சங்கீதம் நடனம் சொல்லிக் கொடுக்கவுமாக, ஒரு கொழுத்த சம்பளம் வாங்கும் உத்யோகஸ்தர் வேண்டுகோளுக்கிணங்கிச் சென்றோம். அவ்வூரில் தமிழர்கள் வீடுமட்டும் சுமார் ஐந்நூறு இருக்கலாம். ஆயிரக் கணக்கிலிருந்து நூற்றுக் கணக்கில் சம்பளம் வாங்கும் தமிழ் நாட்டவர்களுக்கும் ஆந்திர வாசிகளுக்கும், பெண்களும் பிள்ளைகளும் தமிழையே உச்சரிக்கத் தெரியாமல் போய்விடுவரோ? என்ற ஸ்திதியில், நல்ல சங்கீதம் எப்படிக் கிடைக்கும்? என் வரவால் அங்குள்ளோர் மிக்க சந்தோஷமடைந்தார்கள். எங்களுக்குச் சகல வசதியும் செய்து கொடுத்தார்கள்.

"நானும் பெண்கள் அடுப்பங்கரையுடன் நின்று விடக்கூடாது, வெளியுலகையும் கொஞ்சம் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக, தமிழ் வாசிக்கத்தெரியாத பெண்களுக்குத் தமிழும், சமஸ்க்ருதமும், மத்யானம் ஒருமணி முதல் மூன்றுமணி வரை கற்றுக்கொள்ளவும், இங்கிலீஷ் தெரியாதவர்களுக்கு இங்கிலீஷ் அந்த நேரத்தில் சொல்லிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தேன். தமிழும் சமஸ்க்ருதமும், அக்காவும், மன்னியும் சொல்லிக் கொடுக்கவும், இங்கிலீஷ் நான் சொல்லிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தேன். நாளாவர்த்தியில் எண்ணிக்கை அதிகமாகவே, அவ்விடம் அண்ணன் மாரிடம் அண்டியிருக்கும் விதவைச் சகோதரிகளையும் இன்னும், நன்றாகப் படிக்கத்தெரிந்தும், கணவனின் சொற்ப வருவாயில் காலக்ஷேபம் செய்யும் பெண்களையும், வீடு வீடாக நுழைந்து தேடிப்பிடித்து அவர்களுக்கும் சொற்ப சம்பளம் ஏற்படுத்தி, சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தேன்.

"பத்துப் பதினைந்துபேர் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்குபவர்களின் மனைவிமார்கள் பொழுது போக்கிற்குக் கிளப் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். எனக்கும் அது நன்மையென்றே தோன்றினதினால், கிளப் ஆரம்பிக்கப் பண வசூலுக்குத் தொடங்கும்பொழுது, பாலாம்பிகா என்பவர் சம்பளத்திற்குத் தக்கவாறு சந்தா ஏற்படுத்த வேண்டுமென்றார்.

"சந்தா வித்யாசம் வைத்தால் எல்லா விஷயங்களிலும் ஏற்றத்தாழ்வு தோன்றி விடும். "கிளப்" என்று நாம் கூடுவது யாவரும் சமமாகப் பழகவும், ஒற்றுமையைக் கடைப்பிடிக்கவுமே. அதனால் சந்தா எல்லோருக்கும் ஒன்று போலவே. முதலில் கிளப்பிற்கு மூலதனமாக வைப்பதற்குப் பணம் வசூலிப்பதைச் சம்பளக்கணக்கு வைத்துச் செய்யலாம். அப்படிச்செய்தும், தான் அதிகப் பணம் கொடுத்திருக்கும் பெருமையை அவ்விடம் காண்பிக்கக் கூடாது என்றேன்.

வயது முதிர்ந்த 'பெருந்தேவி' என்பவர் நான் சொல்வது சரிதானென்று ஆமோதித்தார்.

நூற்றுக்குக் கீழ்பட்ட சம்பளக்காரரிடம் 1 ரூ என்றும் 150 வரையில் 2 ரூ, 200 வரை5, 500 வரை 15, அதற்குமேல் தலைக்கு 100 என்று கணக்குவைத்து, பணம் வசூலித்ததில் ரூ 2500ம் சேர்ந்தது. மதராஸிப் பள்ளிக்கூடத்தையே கிளப் கட்டிடமாக உபயோகித்து, சனிக்கிழமை தோறும் கூடுவது என்றும் (ஞாயிற்றுக்கிழமை யென்றால் ஆண் பிள்ளைகளின் சீட்டுக் கச்சேரிக்கு டிபன் செய்யவேண்டியிருக்குமென்று ஒரு மாமி சொன்னதினால்) கேரம் போர்டு, பாட் மின்டன்! சதுரங்கம், புஸ்தகங்கள், பின்னல்வேலை பழகுதல், தையல் மிஷினில் பழகுதல் இப்படியெல்லாம் ஏற்பாடு செய்தோம். தவிர மாதச் சந்தா நான்கு அணா. இதில் மாதம் ஒரு பாட்டுக் கச்சேரி. கச்சேரி என்றால் சுருதியில் சேராமல் கூடப்பாடுவார்கள். அவர்களையும் அனுமதிக்க வேண்டும். குழந்தைகளை வைத்து நாடகம் என்றெல்லாம் செய்து வந்தோம். பிறகு பெரியவர்களும் நாடகம் போடுவது என்ற ஏற்பாடு நாலைந்து பட்டதாரிப் பெண்களிருந்ததினால் செய்யப்பட்டது. இந்த விஷயங்களில் எனது முழுநேரத்தையும் செலவிட்டேன் என்றே சொல்லவேண்டும். மூன்று மாதம் ஒரு மாதிரியாக நடந்து வந்தது. பிறகு குறைந்த சம்பளக்காரப் பெண்கள் தாங்கள் கிளப்பில் சேரவில்லையென்றார்கள். ஆயிர மைல் கணக்கில் சொந்த ஊரைவிட்டு வந்திருக்கிறோம். வந்த இடத்தில், அவர்கள் எல்லோரையும் ஒரே மதராஸிக்காரர் என்று சொல்லுவதற்கேற்ப ஒற்றுமையாகநடந்துகொள்ளுவதுதானே முறை? அவர்களைக் காரணம் கேட்டால்? ஒரு உதாரணம் சொல்லுகிறேன் கேள் லீலா.

"சுகுணா தேவியும், மிருணாளினியும் அக்கா தங்கைகளே. சுகுவின் புருஷன் ஆபீஸர். ஆயிரம் சம்பளம். மிருணாவின் கணவனும் சுகுணாவின் கணவனைப்போல் பி. ஏ. படித்தவன் என்றாலும் முன்னவன் போகும் பொழுது உத்யோகம் எளிதில் கிடைத்துவிட்டது. பின்னவனுக்கு அந்தப் பாக்யம் இல்லை. ஏதோ ரூ. 200 சம்பளம் ஆபீஸில் கிடைக்குமென்பதில் நிச்சயமில்லை. பணம் தானே பிரதானம். அதனால் சுகுணா தன்னை யொத்த ஆபீஸர்களின் மனைவிகளுடன்தான் பழகுவாள். மிருணா அதையறிந்து ஒதுங்கியே நடந்து வருவாள்.

ஒருநாள் தரையில் விரித்திருக்கும் கம்பளத்தின்மீது மிருணாவின் ஒருவயதுக் குழந்தை, இன்னும் அவளைப்போன்ற இரண்டு பெண்களின் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது ஜலவிஸர்ஜனம் செய்துவிட்டது. அவர்களே பயந்து துணியால் துடைத்துவிட்டார்கள். அதற்குள் சுகுணாவின் தோழிகள் சுகுணாவிடம் இவர்களையெல்லாம் சேர்த்தால் இதுதான் நடக்கும் என்று கேலிசெய்தார்கள். உடனே சுகுணா "இதைப் பாருங்கள் குழந்தைகளைக்கொண்டு வரக்கூடாது, கொண்டுவந்தால் உஷாராக இருக்கவேண்டும். இதென்ன அசிங்கம்" எனக் கண்டித்தாள்.

"இல்லை சுகுணா, ஏதோ தவறு, இனிமேல் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுகிறோம்" என்றாள் மிருணா.

"மறு சனிக்கிழமை அதே பிசகை ஒரு ஆபீஸரின் குழந்தை செய்துவிட்டது. குழந்தையைப் பெற்றவள் அடடா! 'சனியன்' என்று எழுந்து வந்தாள். சுகுணு முதல் யாவரும் 'அதற்கென்ன துடைத்துவிட்டால் போகிறது. குழந்தைக்கு என்ன தெரியும்' என்று ஒருத்தி கை டவலினுலே துடைத்தாள். எப்படி யிருக்கிறது நியாயம்? இரண்டும் குழந்தைகளே. ஆபீஸர் குழந்தை பன்னீர் தெளிக்கவில்லை. பணம், பதவி வித்யாசம். இந்தக் காரணத்தினுலேயே சில பேர்கள் கிளப்பிலிருந்து விலகினுர்கள்.

"கிளப்பிற்கு வந்தால் பொதுவிஷயங்களில் ஒற்றுமையாய் நடந்து காரியங்களைக் கவனிப்போம் என்பது கிடையாது. அவ்விடமும் கூடி வம்பு பேசுகிறது. அதாவது உபயோகமுள்ளதாக இருக்குமா? சமையலைப்பற்றி, பக்ஷணங்களைப்பற்றி, தையல் வேலையைப் பற்றி இருந்தாலும் பரவாயில்லையே.

"என் கல்யாணத்தின் பொழுது தோசை மிளகாய்ப்பொடி மாத்திரம் இரண்டு போகிணி இடித்தார்கள்" என்பாள் ஒருத்தி.

"என்ன பெருமை! வந்த சம்பந்திமார்களுக்கு மிளகாய்ப் பொடியைத்தான் சாப்பாடாய்ப் போட்டார்களாக்கும்" என்பாள். சுற்றித் தள்ளி உட்கார்ந்திருக்கும் கோஷ்டியிலிருக்கும் ஒருத்தி.

இதுமாதிரி ஒருவரை ஒருவர் இறக்கும் நிலைமையிலேயே பேச்சு.

"தாரா என்பவள் ஒரு எம்.ஏ. ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக்கூட விஷயதான செய்யும் ஆற்றல் படைத்தவள். காந்தி மகாத்மா கொள்கைகளை அனுசரிக்கும் குணமுடையவள். சங்கீதம், நடனம் இவைகளில் நல்ல பயிற்சியுள்ளவள். ஆனுல் அவள் கணவன் குமாஸ்தா உத்யோகம். ஆபீஸரல்ல. அவளே நாடகம் எழுதி, அவளே மேடைமீது நடிக்க முன் வந்தாள். நானும் பங்கெடுத்துக் கொண்டேன். நாடகம் மிகவும் நன்ருக அமைந்தது. பாஷை புரியாத அவ்வூர்க்காரர்களே மெச்சினுர்கள்.

"படித்த மேதாவிகள் கோஷ்டியிலேயே ஒருவருக்கொருவர் தூஷணை. தாரா எதிலும் முன்வருகிருள், அவளுடைய இரண்டு பெண்களும் நன்ருகப் பரதநாட்டிய மாடுவார்கள். ஆண் பிள்ளைகளுக்கென்று கிளப் ஏற்படுத்தியிருக்கிருர்கள். அவர்கள் இவர்களிடம் போட்டிக்கு வருவார்களே யல்லாது ஒற்றுமையுடன் வேலை செய்யமாட்டார்கள். அவர்களின் கொண்டாட்டங்களிலும், தாராவின் பெண்கள் நடனமாடுவார்கள். மற்றவர்கள் குழந்தைகள் முன்வருவதை அவள் தடுத்தாளா? பொருமை மிகுந்து, 'நடனமாடுவது கேவலம் என்று எள்ளி நகையாடி அந்தப் பெண்களைப் பழிப்பதற்காகவே தங்கள் குழந்தைகள் நன்ருகப் பழகினுலும் தடுத்துவிடுவார்கள். தாராவையும் பெண்களையும் பற்றிப் படித்த கோஷ்டியினர் கேவலமாகப் பேசுவது, 'இவள் போடுவது தப்புத்தாளம். அவர்கள் தாளக்கட்டில்லாமல் ஆடுகிருர்கள்' என்று கேலி. வித்வத் சபையில் பரிசு வாங்கிய பெண்கள் தாராவின் பெண்கள். தாராவின் பக்கமாகவும் இரண்டொருவர் சேருவார்களல்லவா? ஒருவருக்கொருவர் சொல்லிக் கொடுப்பதும், புறளி பேசுவதும், ராஜினுமா செய்வதும் மறுபடி சேருவதும் வெகு தமாஷ்.

"இதில் சுமித்ரா என்பவள் நான்கு விதத்தையும் அனுசரிப்பவள். அவள் கணவனும் ஆபீஸரே.அவளது சுற்று உறவினர் ,பிறந்த இடத்தைச் சேர்ந்தவர்கள், புருஷனைச்சேர்ந்தவர்கள், அவளைச் சேர்ந்தவர்கள் அநேகர் அவ்வூரிலேயே குமாஸ்தா உத்யோகம் பார்த்து வந்தார்கள். சுமித்ரா அவர்கள் யாவரையும் வித்தியாசமின்றி அழைத்துப் பழகுவாள். தன் சமயத்திற்கு அவர்களைக் கூப்பிடுவாள். அவர்கள் சமயத்திற்கு இரவு பகலென்று பாராமல் தான் போய்ச் செய்வாள். கொஞ்சம் முன்கோபி. அதை உபயோகித்துக்கொண்டு படித்த கோஷ்டியினர் வேலை செய்வார்கள். இப்படி நடக்கும் சுமித்ரா கண்டபலன் வீட்டில் குழந்தைகளைக் கவனிக்கமுடியாது, வெளியூர் சென்று வரும் கணவனை உபசரிக்கப் பொழுதிருக்காது, பணமும் விரயம். ஆனுலும் அங்குள்ளவர்கள் எல்லோருடைய குணங்களையும் செய்கையையும் பார்க்கும் பொழுது அவளை எனக்கு மிகவும் பிடித்தது.

"நம் பக்கத்து கிராமாந்தரச்சண்டையைத் தோற்கடித்து விடும் அவர்களின் சண்டைகள். ஆபீஸில் அநேகம் நடக்கும். ஏதோ சில பேர் பொழுதுபோக்காக மனைவிமார்களிடம் சொல்லியிருப்பார்கள். அதை வைத்துக் கொண்டு ஏச்சுப் பேச்சுக் கிளம்பிவிடும். பெண் பிள்ளைகள் பேசாமலிருப்பதுடன் நின்றுவிடாது. அந்த ஆண் பிள்ளைகள்கூட மனைவிமார் பேசவில்லை யென்ருல் அவர்களும் பேசமாட்டார்கள். குழந்தைகள் மாதிரி அப்பன் பாட்டனைக்கூட இழுப்பார்கள். இந்தப் பக்கம் நாலுபேர், அந்தப் பக்கம் நாலுபேர். பிறகு கேட்பானேன்? வார்த்தைகளுக்குப் பஞ்சமா?

"ஒரு முஸ்லீம் மாது என்னிடம் ஒரு விஷயம் சொன்னுள். அதிலிருந்து அவள் நம்மவர்களை எவ்விதம் மதிப்பிடுகிருள் என்று தெரியவரும். 'மாஜீ! நான் சொல்லுகிறே

னென்று வருத்தப்படாதேயுங்கள். நான் கண்டதைக் கேட்டதைச் சொல்லுகிறேன்.

"அம்மாளு அம்மாவைவிடச் சுமித்திரா ஐந்தாறு வயது இளையவள். இருவர் புருஷனுக்கும் ஒரே ஆபீஸில் வேலை. திறமை, படிப்பு இவைகளை உத்தேசித்துப் பிரமோஷன் கொடுக்கிறார்கள், ஆபீஸில். சுமித்ராவும் அம்மாளுவும் இரட்டையர்கள் போல் தோள்மீது கைபோட்டு ஊரைச் சுற்றுவார்கள். ஒரு வீட்டில் சாதம் வடிப்பார்கள். ஒருவீட்டில் மற்றவை செய்வார்கள். இரண்டும் வீடு மாறும். அப்படிப்பட்டவர்கள் ஆபீஸில் உத்யோகவிஷயத்தில் அம்மாளு புருஷன் மேலே என்றால் சுமித்ரா அதற்காக விருந்து வைப்பாள். சுமித்ரா புருஷனுக்கு மேலே என்றால் அவ்வளவுதான். அம்மாளு அம்மாள் சுமித்ராவைத் திட்டுவதைக் காதால் கேட்க முடியாது. கொஞ்சகாலம் ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்கமாட்டார்கள். பிறகு அம்மாளுவுக்கு ஆபீஸில் ஒரு நன்மை ஏற்பட்டால், சுமித்ரா வலியப்போய்ப் பேசுவாள். சுமித்ரா பாவம் நல்ல குணம். ஆனால் அம்மாளு சினேகிதம், விடமுடியாது போலும். உங்களில், சுக்ல பக்ஷம் கிருஷ்ண பக்ஷம் என்று சொல்லுவார்களே அது மாதிரி அவர்கள். நீங்கள் வந்த பிறகு எவ்வளவோ திருத்தங்கள் செய்திருக்கிறீர்கள். ஆனாலும் அம்மாளு அம்மாவின் சாபப் பேச்சை மாற்ற உங்கள் தாத்தாவாலும் முடியாது' என்றாள்.

"மதராசிகள் என்ன? எல்லா ஜில்லாக்களிலும் இம்மாதிரியான விஷயங்கள் இருப்பது சகஜம்தானே என்று விட்டுக்கொடுக்காமல் பேசினேன்.

"இந்த விஷயம்பற்றி சொல்லிக்கொண்டே போனால் பொழுது விடிந்துவிடும். ஒரு விஷயத்தைச் சொல்லி அதை முடிக்கிறேன்.

"ஒருநாள் போனில் சுகுணா என்பவள், சுமித்ராவைக் கூப்பிட்டாள். நான் அந்தச் சமயம் சுமித்ரா வீட்டிற்கு ஒரு காரியமாகப் போயிருந்தேன். சுமித்ரா கை வேலையாக இருந்தபடியினால் நான் பதில் கொடுத்தேன்.

"யார் பேசுவது?"

"ஏன்? சுமித்திரா தான் பேசுகிறேன்"

"கொஞ்சம் அவகாசம் தானே?"

"ஏன்? என்ன விசேஷம்? அவகாசம்தான்."

"இந்தக் காதம்பரி தேவி வந்திருக்கிறாளே, அவள் செய்வது ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை"




எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி,
24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.
பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

"ஏன்?" என்ன புதிதாகச் செய்தாள்?"

"அவள் தாராவிற்கும் ஸப்போர்ட் செய்கிறாள் உனக்கும் செய்கிறாள். அம்மாளு அம்மாவிற்கும் செய்கிறாள், எனக்கும் செய்கிறாள். இது என்ன வேலை? ஏதாவதொரு பக்கம் சேரவேண்டும்"

"அவள் செய்வதில் தவறென்ன? கிளப்பின் நோக்கம் ஒற்றுமைதானே. எல்லோரும் ஒற்றுமையாக வேண்டுமென்றே எல்லோரையும் ஒன்று கூட்டுகிறாள்."

"அதெப்படி எல்லோரும் ஒன்றாக முடியும்? அந்த சப்ராசி மனைவிமார்கள்"

"அது யார் சப்ராசி மனைவிகள்?"

"அந்தக் குமாஸ்தா மனைவிமார்களை, சப்ராசி மனைவி (பியூன்) என்றுதான் நாங்கள் சொல்லுவது வழக்கம்."

"சரி அவர்களுக்கென்ன?"

"அவர்களுக்குக் கிளப்பிலிருந்து புஸ்தகம் கிடைக்கமாட்டேனென்கிறது என்று மெம்பர் பதவி வேண்டாமென்றார்களாம். காதம்பரி ஒற்றுமைக்கு ஒரு பிரசங்கம் செய்துவிட்டு, எல்லோர் பேரும் எழுதி நம்பரும் குறித்துச் சீட்டுக் குலுக்கி அதன் பிரகாரம் புஸ்தகம் எடுக்கலாம் என்று தீர்மானம் செய்திருக்கிறாளே? இது என்ன கௌரவக் குறைவான செய்கை? அவர்களும் நாமும் சரிசமமா? நாம் படித்தபின்புதான் அவர்கள் படிக்கவேண்டும். அப்படி இஷ்டமில்லாவிட்டால் மெம்பர் பதவியை விட்டுவிட்டுப் போகட்டுமே. நல்லதாகப் போய்விட்டது. காதம்பரிக்கு என்ன வந்தது? தாராவும் அவளுமாகச் சேர்ந்துகொண்டு நமது கௌரவத்தைக் குலைக்கிறார்கள். நீங்களும் அவர்களுக்கு ஸப்போர்ட் பண்ணுகிறீர்கள்' என்றாள்.

"நமது ஜன்மபூமியைவிட்டு அநேக மைல்களுக்கப்பால் பிழைக்கும் வழிதேடி வந்திருக்கிறோம். நமக்குள் எவ்வளவு பிரிவுகள் இருப்பினும் எந்தப் பாஷை பேசுவதாக இருப்பினும், நம்மை ஒற்றுமையுள்ளவர்களாக இம் மாகாணத்தவர்கள், 'மதராசிகள்' என்ற பொதுப் பட்டம் கொடுத்திருக்கிறார்கள். அதைக் காப்பாற்றிக்கொள்ளவாவது நாம் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டாமா? நம் சகோதரிகளை நாமே ஏற்றத்தாழ்வு பார்ப்பது எவ்வளவு கேவலம்? "எல்லோரும் ஓர் குலம்" என்று மார்தட்டி வீரர்கள் எழும் இக்காலத்தில், கேவலம் பணத்திற்கும் பதவிக்குமாகவா இப்பெருமை! இப்பொறாமை! சுகுணாதேவி இவ்வளவு நேரம் உன்னுடன் பேசியது சுமித்திராவல்ல. அசல் காதம்பரியேதான் பேசினாள். சுமித்ராவின் அனுமதியின்பேரில். உங்களுக்கும், உங்கள் கிளப்பிற்கும் குட்பை, சொல்லிவிட்டு இன்னும் சிறிது நாளில் வேறு மாகாணம் செல்லப் போகிறேன். சுமித்ராவைப் போன்று எல்லோருமிருக்கும்படி செய்ய ஈசனை வேண்டுகிறேன். நமஸ்தே, சுகுணாதேவி" என்றதும்'

"நமஸ்தே............காதம்பரி..........தேவி மன்னி...யுங்கள்...."என்று நாக்குழறப் பேசினாள்.

"ஈசன் மன்னிப்பார்" என்று போனைக் கீழே வைத்து விட்டேன். நான் பார்த்து வந்த விவகாரங்களைச் சுமித்ராவிடம் ஒப்படைத்துவிட்டு, ஒருமாதத்தில் அவ்விடம் விட்டுக் கிளம்பி விட்டேன்."

"அவர்கள் மீது ஏற்பட்ட வருத்தத்தினலா?" என்றாள் லீலா.

"நாய் வாலை நிமிர்த்த முடியுமா? என்ற பிரச்னையானாலும் நான் பொறுமையுடன் உழைக்கத் தயாராக இருந்தேன். சென்னை மாகாணத்தில் என் ஆதரவில் ஒரு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று............சமஸ்தானத்து மஹாராணி எனக்கு அழைப்பு அனுப்பினாள். அவளுடன் பேசித் தீர்மானித்தபடி அவ்விடம் விட்டுப் புறப்படவேண்டியதாயிற்று."

"நீங்கள் வந்ததும் கிளப் மூடப்பட்டு விட்டிருக்குமே"

"இல்லை. சென்ற வருஷங்கூட அவ்வூர் சென்று வந்தேன். கிளப் என்னவோ அதே ரீதியில் மேலோங்காவிட்டாலும் கீழ் நோக்கிச் செல்லாமல் சண்டை, சமாதானத்துடன் நடந்து வருகிறது.

(தொடரும்.)

## பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City.

அழகுக்கு அவசியம் ஆரோக்யம். ஆரோக்யமும் சௌந்தர்யமும் பெண்ணினத்தின் பிறப்புரிமை அருண கர்ப்பாசய ரோகங்களை நிவர்த்தி செய்து தேகாரோக்யத்தையும் சௌந்தர்யத்தையும் அளிக்கவல்லது.

**ஆயுர்வேதாஸ்ரமம் லிட்**
(ஸ்தாபிதம் 1898)
**மதராஸ் 17**

## 1950-ல்
## என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1950 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற்செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Shri**
**Swami Satnarayan Jotish Ashram**
**(C. K.) HOSHIARPUR.**

உங்கள் (தேக) ஆரோக்கியத்தை
பருதுங்கள்
PLEASE REPLACE LID
Cadbury
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
1 LB. NET
போர்ன்-வீடா பாலைவிடச் சிறந்தது, அதில் சக்தி தரும் விடமின்களும், கால்ஷியமும் அடங்கியுள்ளன. விளையாட்டுக்காரருக்கும் பலஹீனருக்கும் ஒருங்கே இன்றியமையாதது. குழந்தைகள் அதன் சாக்லேட் மணத்தை விரும்புவர். காலையிலும் இரவிலும் சூடாகவோ அல்லது குளிர்ந்த பானமாகவோ, ஒரு கிளாஸ் பாலுடன் இரண்டு தேக்கரண்டியளவு சேர்த்துப் பருகவும்.
Cadbury
THE TREE OF HEALTH
—ஆரோக்கிய விருக்ஷம்—
சூடான
அல்லது
குளிர்ந்த
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது
காட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்
தபால் பெட்டி நெ. 1417 பம்பாய்-தபால் பெட்டி நெ 251 கல்கத்தா-தபால் பெட்டி நெ. 1725 மதராஸ்

பார்லி வாட்டரும், கஞ்சியும்
இவ்விதம் சுலபமாகத் தயாரிக்கலாம்

பார்லி வாட்டர்: பியூரிடி பார்லி இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு எடுத்துக்கொண்டு சிறிது ஜலம் சேர்த்துக் கலந்து ஒரு பைண்ட் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவிடவும். பிறகு ருசிக்குத் தக்கபடி உப்பு சர்க்கரை அல்லது எலுமிச்சம்பழ ரஸம் சேர்க்கவும்.

கஞ்சி: இதை வழக்கம்போலத் தயாரிக்கவும். ஆனால் தயாரிக்க இருபது நிமிஷ நேரம் தான் ஆகும். ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி எட்டு ஸ்பூன் சாதாரண பார்லி அரிசிக்குச் சமம் என்பது ஞாபகமிருக்கட்டும்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX-4 TAM

## ரூ. 300 இனும்

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—15—0. தபாற் செலவு தனி. சக்தி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனும்.

**THE BENGAL MESMERISM HOUSE (C. K.)**
**HOSHIARPUR.**


Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.